# பண்மகள்

පණ්මගල්

PANMAGAL

## 185 ஆவது ஆண்டுச் சிறப்பு மலர்






1823 - 2008

யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

# பண்மகள்

## 185ஆவது ஆண்டுச் சிறப்பு மலர்

யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

P.G.H.S

THE UTMOST FOR THE HIGHEST

**185**

*1823 - 2008*


**பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை**





| | | |
|---|---|---|
| நூல் | : | *பண்மகள்* |
| | | *185ஆவது ஆண்டுச் சிறப்பு மலர்* |
| வெளியீடு | : | பண்டத்தரிப்பு பெண்கள் |
| | | உயர்தர பாடசாலை |
| மலராசிரியர் | : | திரு. சு. ஸ்ரீகுமரன் |
| மலர்க்குழு | : | திருமதி இ. இராஜசேகரம் |
| | | திருமதி தி. கருணீசன் |
| | | திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன் |
| | | திரு. வே. சிவசக்திவேல் |
| | | திரு. அ. அமிர்தலிங்கம் |
| | | செல்வி கௌ. இராசதுரை |
| | | திருமதி த. அகிலன் |
| | | திரு. தி. பகீரதன் |
| தாள் | : | 60 கிராம், வெள்ளை |
| அளவு | : | 190 x 250mm |
| பிரதிகள் | : | 400 |
| எழுத்தளவு | : | 12 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | XL + 140 |
| ஓவியங்கள் | : | திரு. தி. பகீரதன் |
| தளக்கோலம் | : | திரு. சு. ஸ்ரீகுமரன் |
| அச்சுக்கோர்வை | : | திரு. ச. விக்கினேஸ்வரன் |
| | | (நீரஜா அச்சகம், சுன்னாகம்) |
| அச்சாக்கம் | : | ஜே. எஸ். பிறின்டேர்ஸ், |
| | | பண்டத்தரிப்பு |


# சமர்ப்பணம்




185 ஆண்டுகள் பாடசாலையைப்
பேணிக்காத்து மேலுயர்த்திய
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு

# பண்மகளின் உள்ளே...

தொலை நோக்கு - செயல் நோக்கு

பாடசாலைக் கீதம்

எமது அதிபர்

எமது பிரதி அதிபர்

ஆசிரியர் குழாம்

ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் I - X

மலராசிரியர் உள்ளத்திலிருந்து XI

பாடசாலை வரலாறு XII - XVII

அதிபர் அறிக்கை XVIII - XXXIX

முன்னாள் அதிபரை நினைவு கூருவோம் XL

## கட்டுரைகள்

(1) ஆசிரியர் வாண்மைவிருத்தியில் செயல்நிலை ஆய்வின் வகி பங்கு - கலாநிதி த. கலாமணி 01 - 07

(2) மாணவர்களைச் சமூகப் பொருத்தமுடையவர்களாக்குதல் வீடு, பாடசாலைத் தொடர்புகள் - கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம் 08 - 15

(3) யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி - ஒரு வரலாற்று நோக்கு கலாநிதி (திருமதி) அ. சத்தியசீலன் 16 - 23

(4) ஈழத்துப் பெண் படைப்பாளிகள் ஓர் அறிமுகம் கலாநிதி (செல்வி) செ. சிவசுப்பிரமணியம் 24 - 30

(5) கற்றல் - கற்பித்தலை இலகுபடுத்தும் கல்வித் தொழிநுட்பம் திரு. பா. தனபாலன் 31 - 34

(6) தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு விருத்தியில் உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு - திரு. சு. ஸ்ரீகுமரன் 35 - 48

(7) நவீன தமிழ்க் கவிதைப்புலத்தில் ஈழத்துப் பெண் கவிஞர்கள்
திரு. சி. ரமேஷ் 49 - 59

(8) விளையாட்டு முகாமைத்துவத்தின் வாண்மை அந்தஸ்து
திரு. க. கணேசநாதன் 60 - 63

(9) இலக்கியம் கற்போம் - திருமதி இ. இராஜசேகரம் 64 - 65

(10) நிலையான அபிவிருத்தி - திருமதி தி. கருணீசன் 66 - 67

(11) பாடசாலை மாணவரது கற்றல் அடைவு மதிப்பீட்டின்
அண்மைக்காலப் போக்குகள் - திரு. தி. தீபன் 68 - 71

(12) மாரடைப்பு - செல்வி வே. சிவலதாயினி 72 - 76

(13) இலத்திரனியல் உலகினில் நுழைவோம் - திரு. வே. சிவசக்திவேல் 77 - 82

(14) ஆரம்பக்கல்விக்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்
திருமதி த. அகிலன் 83 - 85

(15) திட்டமிடுவோம் நேரத்தை - திருமதி அ. ஈஸ்வரன் 86 - 88

(16) கடமையும் கட்டுப்பாடும் - திருமதி வ. சிறிதரன் 89

(17) இன்றைய சூழலில் அவசியமாகிவரும் அரங்கச் செயற்பாடுகள்
திருமதி த. கமல்ராஜ் 90 - 92

(18) நீள நினைந்திடும் பொழுதுகள் - திரு. ஆ. சி. நடராஜா 93 - 94

(19) I LOVE MY MOTHER - Mrs. F. R. J. Jeyanthan 95

மாணவர் ஆக்கங்கள் 96 - 123

Academic Staff 124 - 125

ஓய்வு பெற்ற ஆசிரியைகள் 126 - 127

சாதனை படைத்த மாணவிகள் 128

Prize Winners 129 - 139

## பாடசாலையின் மகுட வாக்கியம்
## MOTTO OF SCHOOL

### "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"
### "THE UTMOST FOR THE HIGHEST"

## பாடசாலையின் தொலை நோக்கு
## VISION OF SCHOOL

உறுதியோடும் அர்ப்பணிப்போடும் செயற்பட்டு கல்வி நிலையில் வடமாகாணத்தில் முன்னணிப் பெண்கள் பாடசாலையாக மிளிர்தல்

Be a leading school in the Northern Province in Education through unity, dedication and affirmation.

## பாடசாலையின் செயல் நோக்கு
## MISSION OF SCHOOL

நாட்டினதும் பிரதேசத்தினதும் சமூக, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி சமநிலை ஆளுமையுடன் சவால்களை வென்று உன்னத நிலையை எய்தும் வண்ணம் வனிதையரை உருவாக்குதலும், கீர்த்தி மிகு பாடசாலைக் கலாசாரத்தை ஏற்படுத்துதலும்.

Make a renowned cultural school and produce the women with preserving the social values and norms of the region and nation and win the challenges with the balance personality.

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்க வாழ்க இனிது
வாழ்க வாழ்க வாழ்கவே
பண்டத்தரிப்பில் இலங்கு மகளிர்
கல்லூரி இனிது வாழ்கவே (வாழ்க)

தையலரைத் தெய்வமாக தமிழ்
வகுத்த தனியிடம்
வையம் பேண நமது மாண்பை
மலர்த்தி நின்று வாழ்கவே (வாழ்க)

செயற்கரிய செய்கை சேவை சீலமோடு ஞானமும்
வியத்தகுநல் வீரம்தர்மம் வாய்மை அன்பு மேவியே
உறுதியோடு உயர்ந்த நோக்கம் நாடிக்கூடி உழைத்திட
மறுவிலாத தெய்வபக்தி மலரவாழ்வும் உதவியே (வாழ்க)

அலகிலாத கலைகள் ஆய்ந்து அறிவை மேலும் வளர்த்தலின்
நலமிகுந்த நங்கையரை நயந்து ஆக்கும் பணியிலே
கலை நிலையம் நிறுவிக்காத்த மேலைநாட்டுத் தாபகர்
தலைமையான தொண்டும் பண்டத்தரிப்பு மக்கள் தானமும்
(வாழ்க)

**பண்டிதர் வி. நவரத்தினம் அவர்கள்**

# Our Principal




## Mrs. Kirubasakthy Sivarajah

# Our Deputy Principal




Mrs. Rasaladchumy Rajasegaram



# ஆசிரியர் குழாம்




**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):-** திரு. வே. சிவசக்திவேல், திரு. பொ. அமிர்தலிங்கம், திருமதி. மா. ரவியேந்திரன், திருமதி. வ. சிறிதரன், திருமதி. கோ. சிறிகரன், திருமதி. இ. இராஜசேகரம்(பிரதி அதிபர்), திருமதி. கி. சிவராஜா(அதிபர்), திருமதி. தி. கருணீசன், திருமதி. ம. குணபாலன், திருமதி. அ. ஈஸ்வரன், திருமதி. கி. புஸ்பகுமார், திரு. சு. ஸ்ரீகுமரன்.

**நிற்பவர்கள் - 1ஆம் வரிசை:** திரு. வி. மதிதரன், திரு. பா. பாலசுப்பிரமணியம், திருமதி. வ. பாலசுப்பிரமணியம், திருமதி. நா. அச்சுதன், திருமதி. நெ. யூ. யூ.யோ. ரவீந்திரன், திருமதி. த. கமல்ராஜ், திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன், திருமதி. சி. பத்மராஜா, திருமதி. சு. கருணாகரன், திருமதி. த. அகிலன், திருமதி. செ. தயாபரன், திருமதி. பி. தர்மபாலன், திரு. தி. பகீரதன், திரு. த. பிரபாகரன்.

**2ஆம் வரிசை:** செல்வி. பி. கதிர்காமத்தம்பி, செல்வி. கௌ. இராசதுரை, திருமதி. நி. பாலேந்திரதாஸ், திருமதி. சு. லிங்கேஸ்வரன், செல்வி. மோ. மாயகிருஷ்ணன், செல்வி. ம. துரைரட்ணம், செல்வி. வி. இராஜசிங்கம், செல்வி. கு. பாலசுப்பிரமணியம், செல்வி. த. சுப்பிரமணியம், செல்வி. கா. மகாலிங்கம், செல்வி. க. கந்தையா

**வருகைதராதோர்:** திருமதி. இ. யோகநாதன், திருமதி. க. கிருஷ்ணலிங்கம், திரு. செ. அன்ரன்செல்வநாயகம், செல்வி. சா. இராதாகிருஷ்ணன்.



# நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

## நற்பிரஜைகளை உருவாக்கும் கல்விக்கூடம்

யாழ்ப்பாணத்தின் தொன்மையும் கீர்த்திமிகு கலாசாரப் பின்னணியும் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை 185 வருடங்கள் நடைபயின்று நிறைவு விழாக் காண்பதையிட்டுப் பெரு மகிழ்வடைகின்றோம்.


இன்னல்களும் இடர்களும் சூழ்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் கேடில் விழுச்செல்வமாகிய கல்வியின் மூலம் அறிவொழுக்கம் மிக்க சமுதாயமொன்றை உருவாக்க முடியும். மனஅமைதியையும், நல்ல விழுமிய சிந்தனைகளையும், பல்துறை ஆளுமைகளையும் பாடசாலையானது ஒவ்வொரு பிள்ளையிடத்திலும் உருவாக்குகின்றது.

அவ்வகையில் அமெரிக்க மிசனரியினரால் தொடங்கப்பட்டு 185 வருடங்கள் சிறப்பான கல்விப் பணியாற்றி,பல்துறை ஆளுமை மிக்க பெண்கள் பலரை உருவாக்கிய பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் பணியினைப் பாராட்டுகிறோம். நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் உயர்ந்த செயற்பாட்டில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும், நற்பிரஜைகளாகப் பரிணமிக்கப் போகும் மாணவச் செல்வங்களையும் மனமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம்.

185ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் இம்மலர் கல்வியுலகால் உவந்தேற்றப்படும் மலராகச் சிறப்புப் பெறவும் வாழ்த்துகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்.



## யாழ். மறைமாவட்ட ஆயரின்
## ஆசிச் செய்தி

# அறிவுச் சுடரேற்றும் பாடசாலை

அறிவுச் சுடரை ஏற்றி மனிதனை முழுமனிதனாக கல்வியிலும், அறிவிலும், ஞானத்திலும், ஒழுக்கத்திலும், ஆரோக்கியத்திலும் உருவாக்கி வளர்ப்பதே பாடசாலையாகும். இத்தகைய ஒழுக்கநெறிகளை அள்ளி வழங்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை தனது 185வது அகவையில் கால் பதிக்கும்போது, இப்பாடசாலைச் சமூகத்துடன் சேர்ந்து யாழ் ஆயர் என்ற முறையில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலையானது முதலில் 1823இல் அமெரிக்கன் மிசனரிமார்களினால் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக்கூடிய விடுதியுடன் கூடிய பாடசாலையாக இருந்தது. வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்துவிட்ட இப்பாடசாலையானது இன்று கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் படைத்து யாழ் மாவட்டத்திலும், மாகாண மட்டத்திலும் போட்டியிட்டு முதன்மை அணியாகத் தெரிவாகியிருப்பது எமது மகிழ்வை இரட்டிப்பாக்குகிறது.

மேலும் முடிவின்றித் தொடரும் போராட்டத்தில் உடைத் தெறியப்பட்ட எமது மக்களின் வாழ்வும், அவர்கள் இழந்துவிட்ட மனித விழுமியங்களும் மீண்டும் கட்டியெழுப்பப்பட இப்பாடசாலையானது கரம் கொடுத்து மேலும் பல ஆண்டுகள் பயணித்து நற்பயன் கொடுக்க இறை ஆசீர் வேண்டி விழாக்காணும் பாடசாலைச் சமூகத்தை வாழ்த்தி நிற்கின்றேன்.

**அதிமேதகு இ. தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை**

யாழ். மறைமாவட்ட ஆயர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

## நேரிய சிந்தனையை மாணவருக்கு ஊட்டும் கல்விக்கூடம்

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற மகுட வாசகத்தினைச் செயற்படுத்த ஒன்றுபட்டு உழைக்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை தன் 185ஆவது அகவையைப் பூர்த்தி செய்வது அனைவராலும் பாராட்டத்தக்கதாகும்.

பாலர் பாடசாலையாகத் தோன்றி இன்று 1AB தரத்திற்கு உயர்ந்து நிற்கும் இப்பாடசாலையின் தோற்றமும், வளர்ச்சியும் காலத்திற்குக் காலம் பாடசாலையை முகாமை செய்த, பாடசாலைக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த ஒவ்வொருவரதும் பெருமுயற்சியின் பயன்நிறைவே என்றால் மிகையில்லை.

பாடசாலைக் கல்வி என்பது பண்பட்ட சமூகத்தின் நிலைக்களன். இவ்வகையில் 185 வருட அனுபவத்தைக் கொண்டிலங்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை தன் கடந்தகால அனுபவங்களை நிகழ்கால நிதானத்துடன் அலசி ஆராய்வதனூடாகவே எதிர்காலத்தைத் திறம்படச் செயற்படுத்த முடியும், சிருஷ்டிக்க முடியும்.

பாடசாலையின் பயன்விளைவு என்பது வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளால் மட்டிட முடியாதது. பாடசாலையில் மாணவச் செல்வங்களின் அறிவு, ஆற்றல், ஆளுமை விருத்தியோடு குறிப்பாக அவர்களது உடல், உள, சமூக, ஆன்மீக ஆரோக்கியம் பற்றியும் கவனத்தில்

எடுக்க வேண்டிய தருணம் இது. விஞ்ஞானமும் வளர்ந்தோங்க வேண்டிய காலமுமிது.

குறுகிய காலத்தில் குறுகிய வளங்களுடன் சர்வதேச தரத்திற்கு எமது சிந்தனை, செயற்திறம் என்பவற்றை வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம்முன் உள்ளது. சுய கட்டுப்பாடும், சுய சிந்தனையும் உள்ள மாணவ சமூகத்தினாலேயே எதிர்காலத்தை ஆளமுடியும்.

ஆகவே நேரிய சிந்தனையுடன் இளம் சந்ததியினரான மாணவச் செல்வங்கள் இலங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள் என்பதை மனத்தில் இருத்திப் பற்றும் பாசமும் வைத்து நல்ல பாதையில் சேர்க்கும் பணியில் பாடசாலைச் சமூகம், பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகளுடன் இணைந்து ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் செயற்பட வாழ்த்துகின்றேன். வாழ்க! வளர்க!.

**க. கணேஷ்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.





# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

## பெண்களுக்கான கல்வி
## முழுச் சமுதாயத்துக்குமான அறிவின் திறவுகோல்


கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டு கால கல்விப் பணியின் நிறைவினைக் கொண்டாடும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையினை வாழ்த்தும் இந்த வேளை மிகவும் பெறுமதியானது; பெருமிதம் தருவது.

பெண்களுக்குத் தருகின்ற கல்வியானது முழுச் சமுதாயத்துக்குமான அறிவின் திறவுகோலாகும். இந்த வகையில் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் செழுமைக்கும் நிலைபேற்றிற்கும் அடிப்படையான பெண் கல்வி மேம்பாட்டின் மூலஸ்தானங்களில் ஒன்றாய் இக்கல்விச் சாலை படைத்த சாதனைகள் பல.

ஆயிரம் ஆயிரம் பிள்ளைகளைத் தாயாய் அரவணைத்து விடுதி வசதிகளுடன் கல்வியை வழங்கிய இந்த உயர்தர பாடசாலை, சூழமைவின் நெருக்கடிகளினிடை தளர்வுற்ற போதிலும் மீண்டும் தொடங்கும் மிடுக்கென எழுந்து நிற்கின்றமை பெருமகிழ்ச்சி தருகின்றது.

185ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளை பாடசாலையின் வரலாற்று மேன்மைக்குக் காலான அத்தனை பேரையும் போற்றுவோம். பெண் கல்வி மேம்பாட்டின் வழி சமுதாய மேம்பாடு எனும் பெரும் இலக்கினை மென்மேலும் அர்த்தமுள்ளதாக்கும் திசையில் மேலான பயன் கனிகளை இக் கல்விச்சாலை சமூகத்திற்காக்க எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்** PhD
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.





# வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

## தொடர் தேர்ச்சியும் நீண்ட பாரம்பரியமும் கொண்ட பாடசாலை


வலிகாமம் வலயத்தில் புகழ் பூத்த பெண்கள் பாடசாலைகளுள் ஒன்றான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை வெளியிடும் 185ஆவது ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பேருவகை அடைகின்றேன். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற வள்ளுவர் வாசகத்திற்கு அமைவாக பெண்கள் உருவாகத்தக்க வகையில் கண்ணியம்,கடமை, கட்டுப்பாடு என்பன இணைபாட விதானத்தினூடாக விருத்தி செய்யப்படும் பாங்கு போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது.

காலத்துக்குக் காலம் மாறிவரும் சமூகத்துடன் இயைபாக்கம் பெறத்தக்க வகையில் தொடர் தேர்ச்சியாக நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட இப்பாடசாலயின் சேவை மேலும் உன்னதமான நிறைவினைப் பெற, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

இவ்வாண்டு மலர்க்குழுவிற்கும், ஆக்கங்கள் வழங்கிய மாணவர்களுக்கும், வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும், நெறிப்படுத்திய அதிபருக்கும் எனது பாராட்டுக்கள்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே'

**ப.விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.



# வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

## செழிப்பான சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவிக்கக் கனதியான பங்களிப்பை நல்கும் பாடசாலை

இலங்கைத் திருநாட்டில் நீண்ட கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ் குடா நாட்டின் விரல் விட்டு எண்ணக்கூடிய பெண் கல்விக்கூடங்களில் அதிகளவு மக்கள் குடியிருப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள வலி மேற்கு, வலி தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் முதன்மை வாய்ந்த பெண்கள் கல்விக்கூடமாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை திகழ்கின்றது. பெண்கல்வி மறுக்கப்பட்ட மூடப் பழக்கவழக்கங்களில் அதிகூடிய பற்றுக் கொண்டிருந்த சமூகக் கட்டமைப்பு நிலவிய அன்றைய காலகட்டத்தில் குடும்ப சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு பெண்கல்வி மூலமாக எதிர்பார்க்கக்கூடிய பலாபலன்களைப் பெறமுடியும் என்ற அமெரிக்க மிசனரிமார்களின் எண்ணத்தில் மலர்ந்த முதல்தர கல்விக்கூடமாகத் திகழ்கின்றது.

185 வருடகால வரலாற்றுப் பாதையில் கல்வி மற்றும் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வளர்ச்சிகளிலும் சாதித்த சாதனைகள் அலாதியானவை. யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவிகள் விடுதியில் தங்கிக் கல்வி கற்கும் வசதி கொண்ட பெண் கல்வி ஒழுக்கம் வழுவாததோர் பாடசாலையாக நீண்ட காலமாகத் தனித்து வத்துடனும் சிறப்புடனும் இயங்கி வந்ததென்றால் மிகையாகாது.

சுதந்திரத்தின் பின்பு கருக்கொண்டு படிப்படியாக வளர்ச்சி யடைந்து சமூக அமைதியின்மையினைத் தோற்றுவித்த காரணிகளின் தாக்க விளைவுகள் இப் பாடசாலையையும் விட்டு வைக்கவில்லை. 1992 ஆகஸ்ட் 22இல் தொடங்கிய பேரனர்த்தத்தினால் இக்கல்லூரி சிதைந்து சின்னாபின்னமாகியது. இச் சந்தர்ப்பத்தில் இக் கல்லூரியின் அதிபராக விளங்கிய திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் வேறு பாடசாலைக்கு இடம்மாறிச் செல்ல செல்வி. போ. கந்தசாமி அவர்களின் சிறந்த

முகாமைத்துவ வழிகாட்டலில் இக்கல்லூரியின் செயற்பாடுகள் பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்த நிலையில் நடைபெற்றன. கடுமையான ஆசிரிய வளப்பற்றாக்குறை, பௌதீகவளப் பற்றாக் குறைகளின் மத்தியில் தனது தொடரியக்கத்தினைத் தக்க வைத்துக் கொண்டது.

போர் தணிவடைந்து மீள் குடியமர்வு முயற்சிகள் முனைப்புப் பெற்ற சூழ்நிலையில் பண்டத்தரிப்பு கிராமத்தின் மீள் எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் சனநடமாட்டமற்ற, பற்றைகள் சூழ்ந்து கட்டட இடிபாடுகளுடன் கூடிய யுத்த வடுக்கள் நிறைந்த நிலையில் 1996ஆம் ஆண்டு நவராத்திரி விழாவின் 9ஆவது நாளன்று அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியின் பெறுபேறாகச் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

அன்று தொடக்கம் இன்று வரையில் கல்விசார் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். செல்வி போ. கந்தசாமி அவர்களின் இளைப்பாற்றுகையைத் தொடர்ந்து துடிப்பாற்றல் மிக்க தற்போதைய அதிபரின் சிறந்த வழிகாட்டலில் கல்லூரியின் 185ஆவது நிறைவையொட்டி மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு முன்மாதிரியான செயற்கூறுகளில் ஓர் அங்கமாக இம்மலர் வெளியீடு இடம் பெறுகின்றமையை மனதாரப் பாராட்டுவதுடன் 1990ற்கு முற்பட்ட வளம் நிறைந்த செழிப்பான சமூகக் கட்டமைப்பை பண்டத்தரிப்புப் பகுதியில் தோற்றுவிக்கச் செய்வதில் தனது கனதியான பங்களிப்பை நல்க வேண்டுமென இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

**சு. சுந்தரசிவம்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)
வலிகாமம் கல்விவலயம்.





## சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

## பெண் கல்விப் பாரம்பரியம் பேணும் பாடசாலை

எமது கல்விக் கோட்டத்தில் மிக மூத்த பெண்கள் பாடசாலையாக விளங்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை 185 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி, பெரு விருட்சமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது. கல்வியிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் காலத்துக்குக் காலம் இப் பாடசாலை தன்னை நிலை நிறுத்தி வந்துள்ளது.

அனைவருக்கும் தரமான கல்வி என்ற கொள்கை இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவ்வகையில் சமூகத்தின் சரி பாதியாகவுள்ள பெண்களுக்குக் கல்வியளிப்பது இன்றியமையாததாகும். இப்பாடசாலை பெண் கல்வியளிப்பில் நீண்ட, தொடர்ச்சியான ஒரு பாரம்பரியத்தைப் பேணி வருகின்றமை சிறப்பானதாகும்.

185 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இப்பாடசாலை, அதையொட்டி வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மலரைச் சிறப்பாக வெளியிடும் மலர்க் குழுவினரைப் பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் இப்பாடசாலை சிறந்து விளங்கும் வகையில் நிகழ்காலத்தில் அதற்கான கட்டுமானங்களை மேற்கொண்டு முன்னேற்றம் காண வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

**சி.கந்தசாமி**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்.



# அதிபரின் வாழ்த்துரை

1823ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இலங்கையிலேயே மிகமூத்த பெண்கள் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்குகிறது. பாலர் பள்ளியாக ஆரம்பித்து விடுதி வசதியுடன் கூடிய 1A தரப் பாடசாலையாக வளர்ச்சி கண்டு ஆயிரக் கணக்கான பெண்பிள்ளைகளை வையத்தில் வாழ்வாங்கு வாழ வைத்த எமது பாடசாலை நீண்ட தொடர் பயணத்தில் 185 ஆண்டுகளை நிறைவு செய்து மேலும் நடைபயிலத் தயாராகிறது. இந்தப் பாடசாலை அன்னையின் மாணவியாகிய நான் அதன் தொடர் பயணத்தின் முக்கியமான காலகட்டத்தில் அதிபராகப் பணியாற்றுவது பெருமிதம் தரும் விடயமாகும்.

200 ஆண்டுகளை எட்டிப் பிடிக்கப் போகும் எமது பாடசாலையை மேலும் உத்வேகத்துடன் வளர்த்தெடுக்க வேண்டிய கடமைப்பாடு எம் அனைவருக்கும் உரியதாகும். நாட்டின் நெருக்கடியான நிலைமைகள் சென்ற காலத்தின் பழுதிலா மகோன்னத நிலையிலிருந்து பாடசாலையைக் கீழிறக்கிய போதும், மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் தமது தொழிற்பாடுகளை முன்கொண்டு செல்வது இன்றியமையாததாகும்.

இங்கும், உலகமெங்கும் பரந்தும் வாழ்கின்ற பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் பழைய மாணவிகள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பாடசாலையின் மீள் எழுச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் அன்புடன் வேண்டி அழைக்கிறேன்.

185ஆவது ஆண்டுச் சிறப்பு மலராக 'பண்மகளை' வெளியிடும் மலராசிரியரையும், அவரோடு துணைநின்று பங்களிக்கும் மலர்க்குழுவினரையும் நான் பாராட்டுகிறேன். மலருக்கு ஆக்கங்களையும், விளம்பரங்களையும் அளித்து பங்களிப்புச் செய்தோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலக் கருவூலமாய் இம்மலர் மிளிர வாழ்த்துகிறேன்.

**திருமதி கி. சிவராஜா**
அதிபர்



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து

நீண்ட பயணத்தை நிகழ்த்தி, 185 ஆண்டுகளை நிறைவாக்கி, முக்கிய சந்திப்பில் நிற்கும் பாடசாலை அன்னையின் நீள்வழிச் சேவையை நினைந்து கௌரவிக்கும் பேராவலில் மலர்ந்த சிறுபூவே பண்மகள் சிறப்பு மலராகும். அவ்வப்போது மலர்ந்த பண்மகள் இவ்வாண்டு முதல் காலாண்டிதழாக மலரத் தொடங்கி, சிறப்பு மலராகப் பரிணாமம் பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதே.

பொற்காலங்களைக் கடந்து புறநிலை நெருக்கடிகளால் வளமும் பொலிவும் வனப்பும் இழந்து, மெல்ல மெல்லத் துளிர்க்கும் இப்பாடசாலை தனது பழைய எழிலைப் பெற முனைப்புடன் முயலும் வேளையில் அதற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் இம்மலர் வெளியீடு அமைகின்றது.

சூழ்நிலை யதார்த்தங்கள் மலரின் வருகையைத் தாமதப்படுத்திய போதும் அதிபரின் ஊக்குவிப்பும், சக ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே இம்மலரை உங்கள் கைகளில் தவழ விட்டுள்ளது. தமது கனதியான கட்டுரைகள் மூலம் மலரை அலங்கரித்த பெரியோர்களையும், தமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை நல்கிய சான்றோர்களையும், விளம்பரங்கள் தந்து ஆதரவளித்த புரவலர்களையும் இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறேன். அதேபோல தத்தம் ஆக்க ஆளுமையை வெளிப்படுத்திய மாணவச் செல்வங்களையும் பாராட்டுகிறேன்.

பாடசாலையின் செழிப்பான நிலைபேற்றுக்கு அடித்தளமிடும் பணியில் 'பண்மகள்' தொடர்ந்தும் ஈடுபடுவதோடு மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும் பாடுபடும். ஒத்துழைப்பும் ஊக்கமும் தந்து இந்த இலக்கை அடையச் செய்வது பாடசாலைச் சமூகத்தின் கைகளிலேயே உள்ளது.



**சு. ஸ்ரீகுமரன்**
மலராசிரியர்




ஈழவள நாட்டின் வடக்கே புகழ்பூத்த யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி தென்மேற்குப் பிரதேசத்தில் தனக்கென நீண்ட வரலாற்றையும், தனித்துவமான பண்புகளையும் கொண்டு விளங்குவது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ஆகும். இப்பாடசாலையானது பல்வேறு சோதனைகளுக்குட்பட்டும், பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியும் வளர்ந்தோங்கி இன்று 185ஆவது ஆண்டில் காலடி வைக்கும் வேளையில் எமது கல்லூரியின் வரலாற்றை மீள நோக்குவது இன்றியமையாததாகும்.

மேலைத் தேசத்தவரின் வருகையும் அவர்களின் சமூக, சமய, கலாசாரத் தொடர்புகளும் இலங்கை வாழ் மக்களின் அரசியலில், பொருளாதாரத்தில், சமயத்தில், கல்வியில் எனப் பல்வேறு துறைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது எனலாம்.

இந்த வகையில் சமயத்தினூடாகக் கல்வியைப் பரப்புவதற்காக வருகை தந்த மிஷனரிகளின் பங்களிப்பு யாழ் குடாநாட்டின் கல்விப் பாரம்பரியத்தை மாற்றிய தோடல்லாமல் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கல்வியில் உயர்ந்தோங்கி வளர்வதற்கும் காரணமாய் அமைந்தது.

அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மிஷனரிமார் தெல்லிப்பழை, உடுவில், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை முதலான கிராமங்களில் தமது கல்விப் பணிகளை ஆரம்பித்தனர் எனலாம். இவ்விடங்களில் அமெரிக்க மிஷனரிமாரின் செயற்பாடுகளில் இரண்டு விடயங்கள் முக்கியமானவையாக அமைந்திருந்தன. பெண் கல்வி, வைத்திய சேவை என்பனவே அவையாகும். இவர்களின் பணிகளில் ஒன்றே எமது பாடசாலை நிறுவப்பட்டமையுமாகும்.

## பாடசாலையின் தோற்றம்

1823இல் அமெரிக்க மிஷனரிமாரின் ஆதரவில் எமது கல்லூரி பாலர் பள்ளியாக ஆரம்பமானது. திரு. R.J. எக்காட் அவர்களின் காலத்தில் (1834 - 1843) முதற்தரமான பாலர் பள்ளியாக விளங்கியது. இக்காலத்தில் திரு. கே. பி.ஜோன் தலைமை ஆசிரியராக விளங்கினார். அவர் மாற்றலாகிச் செல்ல திரு. எல். வி. சின்னத்தம்பி தலைமை ஆசிரியராக விளங்கினார். பின்னர் 1868 - 1880 வரையான காலத்தில் கில்லிஸ் அம்மையாரின் சேவையினால் விடுதியுடன் கூடிய பாடசாலையாக மிளிரத் தொடங்கியதெனலாம். 1918இல் திரு. அல்பிரட் கந்தையா போதகர் காலத்தில் ஆங்கிலப் பாடசாலையாக மாற்றமடைந்தது. 1936இல் சுயபாஷா விடுதிப் பாடசாலையாக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை என்னும் பெயருடன் இயங்கத் தொடங்கியது.

1939இல் இப்பாடசாலையின் அதிபராக திருமதி புளோரா கனகதுங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். திருமதி கனகதுங்கம் அவர்களின் தயாள குணமும், நிர்வாகத்திறனும் கல்லூரியின் வளர்ச்சிக்குக் காரணங்களாய் அமைந்தன. பலதுறைகளிலும் இக்கல்லூரி வளர்ச்சியடையத் தொடங்கியது.

## பாடசாலையின் பொற்காலம்

1946இல் செல்வி கிருபைமலர் மதியாபரணம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று, பாடசாலையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். முதலாவது தமிழ்ப் பெண் அதிபராகக் கடமையேற்றவர் செல்வி கி. மதியாபரணம் அவர்களே. ஆங்கிலப் பயிற்சி பெற்ற இவர் ஆங்கில பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் முதலில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி, சமயக் குழுவின் பணிப்பின் பேரில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலைக்கு அதிபராக மாற்றம் பெற்று பணி மேற்கொண்டார். டொக்டர் ஸ்கொடரால் உபயோகிக்கப்பட்ட கட்டடம் இவருடைய வாசஸ்தலமாக அமைந்தது.

மாணவர்கள் பலர் விடுதியில் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். மாணவர்கள் மாத்திரமல்லாமல் தொலை தூரத்தில் இருந்த ஆசிரியர்கள் கூட விடுதியில் தங்கியிருந்து தமது கற்பித்தற் பணியைச் செவ்வனே செய்து வந்தனர்.

செல்வி மதியாபரணம் அவர்களின் ஆளுமையும், ஆற்றலும் கல்லூரி புதிய தோற்றத்தையும் அந்தஸ்தையும் பெற வழிவகுத்தது. புதிய கட்டடங்கள் பல தோற்றம் பெற்றதுடன் இக்கட்டடங்கள் மின்சார வசதியையும் பெற்றிருந்தன. விஞ்ஞான ஆய்வு கூடம், பாடசாலை மண்டபம் என்பன இவரது காலத்தில் கட்டப்பட்டன. விடுதிக்காகப் புதிய இல்லங்கள் கட்டுவிக்கப்பட்டன. மைதானத்தின் நடுவே திறந்தவெளி அரங்கு அமைத்ததோடு விளையாட்டு மைதானத்தையும் விசாலித்தார். க.பொ.த. உயர்தர வகுப்புகளும் தொடங்கப்பட்டன.

விடுதிகளுக்குப் பொறுப்பாக இருந்த லூசி அக்கா, பத்மா மதியாபரணம் என்போர் விடுதிகள் சிறப்புற இயங்கத் தமது பணிகளை ஆற்றி வந்தனர். இதனால் சிறந்ததொரு பெண்கள் விடுதிப் பாடசாலையாக இக்கல்லூரி விளங்கியது.

1966இல் இப்பாடசாலை அரசால் சுவீகரிக்கப்பட்டது. இக்காலத்தில் முதலாவதும், தனித்துவம் மிக்கதுமான பெண்கள் பாடசாலையாக மிளிர்ந்த இப்பாடசாலையில் 1800ற்கும் மேற்பட்ட மாணவர்களும், 75இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

அப்போது 18 கட்டடங்கள் இருந்தமையால் கல்வியுடன் ஏனைய இணை பாடவிதானச் செயற்பாடுகளும் முன்னேற்றகரமான நிலையில் காணப்பட்டன. செல்வி கி. மதியாபரணம் தனது நீண்ட கால சேவையின் பின் 1970இல் ஓய்வு பெற்றார்.

1970இன் பின் குறுகிய காலம் செல்வி சரவணமுத்து அதிபராகக் கடமை ஏற்றார். இவரது காலத்தில் பாடசாலை சிறந்த ஒழுங்கு, கட்டுப்பாடு நிறைந்த பாடசாலையாக விளங்கியது. பின்னர் 1970 தொடக்கம் 1972 வரை திருமதி காயத்திரி கணேசன் அதிபராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 1972இன் பின் மறுமலர்ச்சிக் காலம்

1972 தொடக்கம் 1986ஆம் ஆண்டு வரை திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் அதிபராகப் பொறுப்பேற்று அளப்பரிய சேவைகள் புரிந்து பாடசாலை வளர்ச்சிக்கு அரும் பணியாற்றினார். இவர் காலத்தில் மேலும் பல கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. மேல்மாடிக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம், புதிய திறந்தவெளி அரங்கு என்பன கட்டப்பட்டன. பௌதீக வளத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. கா. திருநாவுக்கரசு ஆகியோர் ஆற்றிய பணிகள் நினைவு கூரத்தக்கவை.

இக்காலத்தில் மாணவர் தொகை 1300ற்கு மேலாகவும், ஆசிரியர் தொகை 50ற்கும் மேலாகவும் உயர்ந்திருந்தது. எமது கல்லூரி இசை, நாடகம், உடற்கல்வி, சாரணியம் என்பவற்றில் சிறந்து விளங்கியதோடல்லாமல், இந்நிகழ்வுகளில் மாவட்ட, மாகாணப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய இணை பாடவிதானச் செயற்பாடுகளினால் பாடசாலையின் புகழ் மேலும் பரவியதெனலாம். இவருடைய ஆளுமை, முகாமைத்துவ ஆற்றல் என்பன கல்லூரியை வளர்த்தெடுப்பதற்குக் காரணமாயின. இக்காலத்தில் திருமதி. க. ஆறுமுகதாசன் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய ஆசிரியர்களான மறைந்த புலவர் கா. வேல்முருகன், திரு. ஆ.சி. நடராஜா ஆகியோர் (முகாமையாளர், தினக்குரல்) குறிப்பிடத்தக்கவர்கள். திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் அளப்பரிய சேவையாற்றி 1986இல் ஓய்வுபெற்றதும், திருமதி மு. சுப்பிரமணியம் பதில் அதிபராகக் கடமையாற்றினார்.

## 1987இன் பின் இடர்சூழ்ந்த காலம்

1987இல் ஏற்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கை எமது பாடசாலைக்குப் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில் அதிபராகப் பதவியேற்றவர் திருமதி தே. தம்பிராஜா அவர்கள். இக்காலத்தில் எமது பாடசாலை இந்திய இராணுவ முகாமாகக் காணப்பட்டது. பாடசாலைத் தளபாடங்களும், ஆவணங்களும் பெருமளவில் அழிக்கபட்டன. மனையியற் கூடம், நெசவுகூடம் என்பன சேதமாக்கப்பட்டன. இதுவரை காலமும் இயங்கி வந்த விடுதியும் மூடப்பட்டது.

பின்னர் ஒருபுறத்தில் இராணுவ முகாம் இயங்க அதனுடன் எமது பாடசாலையும் இயங்கி வந்தவேளையில் இன்னொரு பகுதியில் எமது மாணவர் கல்வி கற்கவேண்டிய துரதிஷ்ட நிலை ஏற்பட்டது. மாணவர் வரவும் குறைவடையலாயிற்று. நாளடைவில் இராணுவம் மெல்ல மெல்ல எமது பாடசாலையை விட்டு வெளியேறி பாடசாலையைச் சுற்றியுள்ள வீடுகளில் குடியேறலாயிற்று. ஆயினும் பாடசாலை முடிவடைந்த பின்னர் பாடசாலை இராணுவத்தின் பிடிக்குள்ளேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலையைச் சூழக் குடிகொண்டிருந்த இராணுவம் 1990இல் நாட்டை விட்டு

வெளியேறியதால் பாடசாலை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பத் தொடங்கியது. இக் காலகட்டத்தில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. திருமதி தே. தம்பிராஜா மாற்றலாகிச் சென்றதும் உதவி அதிபர்களாக இருந்த திருமதி வி. சிவபாக்கியநாதன் அவர்களும், திருமதி க. சண்முகநாதன் அவர்களும் பதில் அதிபர்களாகக் கடமையாற்றினர்.

1990 மார்கழியில் திருமதி செ. மகாலிங்கம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். அவருடைய இனிமையான சுபாவம், மாணவரிடையே காட்டிய அன்பு என்பன அவர் மீது ஆசிரியர்களும், மாணவர்களும் ஈடுபாடு கொள்ளக் காரணமாயிற்று. ஆனால் குறுகிய காலத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்று யாழ்பாணக் கல்விக் கோட்டத்தில் பணியாற்ற வேண்டி இருந்ததால் எமது பாடசாலையை விட்டு விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

1991இல் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். இவர் கடமையேற்ற குறுகிய காலத்தில் பாடசாலை பல்துறைகளிலும் சிறப்புற்று கலைகள் மிளிரும் கலைக்கூடமாக விளங்கியது. இக்காலத்தில் நூலகம் விஸ்தரிக்கப் பட்டதோடு அதற்குப் பொறுப்பாளரும் நியமிக்கப்பட்டார்.

**1992இன் பின் இடம்பெயர்வுக் காலம்**

1992இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக எமது பாடசாலைக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டது. முற்றாகவே நம் பாடசாலையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பண்டத்தரிப்பு கிராமமே முற்றாக இடம்பெயர்ந்தது. பண்டத்தரிப்பு நாற்சந்தியில் மாடிக் கட்டடமாக உயர்ந்தோங்கி நின்ற எமது பாடசாலை விமானத் தாக்குதல்களுக்கும், எறிகணை வீச்சுக்களுக்கும் இலக்காகி இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கள் பாடசாலையின் முக்கிய ஆவணங்களை எமது பாடசாலை ஆசிரியர் பலரின் ஒத்துழைப்புடன் பெற்று யா/வட்டு இந்துக்கல்லூரி நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் பாதுகாத்தார். இந்த வகையில் வட்டு இந்துக் கல்லூரி நிர்வாகத்தினருக்கு நன்றி கூறுவது இன்றியமையாதது.'

இவ்வாறு இடம்பெயர்ந்த நிலையில் 1992 புரட்டாதியில், அதிபராகப் பதவி யேற்றவர் எமது மறைந்த அதிபர் செல்வி. போஷேந்திராதேவி கந்தசாமி அவர்கள். மிகுந்த தற்துணிவும், கடமையுணர்வும் மிக்கவர். பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் பொறுப்பேற்று தானும் அங்கத்தினராக இருந்து பாடசாலையைக் கட்டிக் காத்த பெருமை இவரையே சாரும். தொடர்ச்சியாக ஏற்பட்ட யுத்த நெருக்கடிகள் காரணமாக பல்வேறு இடங்களுக்கும் பாடசாலை இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

வட்டு இந்துக் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கிவந்த நிலையில் தனித்த ஒரு பாடசாலையாக உருவாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கட்டடங்களுக்கு அலைந்த போது டொக்டர் பகீரதன் அவர்கள் தமது வீட்டைப் பாடசாலை இயங்குவதற்குத் தந்துதவினார். சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலையில் எமது ஆரம்பப் பிரிவு நடத்தப்பட்டு வந்தது. பின்னர் ஏற்பட்ட

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும், அடுத்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் எமது பாடசாலை இயங்கி வந்தது.

## 1996இன் பின் புத்துயிர்ப்புக் காலம்

அக்காலத்தில் அதிபராகப் பதவி வகித்த செல்வி போ. கந்தசாமி அவர்கள் 1992 தொடக்கம் 1996 வரை எமது பாடசாலையை பல்வேறு இடங்களுக்கும் நகர்த்திச் சென்று கல்விச் செயற்பாடுகளை நடத்திய பெருமைக்குரியவராவார். 1996ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் அவரது அயராத முயற்சியினால் எமது சொந்த இடமான பண்டத்தரிப்பு கிராமத்திற்கு மீண்டோம். அங்கு இடிபாடுகள், சேதங்கள், அழிவுகள், கண்ணி வெடிகள் மத்தியில் இயங்கத் தொடங்கினோம்.

அதுமட்டுமல்லாமல் 1996இல் மீண்டும் எமது இடத்திற்கு வருவதற்கு எல்லோரும் அஞ்சியிருந்த வேளையில் மனத் தைரியத்துடன் வந்து பாடசாலையை இயங்கச் செய்தமையால் கிராமமே விழிப்படையத் தொடங்கியது. இவருக்கு உதவியாக மறைந்த *A.V.* துரையப்பா அவர்கள் நலன் விரும்பியாக இருந்து பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியிருந்தார். அத்துடன் தற்போதைய வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளரும், எமது முன்னாள் ஆசிரியருமான சு. சுந்தரசிவம் அவர்களும் அதிபருக்குப் பக்கபலமாகவிருந்து பணியாற்றினார். கிராம மக்கள் மெதுமெதுவாகக் கிராமத்தை நோக்கிக் குடியேறத் தொடங்கினர்.

ஆரம்பகாலத்தில் எமது பாடசாலை உரிய இடத்திற்கு மீள வரும்போது பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாத்திரமே ஒரு நிறுவனமாக இயங்கி வந்தது. அயற்பிரதேசங்கள் யாவும் பற்றைக் காடாகக் காணப்பட்டன. கட்டடங்கள் அழிந்த நிலையில் மிதிவெடிகளுக்கும் பற்றைகளுக்கும் நடுவே அஞ்சாமல் அவற்றை அகற்றி பாடசாலைப் புனரமைப்பு முயற்சியை மேற்கொண்டார். இதன் மூலம் யுத்தம் காரணமாக வெளியேறிய மக்கள் மீண்டும் கிராமத்தில் வந்து மீளக் குடியேற வழிசமைத்த பெருமையும் அவரையே சாரும்.

இக்காலத்தில் கட்டடங்கள் பற்றாக்குறையாக இருந்தது போலவே ஆசிரியர் பற்றாக்குறையும் இடம்பெற்றுக் காணப்பட்டது. மாணவர் பாதிப்படையக் கூடாது என்ற காரணத்திற்காக தொண்டர் ஆசிரியர்களாகப் பலரை நியமித்து தமது சொந்தப் பணத்திலேயே கொடுப்பனவுகளை மேற்கொண்டார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டு செயற்பட்ட அவர், சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒருமித்துச் செயற்பட்டு, பாடசாலையை அழியாமல் கட்டிக் காத்த பெருமைக்குரியவராவார். *G.T.Z* போன்ற அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் உதவியினால் அழிவடைந்த கட்டடங்களை மீண்டும் புதுப்பொலிவு பெறச் செய்த அவர் 12 ஆண்டுகள் சேவையாற்றிய பின் 2003இல் ஓய்வுபெற்றார்.

## வளர்ச்சியை நோக்கிய தற்காலம்

2004இல் எமது பாடசாலையின் அதிபராகப் பதவியேற்ற திருமதி கிருபாசக்தி சிவராஜா அவர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவியாவார். இவரின் பாடசாலைப் பற்றும், ஆளுமையும் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல வரப்பிரசாதங்களாக அமைந்துள்ளன. ஆளுமையும், ஆற்றலும் கொண்ட இவரின் அயராத முயற்சிகளால் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கின்றதென்றால் மிகையாகாது.

எமது தற்போதைய அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளிற் சில.

- S.D.C நிறுவனத்தின் உதவியுடன் 12 வகுப்பறைகளைக் கொண்ட புதிய மாடிக் கட்டடம் நிறுவப்பட்டமை.
- மேற்குறித்த நிறுவனத்தின் உதவியுடன் மனைப்பொருளியல் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டமை.
- உலக உணவுத் திட்டத்தின் (W.F.P) உதவியினால் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டு மைதானம் சீராக்கப்பட்டமை.
- சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் சுற்றுமதில் அமைக்கப்பட்டமை.
- கல்வித் திணைக்களத்தின் SEMP திட்டத்தின் கீழ் தண்ணீர்த்தாங்கி கட்டப்பட்டமை.
- உயர்தர கலைத்துறை மாணவருக்குப் புதிய பாடத்துறைகள் அறிமுகம் செய்யப்பட்டு, பல்கலைக்கழகத்திற்கு அதிக மாணவர் அனுமதி பெறக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியமை.
- இணைபாடவிதானச் செயற்பாடுகள், சாரணியம், பெருவிளையாட்டுக்கள், மெய்வல்லுநர் மேம்பாட்டினால் அதிகளவு மாணவர் பங்குபற்றவும், வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் வெற்றி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டமை.
- பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் உதவியுடன் கூடைப்பந்தாட்டத் திடல் அமைக்கப்பட்டமை.
- SEMP திட்டத்தின் கீழ் கணனிக் கற்கை நிலையம் உருவாக்கப்பட்டமை.

எனவே அதிபரின் இன்னோரன்ன பணிகளினால் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கி வீறுநடை போட்டுச் சென்று கொண்டிருக்கின்றது.

எமது பாடசாலை வளர்ந்து பெருவிருட்சமாய் கிளை பரப்பி நிற்பதற்கு எமது பழைய மாணவிகள், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அத்தகைய உதவிகளை ஆற்றியவர்களை நன்றியுடன் நினைவு கூரும் அதேவேளை அவர்களின் உதவியை பாடசாலை முழுவிருப்போடு எதிர்பார்த்து நிற்கிறது.

# அதிபர் அறிக்கை - 2008

அறுவடையின் போது அகமகிழும் உழவனைப் போல் மாணவர் மனங்களைப் பண்படுத்தி, பசளையிட்டு, விதையிட்டு, நீரூற்றி, களையெடுத்து அறுவடை செய்யும் இந் நன்நாளம் பரிசளிப்பு நாளே மகிழ்ச்சியின் எல்லையைத் தொட்டுவிடும் நாள்.

யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையானது, இவ்வருடம் தனது 185வது ஆண்டு நிறைவினை அடைவதையிட்டுப் பெருமையுறுகின்றது. இதனையிட்டு இவ்வருடத்தின் மூன்றாவது பண்மகள் அழகுற புதிய பல விடயங்களுடன் இப் பரிசளிப்பு நாளிலே வெளிவருகின்றாள்.

இத்தகைய ஆண்டு நிறைவு விழாவின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும்

பெருமதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே!
சிறப்பு விருந்தினர் அவர்களே!
கௌரவ விருந்தினர் அவர்களே!
பரிசில்களை வழங்க வருகை தந்திருக்கும் திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்களே!
கல்வித்திணைக்கள அலுவலர்களே!
அதிபர்களே!
பெற்றோர்களே!
நலன் விரும்பிகளே!
எமது பாடசாலை ஆசிரியர்களே!
பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே!
பழைய மாணவர்களே!
எமது பாடசாலை மாணவர்களே!
பாடசாலை அலுவலக ஊழியர்களே!

எமது பாடசாலையின் 185வது ஆண்டு நிறைவு விழாவிலே "பண்மகள்" சஞ்சிகையை வெளியிட்டு பரிசளிப்பு விழாவினை நடாத்துகின்ற வேளையில் சமூகமளித்த உங்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவிப்பதுடன் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களே! தங்களை எமது விழாவிற்கு வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பேராசிரியர் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விமாணி பட்டப்படிப்பினை மேற்கொண்டு முதல் வகுப்பில் சித்தி பெற்று விரிவுரையாளராய், பேராசிரியராய் பணியாற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல், மானிடவியல் துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற காரணகர்த்தாவாக விளங்கியவர். தமது அயராத உழைப்பினால் இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக மிளிர்ந்து கொண்டிருப்பவர். கல்விச் செயற்பாடுகளுக்கு அப்பால் கலை இலக்கியத்துறைகளில்

ஆர்வமும் பயிற்சியும் கொண்ட பேராசிரியர் அவர்கள் நல்ல பல கலை அனுபவங் களையும் எமக்குத் தந்த பெருமைக்குரியவர். கவிதை, சிறுவர் இலக்கியம், சிறுகதை, நாடகம், வானொலி – திரைப்பட ஊடக படைப்புக்கள் எனப் பல்துறை சார்ந்த ஆக்கங்களைப் படைத்தளித்த விற்பன்னர். இத்தகைய கல்வியியலாளர் எமது கல்லூரிக்கு பிரதம விருந்தினராக வருகை தந்தமையயிட்டு பெருமகிழ்வடைவதுடன் எமது கல்லூரிச் சமூகம் சார்பாக வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இவ்விழாவிற்குப் பரிசில்களை வழங்க வந்திருக்கும் எமது முதன்மை விருந்தினரின் பாரியார் திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்கள் சிறந்த கல்வியியலாளர். வணிகமாணிப்பட்டதாரியான இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் முதுதத்துவமாணிப்பட்டம் பெற்றவர். தற்போது யா/வேம்படி மகளிர் கல்லூரியில் மிகச் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவரை எமது கல்லூரிச் சமூகம் சார்பாக அன்புடன் வரவேற்கின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்களே! தங்களை இன்று இந்நிகழ்வில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம். ஹம்பாந்தோட்டை ஷாகிராத் தேசிய பாடசாலையில் பணியாற்றிய பின் எங்கள் பாடசாலையில் 1994ல் இருந்து 1999வரை ஆசிரியராகப்பணியாற்றியவர். வணிகமாணி, பட்டப்பின் கல்வி டிப்புளோமா, முதுகல்விமாணிப் பட்டங்களைப் பெற்றவர். இலங்கை கல்வி நிர்வாக சேவைப்பரீட்சையில் சித்தியடைந்து வலிகாமம் கல்வி வலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், பின்னர் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றவர். தாங்கள் எங்கள் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் என்பதில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகும். தங்களை பேருவகையுடன் வரவேற்கின்றோம்.

கௌரவ விருந்தினர் மதிப்பிற்குரிய திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களே! எமது கல்லூரியின் பழைய மாணவியான இவர் எமது கல்லூரியில் இருந்தே பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி பட்டப்படிப்பை மேற்கொண்டவர். மக்கள் வங்கியின் முகாமையாளராகப் பணியாற்றி இன்று ஓய்வு பெற்றுள்ளார். எனினும் இவர் சிறந்த பெண் எழுத்தாளராக இன்று வரை பிரகாசித்து வருவது யாவரும் அறிந்ததே. இவருடைய ஆக்கங்கள், ஈழத்து இலக்கியத்திற்கு மகுடம் சூட்டுவனவாகும். இவரது ஆக்கங்கள் குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். தாங்கள் எமது பழைய மாணவியும் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. தங்களை வருக வருகவென வரவேற்கின்றோம்.

மேலும் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

185வது ஆண்டில் கால் பதித்துள்ள எங்கள் பாடசாலை மேலும் பல ஆண்டுகள் நிறைவில் பெருமிதம் அடைய ஆசிக்கின்றோம். பற்பல உதவிகள் பல்வேறு வடிவங்களில் கிடைக்குமாயின் நாம் பழைய வளங்கள், வசதிகளோடு மீள எழுவது நிச்சயமே.

## புனரமைப்பு முயற்சிகள்

பாடசாலைக்கென நீர்த்தாங்கி ஒன்று அமைப்பதற்கு SEMP திட்டத்தின்கீழ் நிதியுதவி செய்யப்பட்டு நீர் விநியோகம் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. DCB திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொன்னம்பலம் கஜேந்திரகுமார் அவர்கள் கூடைப்பந்தாட்டத்திடல் அமைக்கத் தேவையான நிதியின் ஒரு பகுதியான ரூபா 200000/=தினை வழங்கியுள்ளார். அவருக்கு கல்லூரிச் சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந் நோக்கத்திற்கென நிதியுதவி தேவைப்படுகின்றது.

## முகாமைத்துவம்

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியை விடாமுயற்சி, ஆர்வம், நம்பிக்கை என்பவற்றால் பிணைத்து எமது மாணவர்களை கல்வி அபிவிருத்தி நோக்கி வீறு நடை போட வைப்பது எமது இலக்காகும். புதிய கல்வி மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுத்து தன்னம்பிக்கையுடன் தனித்துவம் பேணுவது எமது தலையாய கடமையாகும்.

முகாமைத்துவம் என்பது பயன்தரு திட்டமிடலும், செயற்பாடுகளை ஒழுங்காக்குதலுமாகும். அந்த வகையில் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள, மேலதிக செயற்பாடுகள் என்பன சிறப்பாக அமைவதற்கும் மாணவர்களது ஒழுங்கு கட்டுப்பாட்டைப்பேணவும் எமது முகாமைத்துவக்குழு முனைப்புடன் செயற்படுகின்றது.

பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பு நன்கு பரவலாக்கப்பட்டு பிரதிஅதிபர், பகுதித் தலைவர்கள், பாடஇணைப்பாளர்கள், வகுப்பாசிரியர்கள் என பொறுப்புக்களும், கடமைகளும் அகலப்படுத்தப்பட்டுள்ளன. எனது வேலைப்பழுவினைக் குறைப்பதற்கு முகாமைத்துவக் குழுவானது பக்க பலமாகச் செயற்படுகின்றது. பிரதி அதிபர் திருமதி இ. இராஜசேகரம் அவர்கள் என்னுடன் இணைந்து பாடசாலையின் செயற்பாடுகளின் சிறப்பிற்குப் பெரிதும பங்காற்றுகின்றார். அத்துடன் செல்வி ஜெ. தர்சினி, செல்வி ச. சியாமினி ஆகியோரும் அலுவலகக் கடமைகளில் எனக்கு உதவுகின்றனர்.

### முகாமைத்துவக்குழு

திருமதி கி. சிவராஜா (அதிபர்)
திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்)
திருமதி கோ. சிறிகரன்
திருமதி தி. கருணீசன்
திருமதி கி. புஷ்பகுமார்
திருமதி ம. குணபாலன்
திரு. வே. சிவசக்திவேல்
திருமதி இ. யோகநாதன்
திருமதி சு. கருணாகரன்
திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன்
திரு. சு. ஸ்ரீகுமரன்

கல்வியின் சிறப்பான அபிவிருத்திச் செயற்பாட்டிற்கும், அதிகாரப் பகிர்வு நோக்கிலும் பகுதித் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஆரம்பப்பிரிவு | - | திருமதி வ. சிறிதரன் | (தரம் 1 - 2) |
| | - | திருமதி ம. குணபாலன் | (தரம் 3 - 5) |
| கனிஷ்டபிரிவு | - | திரு. வே. சிவசக்திவேல் | (தரம் 6 - 8) |
| இடைநிலைப்பிரிவு | - | திருமதி கோ. சிறிகரன் | (தரம் 9 - 11) |
| சிரேஷ்ட பிரிவு | - | திருமதி தி. கருணீசன் | (தரம் 12 - 13) |

இவர்களுடன் பாட இணைப்பாளர்கள் பாடரீதியான மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் என நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி | - | திருமதி வ. சிறிதரன் |
| தமிழ் | - | திருமதி மா. ரவியேந்திரன் |
| ஆங்கிலம் | - | திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன் |
| கணிதம் | - | திரு. டொ. யூட் நிர்மலன் |
| விஞ்ஞானம் | - | திருமதி கி. புஷ்பகுமார் |
| சமூகக்கல்வி | - | திருமதி தி. கருணீசன் |
| வர்த்தகம் | - | திருமதி சு. கருணாகரன் |
| அழகியற்பாடம் | - | செல்வி கு. பாலசுப்பிரமணியம் |
| தொழில்நுட்பபாடம் | - | திருமதி அ. ஈஸ்வரன் |

## ஆசிரியர் குழாம்

மாணவர்களின் கல்வி அடைவின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுபவர்கள் ஆசிரியர்களே. எனது ஆசிரியர் குழாமும் சிறப்பான கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

தற்போது ஆசிரியர் குழாத்தில் 36 நிரந்தர ஆசிரியர்கள் உள்ளனர். திரு. வி. மதிதரன், செல்வி த. சுப்பிரமணியம் ஆகியோர் இவ்வருடம் தற்காலிக இணைப்பில் எம்முடன் இணைந்துள்ளனர். திருமதி கே. தனராஜ் அசிரியப் பயிற்சியினை நிறைவு செய்து மீண்டும் எம்முடன் இணைந்துள்ளார். அண்மையில் திரு. தி. பகீரதன், திரு. த. பிரபாகரன், செல்வி மோ. மாயகிருஷ்ணன், செல்வி க. கந்தையா ஆகியோர் புதிதாக எம்முடன் இணைந்துள்ளனர். இவர்களை வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இரு பாடசாலைகளின் ஆசிரியராகக் கடமை ஆற்றிய திரு. சு. ஶ்ரீகுமரன் தனித்து எமது பாடசாலைக்குரிய ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். இவரைத் தனது பாடசாலையில் இருந்து விடுவித்துத் தந்த யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அதிபர் திரு. வே. சிவசுந்தரம் அவர்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். இவரது படைப்பில் ஒன்றான “செல்லையாத்தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்” என்ற புத்தக வெளியீடும் எமது பாடசாலையின் சமூக விஞ்ஞான மன்றத்தினூடாக கடந்த தவணை இடம்பெற்றது. எம்மை விட்டு விலகிச்சென்றோர் என்ற வகையில் இடமாற்றம் காரணமாக திருமதி கோ. சிவலிங்கம், திரு. தி. தீபன், திரு. Y. பாஸ்கரன், திரு. டொ. யூட் நிர்மலன், செல்வி க. கந்தையா ஆகியோர் எம்மை விட்டு விலகிச் சென்றுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் எமது பாடசாலையின் மேன்மைக்குப் பெரிதும் பங்காற்றியவர்கள் என்பதை இவ்விடத்தில் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர்கள் பணி சிறக்க மேலும் வாழ்த்தி நிற்கின்றேன்.

## கல்விசாரா ஊழியர்கள்

எமது பாடசாலையின் அலுவலக உதவியாளராக திரு. ந. நகுலேஸ்வரராசாவும், பாடசாலைப்பணியாளராக திரு. வே. திருவரங்கனும், விவசாயத்தொழிலாளியாக திருமதி மரிய ஜெயதாரணி றெஜியும் கடமையாற்றுகின்றனர்.

## ஒழுக்காற்றுச் சபை

**இடைநிலைப்பிரிவு:-**

திருமதி கி. சிவராஜா (அதிபர்)
திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்)
திருமதி தி. கருணீசன்
திருமதி கி. புஷ்பகுமார்
திருமதி சு. கருணாகரன்
திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன்
திருமதி மா. ரவியேந்திரன்
திருமதி அ. ஈஸ்வரன்
திரு. பொ. அமிர்தலிங்கம்

**ஆரம்பப்பிரிவு:-**

திருமதி கி. சிவராஜா (அதிபர்)
திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்)
திருமதி வ. சிறிதரன்
திருமதி நெ. யூ. யூ. யோ. ரவீந்திரன்
திருமதி நா. அச்சுதன்
திருமதி வ. பாலசுப்பிரமணியம்
திருமதி த. அகிலன்
திருமதி த. பிரபாகரன்

இவ்வருடம் முதல் ஒழுக்காற்றுச்சபை இருபிரிவுகளாக நியமிக்கப்பட்டு, மாணவ முதல்வர்களை வழிநடத்தும் சபையாகவும், மாணவர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிக்கும் சபையாகவும் செயற்படுகின்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களை வழிநடத்துவதற்கு தரம் 4, 5 வகுப்புக்களில் இருந்தும் மாணவ முதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பாடசாலை மாணவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணும் நோக்குடன் இச்சபை செயற்படுகின்றது. மாணவர்களின் சுத்தம் அவதானிக்கப்பட்டு சீர் செய்யப்படுகின்றது. பாடசாலைக்கு பிந்தி வரும் மாணவர்கள் அவதானிக்கப்பட்டு அம் மாணவர்கள் நேரத்துடன் வருவதற்கு வழிவகை செய்யப்படுகின்றது.

## விளையாட்டுக் குழு

தலைவர்: திருமதி கி. சிவராஜா
செயலாளர்: திரு. டொ. யூட் நிர்மலன்
பொருளாளர்: திரு. பொ. அமிர்தலிங்கம்

எமது பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி வருடாந்தம் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் ஆரம்பப்பிரிவுக்குரிய விளையாட்டுப் போட்டி தனியே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. நான்கு இல்லங்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இதில் சிறந்த திறன்களை வெளிப்படுத்தும் மாணவர்கள் கோட்ட, வலய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டுகின்றனர். பெரு விளையாட்டுக்களான வலைப்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து என்பவற்றிலும், உள்ளக விளையாட்டுக்களான பூப்பந்து, சதுரங்கம் என்பனவற்றிலும் உடற்பயிற்சியிலும் இல்லங்களுக்கிடையிலான போட்டிகள் இடம்பெற்று மாணவர்கள் சிறப்புத்தேர்ச்சி அடைய வழி செய்யப்படுகின்றது. இவ் வருடம் கூடைப்பந்தும் பாடசாலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# சங்கங்கள்/ கழகங்கள்/ மன்றங்கள்

## ஆசிரியர் கழகம்

தலைவர்: திருமதி தி. கருணீசன்
செயலாளர்: திருமதி நா. அச்சுதன்
பொருளாளர்: திருமதி நெ. யூ. யூ. யோ. ரவீந்திரன்

எமது பாடசாலையின் ஆசிரியர் கழகமானது அதிபர் உட்பட 36 ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கு கொண்டு சிறப்பிக்கின்றது. பாடசாலையில் நடைபெறும் பொது நிகழ்வுகள், மாணவர்களின் சிறப்புச் சாதனைகள்,, மற்றும் பொதுத்தேவைகள் போன்றவற்றிலும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கிவருகின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர்: திருமதி கி. சிவராஜா
செயலாளர்: திரு. த. பத்மநாதன்
பொருளாளர்: திரு. வே. சிவசக்திவேல்

பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இச்சங்கம் எமக்கு உதவி வருகின்றது. பாடசாலையின் உட்புறப்பாதைகள், கணினி அறைப்புனரமைப்பு, ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளுக்கு வர்ணம்பூசுதல், கூடைப்பந்தாட்டத்திடல், தண்ணீர்த் தாங்கி போன்ற வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு இச் சங்கத்தினர் உதவியிருக்கின்றனர். மேலும் பல பணிகளை இச்சங்கம் முன்னெடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

## பழைய மாணவர் சங்கம்

| | |
|---|---|
| தலைவர்: | திருமதி கி. சிவராஜா |
| செயலாளர்: | திருமதி வ. இளங்கோவன் |
| பொருளாளர்: | திருமதி இ. இராஜசேகரம் |

இச் சங்கமானது 2007ல் மீளமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. பழையமாணவர் பலர் இதில் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருகின்றனர். இச்சங்கத்தின் கிளை கனடாவிலும் விஸ்தரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. கனடா கிளையானது பாடசாலை அபிவிருத்திக்கென ரூபா 100000/= ஐ வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிதி CDMA தொலைபேசி இணைப்பு பெறவும், 185வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்குரிய செலவின் ஒருபகுதியை ஈடுசெய்யவும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் மேலும் பல பழையமாணவிகள் இணைந்து பாடசாலை அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் பணியாற்றுவது இன்றியமையாததொன்றாகும்.

## உயர்தர மாணவர் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி தி. கருணீசன் |
| தலைவர்: | செல்வி ஸ்ரீ. தனுசியா |
| செயலாளர்: | செல்வி இ. சோபனா |
| பொருளாளர்: | செல்வி தே. சுஜித்தா |

க. பொ. த. உயர்தர மன்றமானது வருடாந்தம் ஒன்று கூடல் நிகழ்வினை சிறந்த முறையில் நடாத்தி வருகின்றது. 2008ம் ஆண்டிற்கான ஆசிரியர் தின விழா இம் மன்றத்தினூடாகக் கொண்டாடப்பட்டது. இத்தகைய நிகழ்வுகளில் மாணவர்கள் தமது உள்ளார்ந்த திறன்களை வெளிப்படுத்துகின்றார்கள். பாடசாலையில் நடைபெறும் விழாக்களிற்கு மன்றத்தினூடாக மாணவர்கள் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள். சிரமதானப்பணியினையும் செயற்படுத்தியிருக்கின்றார்கள். குறிப்பாக வாழைத்தோட்டம், மலையின் சுற்றாடற்பகுதியினை துப்பரவு செய்தமை குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் இம் மன்றமானது பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடும்.

## முத்தமிழ் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி மா. ரவியேந்திரன் |
| தலைவர்: | செல்வி தி. ஜெயமதி |
| செயலாளர்: | செல்வி பி. மே. யே. றபேக்கா |
| பொருளாளர்: | செல்வி சு. கல்பனா |

இம் மன்றமானது தவணையில் இரு தடவைகள் ஒன்று கூடி மாணவர்களின் பல்வகையான இயல், இசை, நாடகத்திறன்கள் வெளிவருவதற்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமிழ் மன்றமானது மிகவும் உன்னதமான சேவையினை ஆற்றிவருகின்றது. மாணவர்களின் மொழிவிருத்தி, கலைவெளிப்பாடுகள், அரங்க வெளிப்பாடுகள் என்பன விருத்தி செய்யப்படுகின்றன. சிறந்த படைப்பாளிகளை உருவாக்குவதில் உன்னத சேவையை ஆற்றி வருகின்றது. இதற்குச் சான்றாக மாணவர்களின் போட்டிமுடிவுகள் உள்ளன. அதற்குப் பல வழிகளிலும் ஊக்கு விப்புக்களும், பயிற்சிகளும் வழங்குவதன் மூலம் இம்மன்றமானது பல சேவைகளை வழங்கி வருகின்றது.

## English Union

Teacher in charge: Mrs. F.R. J. Jeyanthan
President: Miss. K. Sinthuja
Secretary: Miss. R. Shopana
Treasurer: Miss. F. J. Rabekka

The English Union is conducted twice a term. It provides vast opportunities to the students to develop and express their talents and skills involved in language development. Students consider this union a suitable field to excel their skills related with a language learning. Annual English Day competitions are highly considered and it is remarkable that the winners of competitions have been enhanced yearly at the divisional, zonal, district and provincial levels. We are proud to say this year we won a first place at the provincial level and we are taking part at the national level. Mrs. F.R. J. Jeyanthan , Mrs. S. Thayaparan and Mrs. N. Balendrathas are highly support for the development of English language learning.

We have been conducting oral English classes for grade 1&2 students. We started the functioning of English Activity Room in 2007 with an exhibition. This year also we have had an exhibition on 18th September, 2008. we request fund to enrich our activity room.

## சைவ மங்கையர் கழகம்

பொறுப்பாசிரியர்: திருமதி ம. குணபாலன்
தலைவர்: செல்வி அ. றஞ்சிதா
செயலாளர்: செல்வி தி. ஜெயமதி
பொருளாளர்: செல்வி ம. தாரகா

வாரந்தோறும் வெள்ளிக்கழமைகளில் சமய வழிபாடுகளில் ஈடுபடுவதோடு மன்ற் ஒன்று கூடலையும் நடாத்தி வருகின்றது. ஆன்மீக ரீதியான பக்தியுணர்வைத்தூண்டும் வண்ணம் நற்சிந்தனை வழங்கப்படுகின்றது. சமய குரவர்களின் குருபூசைத் தினங்களும், நவராத்திரி விழாவும் சிறப்பாக நடாத்தப்படுகின்றது. சைவபரிபாலனசபைப் பரீட்சையில் பங்கு பற்றி மாணவர் சிறந்த பெறுபேறுகளைப் பெற வழிகாட்டப்படுகின்றது. இந்த வகையில் 2007ல் தரம் 9 மாணவி செல்வி வே. நிந்துஜா மூன்றாம் இட்த்திற்கான வெண்கலப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர்கள்: திருமதி நெ. யூ. யூ. யோ. ரவீந்திரன்
திரு. செ. அன்ரன் செல்வநாயகம்
தலைவர்: செல்வி ஞா. மேரி திரேசா
செயலாளர்: செல்வி பி. யே. றபேக்கா
பொருளாளர்: செல்வி தே. சுஜித்தா

எமது பாடசாலையில் கிறிஸ்தவ மன்றம் மாதத்தின் 1ஆம், 3ஆம் வெள்ளிக்கிழமைகளில் காலை வழிபாட்டுடன் தமது ஒன்று கூடலையும் நடாத்துகின்றது. இம்மன்றம் மூலம் மேலும் சமய அறிவு மாணவர்களிடம் விருத்தியாகின்றது. வருடாந்தம் ஒளிவிழாவும் நடாத்தப்பட்டு வருகின்றது.

## மழலைகள் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி வ. சிறிகரன் |
| தலைவர்: | செல்வன் யே. சானுயன் |
| செயலாளர்: | செல்வன் இ. தர்சிகன் |
| பொருளாளர்: | செல்வி ஜ. பிரியதர்சினி |

தரம் 1, 2 மாணவரை உள்ளடக்கிய மன்றமானது மாதம் ஒரு தடைவ ஒன்று கூடுகின்றது. மழலைகள் தங்கள் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தவும், தலைமைத்துவப் பண்பை வளர்க்கவும் இம்மன்றம் உதவுகின்றது.

## சிறுவர் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி த. அகிலன் |
| தலைவர்: | செல்வி லோ. அபிராமி |
| செயலாளர்: | செல்வி கு. விதுஷா |
| பொருளாளர்: | செல்வி ஆ. டிபுக்சன் |

மேற்படி மன்றமானது ஒவ்வொருமாதமும் இறுதி வெள்ளிக்கழமைகளில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுகின்றது. மாணவர்களின் கலைசார் வெளிப்பாடுகளும், அறிவுசார் வெளிப்பாடுகளும் இங்கு இடம்பெறுகின்றன. மாணவர்களின் தலைமைத்துவம், ஆளுமை, ஒற்றுமை, சுயகட்டுப்பாடு போன்ற பண்புகள் வளர்க்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் எதிர்காலத்தில் ஒரு சிறந்த நற்பிரசையாக உருவாக இம்மன்றம் வழிகாட்டுகின்றது.

## கணித, விஞ்ஞான மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி கி. புஷ்பகுமார் |
| தலைவர்: | செல்வி செ. கார்த்திகாயினி |
| செயலாளர்: | செல்வி ர. லூட்ஸ் வெலூசனா |
| பொருளாளர்: | செல்வி பா. டினோஜினி |

எமது பாடசாலையின் கணித, விஞ்ஞான மன்றமானது மாணவர்களிடையே கணித, விஞ்ஞான அறிவு, ஆற்றலை மேம்படுத்தும் விதத்தில் மன்றக் கூட்டங்களை நடாத்தி வருகின்றது. நவீன கண்டுபிடிப்புக்கள், கணித விஞ்ஞானப் புதிர்கள், வினாடி வினாக்கள், விஞ்ஞான விளக்கங்கள், விஞ்ஞானிகள் பற்றிய தகவல்கள் போன்ற பல விடயங்கள் மாணவர்களால் முன்வைக்கப்படுகின்றன. ஒவ்வொருவருடமும் கணித, விஞ்ஞான கண்காட்சிகள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு, மாணவர்களது ஆற்றல்கள் செயற்பாட்டு ரீதியில் வெளிக்கொணரப்படுகின்றது. களச்சுற்றுலாக்கள், கண்காட்சிகளில் கலந்து கொள்ள வழி செய்யப்படுகின்றது. கணித, விஞ்ஞானப் போட்டிகளில் மாணவர்கள் கோட்ட, வலய, மாவட்டம் வரை சென்று பங்கு பற்றி வெற்றியும் பெறுகின்றனர்.

## சமூக விஞ்ஞான மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி தி. கருணீசன் |
| தலைவர்: | செல்வி சி. அனுஜா |
| செயலாளர்: | செல்வி த. விஸிதா |
| பொருளாளர்: | செல்வி செ. கார்த்திகாயினி |

இம் மன்றமானது தவணையில் இரு தடவை ஒன்று கூடுகின்றது. மாணவர்களின் சமூக விஞ்ஞானம் தொடர்பான அறிவுசார் விடயங்களும், செயற்பாடுகளும் இங்கு

முன்னெடுக்கப்படுகின்றன. 17. 05. 2008ல் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவில் விவசாய ஆராய்ச்சி நிலையம், மின்சார நிலையம், பொது நூலகம், கந்தரோடை அகழ்வாராய்ச்சி நிலையம், தொல்பொருட்திணைக்களம், நல்லூர் இராசதானி போன்ற இடங்களை மாணவர்கள் கண்டு களித்தனர். இம் மன்றம் மூலம் இரண்டு இலங்கைப் படங்கள் சுவரில் வரையப்பட்டுள்ளன. இது மாணவரின் கற்றல் நடவடிக்கைக்குப் பெரிதும் உதவுகின்றது. அத்துடன் இலங்கைப் புறவுருவப்படமும், உலகப் புறவுருவப்படமும் வரையப்பட்டுள்ளது. இம்மன்றத்தினால் அறிவித்தல் பலகை ஒன்று அமைக்கப்பட்டு புதிய பல விடயங்கள் பிரதி திங்கள் தோறும் காட்சிப்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் இம் மன்றமானது பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

## மனைப்பொருளியல் மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திருமதி அ. ஈஸ்வரன் |
| தலைவர்: | செல்வி ஸ்ரீ. தனுசியா |
| செயலாளர்: | செல்வி தே. சுஜித்தா |
| பொருளாளர்: | செல்வி தி. ஜெயமதி |

இம்மன்றமானது மூன்றாவது பதன் கிழமைகளில் ஒன்று கூடுகின்றது. நாடகங்கள், ஆக்கச் செயற்பாடுகள், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள், பொது அறிவு விடயங்கள் போன்ற பல விடயங்கள் இங்கு முன் வைக்கப்பட்டு மாணவர்களின் திறன்கள் வெளிக்கொணரப்படுகின்றன. பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வு களிற்கும் இம்மன்றம் அனுசரணை வழங்குகின்றது. கோட்ட, வலய மட்ட ரீதியாக நடைபெறும் அறிவுப் போட்டிகளிற்கும், சஞ்சிகை ஆக்கப் போட்டிகளிற்கும் மாணவரைத் தயார்படுத்தி வெற்றி பெறுவதற்கு களம் அமைத்துக் கொடுக்கின்றது. மாணவர் ஆக்கக் கண்காட்சி வருடந்தோறும் நடைபெறுகின்றது. மாணவர்களிற்கு மேலதிக அறிவினை ஊட்டும் முகமாக துறைசார் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் மாணவர் நலம் பேணும் பல செயற்பாடுகளை இம் மன்றம் முன்னெடுக்கவுள்ளது.

## வணிக மன்றம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள்: | திருமதி சு. கருணாகரன் |
| | திருமதி இ. யோகநாதன் |
| தலைவர்: | செல்வி ம. தாரகா |
| செயலாளர்: | செல்வி அ. பேஜின் அனுசியா |
| பொருளாளர்: | செல்வி வி. ஜயந்தினி |

இம்மன்றமானது தரம் 10 — 13 வரையான வர்த்தகம் பயிலும் மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. மாதாந்தம் ஒன்று கூடி வணிகத்துறையுடன் இணைந்த பல நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. வணிகப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்கு பற்றி வெற்றி பெற இம் மன்றம் வழி காட்டுகின்றது.

## சுற்றாடல் கழகம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள்: | திருமதி சு. கருணாகரன் |
| | செல்வி வி. இராஜசிங்கம் |
| தலைவர்: | செல்வி த. டிலானி |

இக்கழகமானது தரம் 7, 8 மாணவர்களில் 25பேரை உறுப்பினராகக் கொண்டது. இக் கழகத்தின் 25 சுற்றாடல் முன்னோடிகளும், நமது பாடசாலை, கிராமம், பிரதேசம், நகரம், தேசிய மட்டங்களில் சுற்றாடலைப் பாதுகாப்போம் என்ற நோக்கில் செயற்படுகின்றனர். இதன் முதற் கட்டமாக நமது பாடசாலையின் சுற்றாடலைப் பேணும் நடவடிக்கையையும், சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடாத்தி வருகின்றது.

## சுகாதாரக் கழகம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திரு. வே. சிவசக்திவேல் |
| தலைவர்: | செல்வி தி. ஜெயமதி |
| செயலாளர்: | செல்வி ஸ்ரீ. தனுசியா |
| பொருளாளர்: | செல்வி ம. தாரகா |

எமது கழகச் செயற்பாடுகள் யாவும் பாடசாலையை மையப்படுத்தி தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்றது. இவ்வருடம் ஆசிரியர்கள், மாணவர்களின் சுகாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்தவென தனித்தனியாகக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப் பட்டன. எமது பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. நிர்மலானந்தன், திரு. உமாசுதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். எமது பொதுச் சுகாதாரப்பரிசோதகரின் சீரான சேவையினால் மாணவர்கள் நிறை, உயரம், உடலாரோக்கியம் தொடர்பான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பெற வேண்டிய மாணவர்கள் இனங்காணப்படுகின்றனர். மேலும் இக் கழகத்தின் செயற்பாடுகள்:

- பாடசாலையின் சூழலைப் பேணும் விதத்தில் குப்பைத் தொட்டிகள் அமைக்கப் பட்டு கழிவுகள் உரிய விதத்தில் அகற்றப்படுகின்றன.
- குடிநீர்க்கிணறு தவணை தோறும் துப்பரவு செய்யப்பட்டு சீரான நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.
- சுகாதார விழிப்புணர்வைத் தூண்டும் கண்காட்சிகள் பாடசாலை மட்டத்திலும், சுகாதாரப்பிரிவு ரீதியாகவும் எமது மாணவர்களால் நடாத்தப்படுகின்றன.

## விவசாயக்கழகம்

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்கள்: | செல்வி பி. கதிர்காமத்தம்பி |
| | திரு. த. பிரபாகரன் |
| தலைவர்: | செல்வி செ. சோபனா |
| செயலாளர்: | செல்வி க. கிரிஜா |
| பொருளாளர்: | செல்வி ர. வெலூசனா |

"பயிர் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்னும் திட்டத்திற்கமைவாக எமது பாடசாலையில் விவசாயக்கழகம் கடந்த இரு வருடங்களாக சிறப்பாக இயங்கி வருகின்றது. பாடசாலைவளவினுள் 2 பரப்புக் காணியில் பாடசாலைத் தோட்டம் அமைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வெளியீடுகள் பாடசாலையின் மதிய உணவுத் தேவைக்கும், மேலதிகமானவை சந்தைப்படுத்தப்பட்டும் வருகின்றன. பாடசாலை வளவினுள் பெரு மரங்களிற்கு தாவரவியற் பெயர் இடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இக்கழகத்தின் பல்வேறு செயற்பாடுகள் மாணவர்களிற்கு முன் மாதிரியாக அமைகின்றன. இக்கழகத்தினால்பெருமரங்கள்பாடசாலையில் நாட்டப்பட்டுப் பராமரிக்கப் படுகின்றன.

## மாற்று வலுவுள்ளோர் அலகு

பொறுப்பாசிரியர்:- திருமதி த. அகிலன்

எமது பாடசாலையில் மாற்று வலுவுள்ளோர் அலகு 2007ம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது. விசேட கல்வி உதவி தேவைப்படும் மாணவரைச் சமூகத்துடன் இணைத்து, அவர்களின் இயலாமைக்கு உதவிபுரிந்து அவர்களையும் இயலுமானவர் களாக மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். அத்துடன் எமது பாடசாலையில் உள்ள 16 மாணவர்களுக்கு பார்வைக்குறைபாடு காணப்பட்டது. அவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய வைத்திய ஆலோசனையைப் பெற்று விசேட கல்விப்பிரிவினரால் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. எமது பாடசாலையில் விசேட கல்வி நியமனம் பெற்ற நிரந்தர ஆசிரியர் இல்லாத வேளையிலும் இச் செயற் பாட்டைத் தொடர்ந்து செயற்படுத்த முனைந்துள்ளோம்.

## வழிகாட்டல் ஆலோசனை அலகு

பொறுப்பாசிரியர்:- திருமதி த. கமல்ராஜ

எமது பாடசாலையில் வழிகாட்டலுக்கும், ஆலோசனைக்குமான அலகு 2006ம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவருகின்றது. இடர்படும் மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோர் களுக்குமான ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இச்செயற்பாட்டினால் மாணவர்களது தேவைகள், கற்றல் இடர்பாடுகள், உளநெருக்கீடு கள் அறியப்பட்டு அதிலிருந்து அவர்களை மீட்டு, கற்றலுக்கான சூழலில் அவர்களை அழைத்து வருவதற்கு இலகுவாக அமைகின்றது. இன்றைய சூழலில் இச்செயற்பாடுகள் பாடசாலைகள் தோறும் அவசியமான ஒன்றாக அனைவராலும் அறியப்படுகின்றது. ஆனாலும் எமது பாடசாலையில் இதற்கான நிரந்தர ஆசிரியர்கள் எவரும் இல்லாதமை யினால் அவற்றைச்செயற்படுத்துவதில் பெரும் இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## கட்புல செவிப்புல சாதனக் கூடம்

பொறுப்பாசிரியர்: செல்வி வி. இராஜசிங்கம்

மாணவர்கள் கட்புல, செவிப்புல சாதனங்களின் துணையுடன் தமது கற்றல் நடவடிக்கைகளை வளம்படுத்த இக்கூடம் உதவி செய்கின்றது. மாணவர் கற்றலின் போது செயற்படுகின்றவர்களாக மாறி தமது கற்றலை மேம்படுத்துவதற்கு இக் கட்புல, செவிப்புல சாதனங்கள் உதவுகின்றன.

## நூலகம்

பொறுப்பாசிரியர்: செல்வி கௌ. இராசதுரை

பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு எமது நூலகம் இயங்கி வருகின்றது. நூல்கள் பல வழிகளிலும் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்களின் வாசிக்குந் திறனை உயர்த்தும் நோக்குடன் வகுப்பு ரீதியான வாசிப்பு மூலை ஏற்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களும் நூலகத்தைப் பயன்படுத்த வழிகாட்டப்படுகின்றார்கள். "நூலகம் வளரும் உயிரி" என்பதற்கிணங்க மேலும் பல புதிய நூல்களை நூலகம் வேண்டி நிற்கின்றது.

## COMPUTER UNIT

Teachers in charge: Mrs. N. Balendrathas
Miss. K. Mahalingam

Our computer unit was innovated under the SEMP project. Though we haven't enough computers and facilities we conduct computer classes for secondary and primary students. This unit supports to complete the 0fficial documents. Teachers too get benefit from this unit. We request more computers to enhance our activities.

## சிற்றுண்டிச்சாலை

பொறுப்பாசிரியர்: திரு. பொ. அமிர்தலிங்கம்

எமது மாணவர்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளை மலிவான விலையில் வழங்குவதே சிற்றுண்டிச்சாலையின் பிரதான நோக்கமாகும். அத்துடன் குடும்பப் பாடசாலைகளின் பல்வேறு போட்டிகள் நடைபெறும் பொழுதும் சிற்றுண்டிகள், வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றது. இவற்றால் பெறப்படும் இலாபம் பாடசாலையின் விளையாட்டுத்துறைக்கும், ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கும் பயன்படுத்தப் படுகின்றது. சிற்றண்டிச்சாலையானது மாணவ முதல்வர்களின் பங்களிப்புடன் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## குருளைச்சாரணர்

பொறுப்பாசிரியர்: திருமதி வ. பாலசுப்பிரமணியம்

தரம் 3, 4, 5 வகுப்புக்களிலுள்ள ஆண்பிள்ளைகளை உறுப்பினராகக் கொண்ட இவ்வமைப்பு பிறருக்குப் பயனுள்ள விதத்தில் வாழ்வதற்கு வேண்டிய பண்புகளை ஆடல்கள், பாடல்கள் மூலம் வளர்த்தெடுக்க முனைகின்றது. ஆண்பிள்ளைகளின் ஒழுங்கு, கட்டுப்பாட்டை வளர்ப்பதில் இவ்வமைப்பு அதிக அக்கறை செலுத்துகின்றது. இதன் முதலாவது அணியினருக்கு இந்த ஆண்டு நினைவுச்சின்னம் சூட்டப்பட்டது.

## சிறு தோழியர்

வனராணி: திருமதி செ. தயாபரன்
வனக்குமாரி: திருமதி பி. தர்மபாலன்

ஆரம்பப்பிரிவைச் சேர்ந்த சிறுமிகள் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெற்று, சிறு தோழியருக்குரிய ஆடல்கள், பாடல்கள் மூலம் சிறுமிகள் உற்சாகப்படுத்தப்பட்டு அவர்களது ஆளுமை, தன்னம்பிக்கை என்பன வளர்க்கப்படுகின்றன. கடந்த வருடம் மார்கழி மாதம் இவர்களுக்குரிய இணைவுச்சின்னம் பெண் சாரணிய வட மாகாண ஆணையாளரும், எமது பாடசாலை அதிபருமான திருமதி கி. சிவராஜா அவர்களால் சூட்டப்பட்டது. பிறருக்கு உதவும் மனப்பாங்குடன் இவர்கள் வளர வழிகாட்டப்படுகின்றது. பெண் சாரணியத்தின் கனிஷ்ட பிரிவாக இது உள்ளது.

## சாரணியர்

தலைவி: திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன்
உப தலைவி: திருமதி நி. பாலேந்திரதாஸ்

தற்போதைய உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையிலும், தமது ஆற்றல், ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் விதத்திலும் சாரணியர் இங்கு உருவாக்கப் படுகின்றனர். வருடாந்தம் 36 சாரணியரைக் கொண்டுள்ளதுடன் பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிற்கும் ஒழுங்கமைப்புச் செய்வதற்காக சாரணியர் உதவுகின்றனர். எந்நேரமும் உதவி செய்யவேண்டும், எதற்கும் தயாராக இருக்க வேண்டும், (Be Prepared) என்ற மனப்பாங்குகள் சாரணியரில் வளர்த்தெடுக்கப்பட இவ்வமைப்பு முனைகின்றது. இணைவுச்சவால், 2ம் தரச்சவால், 1ம் தரச்சவால் போன்றவற்றை எமது சாரணியர் நிறைவேற்றி வருகின்றனர். வாராந்தம் செவ்வாய்க்கிழமைகளில் நாம் ஒன்று கூடி எமது செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். இவ்வருடம் இடம் பெற்ற சிந்தனைநாள் வாழ்த்துமடல் போட்டியில் மாவட்ட மட்டத்தில் எமது சாரணியர் வெற்றி பெற்றனர். சாரணியரும், சிரேஷ்ட சாரணியரும் இணைந்து நிதி சேகரித்து வழங்கியமையால் திறந்தவெளிஅரங்கம் வர்ணம் பூசப்பட்டு மெரு கூட்டப்பட்டது.

## சிரேஷ்ட சாரணியர்

பொறுப்பாசிரியர்: திருமதி வெ. ற. ஜெ. ஜெயந்தன்

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு க. பொ. த. உயர்தர மாணவியரில் 25பேரை அங்கத்தவராகக் கொண்டது. பாடசாலை நிகழ்வுகளில் ஒத்துழைப்பு வழங்கும் இவர்கள் அவ்வப்போது சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். சிரேஷ்ட சாரணியரின்மூலம் திரட்டப்பட்ட நிதியின் மூலம் திறந்தவெளி அரங்கம் 32 வருடங் களின் பின் வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய மனித உழைப்பை இலவசமாக வழங்கிய எமது ஆசிரியர் திரு. தி. பகீரதன் அவர்களுக்கு இவ்விடத்தில் நன்றிகூறிப் பாராட்டுகின்றேன். இச் சிரேஷ்ட சாரணியருக்குரிய வேலைத்திட்டமாக மேற்படி செயற்பாடு செய்யப்பட்டது.

### மாணவர் விபரம்

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 - 5 | 87 | 129 | 216 |
| 6 - 11 | - | 243 | 243 |
| 12 - 13 | - | 101 | 101 |
| | | | **560** |

## பரீட்சைப் பெறுபேறுகள்

### தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2007

#### சித்தியடைந்தோர்

1. செல்வி அனற் நொயலின் கொட்விறி விஜயராஜ்
2. செல்வி லுக்சனா ரட்ணகோபால்

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

1. செல்வன் நாகரட்ணம் அருண்
2. செல்வன் மைக்கல் பிரான்சிஸ் அன்ரனி நியூட்டன்
3. செல்வன் கணேசலிங்கம் கோவர்த்தனன்
4. செல்வி திருநாவுக்கரசு டனுஜா
5. செல்வி தவராஜா கஜனி
6. செல்வி சண்முகலிங்கம் துசாயினி
7. செல்வி வரதராஜா துவாரகா
8. செல்வி கொண்சன்ரைன் எழிலினி

**தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2008**

**சித்தியடைந்தோர்**

1. செல்வி விதுஷா குலேந்திரன்
2. செல்வி அபிராமி லோகச்சந்திரன்
3. செல்வன் டொனூர் டிவுக்சன் ஆனந்தராஜா

**100 புள்ளிகளுக்க மேல் பெற்ற மாணவர்கள்**

1. செல்வன் கஜேந்திரன் கருணாகரன்
2. செல்வி எட்வின் சில்வியா சூசைப்பிள்ளை

**க. பொ. த. சாதாரண தரம் – 2007**

| தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|
| 42 | 16 | 38% |

**2007ம் ஆண்டு மிகச் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி**

செல்வி நிரஞ்சினி விநாயகமூர்த்தி - 6A, 1B, 3C

**ஏனைய சிறந்த பெறுபேறுகள்**

1. த. தர்மினி - 5A, 3B, 2C
2. கு. அழகுவதனா - 5A, 2B, 2C, S
3. வி. ஜெயந்தினி - 4A, 3B, 2C, S
4. ஆ. பேர்ஜின் அனோசியா - 4A, B, 3C, 2S
5. ந. கஸ்தூரி - 4A, B, 3C, 2S
6. செ. மேரி செல்வலீனா - 3A, B, 4C, 2S
7. க. ஜெயந்தினி - 2A, 2B, 3C, 2S
8. இ. சிறிஜா - 2A, B, 3C, 2S
9. யோ. தர்சினி - A, 2B, 5C, 2S
10. யோ. துஸ்யந்தி - A, 2B, 2C, 5S
11. செ. பிரதீபா - A, B, 6C
12. சி. மயூரிகா - A, 3B, 2C, 3S
13. சி. யமேலா - A, 2B, C, 3S
14. அ. அருள்மேரி - A, C, 5S

## பாடரீதியாக சித்தி வீதம்

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| தமிழ் | 98% |
| ஆங்கிலம் | 36% |
| விஞ்ஞானம் | 26% |
| கணிதம் | 30% |
| சமூகக்கல்வி | 74% |
| சைவசமயம் | 100% |
| கத்தோலிக்கம் | 100% |
| கிறிஸ்தவம் | 100% |
| மனைப்பொருளியல் | 83% |
| வணிகக்கல்வியும், கணக்கீடும் | 67% |
| சுகாதாரம் | 89% |
| நடனம் | 100% |
| சங்கீதம் | 100% |
| சித்திரம் | 43% |
| புவியியல் | 100% |
| அபிவிருத்திக்கல்வி | 100% |
| தமிழ் இலக்கியம் | 93% |
| நாடகமும் அரங்கியலும் | 100% |
| தகவல் தொழில்நுட்பம் | 80% |

## க. பொ. த. உயர்தரம் - 2007

| பிரிவு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|---|
| கலை | 38 | 36 | 95% |
| வர்த்தகம் | 05 | 05 | 100% |
| விஞ்ஞானம் | 07 | 04 | 43% |

## 2007ல் மிகச் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவிகள்

**கலை** - செல்வி இமாக்குலேசியா அருளானந்தம் - 2A, B
- செல்வி ஜீன்கார்த்திகா அமிர்தநாதர் - 2A, B

**வர்த்தகம்** - செல்வி அபிதா இராஜதுரை - A, 2B

**விஞ்ஞானம்** - செல்வி கிந்துசா சிறிசெல்வசதீஸ்குமார் - 2A, B

செல்வி கிந்துசா சிறிசெல்வசதீஸ்குமார் மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றுள்ளார் என்பதை இவ்விடத்தில் மகிழ்வுடன் கூறிக்கொள்கின்றேன்.

**ஏனைய சிறந்த பெறுபேறுகள்**

1. அ. லக்சிகா - 2A, C
2. த. மேனகா - A, 2B
3. ம. தாட்சாயினி - A, B, C
4. ச. வினோஜா - A, B, C
5. ம. ஜீன்நிரோஜினி - A, 2C
6. நா. மதுரா - A, 2C
7. நா. தாரணி - 3B
8. அ. கலைவாணி - 2B, C
9. ச. சர்மலா - 2B, C
10. ச. கௌசிகா - 2B, C
11. இ. டிலக்சனா - 2B, C
12. ந. கஜேந்தினி - 2B, C
13. பொ. நிவேதிதா - 2B, C
14. இ. விதுர்சனா - 2B, C
15. பு. மீனதர்சினி - B, 2C
16. த. சுகந்தராஜி - B, 2C
17. க. சிந்துசா - B, 2C
18. பு. உதயதர்சினி - B, 2C
19. ச. சுபாஜினி - B, 2C
20. கு. நந்தமாலா - B, 2C
21. கி. மிதுர்சா - B, 2C
22. தெ. கஜேந்திராஜினி - B, 2C
23. சு. ஜஜிதரா - B, 2C

**பாடரீதியாக சித்தி வீதம்**

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| பௌதீகவியல் | 57% |
| இரசாயனவியல் | 57% |
| உயிரியல் | 86% |
| பொருளியல் – வர்த்தகம் | 100% |
| பொருளியல் – கலை | 80% |
| வணிகக்கல்வி | 100% |
| கணக்கீடு | 100% |
| புவியியல் | 100% |
| அரசியல் மூலதத்துவங்கள் | 100% |
| அளவையியல் | 88.9% |
| மனைப்பொருளியல் | 100% |
| கிறிஸ்தவம் | 100% |
| இந்துநாகரீகம் | 100% |
| சித்திரம் | 100% |
| நடனம் | 100% |
| சங்கீதம் | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 100% |
| தமிழ் | 91.8% |

**2007ம் ஆண்டு க. பொ. த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்.**

| | | |
|---|---|---|
| 1. | சிறிசெல்வசதீஸ்குமார் கிந்துசா | – மருத்துவபீடம் |
| 2. | வேதநாயகம் சிவலதாயினி | – சித்த மருத்துவபீடம் |
| 3. | சந்திரதாசன் சர்மலா | – கலைப்பீடம் |
| 4. | அபிதா இராஜதுரை | – முகாமைத்துவபீடம் |
| 5. | அமிர்தநாதர் ஜீன்கார்த்திகா | – கலைப்பீடம் |
| 6. | அருளானந்தம் இமாக்குலேசியா | – கலைப்பீடம் |
| 7. | கிருஷ்ணதாசன் மிதுர்சா | – கலைப்பீடம் |
| 8. | கோபால் கீதாஞ்சலி | – கலைப்பீடம் |
| 9. | மகேந்திரன் தட்சாயினி | – கலைப்பீடம் |
| 10. | தவேந்திரன் மேனகா | – கலைப்பீடம் |

## போட்டி முடிவுகள்

*கல்விப்பிரிவினராலும்ஏனையநிறுவனங்களாலும் நடாத்தப்படும் அனைத்துப் போட்டிகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டுகின்றனர். திறமை, முயற்சி, பயிற்சி, வழிப்படுத்தல் என்பவற்றால் எமது மாணவர்கள் தம் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.*

## விளையாட்டுப் போட்டி

மெய்வல்லுநர், பெருவிளையாட்டுக்களின் போட்டிகளில் எமது மாணவர்கள் பல்வேறு இடங்களைப் பெற்றுள்ளனர். கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 11 இடங்களைப் பெற்றனர். கரப்பந்துப் போட்டியில் கோட்டமட்டத்தில் முறையே 15வயதின்கீழ், 17வயதின்கீழ் அணிகள் இரண்டாம் இடத்தையும், 19வயதின்கீழ் அணி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. வலயமட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டங்களில் எமது 19வயதின்கீழ் அணி சமிபியனாக வெற்றி வாகை சூடி எமது பாடசாலைக்குப் புதியதொரு வரலாற்றைப் படைத்துச் சாதனை புரிந்தது. இவற்றுக்கு உறுதுணையான திரு. டொ. யூட் நிர்மலன் அவர்களுக்கும் எமது பயிற்றுவிப்பாளர் திரு. K. டனிஷ் அவர்களுக்கும், பொறுப்பாசிரியர்களுக்கும் பாராட்டுதல் களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவ் அணியானது தேசியமட்டப் போட்டிகளில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டத்தில் கால்பதித்த எமது 19வயது 'கரப்பந்தாட்ட அணியினர் 15வயதுப் பிரிவினராக திரு. டொ. யூட் நிர்மலன் ஆசிரியர் அவர்களால் வழிப்படுத்தப்பட்டு வளப்படுத்தப் பட்டவர்கள் என்பதை இங்கு குறிப்பிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வலைப்பந்துப் போட்டியில் கோட்டமட்டத்தில் 15வயதின்கீழ் அணி மூன்றாம் இடத்தையும், 17வயதின்கீழ் அணி முதலாம் இடத்தையும், 19வயதின்கீழ் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. 17வயதின்கீழ் அணி வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

## தமிழ்த்தினப் போட்டி

தமிழ்த்தினப் போட்டி எனும் போது அதற்குள் தமிழ், நடனம், சங்கீதம் என்பன அடங்கும். கோட்டமட்டத்தில் நடனப் போட்டிகளில் 6 இடங்களையும், இசைப்போட்டியில் 3 இடங்களையும், தமிழ் அறிவுப் போட்டியில் 4 இடங்களையும் எமது மாணவர்கள் பெற்றுள்ளனர். தரம்4ஐச் சேர்ந்த செல்வி ஜெ. ஜனுசியா கோட்ட,

வலய மட்ட தனிநடனப் போட்டியில் 1$^{ஆம்}$ இடத்தினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 2$^{ஆம்}$ இடத்தினைப் பெற்றுள்ளார். இவற்றைவிட சிறுவர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டியில் மூன்று இடங்களையும், தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு வலி தென்மேற்கு பிரதேச செயலகம் நடத்திய போட்டியில் மூன்று இடங்களையும் எமது மாணவர்கள் பெற்றனர்.

கோட்டமட்ட ஆரம்பக்கல்வி சித்திரப் போட்டியில் தரம் 1 மாணவன் மூ. விதுர்சன் முதலாம்இடத்தைப் பெற்றுள்ளார். சிறுவர் அரங்கப் போட்டியில் எமது பாடசாலை சிறுவர் அரங்கு கோட்டமட்டத்தில் 2$^{ஆம்}$ இடத்தினையும், வலய மட்டத்தில் 1$^{ஆம்}$ இடத்தினையும் பெற்று மாவட்ட மட்டத்தில் பங்கெடுக்க உள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி தென்மேற்கு பிரதேச சபை நடத்திய போட்டியில் பிரிவு – 1$^{ல்}$ 3மாணவர்களும், பிரிவு – 2$^{ல்}$ 3மாணவர்களும் வெற்றியீட்டினர். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் மாணவி ஒருவர் 2$^{ஆம்}$ இடத்தினைப் பெற்றார். மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு நாடாத்தப்பட்ட போட்டியில் வலய மட்டத்தில் தனிநடனம், குழு நடனங்கள் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டன.

## ஆங்கில தினப்போட்டி

வருடாந்தம் ஆங்கிலதினப் போட்டி முடிவுகளில் முன்னேற்றம் கண்டுள்ளதை அறியலாம். இவ்வருடம் எமது மாணவர்கள் தனி நிகழ்வுகளில் 15 இடங்களையும், ஆங்கில நாடகப் போட்டியில் இரு இடங்களையும் கோட்டமட்டத்தில் பெற்றுள்ளனர். வலய மட்டத்தில் மேற்பிரிவு ஆங்கில நாடகம் இரண்டாம் இடத்தினையும் தனி நிகழ்வுகளில் 3இடங்களையும் பெற்றனர். மாவட்டமட்ட தனி நிகழ்வுகளில் 3 இடங் களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டனர். மாவட்ட, மாகாணப் போட்டியில் தரம் - 6 சொல்வதெழுதலில் செல்வி கொ. அனற்நொயலின் முதலாம் இடத்தினைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளார். இம்மாணவியின் வெற்றி எமது பாடசாலையின் மற்றொரு சாதனையாகும்.

## ஏனையவை

- ♥ மனைப்பொருளியல் சஞ்சிகை ஆக்கப் போட்டியில் எமது ஆசிரியை திருமதி அ. ஈஸ்வரன் கோட்டத்திலும், வலயத்திலும் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.
- ♥ கணித, விஞ்ஞான வினாடிவினாப் போட்டியில் கோட்டமட்டத்தில் 3 இடங்களும், வலய மட்டத்தில் இரு இடங்களும் பெறப்பட்டு மாவட்டமட்டத்தில் பங்கு பற்றவுள்ளார்கள்.
- ♥ வாய்மொழி ஆங்கிலப்பிரிவின் தனி அபிநயப்பாடல் போட்டியில் தரம் – 4 மாணவி ஜனுசியா ஜெயரூபன் கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.
- ♥ மனைப்பொருளியல் சஞ்சிகை ஆக்கப்போட்டியில் கோட்ட, வலயமட்டத்தில் எமது பாடசாலை வெற்றி பெற்றது.
- ♥ வணிக அறிவுப் போட்டியில் கோட்ட மட்டத்தில் வெற்றி பெறப்பட்டது.
- ♥ ஆரம்பப்பிரிவினருக்குரிய விளையாட்டுப் போட்டியில் கோட்ட மட்டத்தில் இரு இடங்கள் பெறப்பட்டன.

## எமது தேவைகள்

எமது பாடசாலையானது மீண்டும் முன்பிருந்த முன்னேற்றகரமான பழைய நிலைக்குத் திரும்பி நவீன உலகின் சவால்களுக்கும், மாற்றங்களுக்கும் எதிர் கொள்ள வேண்டியிருப்பதை உணர்ந்து பல்வேறு தேவைகளை இங்கு முன்வைக்கின்றேன்.

1. எமது பாடசாலை விடுதிவசதியுடன் ஆரம்ப காலத்திலிருந்தே இயங்கிவந்தமை அனைவரும் அறிந்ததே. பாடசாலையின் மேலதிகவளர்ச்சிக்கு விடுதிவசதி அவசியமே.
2. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வேண்டிய 8 வகுப்பறைகளில் 3மட்டுமே எம்மிடம் உள்ளன.
3. நூலகத்திற்கென தனியானகட்டடம் இல்லை. நூலகத்திற்குத் தேவையான நூல்கள் ஓரளவு இருப்பினும் தளபாடங்கள் இன்மையால் நூலகப்பாவனை என்பது மாணவர்களிடத்தே முழுமைபெறாமலுள்ளது.
4. பாடசாலையின் தெற்கு எல்லைப்பகுதிகள் வேலியாக உள்ளதனால் பாடசாலையின் வளங்களுக்குப் பாதுகாப்பு இல்லாமையும், பாடசாலையின்வளங்கள் ஆட்கள் விலங்குகளால் சேதப்படுத்தப்படுகின்றமையும் பெரும் குறையாக உள்ளது.
5. மாணவர்களுக்கான மலசலகூடவசதிகள் மேலும் தேவையாக உள்ளது.
6. விளையாட்டு மைதானம் மேலும் புனரமைக்கப்பட்டு பௌதீக வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
7. திறந்த வெளியரங்கம் புனரமைக்கப்படவேண்டியுள்ளது.
8. ஆரம்பகாலங்களில் பிரதான மண்டபமாகவும், பின்னர் பண்டத்தரிப்பு கொத்தணிக்குரிய அலுவலகமாகவும் விளங்கிய கட்டடம் இன்று இடிந்து விழுந்த நிலையிலும், இடிபாடுகளுடனும் காணப்படுகின்றது.
9. போரினால் சேதமடைந்த கட்டடங்களுள் சில இன்னும் புனரமைக்கப்படாமலுள்ளது.
10. மின்சாரவிநியோக வசதிகள்மேலும்பலகட்டடங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளது.
11. ஆங்கில செயற்பாட்டறையை மேம்படுத்த கற்றல்வசதிகள், தளபாடவசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.
12. பசுமைப்புரட்சிக்காலத்தில் எமக்குப் போதிய அளவு இடவசதி இருந்தும் பற்றைகளும், இடிபாடுகளும் நிறைந்து விளங்குவதால் அவ்விடங்கள் சீர் செய்யப்பட்டு விவசாய நிலமாக மாற்றப்பட வேண்டியுள்ளது.
13. கணினி அறைப்புனரமைப்பு இடம்பெற்ற போதிலும், கணினிகள் பற்றாக்குறையால் மாணவர்களுக்குப் போதிய கணினி அறிவை வழங்க முடியாமலுள்ளது.
14. பிரதான மண்டபத்தின் கூரைப்பகுதி முழுமையாக மாற்றப்பட வேண்டும். அதற்குரிய Level Sheet அடித்தல், பீலி, வடிகால்அமைத்தல், மின்னிணைப்பு, கதவுகள், யன்னல்கள் திருத்தம், வர்ணம்பூசுதல் போன்ற வேலைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
15. ஆரம்பப்பிரிவு விஞ்ஞான ஆய்வு கூடம் 80' x 20' புனரமைக்கப்பட்டு, யன்னல் கண்ணாடிகள் திருத்தப்பட்டு, பாதுகாப்புவலை, மின்சார இணைப்பும் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆய்வு கூட தளபாடங்கள், மின்விசிறிகள், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளும் செய்யப்பட வேண்டியுள்ளன.
16. எம்மிடம் இருக்கின்ற ஆரம்பப்பிரிவு தற்காலிக வகுப்பறைகளுக்கு பாதுகாப்பு வலை அமைக்கப்பட்டு, யன்னல், கதவுகளும் திருத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. அவற்றிற்கு வர்ணம் பூசுதலும் அவசியமாகவுள்ளது.
17. முகாமைத்துவ மண்டபத்திற்கு வர்ணம் பூசி, மின்னிணைப்பு வசதியும் செய்யப்பட வேண்டும்.
18. உட்புறப் பாதைகள் மேலும் சீர் செய்யப்பட வேண்டும்.
19. மனைப்பொருளியல் கூடத்திற்கு மின்னிணைப்பு வசதி செய்யப்பட வேண்டும்.
20. ஆசிரியர்களுக்குரிய மலசலகூடம் ஆண், பெண் ஆசிரியர்களுக்கென தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும்.

21. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கென தனித்தனியே மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும்.
22. நிழற்பட பிரதியாக்கிஇயந்திரம், றோணியோஇயந்திரம், பல்லூடக எறியி, குளிர்சாதனப் பெட்டி என்பன தேவையாக உள்ளன.
23. தளபாடங்களில் A type மாணவர் மேசை, கதிரை 100, ஆசிரியர் மேசை, கதிரை 15, சிற்றலுமாரிகள், சிற்றுண்டிச்சாலைக்குரிய வாங்கு, மேசைகள், நூலக மேசை, வாங்குகள் என்பன தேவையாக உள்ளன.
24. கற்றலுடன் தொடர்புடைய பல்வேறு அலகுகள் தரமுயர்த்தப்பட வேண்டியுள்ளது. கணிதஅலகு, ஆங்கிலஅலகு, சித்திர, சங்கீத, நடன, நாடக அலகுகள், முதலுதவி அலகு, சமூகவிஞ்ஞானஅலகு, விஞ்ஞானஆய்வுகூடங்கள், நூலகம், கூட்டுறவுக்கடை, சிற்றுண்டிச்சாலை, மனைப்பொருளியல்அலகு, மரக்கறித்தோட்டம், பூந்தோட்டம், வங்கிஅலகு, வழிகாட்டல் ஆலோசனை அலகு என்பன மாணவர்களின் கற்றல் வளத்தை உயர்த்தும் பொருட்டு வளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.
25. எமது பாடசாலை மாணவர்கள் வலைப்பந்து, கரப்பந்தில் பல வெற்றிகளைப் பெற்றாலும் அவற்றுக்குரிய ஆடுகளம் புனரமைக்கப்பட வேண்டும்.

## எமது நன்றிக்குரியோர்

யுத்தத்தாலும், இடப்பெயர்வினாலும் அழிவடைந்த எமது வளங்கள், வசதி வாய்ப்புக்களை மீளவும் பெற்று கல்வி சார்ந்த இணைப்பாட விதானச் செயற்பாடுகளை முன்னெடுக்க பலரும் பல விதத்தில் உதவிக்கரம் நீட்டியிருக்கின்றார்கள்.

1. மாணவர்களிற்கான கற்றல் உபகரணம் வழங்கிய UNICEF நிறுவனம்,
2. கட்புல குறைபாடுகள் உடைய மாணவர்களிற்கு கண்ணாடிகள் வழங்கிய HUDEC நிறுவனம், வலிகாம கல்வி வலய விசேட கல்வி முகாமையாளர் திரு. நி முருகானந்தன் அவர்கள்,
3. பாடசாலைக்கென மரக்கன்றுகள் வழங்கிய WORLD VISION நிறுவனம்,
4. அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்கு ஒன்றினை நடாத்தியதுடன் கூட்டுப்பசளைத் தொட்டியையும், மரக்கன்றுகள், பூவாளி, மண்வெட்டி, குப்பைவாரி, தெளிகருவி போன்றவற்றை வழங்கிய TRRO நிறுவனம்,
5. கூடைப்பந்தாட்டத்திடல் அமைக்கவென ரூபா 200000/= நிதி வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள்,
6. பாடசாலை அபிவிருத்திக்கென ரூபா 10000/= வழங்கிய பெற்றோரும், பழைய மாணவியுமான திருமதி விநாயகமூர்த்தி அவர்கள்,
7. SEMP திட்டத்தின் கீழ் நான்கு பெரிய வகுப்பறை மறைவுத் தட்டுக்கள் (Screen), வழங்கிய உலக வங்கி,
8. பெரு மரக்கன்றுகள வழங்கிய சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்,
9. பாடசாலையின் அபிவிருத்திக்கென ரூபா 2000/= வழங்கிய பெற்றோரான திருமதி ரவீந்திரன் அவர்கள்,
10. பொருளாதார வசதி குறைவான 3 மாணவருக்கு கற்பதற்கு வேண்டிய நிதியுதவி செய்து வரும் JRS நிறுவனம்,
11. பாடசாலையின் பூந்தோட்டப் பராமரிப்புக்கென ரூபா 1000/= வழங்கிய எமது விவசாய தொழிலாளி திருமதி தா. றெஜி அவர்கள்,
12. எமது மாணவரின் ஆரோக்கிய சுகாதார நிலையில் அக்கறை கொண்ட பண்டத்தரிப்பு அரசினர் ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. நி. நிர்மலானந்தன் அவர்களுக்கும்,
13. எமது கரப்பந்தாட்ட அணி மாகாணமட்டப் போட்டியிலும், தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றுவதற்கான அனைத்து வசதிகளையும் செய்து தந்த சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், உரிய பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுத் தந்த யாழ்ப்பாண அரச அதிபர் திரு கே. கணேஷ் அவர்களுக்கும்,
14. 185வது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டுக்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியை வழங்கிய எமது பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையினர்,

15. மலர் வெளியீட்டுக்கென ரூபா 10000/= வழங்கிய எமது பழைய மாணவி திருமதி கமலலோஜினி சின்னத்தம்பி அவர்கள்,
16. எமக்குத் தேவைப்படும் துப்புரவு வேலைப்பணியினைக் கேட்டவுடன் நிறைவேற்றித் தரும் பண்டத்தரிப்புப் பட்டினசபைப் பொறுப்பதிகாரியும், ஊழியர்களும்,
17. எமக்கு வேண்டிய ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் வழங்கும் எமது வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்,
18. எமது தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்து தரும் வலயப்பணிமனைக் கணக்காளர், ஏனைய உத்தியோகத்தர்கள்,
19. எமது தண்ணீர்த்தாங்கி, கூடைப்பந்தாட்டத்திடல் அமைக்கத் துணைபுரிந்த கல்வித் திணைக்களப்பொறியியலாளர் திரு. கு சிவபாலன், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்,
20. எமக்கு வேண்டிய பயிற்சிகளையும், உதவிகளையும் வழங்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்,
21. மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற எமது 19 வயதின் கீழ் கரப்பந்து அணியினரைக் கௌரவிக்கும் பொருட்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கிய பனை தென்னை கூட்டுறவுச் சங்கத்தினர்,
22. பெருவிளையாட்டுக்களில் சிறப்பாகச் செயற்பட்ட வீராங்கனைகளுக்குரிய வெற்றிக்கிண்ணங்களை வழங்கிய எமது பயிற்சியாளர் திரு. K. டனிஷ் அவர்கள்,
23. எமது கரப்பந்து அணியினர் தேசிய மட்டத்தில் பங்குபற்றச் சென்றபோது அவர்களுக்கு வேண்டிய அனுசரணை வழங்கிய எமது முன்னாள் ஆசிரியை திருமதி வா. நவரட்ணம் அவர்களுக்கும், எமது முன்னாள் பிரதி அதிபர் திருமதி க. சண்முகநாதன் அவர்களுக்கும்,
24. விவசாய அலகினருக்கு ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கும் விவசாய போதனாசிரியை திருமதி மணிவண்ணன் அவர்கள்,

இவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## சிறப்புப் பரிசில்கள் – 2008

**சிறந்த மாணவ முதல்வி**

தனுசியா சிறிபாலன்

**சிறந்த சாரணி**

தவம் அமீரா

**க. பொ. த உயர்தர சிறந்த பெறுபேறு**

விஞ்ஞானம் – சிறிசெல்வசதீஸ்குமார் கிந்துசா
வர்த்தகம் – இராசதுரை அபிதா
கலை – அமிர்தநாதர் ஜீன்கார்த்திகா
– அருளானந்தம் இமாக்குலேசியா

**க. பொ. த. சாதாரணதர சிறந்த பெறுபேறு**

நிரஞ்சினி விநாயகமூர்த்தி

**5ந்தர புலமைப்பரிசில் பெறுபேறு**

விதுசா குலேந்திரன்

**கணித, விஞ்ஞானப் போட்டியில் அதி திறமை**

ஜானுஜா திருநாவுக்கரசு

**ஆங்கில தினப் போட்டியில் அதி திறமை**

அனற் நொயலின் கொட்விறி விஜயராசா

**சித்திரப் போட்டியில் அதி திறமை**

சர்மலா சந்திரதாசன்

எமது முன்னாள் அதிபர்

# செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி

## அவர்களை நினைவு கூருகின்றோம்




நிமிர்ந்த நன்னடையும்
நேர் கொண்ட பார்வையுமாய்
யார்க்கும் அஞ்சா நெஞ்சமுமாய்
பண்மகள் பெற்ற புதுமைப்பெண்

இடர்கள் பல சூழ்ந்து வர
இப் பண்மகள் பெயரும் மங்கி விட
இருந்தவிடம் தெரியாமல்
உருக்குலைந்த வேளையிலே

பகலிரவாய் பண்மகளை
போஷித்த போஷேந்திராவே!
நூற்றெண்பத்தைந்தாண்டு தனில்
நிமிர்ந்து நாம் நின்றிட


நின்னரிய சேவை தனை
கல்லூரியின் கனவுக்காய்
தந்திட்ட அன்னையே
தாள் பணிந்து போற்றுகின்றோம்.

## கல்விசாரா ஊழியர்கள்




இடமிருந்து வலம் இருப்பவர்கள்:- திருமதி கி. சிவராஜா (அதிபர்),
திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்),
நிற்பவர்கள்:- திரு. ந. நகுலேஸ்வரராசா, திருமதி ம. றெஜி, திரு. வே. திருவரங்கன்.

## முகாமைத்துவக் குழு




## ஒழுக்காற்றுச் சபையும் மாணவ முதல்வர்களும்
(இடைநிலைப்பிரிவு)




## ஒழுக்காற்றுச் சபையும் மாணவ முதல்வர்களும்
(ஆரம்பப்பிரிவு)




விளையாட்டுக் குழு




மேலைத்தேய வாத்திய அணி




## கிருபை இல்லம் (KIRUBAI HOUSE)




## ஹௌலன்ட் இல்லம் (HOWLAND HOUSE)



## புளோறா இல்லம் (FLORA HOUSE)




## கில்லிஸ் இல்லம் (HILLIS HOUSE)



## பெண் சாரணியர்



## சிரேஷ்ட பெண் சாரணியர்



# 19 வயதின் கீழ் – கரப்பந்து அணி




இவ்வணியினர் இவ்வருடம் கோட்ட, வலய, மாவட்ட, மாகாணச் சம்பியனாகி
தேசிய மட்டப் போட்டியில் பங்கு கொண்டு எமது பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.

**இடமிருந்து வலம் இருப்பவர்கள்:-** செல்வி பி. கதிர்காமத்தம்பி, திருமதி ம. குணபாலன், செல்வி. மோ. மாயகிருஷ்ணன், திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்), திருமதி கி. சிவராஜா (அதிபர்), திரு. மு. டனிஷ் (பயிற்றுவிப்பாளர்)

**வீராங்கனைகள்** **நிற்பவர்கள்:-** ஜோ. சங்கீதா யொய்ஸ், அ. அருள்மேரி, யோ. துஸ்யந்தி, வி. ஜெனிதா, ச. சாமலி
**கீழிருப்பவர்கள்:-** செ. செல்வலீனா, யே. சோபிகா

# 17 வயதின் கீழ் – வலைப்பந்து அணி




இவ்வணியினர் இவ்வருடம் கோட்டமட்டத்தில் முதலாம் இடத்தையும், வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தினையும் பெற்றனர்.

**இடமிருந்து வலம் இருப்பவர்கள்:-** செல்வி. மோ. மாயகிருஷ்ணன், திருமதி. வெ. ற. ஜெ. ஜெயந்தன், திருமதி. இ. இராஜசேகரம்(பிரதி அதிபர்), திருமதி. கி. சிவராஜா (அதிபர்), திருமதி. மா. ரவியேந்திரன், திரு. வே. சிவசக்திவேல்

**வீராங்கனைகள்** **- நிற்பவர்கள்:-** த. கிறிஸ்ரியா, லோ. பபிதா, க. சாளிகாரதி, செ. சரணியா, க. கிரிஜா, தே. கயல்விழி, த. அமீரா

**- கீழிருப்பவர்கள்:-** ஜெ. யௌசியா, றெ. நிவேதிகா, த. தனிஸ்ரா

## 15 வயதின் கீழ் – கரப்பந்து அணி



இவ்வணியினர் இவ்வருடம் கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றனர்.

## 17 வயதின் கீழ் – கரப்பந்து அணி



இவ்வணியினர் கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றனர்.

## 15 வயதின் கீழ் – வலைப்பந்து அணி




இவ்வணியினா் இவ்வருடம் கோட்டமட்டத்தில் 3ஆம் இடத்தினைப் பெற்றனா்.

## 19 வயதின் கீழ் – வலைப்பந்து அணி




இவ்வணியினா் இவ்வருடம் கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தினைப் பெற்றனா்.

## 17 வயதின் கீழ் – கூடைப்பந்தாட்ட அணி



கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் பங்குபற்றி எமது மாணவி வி. சோபா சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## வளர்ந்து வரும் 14 வயதின் கீழ் – கரப்பந்து அணி



குருளைச் சாரணர்



சிறு தோழியர்



# பல்கலைக்கழகம் சென்றோர் வரிசையில்...



**செல்வி சி. கிந்துசா**
மருத்துவ பீடம்




**செல்வி வே. சிவலதாயினி**
சித்த மருத்துவ பீடம்



**செல்வி இ. அபிதா**
முகாமைத்துவ பீடம்

## கலைப்பீடம்




இடமிருந்து வலம் (இருப்பவர்கள்) செல்வி அ. ஜீன்கார்த்திகா, திருமதி கி. சிவராஜா (அதிபர்), திருமதி இ. இராஜசேகரம் (பிரதி அதிபர்), செல்வி அ. இமாக்குலேசியா

நிற்பவர்கள்: செல்வி ச. சர்மலா, செல்வி யோ. கீதாஞ்சலி, செல்வி த. மேனகா, செல்வி கி. மிதுர்சா, செல்வி ம. தட்சாயினி



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

சிறுவர் அரங்கம்




சிறுவர் அரங்கக் குழுவினர் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், வலயமட்டத்தில் முதலாம் இடத்தினையும பெற்று மாவட்ட மட்டத்திலும் பங்குபற்றவுள்ளனர்.

# ஆசிரிய வாண்மை விருத்தியில் செயல்நிலை ஆய்வின் வகிபங்கு



**கலாநிதி த. கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




**வாண்மையாக ஆசிரியம்**

ஆசிரியத் தொழில் இன்று ஒரு வாண்மையாகக் (Profession) கொள்ளப்படுகின்றது. வாண்மை என்பது உயர் தொழிலைக் குறிக்கும் ஒரு பதமாகும். வாண்மை என்ற பதப்பிரயோகத்துடன் வாண்மைத்துவம் (Professionalism), வாண்மைத்துவப் பொறுப்பு (Professional responsibility), வாண்மைப் பயிற்சி (Professional training) ஆகிய பதங்களும் இன்று புழக்கத்தில் உள்ளன.

வாண்மைத்துவம் என்பது இரு அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியது. அவையாவன :

1. அது வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவது (Client - Centered)
2. அது அறிவை அடியாதாரமாகக் கொண்டது (Knowledge - based)

ஆசிரியம் (Teacher Profession) ஒரு வாண்மை என்ற வகையில் வாண்மைத்துவம் குறித்த இவ்விரு அம்சங்களின் அடிப்படையிலேயே ஆசிரியரின் கடமைப் பொறுப்புகள் வரையறை செய்யப்பட வேண்டும். அதாவது தனது வாடிக்கையாளர்களான மாணவர் நலன்களை முதன்மைப்படுத்துவதாகவும், அறிவார்ந்த நிலையில் தனது செயல் ஆற்றுகையை (Performance) முன்னெடுப்பதாகவும் ஆசிரியத்துவம் அமையவேண்டும்.

ஆசிரியம் ஒரு வாண்மையாகக் கருதப்படும் நிலையில் இன்று ஆசிரியர்களுக்குப் புலமை சார்ந்த அதிகாரம் தரப்பட்டுள்ளது. இதனால், ஆசிரியர்கள் தமது செயலாற்றுகையின் தரத்துக்குப் (Quality Performance) பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஆவர். இப்பொறுப்பானது வாண்மைத்துவப் பொறுப்பு (Professional responsibility) எனப்படும். இது, ஒவ்வொரு மாணவரும் தமது முழு

வலுவை அடையச் செய்யும் வகையில் அம்மாணவர்களுக்கு உதவுதலைக் குறிக்கும். இவ்வகையில் ஆசிரியரின் கடமைப்பொறுப்புகளாக பின்வருவனவும் உள்ளடக்கப்படுகின்றன.

1. ஆராய்வுச் செயன்முறையினூடாக மாணவர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.
2. அவ்வழிமுறைகளைப் பிரயோகித்து அவற்றின் பலாபலன்களை மதிப்பீடு செய்தல்
3. இம்மதிப்பீட்டின் அடிப்படையில் கல்விச் செயற்பாடுகளை மீளமைத்தல்.

இப்பொறுப்புகளை ஆசிரியர் ஒருவர் நிறைவேற்றவேண்டுமெனின், புதியஅறிவு, புதியதிறன்கள், புதிய முறைகள், புதிய நுட்பங்கள், புதிய உபாயங்கள் என்பன குறித்து ஆசிரியர் கரிசனை கொள்ள வேண்டும். இவற்றை ஆசிரியர்களுக்கு வழங்குவதாகவே வாண்மைப்பயிற்சி (Professional training) அமைய வேண்டும். ஆசிரியம் ஒரு தொடர் தொழில் (Career) என்ற வகையில் இப்பயிற்சி தொடர்ச்சியானதாகவும் நீடித்ததாகவும் அமைய வேண்டும். வாண்மைப் பொறுப்புக்கும் அப்பால் ஆசிரியர்கள் முகம்கொடுக்க வேண்டிய மற்றுமொரு சவாலும் ஆசிரியர்க்குண்டு. இன்று, கல்விக்குரிய முதலீடும் வளங்களும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சமூகத்தாலேயே நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் வழங்கப் படுகின்றன. எனவே முழுச் சமூகத்துக்கும் பொறுப்புக்கூறல் அல்லது வகை கூறல் (accountability) என்பது ஆசிரியம் எதிர்நோக்கும் முக்கிய அறைகூவலாக விளங்குகின்றது.

மேலும், இருபதாம் நூற்றாண்டிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முற்கூறிலும், விஞ்ஞான - தொழிநுட்ப - இலத்திரனியல் துறைகளின் வளர்ச்சி காரணமாகவும் சாதன விருத்தி காரணமாகவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற உலகியல் மாற்றங்கள் பிரமிப்பையூட்டுவன. இம்மாற்றங்கள் காரணமாக கல்விப்புலத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. இதனால் கல்வி இலக்குகளும் குறிக்கோள்களும், பாடப்புலம், கலைத்திட்ட அமைப்பும் விருத்தியும், முறையியல், கல்வி வளப்பகுப்பாய்வு, வகுப்பறை முகாமைத்துவம், பாடசாலை நிர்வாகம் என விரியும் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் நிகழும். பாடசர்லைகளில் இம்மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய முக்கியமான முகவர்களாக (Change agents)வும் ஆசிரியர்களே விளங்குகிறார்கள்.

மாற்றமொன்று நேரானதாகவும் வெற்றிகரமாகவும் அமைவதற்கு அம்மாற்றத்தை முன்னெடுப்பவர்கள் அச்செயன்முறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதோடு, அம்மாற்றத்துக்கு உரித்துடையவர்களாகவும் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது அனைவரதும் ஏகோபித்த கருத்தாகும். ஆசிரியர்கள் (அதிபர்களும் கூட) தம்மை எவ்வளவு தூரம் இதில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே வெற்றியும் தோல்வியும் அமையும். மாற்றம் காண்பதற்கான உபாயங்கள், வெற்றியைத் தரவல்ல அநுபவங்களில் கல்வியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யும்போதே, நின்று நிலைக்கவல்ல, நீடித்த மாற்றம் நிகழ முடியும். இவ்வகையில், மாற்றச் செயன்முறையில் (Change process) கல்வியாளர்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதற்கான ஓர் உபாயமே செயல்நிலை ஆய்வு ஆகும்.

உலகப்போக்குகளை ஒட்டியதாக, காலத்துக்குக் காலம் கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் கல்விச் சீர்திருத்தங்களாக முன்வைக்கப்படுவது வழக்கம். இக்கல்விச்

சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய ஏனைய உபாயங்களைவிட, செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகளில் கல்வியாளர்களை ஈடுபடுத்துதல் அதிசக்தி வாய்ந்த ஓர் உபாயமாகும்.

**செயல்நிலை ஆய்வு பற்றிய விளக்கம்**

மரபுவழி ஆய்வாளர் ஒருவர், வழமையாக, கல்விப்பிரச்சினை ஒன்றை அல்லது கல்விசார் விவகாரம் ஒன்றை ஆராய்ந்து அதுகுறித்த தனது கண்டறிதல்களை வெளியிடுவார். இக்கண்டறிதல்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொதுவாக அதிபர்களிடமோ அல்லது வகுப்பாசிரியர்களிடமோ விடப்படுகின்றது. கொள்கையொன்றை விரிவுபடுத்துவதோ அல்லது புதிய கொள்கையொன்றை உருவாக்குவதோதான் மரபுவழி ஆய்வின் உத்தேச நோக்காகும். இதற்கு மாறாக, செயல்நிலை ஆய்வில் ஈடுபடும் கல்வியாளர்கள் தமது தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்கு அவசியமான வழிமுறைகளைக் கண்டறியும் பிரதான நோக்கோடு, குறித்த விவகாரம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட குறிப்பான ஒரு குழுவினரைப் பற்றியும் அவ்விவகாரம் தொடர்பான சூழமைவு பற்றியும் சிந்திக்கின்றனர். குறிப்பான பிரச்சினைக்குரிய அந்நிலைமைகளிலிருந்து அவர்களை விடுவித்து முன்னேற்றம் காணல் செயல்நிலை ஆய்வின் பிரதான நோக்கமாகும். பாடசாலையில் அல்லது வகுப்பறையில் இடம்பெறும் நாளாந்த நடவடிக்கைகளுடன் கூடியதாகவே, செயல்நிலை ஆய்வையும் மேற்கொள்ள வேண்டியது கல்வியாளரின் பொறுப்பாகின்றது. நடைமுறையை ஆராய்வுக்கு உட்படுத்தி (Practice as - inquiry), அதன்பேறான கண்டறிதல்களை உடனடியாக நடைமுறையில் பிரயோகிக்கும் முதன்மையான இலக்கைக் கொண்டது செயல்நிலை ஆய்வாகும். இவ்வகையில், செயல்நிலை ஆய்வானது கல்வியாளர்களின் உடனடியான விவகாரங்களுக்கும் வினாக்களுக்கும் விடைகாண முயல்கின்றது.

**செயல்நிலை ஆய்வின் ஆரம்பம்**

சமூக விஞ்ஞானத் துறையிலும் கல்விசார் பிரச்சினைகளிலும் விஞ்ஞான முறையைப் பிரயோகிக்கும் ஒரு வழிமுறையாகவே செயல்நிலை ஆய்வு ஆரம்பமானது. சுதேச அமெரிக்க விவசாய நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புச் செய்த ஓர் ஆய்வின் கூட்டிணைந்த செயல் நடவடிக்கைகளின் விபரிப்பாகவே “செயல்நிலை” ஆய்வு என்ற பதப்பிரயோகம் Collier (1945) என்பவரினால் விருத்தியாக்கப்பட்டது. 1940களில், “குழுஇயக்கம்” (Group dynamics) சம்பந்தமான ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர்களுள் ஒருவரான Lawin, சமூக சேவையாளர்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பரிசோதனைகளில் செயல்நிலை ஆய்வைப் பயன்படுத்தினார்.

மாற்றத்துக்கான ஒரு செயன்முறையாக செயல்நிலை ஆய்வு வெற்றி அளித்ததன் காரணமாக, 1950களில், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்லூரியின் பீடாதிபதியாக இருந்த Corey என்பார், கற்பித்தற் செயன்முறையில் செயல்நிலை ஆய்வுக் கோட்பாடுகள் பிரயோகிக்கப்படுவதற்குக் காரணகர்த்தராக விளங்கினார். தமது சொந்தத் தொழில் நடைமுறைகள் குறித்த தெறிப்புச் சிந்தனையில் ஆசிரியர்கள் ஈடுபடுவார்களேயானால். அவர்கள் தமது நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்து, தமது தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள் எனவும் Corey நம்பினார்.

1960களில், நிறுவன விருத்திசார் நடவடிக்கைகளிலும் மனிதத் தொடர்பு விருத்திப் பயிற்சி நெறிகளிலும் முதன்மையாக செயல்நிலை ஆய்வு பயன்படுத்தப்பட்டது. "தொழில் அநுட்டானம் செய்பவர்களே தமது நடைமுறைகள் குறித்த செய்முறை ஆய்வை மேற்கொள்ளலாம்" என்ற செயல்நிலை ஆய்வு குறித்த கருத்தானது 1970களில் ஐக்கிய அமெரிக்காவில் தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. அக்காலத்தைய "ஆய்வு நிபுணர்கள்" செயல்நிலை ஆய்வை மலிவானதாகவும் வரையறுத்த பயன்களை மட்டும் உடையதாகவும் கருதியமையே இதற்குக் காரணமாகும். ஆனால் 1970களிலும், 1980களிலும் அவுஸ்திரேலியாவிலும் இங்கிலாந்திலும் கல்விச்சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு செயல்நிலை ஆய்வே கருவியாய் அமைந்தது. இவ்விரு நாடுகளிலும் பாடசாலைச் சீர்திருத்தங்கள் தொடர்பாக செயல்நிலை ஆய்வு வெற்றியளித்த காரணத்தினால், ஆசிரியர் பயிற்சியிலும் அலுவலர் விருத்தியிலும் பூரணத்துவம் பெறுவதற்கான ஓர் அம்சமாக ஐக்கிய அமெரிக்காவில் மீண்டும் அங்கீகாரத்தைச் செயல்நிலை ஆய்வு பெற்றுக்கொண்டது.

**செயல்நிலை ஆய்வின் அநுகூலங்கள்**

கற்பித்தல் முறைகளையும் தலைமைத்துவப் பாங்குகளையும் நேரான முறையிலும் ஆக்கபூர்வமாகவும் கண்டறியவும் பரிசோதிக்கவும் கூடிய சந்தர்ப்பங்களை ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் செயல்நிலை ஆய்வு வழங்குகின்றது. அதிக விளைதிறன் மிக்க கற்பித்தலினூடாகவும் பாடசாலைகளை நிர்வகிப்பதனூடாகவும் மாணவர்களின் அடைவை முன்னேற்றுவதற்கான ஒரு வழிமுறையாக செயல்நிலை ஆய்வின் வலுவை ஆய்வாளர்கள் பரிசீலித்து அறிந்துள்ளார்கள்.

செயல்நிலை ஆய்வில் ஈடுபடும் கல்வியாளர்கள் தமது சிந்தனையில் அதிக நெகிழ்ச்சியுடையோராகவும், புதிய கருத்துக்களை அதிகம் வரவேற்போராகவும், புதிய பிரச்சினைகளை விடுவிக்கக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டங்கள் ஆசிரியர்களின் சிந்திக்கும் திறன்களிலும் அவர்கள் தமது செயற்படுத்து திறனை உணர்ந்து கொள்ளலிலும், ஒன்றாக வேலை செய்வோருடனான அவர்களது தொடர்பாடலிலும், வாண்மை விருத்தி, மாற்றத்துக்கான செயன்முறை ஆகியவை குறித்த அவர்களது மனப்பாங்குகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

செயல்நிலை ஆய்வில் ஈடுபாடு கொள்ளும் கல்வியாளர்கள், அறிவார்ந்த ரீதியிலும் வாண்மை நிலையிலும் வளர்ச்சியடைவதோடு, பயனளிக்கவல்ல தொடர்புகளை பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத் தோழர்களுடனும் நிறுவி தமது சுயமதிப்பையும் அதிகரித்துக் கொள்கிறார்கள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இச்செயல்நிலை ஆய்வாளர்கள் ஆழ்ந்த வாசிப்பு, கலந்துரையாடல், தெறிப்புசிந்தனை, கருத்துக்களின் பகுப்பாய்வும் மதிப்பீடும் என்பன போன்ற பல்வேறு அம்சங்களிலும் கரிசனை கொண்டு, அவை தொடர்பான பல்வேறு வினாக்களையும் தம்முள்ளே எழுப்புகின்றனர். செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகள் ஆசிரியர்களின் ஆக்க ஆளுமையை விருத்திசெய்ய உதவுவதோடு, தம்மைத் தாமே மதிப்பீடு செய்து கொள்ளும் ஆர்வத்தையும் தூண்டுகின்றன. ஆசிரியர்களை அவர்களது தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக எடுத்து வைக்கப்படும் ஒரு காலடி எனவும் செயல்நிலை ஆய்வு குறிப்பிடப்படுகிறது.

மொத்தத்தில், செயல்நிலை ஆய்வின் அநுகூலங்கள் குறித்து ஆய்வுசெய்வோர், செயல்நிலை ஆய்வாளர்கள் வாண்மை நிலை சார்ந்தும் தனியாள் நிலை சார்ந்தும் வளர்ச்சியுறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தமது ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அதேவேளை, தமக்குத்தாமே அதிகாரம் அளிக்கும் உணர்வைப் பெற்றுக் கொள்வதோடு, எதிர்காலத்தில் தமது கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பையும் செயல்நிலை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதும் இந்த ஆய்வுகளின் பேறான முடிபுகளாகும்.

### செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் படிநிலைகள்

செயல்நிலை ஆய்வு ஒரு செயன்முறை என்ற வகையில் பல்வேறு படிநிலைகளை அது உள்ளடக்கியதாகும். பொதுவாக அது பின்வரும் படிநிலைகளை உள்ளடக்கிய ஒரு வட்டச்சுற்றுச் செயன்முறை (Cyclical process) ஆகும்.

01. பொதுவான விவகாரமொன்றை அல்லது பிரச்சினையொன்றை இனங்காணல்
02. சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரித்தல்
03. செயலுக்கான திட்மொன்றை (செயல்நிலைத் திட்டமொன்றை) விருத்திசெய்தல்
04. செயல்நிலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
05. விளைவுகளை மதிப்பிடல்
06. திருத்தியமைக்கப்பட்ட கருத்துடன் அல்லது பிரச்சினையுடன் செயலாய்வுச் செயன்முறையை மீள ஆரம்பித்தல்.

செயல்நிலை ஆய்வானது உச்சப் பயனைத் தர வேண்டுமெனில், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கூட்டிணைந்த செயல்.நடவடிக்கையாக அது அமைய வேண்டும். பிறருடனான கூட்டிணைவானது பொறுப்புணர்வையும் அர்ப்பணிப்புணர்வையும் அதிகரிக்கச் செய்யும்.

நடைமுறையில், செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் படிநிலைகளை பின்வருமாறு சுருக்கமாக விபரிக்கலாம்.

**படிநிலை 1 : சொந்த நாட்டமுள்ள கல்விப்புலத்தில் விவகாரம் ஒன்றை அல்லது அபிப் பிராயம் ஒன்றை இனங்காணல்.**

தமது வேலைச்சூழலில், ஆய்வுசெய்வதனால் பயனளிக்கக்கூடிய ஒரு விவகாரத்தை அல்லது அபிப்பிராயத்தை கல்வியாளர்கள் தெரிந்தெடுக்க வேண்டும். உதாரணமாக, வாசிப்புக் கற்பித்தல், கணிதம் கற்பித்தல், கணினிப் பயன்பாடு, கூட்டுறவுக் கற்றலை நடைமுறைப்படுத்துதல் போன்றவை சம்பந்தமானதாக செயல்நிலை ஆய்வுக்குரிய விவகாரம் தெரிந்தெடுக்கப்படலாம்.

**படிநிலை 2 : சொந்த விருப்புள்ள பரப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையொன்றை அல்லது விவகாரமொன்றை வரையறை செய்தல்.**

ஆய்வுப் பிரச்சினையையும் ஆய்வு செய்யப்படவுள்ள ஆய்வு வினாவையும் தெளிவாகக் கூறுதலே செயல்நிலை ஆய்வுச் செயன்முறையின் திருப்பு முனையாக அமையும் முக்கிய படிநிலையாகும். தற்போதுள்ள நிலைமைக்கும் மாற்றம் காண விழையும் நிலைமைக்கும்

இடையே உள்ள வேறுபாடுகளை விபரித்தல் மூலம் ஆய்வுப் பிரச்சினையை வரையறை செய்தல் பயனுள்ள ஓர் அணுகுமுறையாகும். இதன்பின், தற்கால நிலைமைக்கும் மாற்றங் காண விழையும் நிலைமைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுக்கான காரணங்களின்மீது கவனத்தைக் குவித்தல் வேண்டும். இக்காரணங்களின் அடிப்படையில் "பிரச்சினை பற்றிய கூற்று" (Problem Statement) அல்லது அது தொடர்பான முதன்மை ஆய்வுவினா (Main Research Question) தெளிவாக எடுத்துரைக்கப்பட வேண்டும். ஆய்வின் ஏனைய படிநிலைகளுக்கு இட்டுச் செல்லும் முக்கியமான அம்சமாக "பிரச்சினைக்கூற்று" அல்லது "முதன்மை ஆய்வுவினா" விளங்குவதனால், இது திட்டவட்டமாக உரைக்கப்படவேண்டும்.

**படிநிலை 3 : ஆய்வுச்சஞ்சிகைக் கட்டுரைகள், நூல்கள், ஆய்வு அமர்வுகள் போன்றவற்றிலிருந்தான சம்பந்தப்பட்ட தகவல்களை மீளாய்வு செய்தல்.**

குறித்த ஆய்வுப் பிரச்சினை தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகளை செயல்நிலை ஆய்வாளர் மீளாய்வு செய்ய வேண்டும். வழமையாக, வாண்மைத்துவச் சஞ்சிகைகள் சிலவற்றினதும் நூல்கள் சிலவற்றினதும் சுருக்கமான மீளாய்வு போதுமானது. இந்த மீளாய்வானது, பிரச்சினை பற்றிய விளக்கத்தையும், இதை ஒத்த பிரச்சினைகளுக்கு ஏனையோர் எவ்வாறு முகம்கொடுத்திருக்கிறார்கள் என்பது பற்றிய சில கருத்துக்களையும் குறித்த ஆய்வை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது குறித்த சாத்தியமான வழிமுறைகளையும் ஆய்வாளருக்கு வழங்குகின்றது. இவ்வாறான மீளாய்வு "இலக்கிய மீளாய்வு" என்ற பரந்த பொருளில் மரபுவழி ஆய்வில் பயன்படுத்தப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படிநிலையில் ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகளையும் நூல்களையும் மீளாய்வு செய்வதில் ஏற்படக்கூடிய சில பொதுவான தவறுகள் பின்வருமாறு :

1. செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டத்தைத் தொடங்குவதற்காக அவசரமான மீளாய்வொன்றை மேற்கொள்ளல்
2. இரண்டாம் தரவு மூலங்கள் தரும் தகவல்களில் பெரிதும் தங்கியிருத்தல்
3. ஆய்வு முறைகளிலோ அளவீட்டுச் செயன்முறைகளிலோ கவனம் செலுத்தாது ஆய்வுப் பெறுபேறுகளில் மட்டும் கவனத்தை குவித்தல்
4. ஆய்வுப் பிரச்சினையுடன் மறைமுகமாக அல்லது நேரடியாகவன்றித் தொடர்புபட்ட விடயங்களை மீளாய்வு செய்யத் தவறுதல்
5. உசாத்துணை நூல்விபரத் தகவல்களைப் பிழையாகப் பதிவுசெய்தல்

**படிநிலை 4 : செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டத்தில் எடுத்தாளப்படுகின்ற ஆய்வு வினாக்களை இனங்காணலும் ஆய்வுப் பிரச்சினையை மீளவரையறுத்தலும்.**

ஆய்வு வினாக்கள் ஆய்வாளரின் சொந்த அநுபவங்களையும் அவரின் வாசிப்பறிதல்களையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட வேண்டும். அத்தோடு, முன்னுரிமை அடிப்படையிலும் இவை வரிசைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வினாக்களின் அடிப்படையில் குறித்த ஆய்வுப்பிரச்சினை சார்ந்த தரவுகளைப் பெற்று, ஆய்வுப் பிரச்சினையை மீளவும் தெளிவாக வரையறை செய்து கொள்ள வேண்டும். இது, மாற்றங்காண விழையும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்கான செயல்நிலைத் திட்டமொன்றை (Action Plan) விருத்தி செய்து கொள்ளவும் அடிப்படையாக அமையும்.

**படிநிலை 5 : ஆய்வுப் பிரச்சினைக்கு அல்லது முதன்மை ஆய்வு வினாவுக்கு விடைகாணக்கூடிய செயல்நிலைத் திட்டமொன்றை அல்லது செயற்கிரமத்தை விருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்தலும்.**

இப் படிநிலையில், செயல்நிலைத் திட்டத்தைக் கட்டம் கட்டமாக வகுத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் நடவடிக்கைகளின் வரிசைக்கிரமம் ஒன்றும் தீர்மானிக்கப்படும். பின்னர், இச்செயல் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக, வரிசைக்கிரமத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

**படிநிலை 6 : மாற்றங்களைக் கண்காணித்தலும் பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்த வட்டத்துக்கான விதப்புரைகளை முன்வைத்தலும்.**

இப் படிநிலையில் குறித்த ஆய்வுப் பிரச்சினை சார்பாக மாற்றங்காணும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயல் நடவடிக்கைகள் விளைத்த மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படும். இம்மாற்றங்கள் குறித்த பெறுபேறுகளின் அடிப்படையில், குறித்த செயல்நிலை ஆய்வுச் செயற்திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது எனத் தீர்மானிக்கப்படும். அதேவேளை, எதிர்பார்த்த மாற்றங்களில் நிறைவேறாதனவற்றைக் குறித்துக் கொண்டு, அந்நிலைமை தொடர்பான பிரச்சினையை மீளவரையறை செய்ய வேண்டியமைக்கான நியாயப்பாடுகள் தெளிவுறுத்தப்படும். மீள்வரையறை செய்யப்பட்ட பிரச்சினை தொடர்பாக அல்லது புதியதொரு பிரச்சினை தொடர்பாக இதே வரிசைக் கிரமத்திலுள்ள படிநிலைகளைக் கொண்ட அடுத்த வட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறாக, குறித்த நிலைமை தொடர்பாக, தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காண்பதற்கு செயல்நிலை ஆய்வு வழிவகுக்கின்றது. செயல்நிலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு விவகாரங்களும் நிறுவன நடைமுறைகள், கலைத்திட்ட அமுலாக்கம், பாடசாலை கவிவுநிலை போன்ற வெவ்வேறு பரப்புகள் தொடர்பாகத் தெரிந்தெடுக்கப்படலாம். செயல்நிலை ஆய்வு என்பது பல்வேறு அநுகூலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதோடு, பிரதானமாக கல்வியாளர் ஒருவரை திறனுள்ள தொழிநுட்பவியலாளர் என்ற நிலையிலிருந்து புலமைசார் தொழில் ஆற்றுநர் (Scholarly Practitioner) என்ற வாண்மை நிலைக்கு உயர்த்தும் அதேவேளை, மாணவர்களின் கல்விசார் அடைவுகளையும் முன்னேற்று கிறது.

பெற்றோர் பிள்ளைகள் தொடர்பு

- ✶ நாளாந்த நிகழ்வுகளைப் பற்றி ஒவ்வொருவரும் உரையாடுதல்.
- ✶ அன்பை வெளிப்படுத்துதல்
- ✶ புத்தகங்கள், செய்த்தித்தாள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பன பற்றி குடும்பத்தினர் கலந்துரையாடுதல்.
- ✶ நூலகங்கள், அரும்பொருட்காட்சிச் சாலைகள், மிருகக் காட்சிச் சாலைகள், வரலாற்று இடங்கள், கலாச்சாரச் செயற்பாடுகள் போன்றவற்றிற்குக் குடும்பங்கள் விஜயம் செய்தல்
- ✶ புதிய சொற்களைப் பயனபப்படுத்தி முயற்சி செய்வதை ஊக்குவித்தலும் சொல்வளத்தை விரிவாக்குதலும்.

# மாணவர்களைச் சமூகப் பொருத்தமுடையவர்களாக்குதல்

## வீடு - பாடசாலைத் தொடர்புகள்



கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்

சிரேஷ்ட விரிவுரையாளர்,

கல்வியியற்றுறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



**அறிமுகம்**

ஒரு நாட்டின் முழுமையான வளர்ச்சி என்பது அந்நாட்டில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. நாட்டின் நலன்களை அடைவதற்குத் தேவைப்படும் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தொடர்புடைய மாற்றங்களை உருவாக்கும் வலுவான கருவி கல்வி என்று கருதப்படுகின்றது. கல்வியின் மூலம் தனிமனிதனது வாழ்க்கை சிறப்பாக அமைவதோடு அத்தனி மனிதனூடாகச் சமூக வளர்ச்சியையும் திட்டமிட்டுச் சிறப்பாகச் செயற்படுத்துதலே கல்விச் செயல்முறையாகும். கல்வி (Education) என்பது பொதுவாக கற்றல் (Learning), கற்பித்தல் (Teaching) என்பவற்றோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. இதனால் கல்வியுலகம் ஆசிரியரிலும் மாணவரிலும் தங்கியுள்ளது எனலாம். ஆனாலும் இவர்களுடைய கற்றல், கற்பித்தலை திட்டமிட்டு வடிவமைத்து அதனை நடைமுறைப்படுத்துவதோடு மட்டும் கல்வி நடவடிக்கைகள் முற்றுப் பெறமாட்டாது. கல்வியை நிறுவன மயப்படுத்தும் ஒரு இடமே பாடசாலையாகும். இதனால் சமூகத்தில் இயங்கும் பாடசாலைகள் சமூகத்தின் ஆணிவேர் எனக் கருதப்படுகின்றது. கல்வியை மட்டும் வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் பிள்ளைகளின் நற்பண்புகளையும் வளர்த்து அவற்றின் மூலம் பிள்ளைகளிடையே ஆளுமையை வளர்க்கும் இடமாகவும் பாடசாலைகள் செயற்படுகின்றன. இதன் மூலம் சமூகப் பயனுள்ள நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்குப் பொருத்தமான இடம் பாடசாலை என்பதனால் அதன் நோக்கத்தை அறிந்து பாடசாலை நிர்வாகம் செயற்பட வேண்டும்.

இன்று பாடசாலை தனித்து அறிவினை மட்டும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதில்லை. அவை பல்வேறு விதமான சமூகப் பணிகளை ஆற்றுகின்றன. சமூகத்தின் பல எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றும் இடமாகப் பாடசாலைகள் செயற்படுகின்றன. இதனால்

பாடசாலைகள் தமது குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் வெற்றி பெறவேண்டும். சமூகத்தின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் உயர்ந்த வினைத்திறனைப் பெறுதல் வேண்டும். பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள் உட்பட அனைவரிடமும் அறிவு புதையுண்ட நிலையில் உள்ளது. அவற்றை வெறும் தேக்க நிலையில் வைக்காமல் இடமறிந்து பயன்படுத்தும் திறமையுள்ளவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். அறிவையும், தகவல்களையும், செய்திகளையும் பிள்ளைகளினூடாகச் சமூகத்திடம் சேர்ப்பிக்கும் இணைப்புப் பாலங்களாக ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். இதன்மூலம் கல்வி, சமூகம், மாணவன், பாடசாலை போன்றவற்றிற்கிடையில் ஒரு இடைத்தொடர்பினைப் பேண முடிகின்றது.

**சமூக மாற்றமும் கல்வியும்**

இன்றைய கல்வி நடவடிக்கைகள் சமூக வாழ்வை நோக்கியதாகவே திசைதிருப்பப்பட வேண்டும். இதனால் சமூக மாற்றம் (Social Change) ஏற்படுகின்றது. சமூக மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது குழுமங்களில் அவர்கள் வாழும் முறையில் (Life Style) இதுவரை இருந்ததை விட ஏற்படும் ஒரு மாற்றமாகும். உணவு, உடை, பண்பாடு, பழக்கவழக்கங்கள், சடங்குகள், கிரியை முறைகள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள் போன்றவைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு முக்கியமானதொரு காரணியாக சமூக மாற்றம் அமைகின்றது.

சில சமூகங்களில் பாரம்பரியமாக இருந்துவரும் சுதேச அறிவு, மொழி மற்றும் விழுமிய சிந்தனைகளும், வடிவங்களும் இன்று நவீன கல்வியின் தாக்கத்தால் மாற்றம் பெற்று சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு சமூகத்தில் ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான மாற்றங்கள் கல்விச் செயற்பாட்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. கல்வி நடவடிக்கைகளில் முதலிடம் பெறுபவர்கள் பிள்ளைகளாவர். இதனால் அவர்கள் மத்தியிலும் இத்தகைய கல்வி நடவடிக்கைகள் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பிள்ளைகள் சமூகத்தின் எதிர்கால நிலைமைகளுடன் பொருந்தி வாழ்வதற்குத் தேவையான மனப்பக்குவத்தையும், திறமைகளையும், ஆற்றல்களையும் வழங்குவது கல்வியாகும். சமூக மாற்றங்களை எதிர்நோக்கும் மனஉறுதி உடையவர்களாக மக்கள் மாறுவதோடு அம்மாற்றங்களுக்குப் பொருந்தி வாழவேண்டும். கல்வியானது சில சமூக மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. மாற்றங்கள் துரித கதியில் நிகழும் போது கடந்தகால எடுகோள்கள், கொள்கைகள், நோக்கங்கள் என்பன பெறுமதியற்றதாகி விடுகின்றன. பழைய அனுபவங்கள் பயனற்றுப் போகும்போது பழைய அறிவுத் தொகுதியில் நாட்டம் குறைகின்றது.

இன்று நாடுகளின் கல்வி முன்னேற்றம் விளைதிறன் கொண்ட மனித வளத்தை உருவாக்கி விடுகின்றது. அம் மனித வளத்தைச் சரியான முறையிலே பயன்படுத்திச் செயற்படும்போது நாடு வளர்ச்சியடையும். ஆயினும் சிறந்த குடி மக்களை மட்டும் உருவாக்குவதோடல்லாமல் பல்வேறு படிநிலைகளிலும் சமூக வளர்ச்சி ஏற்பட வேண்டும். கல்வியை ஒரு நாடு திட்டமிட்டு வழங்கும் நிலையில் அங்கு பல சமூக மாற்றங்களும் அதனூடாக தேசிய அளவிலான மாற்றங்களும் நிகழும்.

- தொழில் வாய்ப்புக்கள் அதிகமாகும்
- சமூகம் சமத்துவமான நிலையை அடையும்
- மக்கள் சமூகமயப்படுத்தப்படுவர்
- நாட்டிலே அறியாமை அகலும்

- சமூக மக்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும்
- தொழிநுட்பம் துரிதமாக வளர்ச்சியடையும்
- தரமான கல்வி கிடைக்கும்
- சிறந்த முகாமை பேணப்படும்
- ஆளுமை மிக்க தலைவர்கள் உருவாகுவார்கள்
- பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகமாகும்
- உயர்கல்வி நிறுவனங்கள் உருவாகும்
- தேசியப்பற்று வளரும்

இன்று சமூக, பொருளாதார அபிவிருத்திகளில் முக்கியமான பங்கு வகிப்பவை பாடசாலைகளாகும். ஒரு குடும்பத்தில் பிள்ளையொன்று பிறந்து வளர்ந்தாலும் அது சமூகத்தோடு சேர்ந்து வாழ்கின்ற நிலைக்கு அதனை ஆளாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பவை பாடசாலைகளாகும். ஏனெனில் சமூகத்தைத் தவிர்த்து யாரும் வாழ முடியாது. இதனால் சமூகத்திற்கு இணக்கமானவர்களாக, முரண்பாடு அற்றவர்களாக ஒவ்வொருவரையும் உருவாக்குவது பாடசாலைகளாகும். சமூகத்தில் வாழும் ஒருவன் சிறந்த அறிவுத்திறன்களையும் இணக்கமான மனநிலையையும், சிறந்த விழுமியங்களையும் பெற்று வாழ்கின்ற தன்மையானது கல்விச் செயற்பாடுகளை வழங்கும் பாடசாலைகளைப் பொறுத்ததாகும். இத்தகைய அறிவுத்திறன்கள் கொண்ட ஒரு மனிதனை உருவாக்குவதில் கல்வியின் பங்களிப்பு கணிசமானது. ஆகவே அதற்குரிய உதவிகளையும் அனுசரணையையும் பெற்றோர்கள் வழங்கினாலும் கல்வி தொடர்பான முழு விடயங்களையும் அவர்களால் வழங்க முடியாது. ஏனெனில் கிராமப்புற ஏழைகள் மத்தியில் கல்வி தொடர்பான விழிப்புணர்வு குறைவு. இந்நிலையில் கல்விக்கான ஆதரவை வழங்க முடியாத பெற்றோர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்.

பாடசாலைகள் சமூகத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அது சமூகத்தைப் பிரதிபலிக்கும் நிறுவனம் மட்டுமல்லாமல் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு கருவியாகவும் விளங்குவதை யாரும் மறுக்கமுடியாது. சமூகத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் கல்வி கொண்டு செல்லப்பட வேண்டும். இதனால் சமூகத்தில் பொருளாதார நடவடிக்கைகளும், பாடசாலை நடவடிக்கைகளினால் மாற்றியமைக்கப்படுகின்றன. கைத்தொழில்களுக்கான வாய்ப்புகளைப் பெருக்கி மக்களின் செயற்திறன்களை அதிகரித்து உணவு உற்பத்தியைப் பெருக்கி சமூக மாற்றத்தை ஏற்படுத்தி அம்மாற்றத்திற்கேற்ப பிள்ளைகள் மனதிலும் நாட்டுப்பற்று, தேசியப்பற்று போன்றவைகளை வளர்த்தல் பாடசாலை நிர்வாகத்தின் கடமைகளில் முக்கியமானதாகும். எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான அகச்சூழல், புறச்சூழல் என்பன மிகமுக்கியமாகும். ஆகவே இன்று தனித்து பாடசாலைகள் கல்வியை வழங்கும் ஒரு நிறுவனமாக மட்டும் செயற்படாமல் பல்வேறு விதமான சமூகப் பணிகளைப் பொறுப்பெடுத்து நடத்தும் சமூக நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றன. பாடசாலைகள் சமூகத்திலிருந்து வேறுபட்ட ஒரு இடமாக அமையாமல் சமூகத்தின் ஒரு கூறாக விளங்க வேண்டும். இதன்மூலம் அறிவார்ந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். எனவே சமூக மாற்றம் என்றால் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்துள்ளார்கள் என்பதை மட்டும் கருத்திற் கொண்டு நோக்கப்படக் கூடாது. அதே போன்று எல்லோரும் உயர்கல்வி வாய்ப்பையோ அல்லது அரச உத்தியோகத்தையோ பெறுபவர்களாக இருக்க வேண்டுமென்றும் எண்ணக்கூடாது. இவைகள் இருந்தால் மட்டும் சமூக மாற்றம் ஏற்பட்டுவிடும் என்று கருத முடியாது. சமூக மாற்றம் என்பது

சமூகத்தின் தரம் உயர்தலைக் குறிக்கும். தரம் என்பது உயர் அடைவு என்ற எண்ணக் கருவால் விளக்கப்படும். சொல்லாற்றல், செயலாற்றல், கற்பனையாற்றல், புதியனவற்றைக் கண்டு பிடிக்கும் ஆற்றல், விரைவாகச் செய்யும் ஆற்றல், தவறின்றிச் செய்யும் ஆற்றல் போன்ற செயற்பாடுகளையெல்லாம் உள்ளடக்கிய நிலைதான் சமூக மாற்றம் என்பதற்குப் பொருத்தமாக அமையும் பலவகையான நிலைகளாகக் கருதப்படுகின்றன.

**சமூகமயமாதல் என்பதன் விளக்கம்**

சமூக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்தின் பண்புகளைப் பெற்று அதற்கமைவாகத் தனிநபர் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது சமூக மயமாதலாகும். (Socialization) சமூக அங்கத்தவர்கள் ஒருவர்மீது ஒரு ஈடுபாடு கொண்டு செயற்படுவதோடு, இளம் தலைமுறையினர் தம்மைப் பின்பற்றி நடப்பதற்குரிய செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் முன்னெடுத்துச் சென்று வழிகாட்டி விடவேண்டும். இதனால் சமூகத்தின் நோக்கிற்கும், போக்கிற்குமேற்ப தமக்குப் பொருத்தமான விடயங்களில் சமூகத்தோடு இசைவுபட்டு மனிதர்கள் வாழும் நிலைமையைக் காணமுடிகின்றது. மனிதன் சமூகத்தோடு சேர்ந்து வாழ்கின்றான். சமூகத்தின் போக்கிற்கேற்ப தமது நடத்தையைச் சரிப்படுத்த வேண்டும். தன் நோக்கிற்கேற்ப சமூக நடத்தையை மாற்றியமைக்க முடியாது. அதாவது வாழும் சமூகத்தின் தரங்களின் எல்லைகளுக்கு உட்பட்டு வாழுதலாகும். தனிமைப்பட்டு வாழமுடியாதவனாகிய மனிதன் உயிரியல் மற்றும் சமூகத் தேவைகளினால் ஒரு குழுவையோ அல்லது சமூகத்தைச் சார்ந்தவனாகவோ வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும் நிலை உண்டு. பொதுவாகக் கூறுவதானால் சமூகத்தின் விளை பொருளாகிய மனிதன் சமூகத்தோடு இசைவுபட வாழ்தலே சமூகமயமாதலாகும். இதன்மூலம் மனிதனின் உயிரியல் வரலாறு சமூக வரலாறாக மாற்றியமைக்கப்படுகின்றது.

**சமூகமயமாக்கலில் பாடசாலையின் பங்கு**

ஒரு பிள்ளை தனது பாடசாலையின் ஏனைய மாணவர்களுடன் இணைந்து வாழ்வதன் மூலமே வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் கற்க முடியும். பாடசாலை மாணவனுக்குக் கல்வியை மட்டும் புகட்டும் இடமாக அமைவதில்லை. அதனைவிட சமூக அமைப்புக்கள், ஆய்வுகூடங்கள், மைதானங்கள் ஆகியவற்றைப் பாடசாலை தன்னுடன் இணைத்துச் செயற்பட வேண்டும். குடும்பத்தில் தனது குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் இருந்து முதலில் பாடசாலைக்கு வரும் பிள்ளைக்கு பாடசாலையினுள் பல்வேறு சமூக மத்தியில் இருந்து வரும் பலதரப்பட்ட மாணவர்களோடு பழகுவதற்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இதற்கான முக்கிய பங்கைப் பாடசாலை எடுத்துக் கொள்கின்ற போதிலும் வகுப்பறை முக்கிய பங்காற்றுகின்றது. இதனால் வகுப்பறையிலே ஒரு மாணவனின் செயற்பாடு எத்தகையதாக அமைகின்றதென்பதை ஆசிரியர்கள் நன்கு அவதானிக்க வேண்டும்.

பழைய சமூகங்களில் இச் செயற்பாடுகள் மிகவும் இலகுவாக அமைந்திருந்தன. ஏனெனில் குடும்பத்தின் பொறுப்புக்கள், பாடசாலையின் கடமைக் கூறுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு பிள்ளை தனது குடும்ப அங்கத்தவர்களை, சமூக உறவுகளை, சமூக விடயங்களைத் தெரிந்து வைத்திருந்தான். சிக்கலான சமூக அமைப்புகள் காணப்படவில்லை. அவன் மீதான சமூக உளவியல் தேவைகள் அதிகமில்லாதபடியால் அவன் அதிக அளவிலான அமுக்கத்திற்கோ அல்லது இறுக்கத்திற்கோ முகம் கொடுக்கவில்லை. எதுவித தடைகளுமின்றி மனிதனின் சமுதாய வாழ்க்கை அமைந்திருந்தது. ஆனால் இன்றைய அறிவியல் யுகத்தில் வெவ்வேறுபட்ட

பாத்திரங்களை ஏற்று மனிதன் வாழவேண்டிய தேவையுள்ளது. இதனால் மனித வாழ்க்கை சிக்கலானதாகவும், கடினமானதாகவும் அமைந்துள்ளது. இதனால் குடும்பம் முழுமையாக ஒரு மனிதனுக்கு உதவுவதற்கு முடியாத நிலையில் பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் எல்லாம் மனிதனுக்கு ஜனநாயகப்பண்பு, மனித சமத்துவம், மதச்சார்பின்மை, விழுமியச் செயற்பாடுகள் போன்றவற்றைக் கையாள்வதற்குரிய நடத்தைக் கோலங்கள், அறிவு ஆகியவற்றிலெல்லாம் பயிற்சி பெறுவதற்கு வழிகாட்டின எனலாம். இவைகள் மனிதனைச் சமூக நடத்தையுள்ளவனாக மாற்றுவதில் பெரும் பங்காற்றின. இதனால் பாடசாலை என்பது சமூக மயமாக்கல் முகவர் நிறுவனமாகச் செயற்படுதல் எனக் கருதுதற்குப் பொருத்தமாகின்றது.

இன்றைய துரித கல்வி நடவடிக்கைகள் மத்தியில் பாடசாலைகளின் நாளாந்தச் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மாணவனையும் சமூகத்தையும் தொடர்புபடுத்தும் வகையில் எதிர்காலக் கல்வித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதிவிசேட பாடவிதானச் செயற்பாடுகள் மூலமும் சமூகமயமாக்கல் என்ற கடினமான பணியை இலகுவாகவும், வெற்றிகரமாகவும் செய்யமுடியும். கல்விச் சிந்தனையாளர்களால் சொல்லப்பட்ட பல கருத்துக்கள் பிள்ளையைச் சமூகத்தோடு பொருந்தி வாழ வேண்டிய தேவைகருதி அதற்கேற்ப பாடத்திட்டங்களை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது. கீழைத்தேய, மேலைத்தேய கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் யாவும் சமத்துவம், குழு உணர்வு, செய்து பார்த்துக் கற்றல், கண்டு பிடித்தல், பிரச்சினை தீர்த்தல், சுதந்திரமாகச் செயற்படல் போன்ற தன்மைகளோடு தொழிற்கல்விக்கும் அதிகளவு முக்கியத்துவம் கொடுத்தன. இச் செயற்பாடுகள் மாணவனின் சமூகமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு மிகவும் பொருத்தமாக அமைகின்றன.

இன்றைய கல்வி முறைகளையும் கலைத்திட்டச் செயற்பாடுகளையும் அவதானிக்கும் போதும் அது பிள்ளைக்கும் பிள்ளைக்குமிடையே ஒற்றுமையுணர்வினையும், புரிந்துணர்வினையும் வளர்க்கும் நோக்கில் அமைந்துள்ளதனை அறிய முடிகின்றது. கல்வி நடவடிக்கைகள் மரபு வழி முறைகளிலிருந்து மாறி மாணவர்களைத் தொழிற்பட வைக்கின்றன. வகுப்பறையிலே மாணவர்கள் குழுவாகச் செயற்படுகின்றார்கள். குழு முறையிலேயே அனைத்துப் பாடங்களும் இடம்பெறுகின்றன. இது மாணவர்களிடையே ஒருவரையொருவர் புரிந்து வாழ்வதற்கும், சமத்துவ உணர்வை வளர்ப்பதற்கும், ஒரு தலைமையின் கீழ் செயற்படுவதற்கும், விட்டுக் கொடுத்து வாழ்வதற்குமேற்ற தன்மைகளை உருவாக்கி விடுவதனால் மாணவனின் சமூக மயமாக்கல் நடவடிக்கை இத்தகைய கலைத்திட்ட நடவடிக்கைகளினால் இலகுவாக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைகள் குறிப்பாக வகுப்பறைகள் மனித சமூக சமத்துவத்தை வற்புறுத்தக்கூடிய குழுவினருடன் கூட்டுச் சேர்வதற்கு அதிக சந்தர்ப்பங்கள் வழங்குகின்றன. சில பொருத்தமான நடவடிக்கைகள் சமூகமயமாக்கல் தொடர்பான சந்தர்ப்பங்களை பாடசாலைகளில் ஏற்படுத்தி விடுவதனால் அதனைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவது அதிபர், ஆசிரியர்களின் கடமையாகின்றது.

- சமூகத்தில் உள்ள பிரபல்யமான கல்விமான்கள், தொழிலதிபர்கள், தொழில் வழங்குனர்கள், ஆன்மீகவாதிகள் போன்றவர்கள் பாடசாலைக்கு அறிமுகப்படுத்தப்படுதலோடு தேவையாயின் அவர்களின் சேவைகளைப் பெறல்.
- கல்விச் சுற்றுலாக்களைக் காலத்திற்குக் காலம் ஒழுங்கு செய்தல்.
- எதிர்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு பாடத்திட்டங்களைத் தயாரித்தல்.
- சமூகத்தோடு நெருங்கிய இடைவினையுறவைப் பேணுதல்.

- பாடசாலையின் பலவகையான விழாக்கள் கொண்டாடப்படுவதற்கு ஒழுங்கு செய்தலோடு அதில் சமூக மக்களையும் பங்குபெறச் செய்தல்.
- பொதுவான உடை, பொதுவான உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் கடைப்பிடித்தல்.
- பெற்றோர்களை அழைத்து மாணவர்களின் பாடசாலைப் பொருத்தப்பாடு தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- கற்றல் தவிர்ந்த ஏனைய புறவேலைகளில் ஈடுபடுவதற்கு மாணவர்களைத் தூண்டிவிடுதல்.
- நூலக வசதிகளைப் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மாணவர்களுக்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படல்.

இத்தகைய சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் மாணவர்களின் புரிந்துணர்வு அதிகமாகும். ஆகவே சிறந்த அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர்களைக் கொண்ட நல்லதொரு பாடசாலையிலன்றி வேறெந்த இடங்களிலும் மாணவர்களின் சமூகப் பொருத்தப்பாடு சிறந்த முறையில் அமையமாட்டாது.

**சமூகமயமாக்கலில் குடும்பத்தின் பங்கு**

ஒரு குழந்தையின் சமூகமயமாக்கலில் குடும்பத்தின் பங்களிப்பு கணிசமானது. வீடு என்ற நிறுவனம் சமூகத்தின் ஏனைய அனைத்து நிறுவனங்களின் விருத்திக்கும் மூலகாரணமாகும். சமூக நிறுவனங்கள் பலவற்றிற்குரிய வழிகாட்டி நிறுவனம் குடும்பமாகும். ஒரு பிள்ளையினுடைய குணம், நடத்தை, ஒழுங்கு, ஆளுமை போன்றவற்றிற்கு அடித்தளமிடுவது குடும்பமேயாகும். குழந்தையின் தோற்றம் உருவாக்கப்படுவதற்கு முழுப் பொறுப்புள்ள பெற்றோர்கள் குழந்தைகளின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதிலும் தமது அக்கறையைச் செலுத்த வேண்டும். குடும்பம் பல பணிகளை ஆற்றுகின்றது. மொழி விருத்தியில் குடும்பத்தின் பங்கு பெரியது. குழந்தைகள் தமது குடும்ப அங்கத்தவர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு மொழியையே பயன்படுத்துகின்றார்கள். குழந்தையின் பெரும்பகுதி நேரம் குடும்பத்தில் செலவழிக்கப்படுவதனால் சில அடிப்படைப் பழக்கவழக்கங்கள், சுபாவங்கள், எண்ணங்கள் போன்றவற்றை அது வீட்டிலேயே சம்பாதித்துக் கொள்கின்றது. பெற்றோர்களின் வாழ்க்கை நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை பிள்ளை ஆரம்பத்திலிருந்தே கற்றுக் கொள்கின்றது. குழந்தைகளின் பண்பாடு பெற்றோர்களின் வழிப்பட்டதாகும். இதனால் பிள்ளைகளின் சமூகப் பொருத்தப்பாடு இசைவானதாக அமைவதில் பெற்றோரின் பங்களிப்பு அதிகமானதாகும். குடும்பம் ஒரு பிள்ளையின் பல விடயங்களை சீரியமுறையில் வளர்ப்பதற்குப் பதிலாக அவற்றை எதிர்மாறான பாதையில் திசை திருப்பியும் விடுகின்றது. இதனால் பெற்றோர்கள் இயலுமானவரை பிள்ளைகளுக்கு முன்னுதாரண கர்த்தாக்களாக விளங்க வேண்டும். பல விடயங்கள் வீட்டிலே திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

- குழந்தையின் உடல் உள வளர்ச்சியில் கவனமெடுத்தல்.
- அதன் மொழி வளர்ச்சியைத் தூண்டுதல்.
- சுய வெளிப்பாட்டுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்.
- கல்விக்கு வழிகாட்டுதல்.
- விழுமியங்களை வளர்த்தல்.
- சில தீர்மானங்களை எடுக்க அவர்களையே தூண்டிவிடுதல்.
- சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமய நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு வழிகாட்டல்.
- எதிர்காலக் கற்றலுக்குத் தூண்டுதல்.

ஒரு வீடு பிள்ளையினது புனிதமான சொத்து. அங்கு சகமனிதர்களோடு இணக்கமாக, மனிதநேயத்தோடு வாழக் கற்றுக் கொடுக்கும் ஆசான்களாகப் பெற்றோர்கள் விளங்க வேண்டும். வாழ்நாட்களில் எந்தெந்தக் கட்டங்களில் எவற்றையெல்லாம் சாதிக்க வேண்டும் என்ற தெளிவான குறிக்கோள்களை குழந்தைகள் மனதில் இலட்சியங்களாக்க வேண்டும். அந்த இலட்சியங்கள் அவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிக்கப்படல்வேண்டும். இதனால் இலட்சியங்கள் யதார்த்தமாக மாறிவிடும் தன்மைக்கு உதவுபவர்களாகப் பெற்றோர்கள் விளங்க வேண்டும். பிள்ளைகளின் சிறந்த நடத்தையையும், கல்வியையும், பொருத்தப்பாட்டையும் கருத்திற்கொண்டு பாடசாலை நிர்வாகத்துடன் பெற்றோர்கள் ஒத்துழைக்கும் போது பாடசாலையின் பணி இலகுவாக்கப்படுகின்றது. பெற்றோர்கள் குடும்பத்தில் புதிய சிந்தனை உடையவர்களாக, புதிய சாதனை படைப்பவர்களாக இருந்து பல விடயங்களைச் சாதிக்கும் சாதனையாளர்களாக விளங்க வேண்டும். இடையூறுகளைக் கண்டு அஞ்சாமல், அவற்றை எதிர்க்கும் மனத்துணிவுள்ளவர்களாக மாறும்போது பிள்ளைகளும் அவ்வழியைப் பின்பற்ற வாய்ப்புண்டாகும். சில பெற்றோர்கள் அறியாமை, அச்சம், வெட்கம், தயக்கம், வறுமை காரணமாகச் சமூகத்தின் செயற்பாடுகளில் பங்கெடுக்க இயலாதவர்களாக, அதிலிருந்து ஒதுங்குபவர்களாக இருக்கும் நிலையில் அவர்களின் பிள்ளைகளும் அத்தகைய சூழல்களோடு தம்மைப் பொருத்துவதனால் சமூகப் பொருத்தப்பாடற்றவர்களாகின்றார்கள். இதனால் பெற்றோர்கள் எந்த நடவடிக்கையிலீடு படும்போதும் தம்மைப் பின்பற்றி நடக்கும் தம் பிள்ளைகளின் செயற்பாட்டிற்காக தமது நடவடிக்கைகளை மாற்றியமைத்தல் வேண்டும். பிள்ளைகளுக்கு சிறந்த அனுபவங்களைத் தருவதற்குரிய ஆற்றல்களையும், எதையும் சிந்தித்துச் செயற்படும் மனநிலையையும், எதிர்கால இலட்சிய சிந்தனைகளையும் வழங்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆகவே ஒரு மாணவனின் சமூகப் பொருத்தப்பாட்டிற்கு ஆசிரியர்களோ அல்லது பெற்றோர்களோ மட்டும் தனித்து வழிகாட்டுவதில்லை. இரு சாரரின் இறுக்கமான தொடர்புகளும் பரஸ்பரமான புரிந்துணர்வுகளும் பிள்ளைகள் சமூக இயல்பினைப் புரிந்து வாழும் வழியைக் காட்டுகின்றன. எனவே மாணவனின் நடத்தை வீட்டிலும் இருப்பதைப் போலப் பாடசாலையிலும் உருவாகுவதற்குரிய எண்ணங்களில் ஒத்துப்போவதற்கு வழிகாட்டுபவர்கள் இவ்விரு சாராரும் என்பதைக் கல்வியுலகம் மறுக்க மாட்டாது. இதனால் சமூகம், நாடு, தேசம் என்ற நிலை பிள்ளையின் சிந்தனையில் நிர்ணயம் செய்யப்படுகின்றது. பிள்ளைகளின் உணர்வுகளைப் பகுத்தறிவுடன் நோக்கி அவர்களின் பல்வேறான தேவைகளை இனம் கண்டு தீர்த்துக் கொள்வதோடு, பிள்ளைகளின் துன்ப உணர்வுகளில் உதவியாயிருத்தல் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கடமையாகும். இதனால் பாடசாலைகள் சமூகத்திற்குப் பொருத்தமான கல்வியையளிக்கும் பொறுப்பை பெருமளவு ஏற்றுக் கொண்டுள்ளன எனலாம். இதற்குரிய செயற்பாடுகள், நீண்டகால, குறுங்காலத் திட்டங்கள் போன்றவைகள் பல இருத்தல் வேண்டும்.

- ஆசிரியர்களுக்கு நன்கு பயிற்சியளித்தல்
- வகுப்பறையில் மாணவர்களுக்கான பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- சமூகத்திற்குப் பொருத்தமான கற்பித்தல் விடயங்களை பாடசாலைகளில் அறிமுகம் செய்தல்.
- வகுப்பு மாணவர் தொகை அளவாக இருத்தல்
- மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களை ஒழுங்குபடுத்தல்
- மாணவர்களிடையே குழு உணர்வினைத் தூண்டுதல்
- சிறந்த செயற்பாடு மிக்க பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.
- பல்வேறு மொழிகளைத் தெரிந்திருத்தல்

இவ்வகையில் செயற்படும் போது சிறந்த பாடசாலைச் சமூகத் தொடர்புகள் பேணப்படுகின்றன. இதனால் குறுகிய "நான்" என்ற உணர்வு நீங்கி "நாம்" என்ற நிலையில் வாழும் மனப்பக்குவம் சமூக மக்கள் மத்தியில் வளர்க்கப்படுகின்றது.

**முடிவுரை**

இன்றைய கல்வி சமூகத்தைப் புறக்கணித்து தனித்து இயங்க முடியாது. மாணவர்களிடம் கல்வியின் மூலம் ஏற்படும் நடத்தைமாற்றம் சமூகத்தோடு இசைந்துவாழும் வகையில் அமையும் போதுதான் அச்செயற்பாடுகள் வெற்றியைத் தரும். கல்வி நடவடிக்கைகள் ஒரு பிள்ளையைச் சமூகமயப்படுத்தலோடு மட்டுமன்றி சமூகத்தின் மேல் நோக்கிய அசைவிற்கும் பெரிதும் உதவுகின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஆற்றலுக்கேற்ற வகையில் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஓரளவேனும் துணை செய்கின்றான். ஒருவன் கல்வியின் மூலம் தன்னைப் புரிந்து கொண்டு வாழ்கின்றான். இன்றைய கல்வித் திட்டங்கள் செயற்பாடுகளை நிர்ணயித்தலிலும், செயல்முறைகளை உருவாக்குவதிலும் சமூக நோக்குடன் செயற்படுகின்றன. இதனால் ஒருவனின் ஆளுமை அதிகரிக்கின்றது. ஆகவே பாடசாலைக் கல்வியைப் பெறுவதன் மூலம் ஒருவன் தனித்து அறிவினை மட்டும் பெறுவதில்லை. இக்கல்வியானது சமூக நோக்கங்களுக்குப் பொருந்தி வாழும் ஒரு சமூக அங்கத்தவனாக வாழ அவனுக்கு வழிகாட்டுகின்றது. பாடசாலைக் கல்வி வயதிலும் அதற்கு அப்பாற்பட்ட சமூக வாழ்க்கைக் காலத்திலும் சமூகத்தின் செயற்பாடுகளை மதித்து உடன்படும் ஒருவன் சமூகத்திற்கு அவசியமாகின்றான். சமூகத்தின் இணக்கப்பாடு என்பது முரண்பாடுகளற்ற ஒரு சமூகத்தை உருவாக்குகின்றது. மக்கள் மத்தியில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போது அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும். இதனால் கல்வி என்பது ஒருவனை சமூக நடைமுறைகளோடு இணைந்து வாழும் நிலையை ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் அமைதியான, அறிவுப்பாதையை நோக்கிய ஓர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். ஆகவே சமுதாயத்தின் நுண்ணிய கூறுகளான குடும்பம், பாடசாலை ஆகிய நிறுவனங்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**உசாத்துணை :**


01) The Sociological tradition, (1979), Heinemann, Robertnisbet, London.

02) Individual in Society, (1962), David, krech, New York.

03) The school in society, (1973), seiber and David, The free press, New York.

04) On Education - Sociological perspectives, (1967), Donaled. A, Hansen London.

05) கல்வியும் சமூகமும், (1994), சந்தானம். எஸ். சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

06) சமுதாயமும் பண்பாடும், (1962), பரமசிவானந்தம். மு., தமிழ்க்கலைப்பதிப்பகம், சென்னை.

07) கல்வியும் மனிதவளவிருத்தியும், (2002), சந்திரசேகரன், சோ., சின்னத்தம்பி, மா., எஸ்.எச். பதிப்பகம், கொழும்பு.

08) கல்வியின் நவீன செல்நெறிகள், (2007), சந்திரசேகரன், சோ., குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

09) கல்வி ஒரு பன்முகநோக்கு,(1959), இராசமாணிக்கனார், மா., வள்ளுவர் பண்ணை, சென்னை.

10) கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும், (1993), சந்தானம், எஸ்., சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

# யாழ்ப்பாணத்தில் பெண் கல்வி
# ஒரு வரலாற்று நோக்கு



கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## முன்னுரை

இலங்கையின் கல்விப் பாரம்பரியத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது பின்வரும் காலகட்டங்களாக வகுப்பது பொது மரபாகும்.

1. ஆரம்பகாலக் கல்வி
2. ஐரோப்பியராட்சிக் காலக் கல்வி
3. சுதந்திர இலங்கையிற் கல்வி

இப்போக்கிலேயே யாழ்ப்பாணத்துப் பெண்கல்வி நிலைமை களினையும் நோக்குதல் பொருத்தமானதாகும். அதன்வழி யாழ்ப் பாணத்தில் ஆரம்பகாலப் பெண்கல்வி நிலைமைகளை முதலில் நோக்குவோம்.

## யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி - வரலாற்று நோக்கு

### 1. ஆரம்பகாலத்தில் பெண் கல்வி

(கி.மு 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை)

ஆரம்பகாலக் கல்விப் பாரம்பரியம் என நாம் பொதுப்படக் குறிப்பிட்டாலும் அக்காலப்பகுதியில் இரண்டு செல்வாக்கு மிக்க கல்வி மரபுகளை அடையாளங் காணக்கூடியதாக உள்ளது.

1. பிராமணியக் கல்வி மரபு / இந்துக்கல்வி மரபு
2. பௌத்த கல்வி மரபு

இலங்கையின் வடபிரதேசத்தைப் பொறுத்தவரையில் இலங்கை வரலாற்று ஆரம்ப காலமாகிய கி.மு 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 13ஆம் நூற்றாண்டில் அடையாளம் காணத்தக்கதாக யாழ்ப்பாண அரசு உருவாகி வளர்ந்து சிறப்புப் பெற்று, முதல் ஐரோப்பிய இனத்தவரான போர்த்துக்

கேயராட்சிக்கு உட்படும் கி.பி 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை பிராமணிய அல்லது இந்துமரபுக் கல்விச் செல்வாக்கினைப் பற்றி அறிய முடிகின்றது. அம்மரபின் கீழ் யாழ்ப்பாணத்தின் பெண் கல்வி நிலைமைகளை அவதானிக்கலாம்.

இந்துமரபின் வழி செயற்ப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் கல்வியின் நோக்கு ஆன்மீகம் என்பதாக அமைந்தது. நிலமானிய சமூக அமைப்பு இறுக்கமாகப் பேணப்பட்ட அக்கால யாழ்ப்பாணத்தில் கல்வி ஆண்பாலாரிடம் அதிலும் மேல்சாதி ஆண்களிடம் முடங்கிக் கிடந்தமையை அறிய முடிகின்றது. "பொதுவாகத் தமிழ்க்கல்வியும் புலமையும் பாண்டித்தியம் பெற்ற ஒரு சாராரிடமே முடங்கிக் கிடந்தன. அவர்களும் பெரும்பாலும் தமது அறிவை மற்றவர்களுக்கு வழங்க விரும்பவில்லை. சிலர் பிறரிடத்தில் ஏடுகளை வாங்கித் தாம் பிரதி செய்துவிட்டு பாடஏட்டை இயன்றளவு பிழைபடுத்தி விட்டுக் கொடுப்பார்கள். ஒரு தமிழ் வித்துவான் தான் இறக்குங் காலத்தில் ஏடுகளைத் தனக்கு முன்னே கொண்டு வந்து சுட்டுப் போடுதல் வேண்டுமென்று சொல்லிச் சுடுவித்து அதன் பின்னரே உயிரைவிட்டார்"[1] என்று குறிப்பிடப்படுவது அந்நிலைமையை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இந்துமரபுச் சமூகம் தந்தை வழிச் சமுதாயத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்ட நிலைமைகளில் பெண் பெரும்பாலும் தந்தை, கணவன், பிள்ளையெனக் குடும்பம் சார்ந்த அனுபவக் கல்வியைப் பெற்றிருக்கவே வாய்ப்புக்கள் இருந்திருக்க முடியும். ஆதலால் அக்காலப் பெண்கள் பெற்ற கல்வி மக்கட்பண்பு, ஒழுக்கம், முருகியல்பண்பு வளர்க்கும் அனுபவக் கல்வி என்ற வரையறைக்குட்பட்டதாகவே இருந்திருக்க முடியும். மேலும் பாரம்பரியக் கல்வி மரபில் காலப்போக்கில் தோன்றிய திண்ணைப்பள்ளிச் சூழலில் பெண்கள் கேள்வி ஞானத்தால் அறிவைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருந்திருக்கக் கூடும் என நம்பவும் இடமுண்டு.[2] இத்தகைய பின்னணியிலே போர்த்துக்கேயர் வருகையும் ஆதிக்கப்படர்ச்சியும் இலங்கையில் இடம்பெற்றது.

## II. ஐரோப்பிய காலப் பெண்கல்வி நிலைமைகள்

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலம் (கி.பி 1505 - 1796 வரை)

முதல் ஐரோப்பிய ஆட்சியாளராகிய போர்த்துக்கேயர் இலங்கை வரும்வரை எமது பிரதேசக் கல்வியானது ஒழுங்குற அமைக்கப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஆட்சி கி.பி 1621 தொடக்கம் கி.பி 1658 வரை இடம்பெற்றது. போர்த்துக்கேயர் வருகையும் ஆதிக்கப்படர்ச்சியும்,

1. வர்த்தக ஏகபோக உரிமைபெறுதல்
2. கத்தோலிக்க மதம் பரப்புதல்

என்ற நோக்கங்களின்பாற்பட்டதாக இடம்பெற்றன. அங்கு கல்வி மதம் பரப்புதலுக்கான ஓர் ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதனால் ஆண், பெண் வேறுபாடு என்பது அர்த்தமற்றதாகியதுடன் போர்த்துக்கேயர் கல்விச் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவும் விளங்கினர். கத்தோலிக்க மதம் பரப்பும் நோக்கத்துடன் இயேசு சபை, பிரான்சிஸ்கன் சபை, டொமினிக்கன் சபை மிஷனரிகள் இலங்கை வந்து செயற்பட்டபோது யாழ்ப்பாணத்தில் அவர்கள் செயற்பாடுகள் தடையின்றி இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் 32 கத்தோலிக்க ஆலயங்கள் இருந்ததாகவும்,[3] ஆலயங்கள் சார்ந்ததாக 25 பாடசாலைகள் இயங்கியதாகவும் அறிய முடிகின்றது.[4] அங்கெல்லாம் பால் வேறுபாடின்றி கல்வி அளிக்கப்பட்டதென அறியப்படுகின்ற போதிலும் விரிவான விபரங்கள் கிடைக்கவில்லை. கிடைக்கின்ற சில தகவல்களின் அடிப்படையில்

யாழ்ப்பாணத்தின் கிழக்குக் கரையில் டொமினிக்கன் மிஷனரியினர் கன்னியாஸ்திரி மடம் ஒன்றினை நிறுவினர் எனவும், அதுவே யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட முதல் நிறுவனமென்றும் அறிய முடிகின்றது.[5]

போர்த்துக்கேயர் காலத்தில் பெண்கல்வி பொறுத்துக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்கான வளர்ச்சிப் போக்குகள் காணப்பட்டன என்று கூறுவதற்கில்லை.

1. பாரம்பரியக் கல்வி மரபு முழுமையாகப் புறக்கணிக்கப்படாமை.
2. புதிய அந்நியச் சூழலில் பெண்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் யாழ்ப்பாணச் சமூகம் அக்கறை காட்டாதிருந்தமை.

போன்றவை இதற்கான பின்புலங்களாயின.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தர் இந்நாட்டின் ஆட்சியாளராகினர். போர்த்துக்கேயரைப் போன்றே

1. வர்த்தக ஏகபோக உரிமை பெறுதல்
2. புரட்டஸ்தாந்து மதம் பரப்புதல்

என்ற நோக்கங்களின் அடிப்படையில் தம்மாட்சியை ஸ்தாபித்த ஒல்லாந்தர் (கி.பி 1658 - 1796 வரை) முன்னையவர் போன்று கல்வியைச் சமயம் பரப்ப ஏற்ற ஊடகமாகப் பயன்படுத்தினர். போர்த்துக்கேயரிலும் மேலாகக் கல்வியை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திய ஒல்லாந்தர்

1. அரச கட்டுப்பாட்டிற்குள் கல்வியைக் கொண்டு வந்தமை
2. எல்லோருக்கும் கல்வியை வழங்கும் பொருட்டு ஆரம்பக் கல்வியை கட்டாயக் கல்வியாக்கியமை.
3. பாடசாலைச் சபைகள் அமைத்துச் சிறப்பான கல்வி நிர்வாகத்தை மேற்கொண்டமை.

போன்ற பல்வேறு நடவடிக்கைகளினூடாக கல்வியில் அதிக கவனமெடுத்தனர். அங்கும் பெண்கல்வி பொறுத்து போதிய விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் சிறுவர்களினதும் மற்றவர்களினதும் சிறுமைத்தனமான நடத்தைகளினால் மாணவிகள் சீரழிந்துவிடாமலிருக்க அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற திட்டவட்டமான அறிவுறுத்தலை ஒல்லாந்த நிர்வாகம் விடுத்தது எனத் தெரிகின்றது.[6] அதனூடாகப் பெண்கல்வி கரிசனைக்குட்பட்டிருந்ததனை அறிய முடிகின்றது. மேலும் கி.பி 1734இல் யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆதரவற்றோர் பாடசாலைகளில் 47 ஆண்களும் 21 பெண்களும் 1739இல் 52 ஆண்களும் 47 பெண்களும் கற்றதாகவும் அறிய முடிகின்றது.[7]

முன்னைய காலங்களுடன் நோக்கும்போது ஒல்லாந்தர் காலத்தில் ஒப்பீட்டடிப்படையில் ஆரம்பக் கல்வியைப் பெண்பாலார் அதிகளவில் பெற்றதாகக் கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

**பிரித்தானியராட்சிக் காலம் (கி.பி 1796 – 1948 வரை)**

பிரித்தானியர்கால யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி நிலைமைகளை நோக்குவோம். கி.பி 1796 - 1948 வரை இடம்பெற்ற பிரித்தானியராட்சி இலங்கையின் கல்விப் பாரம்பரியத்தில் ஆழமான செல்வாக்கினைப் பதித்திருந்தது. பெண்கல்வி முன்னேற்றங்கள் அதில் குறிப்பிடத்தக்கன.

பிரித்தானியராட்சிக் கால ஆங்கிலக் கல்வியும், மேனிலைக்கல்வியும், இலங்கையருள் ஒருசாரார் அக்கல்வியைப் பெற்றுத் தம்மை மேல்வர்க்கத்தினராகக் காட்டத் தலைப்பட்ட சூழலும் பெண்கல்விச் சிந்தனைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. யாழ்ப்பாணச் சமூகத்திலும் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டமை பெண்கல்வி வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகியது.

பிரித்தானியராட்சியின் ஆரம்ப காலங்களில் பல்வேறு கிறித்தவ மதகுழுவினர் இலங்கை வந்தமையினையும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பெண்கல்விச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவதனூடாக மதமாற்றத்தை மிகச் சிறப்பாக ஆற்ற முடியுமென எண்ணி அவர்கள் செயற்பட்டமையினையும் அறிய முடிகின்றது. அவ்வாறு வந்த மிஷனரிக் குழுவினர்கள் பின்வருமாறு

1. இலண்டன் மிஷனரிச் சங்கம் (1805)
2. வெஸ்லியன் மெதடிஸ்ற் மிஷனரிச் சங்கம் (1814)
3. அமெரிக்கன் மிஷனரிச் சங்கம் (1816)
4. திருச்சபை மிஷனரிச் சங்கம் (1918)

யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரை வெஸ்லியன் சங்கத்தினர் பெண் கல்வியின்பால் அதிக அக்கறை காட்டியவர்களாக விளங்கினர். வெஸ்லியன் மிஷனரியர் பெண்களுக்கான தனிப்பாடசாலை அமைத்துச் செயற்பட்டமையை அறிய முடிகின்றது. 1834ஆம் ஆண்டு திருமதி பேர்சிவல் என்பவர் யாழ்நகரில் ஐந்து மாணவிகளுடன் ஒரு பாடசாலை அமைத்தது பற்றியும் பின்னர் 1838இல் திரு. திருமதி பேர்சிவல் இருவருமாகச் சேர்ந்து யாழ்ப்பாணத்து வேம்படி வளவில் பெண்களுக்கென இரு பாடசாலைகளை அமைத்தமை பற்றியும் அறிய முடிகின்றது.[8] மேலும் 1875இல் வணக்கத்திற்குரிய W.R. வின்ஸ்ரன், அவர் பாரியார் இருவருமாக இணைந்து பருத்தித்துறை உயர்தரப் பெண் விடுதிப் பாடசாலையொன்றை அமைத்தது பற்றியும் அறிய முடிகின்றது.[9] அன்றியும் மூன்றாம் தரப் பாடசாலைகளாகக் கருதப்பட்ட சுதேச பாடசாலைகள் பலவும் பெண்களுக்காக அக்காலப்பகுதியில் அமைக்கப் பட்டமையினையும் இங்கு குறிப்பிடலாம்.

பெண் கல்வி வளர்ச்சிக்கு இப்பிரதேசத்தில் பெருந்தொண்டாற்றியவர்களாக விளங்கும் மற்றுமோர் மிஷனரியினர் அமெரிக்க மிஷனரியினராவர். அமெரிக்க மிஷனரியினர் இலங்கை வந்தபோது அவர்கள் இங்கிலாந்தைச் சாராத மிஷனரியினர் என்ற வகையில் யாழ்ப்பாணத்தில் மட்டும் செயற்பட அனுமதிக்கப்பட்டனர். அக் கட்டுப்பாடானது யாழ்ப்பாணத்தவர் கல்வியில் மிஷனரியினர் அதிக அக்கறை காட்டவும், பெண்கல்வி விருத்திக்கு வழிகோலவும் துணை போயிற்று.

அமெரிக்க மிஷனரியினர் தம் கல்விப் பணிகளை ஆரம்பித்தபோது அவர்கள்பால் மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்படாது போனாலும் விரைவில் பெண் கல்வி வளர்ச்சி காணலாயிற்று. உடுவிலில் அமைக்கப்பட்ட பெண்பாடசாலை முதல் பெண்விடுதிப் பாடசாலையாக அமைந்தது.[10] 1823இல் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சி கண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 1867இல் அமைக்கப்பட்ட உடுப்பிட்டி பெண்விடுதிப் பாடசாலை என்பன பெண்கல்விக்குப் பெருந்தொண்டாற்றின.[11] அவை தவிர கிராமங்கள் தோறும் சுதேச பாடசாலைகள் அமைக்கப்பட்டு பெண்கல்வி வளர்க்கப்பட்டது. மேலும் 1886இல் உடுவிலிலும், வேம்படியிலும் பெண் ஆசிரியர்

பயிற்சிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டமையானது பெண்கள் கல்வி கற்கும் சூழல் வளர்ச்சி கண்டமையினையும் பெண் தொழில் பார்க்கும் சூழல் உருப்பெறத் தொடங்கியமையினையும் சுட்டி நின்றன. அமெரிக்க மிஷனரியினர் யாழ்ப்பாணத்தில் அமைத்த தமிழ்ப் பள்ளிகளையும் அதில் கற்ற பெண்கள் தொகையினையும் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| வருடம் | பள்ளிக்கூட எண்ணிக்கை | பெண்கள் தொகை |
|---|---|---|
| 1819 | 15 | 10 |
| 1824 | 90 | 613 |
| 1836 | 155 | 1000 மேல் |
| 1868 | 60 | 728 |
| 1879 | 121 | 1400 |
| 1884 | 138 | 1751 |
| 1900 | 133 | 2791 |
| 1911 | 118 | 3544 |

(ஆதாரம் : ஜெபநேசன். எஸ்., அமெரிக்க மிஷனும் இலங்கைத் தமிழ் வளர்ச்சியும், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, 1983., ப. 27)

யாழ்ப்பாணப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் திருச்சபை மிஷனரியினருடைய பங்களிப்பினையும் நாம் மறுப்பதற்கில்லை. நல்லூரில் மிஷன் இல்லத்தில் 7 மாணவர்களுடன் அவர்கள் தொடங்கிய கல்விப்பணி பெண்களுக்கு கல்வி வழங்குவதிலும் அக்கறை காட்டியது.[12] 1896இல் பரியோவான் கல்லூரியின் தென்மேற்கு மூலையில் ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலையொன்று பின்னர் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையாகி இன்று பெண் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.[13]

யாழ்ப்பாணத்துப் பெண்கல்வி வளர்ச்சிப் போக்கில் கத்தோலிக்க மிஷனரியினருடைய செயற்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படத்தக்கன. வணக்கத்திற்குரிய பொறாச்சிரி ஆண்டகையாரால் 1845 அளவில் யாழ்ப்பாணத்தில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை உருவாக்கப்பட்டது.[14] பிஷப் ரேமேரியா என்பவரால் வரவழைக்கப்பட்ட ஆறு கன்னியாஸ்திரிகளின் சிறப்பான செயற்பாடுகளினால் யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் தோறும் பெண் கல்வி வளர்க்கப்பட்டது. மேலும் அவர்களால் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகாவித்தியாலயம், பருத்தித்துறை திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, அச்சுவேலி புனித தெரேசா கன்னியர் மகாவித்தியாலயம், நெடுந்தீவு, நாரந்தனை திருக்குடும்ப கன்னியர் பாடசாலை போன்றன நிறுவப்பட்டு பெண்கல்விச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

கிறிஸ்தவச் சூழலில் பெண்கள் கல்வி பெற்றமையை மறுதலித்தும், சைவத்தமிழ்ச் சூழலில் பெண்பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்தும் சைவத்தமிழ் பெருமக்களும், இயக்கங்களும் பெண் கல்வி வழங்கலிலும், வளர்ச்சியிலும் அக்கறை கொள்ளலாயினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்றவர்கள் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். 1913இல் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்டு இன்றும் சைவமும், தமிழும் வளர்த்துவரும் பெண்கல்விக்கூடமாகத் திகழ்வதே

மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆகும். அதேபோன்று 1926இல் அவரால் உருவாக்கப்பட்ட சைவப் பெண்களுக்கான ஆசிரிய கலாசாலை சைவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணி வளர்த்தது.[15] 1943இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, 1944இல் ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி என்பன யாழ்ப்பாணத்துப் பெண்கள் சைவசமயச் சூழலில் தமிழையும், ஆங்கிலத்தையும் கற்றுத் தேறும் வாய்ப்புக்களை வழங்கி வரலாயின.

இத்தகைய வளர்ச்சிப் போக்குகள் காணப்பட்ட நிலைமையிற்றான் இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்றது. சுதந்திர இலங்கையில் பெண்கல்வி நிலைமைகளைச் சிறிது அவதானிப்பது இங்கு பொருத்தமானதாகும்.

**111. சுதந்திர இலங்கையில் பெண்கல்வி**

சுதந்திர இலங்கையில் பெண்கல்விச் செயற்பாடுகள் துரித வளர்ச்சி கண்டன. அதற்கு பின்வரும் காரணிகள் பின்புலங்களாயின.

1. இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டமை
2. தாய்மொழி வழிக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டமை
3. கிராமங்களில் மத்திய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டமை
4. பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டமை
5. புலமைப்பரிசில் திட்டங்கள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டமை
6. பிரித்தானியராட்சியின் கீழ் யாழ்ப்பாண சமூகத்தவரிடம் பெண்கல்வி பற்றிய சிந்தனைகளில் வரவேற்கத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றமை.

மேற்கூறப்பட்ட பின்புலத்தில் பெண்களுக்கான கல்வி வழங்குதலில் ஆரோக்கியமான சூழல் உருவாகியிருந்தது. அதன்வழி பெண்கள் பாடசாலைக் கல்வியையும், பல்கலைக்கழகக் கல்வியையும் பெறும் சாத்தியப்பாடுகளும் அதிகரித்தன. பெண்ணானவள் கல்வி மூலம் உயர்வு பெற வேண்டுமென்பதிலான அக்கறையும், ஆர்வமும் வேகமாக வளர்ச்சி காணத் தொடங்கின.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1999இன் புள்ளிவிபரப்படி 410 பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருந்த நிலையில் ஆண்களுக்கான தனிப்பாடசாலைகள் 9 ஆகவும், பெண்களுக்கான தனிப்பாடசாலைகள் 12 ஆகவும், கலவன் பாடசாலைகள் 389 ஆகவும் இருந்ததாக அறிய முடிகின்றது.[16] பெண்களுக்கான தனிப்பாடசாலைகள் ஆண்களுக்கான தனிப்பாடசாலைகளை விட எண்ணிக்கையில் கூடியிருந்தமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. அதேபோன்று 1999இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் 1இல் அனுமதி பெற்றவர்களுள் 4620ஆண் மாணவர்களும் 4503 பெண் மாணவிகளும் அடங்கியதாக அறியலாம்.[17] இங்கு இருபாலாரும் ஏறக்குறைய சம எண்ணிக்கையில் இடம்பெற்றமையை அவதானிக்கலாம். அதேபோன்று ஆசிரியர்களாக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவோரில் (5799 பேர்) ஏறக்குறைய 70% மானோர் பெண் ஆசிரியர்களாக இருப்பதனையும் அறிய முடிகின்றது.

பாடசாலைக்கல்வியில் மட்டுமன்றி உயர்கல்வி நிலைமைகளிலும் இன்று பெண்கள் முதன்மை பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிக்கைகள் இதனை வெளிப்படுத்தியுள்ளன.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 1981 | 84 | 46 |
| 1982 | 104 | 89 |
| 1983 | 34 | 47 |
| 1984 | 37 | 50 |

(மூலம் - Annual Report, University of Jaffna 1981, 1982, 1983, 1984)

இவை தவிர 1980இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகம், 1990இல் நிறுவப்பட்ட தேசிய கல்வி நிறுவகம், 1996இல் ஆரம்பிக்கப்பட்ட உயர் தொழில்நுட்பக் கல்லூரி போன்றனவற்றில் பெண்கள் குறிப்பிடத்தக்க அளவில் கல்வி பெற்று வருவதும் இங்கு கவனத்திற்குரியது.

**முடிவுரை**

யாழ்ப்பாணப் பெண்கல்வி நிலைமைகளை நோக்கின் ஆரம்ப காலத்தில் செவிவழியாக மனப்பாடம் செய்தலும், அவற்றைக் குடும்பம் சார்ந்ததாகப் பிரயோகித்தலும் என்ற வகையில் மட்டுமே பெண்கள் கல்வி பெற்றமையை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் ஆதிக்கத்திற்குட்பட்டதனைத் தொடர்ந்தும் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழும் பெண் கல்வியின் அவசியம் மெல்ல மெல்ல உணரப்படுவதனையும், ஆட்சியாளர் பெண்கல்வியின் அவசியத்தை யாழ்ப்பாண சமூகத்தவர்களுக்கு உணர்த்துவதனையும் அறிய முடிகின்றது. பிரித்தானியராட் சியின் கீழ் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக முறைசார் பெண் கல்வி நிலையங்கள் தோற்றம் பெற்றமையையும், வளர்ச்சி கண்டமையையும் அறியலாம். சுதந்திர இலங்கையில் இற்றைவரை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பெண்கல்விச் செயற்பாடுகள் பாடசாலைக் கல்வி, உயர் கல்வி என்ற இருநிலைகளும் படிப்படியாக வளர்ந்து வருவதனை நோக்க முடிகின்றது. இதன்வழி பெறப்படும் அனுகூலங்களைப் பின்வருமாறு பட்டியலிட முடியும்.

1. எழுத்தறிவு வீதம் வளர்ச்சி கண்டிருத்தல்
2. பெண்கள் உயர்கல்வி வாய்ப்பு வசதிகளுக்காக வெளிநாடு செல்லும் நடைமுறைகள் பெருகி வருதலும் பெண் அந்தஸ்தில் உயர்தலும்
3. வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் காணப்படுதல்
4. பெண்கள் ஊழியர் சந்தையில் பெறுமானம் மிக்கவர்களாதல்
5. நாட்டின் குடித்தொகைக் கட்டுப்பாட்டில் அக்கறை காட்டப்படுதலும் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கலும்
6. பெண் சுதந்திரம் பெண்ணியல் சிந்தனைகள் வளர்ச்சி கண்டு வருதல்

அதேசமயம் இவ்வளர்ச்சிப் போக்கு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றமையினையும் கவனத்தில் கொள்வது அவசியம். அத்தகைய பிரச்சினைகளாக பின்வருவனவற்றை அடையாளம் காட்டப்படலாம்.

1. பெண்களுக்கான திருமண வயது பின்தள்ளப்படுதல்
2. பொருத்தமான மணமகன் அமைவதில் தடங்கல்கள் ஏற்படுதல்
3. படித்த பெண்கள் பெரும்பாலும் தொழில் வாழ்க்கைக்குள் செல்வதால் குடும்பக் கவனிப்பில் அக்கறையின்மைஅல்லது அக்கறை போதாதிருத்தல்
4. வேலை வாய்ப்புக்களில் பொருத்தப்பாடின்மை நிலவுதல்
5. வேலைத்தளங்களில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குதல்

இத்தகைய இன்னோரன்ன பிரச்சினைகள் நிலவுகின்ற போதிலும் கிடைக்கப் பெறுகின்ற அநுகூலங்களின் காரணமாகப் பெண்கல்வி மீதான ஆர்வமும் அக்கறையும் யாழ்ப்பாணச் சமூகத்தவர் பொறுத்து மென்மேலும் பெருகுவதனையே அறிய முடிகின்றது. எனவே பெண்கல்வி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதனூடாக பெண் கல்வியை விரிவுபடுத்தவும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கவும் முயல வேண்டியது யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தின் முன்னுள்ள அவசர கடமையாக இருக்கின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

01. ஜெபநேசன், எஸ்., அமெரிக்கமிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும், யாழ்ப்பாணக் கல்லூரி, 1983, ப. 10
02. மேற்படி
03. வேலுப்பிள்ளை, சி.டி., அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம், யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம், 1984, ப.22
04. கல்வி கலாசார அமைச்சு வெளியீடு. இலங்கையிற் கல்வி பகுதி I,1960, ப. 5
05. சத்தியசீலன் சுரேந்தினி, யாழ்ப்பாணத்தில் மிஷனரிமாரின் நடவடிக்கைகளும் பெண் கல்வியும் 1815 - 1870 ஆய்வுக் கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1966, ப. 15.
06. இலங்கையிற் கல்வி, மு.சு.நூ., ப. 359
07. இராமலிங்கம், வள்ளிநாயகி., நங்கை, 1989தை. ப. 18
08. Small W.J.J. *A History of the Methodist Church in ceylon 1814 - 1860,* Wesly Press, Colombo, p. 196
09. Ibid p. மேற்படி 145
10. Ibid p. மேற்படி
11. Ibid p. மேற்படி
12. வேலுப்பிள்ளை, சி.டி., மு.சு.நூ., ப. 209
13. Scowofort Elise *At the foot of the Vembu Tree* A history of the Vambadi School for the past hundred years, Colombo, 1938., p.64
14. சகாயராஜா, சிறி கைலாஜினி., சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் யாழ் நகர சமூகமும், ஆய்வுக் கட்டுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1993, ப. 40
15. Edmund Piris, *The Sisters of Holy Family in Sri Lanka Methodist Church,* P. 109.
16. சந்திரசேகரம், ப., லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, 1987 ஆகஸ்ட், ப. 12
17. மேற்படி

# ஈழத்துப் பெண் படைப்பாளிகள் ஓர் அறிமுகம்



**கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**

முதுநிலை விரிவுரையாளர்,

தமிழ்த் துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



உலக சனத்தொகையில் அரைவாசிப்பேர் பெண்களாக இருக்கின்றனர். பெண்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவும் அடக்கப் பட்டவர்களாகவும் இருந்து வந்த நிலையில் பெண்களின் பிரச்சினைகள் சமூகத்தின் பிரச்சினையாகிறது. இதனால் பெண்ணியம், பெண் விடுதலை பற்றிப் பேசப்பட்டது. பெண்களின் உரிமை, சம அந்தஸ்து என்பவற்றை மையமாகக் கொண்டு சர்வதேச மட்டத்தில் பெண்ணிய மாநாடுகள், கருத்தரங்குகள் நடைபெற்றன. இதன் விளைவாக மார்ச் 8இல் சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்பட்டது. இதன் காரணமாக சமூகத்தில் பெண் பார்க்கப்பட்ட முறைமை சற்று மாற்றமடைந்து செல்வதைக் காணலாம். சமூகத்தில் இன்று கல்வி, தொழில் வாய்ப்பு என்பவற்றில் பெண்கள் கணிசமான பங்கு வகிக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் இலக்கிய படைப்பு முயற்சியில் பெண்களின் பங்கு போதாமல் இருந்தது. 1970க்குப் பின்னர் ஈழத்து இலக்கியப் படைப்பு முயற்சியில் பெண் எழுத்தாளர்கள் பலர் தோன்றுவதைக் காணலாம்.

ஆண் படைப்பாளிகள் சமூகத்தைப் பார்க்கும் முறையும் பெண்கள் சமூகத்தைப் பார்க்கும் முறையும் வேறுபட்டதா? ஆண் படைப்பாளிகள் பெண்களைப் படைக்கின்ற முறையும் பெண் படைப்பாளிகள் பெண்களைப் படைக்கும் முறையும் வேறுபட்டதா? பெண் படைப்பாளிகளால் பெண்களின் பிரச்சினைகளை, உணர்வுகளை வெளிப்படுத்த முடிகிறதா? இன்றைய பெண்களின் யதார்த்த நிலையை பெண் படைப்பாளிகளால் சொல்ல முடிகிறதா? என்பதை நோக்க வேண்டும்.

ஆரம்பகால பெண் எழுத்தாளர்களில் கவிதா, குந்தவை, குறமகள், பவானி ஆழ்வாப்பிள்ளை, பத்மாசோமகாந்தன், யோகா பாலச் சந்திரன், அன்னலஷ்மி ராசதுரை, ந. பாலேஸ்வரி போன்றவர்கள் முக்கியமானவர்களாக இனம் காணப்பட்டனர். இவர்களின் படைப்புக்களில் மனித உறவுகள், சாதி, சீதனம் என்பனவே கருப்பொருளாக அமைந்தன.

எழுபதுகளில் பெண் எழுத்தாளர் பலரது படைப்புக்களில் பெண்ணிலை வாதம், தேசிய இனப்பிரச்சினை என்பவற்றை கதைகளின் மையப்பொருள் நோக்குவதை அவதானிக்கலாம். கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, தாமரைச்செல்வி, தமிழ்ப்பிரியா, ஜனகமகள் சிவஞானம், அருண் விஜயராணி, ரூபராணி யோசப், றயீமா. ஓ. சித்திக், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், சந்திரா தியாகராஜா, ஆதிலட்சுமி சிவகுமார், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், மண்டைதீவு கலைச்செல்வி போன்றவர்கள் முக்கியமானவர்களாக இனம் காணப்படுபவர்கள். இவர்கள் புனை கதைகளில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியவர்கள் எனலாம்.

பிற்பட்ட தலைமுறையில் தாட்சாயனி, பாலரஞ்சனி சர்மா, சிவானி, சாரங்கா, குமுதினி, மாதுமை, ஹெக்கிராவை சஹானா போன்றவர்கள் முக்கியமானவர்கள். சமுதாயத்தில் நிலவும் பிரச்சினைகளைச் சித்திரித்தல், புலம்பெயர்வதால் ஏற்படும் பிரச்சினைகள், அடக்கு முறைகள், அத்துமீறிய சுரண்டல்கள், குடும்ப அமைப்பில் ஏற்படும் சிதைவுகள், தன்னம்பிக்கை உடைய பெண் பாத்திரங்களின் நிலைகள் என்பவை இவர்களின் கதைகளின் மையக்கருவாக அமைந்துள்ளதைக் காணலாம்.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஆரம்பகால எழுத்தாளர்களுள் தனக்கென ஒரு தனி அடையாளத்தைக் கொண்டவராக குந்தவை காணப்பட்டார். குந்தவை பன்முகப் பார்வை கொண்ட ஆளுமை படைத்தவர். 1963ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குள் புகுந்த காலத்திலே இருந்து பல்கலைக்கழக வெளியீடுகளில் தனது சிறுகதைகளை வெளியிட்டுள்ளார். தினகரனில் இவரது பல சிறுகதைகள் வெளிவந்தன. பனை, தாய்மையின் துடிப்பு, அடிச்சுவடு, முட்டாய்க்காரன், காதல் எனும் கோயிலினிலே போன்ற சிறுகதைகள் தினகரனில் வெளிவந்தன. யாழ் இளம் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவருடைய சிறுகதைக்கு ஆறுதல் பரிசு கிடைத்தது.

1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். தமிழகத்தின் சஞ்சிகையான கணையாழியில் இவர் கதைகளை எழுதி வந்தார். யோகம் இருக்கிறது, இணக்கம், பெயர்வு என்பன கணையாழியில் வெளிவந்தன. கனவு சஞ்சிகையில் வல்லைவெளி சிறுகதை வெளிவந்தது.

சரிநிகர், அலை, சத்தி, மல்லிகை, மூன்றாவது மனிதன் ஆகிய தமிழக, ஈழத்து சஞ்சிகைகளிலும் சிறுகதைகள் எழுதியுள்ளார். இவற்றில் புழக்கம், தன்மானம், மீட்சி, நாடும் நம் மக்களும் போன்ற சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன. சொல்லமாட்டாளா? என்ற சிறுகதை ஜீவநதி கலை இலக்கிய இரு திங்கள் சஞ்சிகையில் வெளிவந்தது. 2002ஆம் ஆண்டு தமிழகத்தின் மித்ர பதிப்பகத்தினால் இவரது பதின்மூன்று சிறுகதைகளை உள்ளடக்கிய யோகம் இருக்கிறது என்ற சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டது. 2002ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான சிரித்திரன் சுந்தர் விருது குந்தவையின் இத்தொகுதிக்கு வழங்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு குந்தவைக்கு கௌரவ ஆளுனர் விருது வழங்கிக் கௌரவித்தது. பெருந்தொகையான கதை எழுதாவிட்டாலும் கனதியாக பெறுமதிமிக்க சில கதைகளை எழுதியுள்ளார்.

குந்தவையின் சிறுகதைகளில் வாழ்க்கைப் போராட்டம், மனிதநேயம், யுத்தசூழலும் மனித அவலங்களும், தமிழர்கள் எதிர்கொள்ளும் இடர்கள், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஊழல்கள் என்பன மையக் கருவாக அமைவதைக் காணலாம்.

பெயர்வு என்ற சிறுகதையின் ஊடாக யுத்த அனர்த்தங்கள், அவற்றிலிருந்து உயிரைக் காப்பதற்காக எல்லாவற்றையும் இழந்து இடம்பெயர்வது, மக்கள் அனுபவித்த அவலங்கள் காட்டப்படுகின்றது. தமது ,சொத்துக்கள் இழப்பு, உறவுகளின் இழப்பு என்பவற்றை எல்லாம் இக் கதையின் ஊடாகக் காட்டுகின்றார். பெற்ற குழந்தையை ஆற்றில் தவறவிட்ட தாயின் கதறலும் தம் குழந்தைகளை நினைத்து ஏங்கும் தாய்மாரின் மனச்சுமைகளும் காட்டப்படுகின்றது.

மன அதிர்வுகளின் எதிரொலிகள்தான் கலைஞனின் படைப்புகளாக வெளிவருகின்றன. மனித இன்னல்களையும் அவலங்களையும், உண்மைகளையும் யதார்த்தமாக உயிர்த்துடிப்புடன் படைக்கும் படைப்புகளே உயிர்ப்பான படைப்பாக நிலைநிற்க முடியும். குந்தவையினது சிறுகதைகளை நோக்கும் போது அவர் தனது காலகட்ட சமூகத்தைத் தனது படைப்புக்களிலே பிரதிபலித்துள்ளார் என்றே கூறலாம்.

கோகிலா மகேந்திரன் ஆரம்பத்தில் செல்வி கோகிலாதேவி சிவசுப்பிரமணியம் ஆக இருந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் பயின்றவர். பின்னர் சுகயீனத்தால் இவர் விஞ்ஞானப் பட்டதாரியாகவே வெளியேற முடிந்தது. இவர் பன்முகப் பார்வை கொண்டவர். நாவல், சிறுகதை, நாடகம் எனப் பல துறைகளில் இலக்கியங்களைப் படைத்துள்ளார். துயிலும் ஒரு நாள் கலையும், தூவானம் கவனம் ஆகிய இரு நாவல்களையும், மனித சொரூபங்கள், முரண்பாடுகளின் அறுவடை, பிரசவங்கள், முகங்களும் மூடிகளும், வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும், விஞ்ஞானக் கதைகள் என்ற அறிவியல் நூலையும், கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு, குயில்கள் ஆகிய நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். கடந்த கால் நூற்றாண்டு கரலமாக கோகிலா மகேந்திரன் எழுதி வருகின்றார். இவர் காலத்திற்கேற்ப கருப்பொருள்களை மாற்றிச் செல்வதைக் காணலாம். இவரது கதைகளில் ஒவ்வொரு கால கட்டத்திலும் படிமுறை வளர்ச்சியைக் காணலாம்.

செல்வி கோகிலாதேவி சிவசுப்பிரமணியம் ஆக இருந்த காலத்தில் கதைகளின் கருப் பொருளாக காதல் பிரச்சினைகளையே மையப்படுத்தி எழுதியுள்ளார். திருமதி கோகிலா மகேந்திரன் ஆன பொழுது அவரது கதைகளில் வளர்ச்சிப் போக்கினைக் காண முடிகின்றது. சாதி, சீதனப் பிரச்சினைகள், பசிப்பிணி, ஏற்றத்தாழ்வு என்பவற்றை மையப்படுத்தி கதைகளை எழுதியுள்ளார். பெண்கள் பற்றியும், உளவியல் சிந்தனைகள் பற்றியும் இவரது கதைகள் அதிகம் பேசுவதைக் காணலாம். உளவியல் துறையில் நீண்ட காலமாக அனுபவமும் ஆர்வமும் உடையவராக இருந்தார். 1993இல் சாந்தியகத்தில் உளவளத் துணையாளர் பயிற்சி பெற்றவர். பின்னர் உளவள ஆலோசகராகவும் இருந்தார். இவரது சிறுகதைகள் பலவற்றில் சீர்மிய உளவியல் கருத்துகள் தெளிவாக அமைகின்றன. நெருஞ்சி, உயர்ந்து செல்லும் சீரழிவுமானி, சர்ப்ப மரணம், கூறானது மனம், தலையீடு, மனதையே கழுவி போன்ற கதைகள் உளவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தும் அறிவியல் சார்ந்த கதைகள் எனக்குறிப்பிடலாம். கதை சொல்லும் முறை, கதையினூடாக உளவியல் சிந்தனைகளைச் சொல்லுதல்,மன உணர்வுகள், அதற்கான தீர்வுகளைக் கூறுவதன் வாயிலாக கதைகள் உயர்ந்த மேம்பாடு உடையனவாக அமைகின்றன. இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் உளவியல் ரீதியாகப்

பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஓர் ஆலோசகராக ஆசிரியர் இக்கதைகளில் விளங்குகிறார். உளவியல் சிந்தனைகளை ஆராய்கின்ற ஆய்வாளர்களுக்கு இக்கதைகள் அடிப்படையாக அமையும்.

இவரது கதைகளில் அறிவியல் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. விஞ்ஞான உண்மைகளைக் கதை வடிவில் சொல்லலாம் என்பதை கோகிலா மகேந்திரனின் விஞ்ஞானக்கதைகள் நிரூபிக்கின்றன. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் விஞ்ஞானக் கதைகளை முதல் முதலில் கதைகளில் தந்தவர் என்ற சிறப்புப் பெறுகின்றார். நாட்டைக் காத்த குழிவாடி, இலவச பற்சிகிச்சை, புதிய வீடு, உரேக்கா, வந்தது மின் வான் வெளியில், பறவைகள் பலவிதம் என்ற கதைகள் குறிப்பிடத்தக்கன. மேலும் இவற்றை விட சிறுகதைகள் சிலவற்றில் - தலையீடு, பெண்பனை, புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல் என்பவற்றில் - விஞ்ஞானக் கருத்துகளைத் தருகின்றார். இவற்றில் விலங்கியல், தாவரவியல், சூழலியல் அறிவு நன்கு வெளிப்படுகின்றது.

சர்வதேச மட்டத்தில் பெண்ணியல் சிந்தனைகள் பற்றிய ஆய்வுகள் பல்வேறு கோணங்களில் நடந்தும் நடைபெற்றும் வருகின்றன. பெண்பனை, மனதையே கழுவி என்ற கதைகளில் பெண்களின் பிரச்சினைகளை மிக நிதானத்தோடு நின்று பேசுகின்றார். மனதையே கழுவி என்ற தொடரே உள்ளத்தை ஈர்க்கின்றது. பெண்களின் மன உணர்வுகள் அதிர்வுகளை யதார்த்தமாகச் சொல்கின்றார். அதற்குரிய தீர்வு முறைகளை உளவியல் நோக்கில் குறிப்பிடுகின்றார். மனித நேயத்துடன் பெண்கள் பிரச்சினைகளை அணுகுகின்றார். இவரின் படைப்புகளில் ஆத்மார்த்தமான துடிப்பு இருப்பதை என்னால் தரிசிக்க முடிகின்றது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ராஜேஸ்வரி தனது கணவருடன் 1970இல் இங்கிலாந்துக்குப் புலம் பெயர்ந்தார். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எழுதுபவர். ஒருகோடை விடுமுறை, தில்லையாற்றங் கரையில், அவனும் சில வருடங்களும், வசந்தம் வந்து போய் விட்டது, பனி பெய்யும் இரவுகள், உலகமெங்கும் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரையில் என ஏழு நாவல்களையும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, நோர்வே, நெதர்லாந்து போன்ற நாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகளில் இவரது கதைகள் வெளிவந்தன. ராஜேஸ்வரி திரைப்படம், வீடியோப்படங்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். இலங்கை அகதிகளின் குடியேற்றம் பற்றிய கதையைக் கொண்டு இவர் தயாரித்த திரைப்படம் 1986இல் வெளிவந்தது. மேலும் "த பிரைவேட் பிளேஸ்" என்ற திரைப்படம் 1988இல் வெளி வந்தது.

இவரது சிறுகதைகளில் அம்மா என்றொரு பெண், அரைகுறை அடிமைகள், நாளைக்கு இன்னொருத்தன், இலையுதிர் காலத்தின் ஒரு மாலை நேரம், ஒரு அகதி, என் வீடும் தாய் மண்ணும் என்பன குறிப்பிடத்தக்கன.

அம்மா ஒரு அகதி என்ற கதையில் பிள்ளைகள் எல்லோரும் லண்டன், கனடா, ஜேர்மனி என ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கின்றனர். ஒவ்வொரு பிள்ளைகளின் நாடுகளுக்கும் சென்ற அவர் இறுதியில் மகள் இருக்கும் லண்டனுக்குச் செல்கின்றாள். மகள் வேலைக்குச் சென்று விடுவாள். தாய் தனிமையாக வீட்டில் இருக்கும்போது யோசனையால் வருத்தம் வருகிறது. வைத்தியர் வீட்டில்

தனியாக இருக்க விடவேண்டாம் என்கிறார். இறுதியில் தாய் காரில் அடிபட்டு இறந்து விடுகிறாள். பிள்ளைகள் இருந்தும் என்ன பலன்? கடைசிக் காலத்தில் அம்மா நிம்மதியாக இருக்க ஒரு இடம் இல்லை எனக் கூறுவதன் வாயிலாக புலம்பெயர் வாழ்வின் அவலத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்து மக்கள் மற்றைய இடங்களில் (மட்டக்களப்பு, மன்னார், மலையகம், வவுனியா) வாழும் மக்களை தாழ்த்தித்தான் பார்ப்பது வழக்கம் என்பதை ராஜேஸ்வரி கதைகளில் காணலாம். அவரது சாதி உணர்வு பற்றிய வடக்கத்தி மாப்பிள்ளை என்ற கதையில் யாழ்ப்பாணத்து வெள்ளாள சாதியைச் சேர்ந்த பெண் இந்திய பிராமணனைக் காதலிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக் கூறுகின்றார். இக் கதையினூடாக சாதி வெறியை ஆசிரியர் பேசுவதைக் காணலாம்.

பெண்களைப் பற்றி பெண் எழுத்தாளர்கள் எழுதாவிட்டால் யார் யதார்த்தமாக எழுதுவார்கள்? என்று கேள்வி எழுப்புமிவர், ஆண்களும் பெண்களும் ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் இரு மாடுகளுக்குச் சமம். அதில் ஒரு மாட்டை ஏன் ஊமையாகப் பார்க்க வேணும்? ஆண்களும் பெண்களும் எதிர்காலச் சமுதாயத்தைப் படைப்பதில் சரிசமபங்கு எடுப்பவர்கள். அதில் ஒருத்தரின் ஸ்தானம் மட்டும் ஏன் உயர்ந்திருக்கின்றது என்று கேள்வி எழுப்புகின்றார். பழைய இலக்கியங்கள் எல்லாம் ஆண்களால் எழுதப்பட்டவை. அவர்கள் தங்களுக்குச் சாதக மானவற்றையே எழுதினார்கள். பெண்களை இரண்டாம் தர பிரஜையாகப் பார்த்தனர் என இராஜேஸ்வரி குறிப்பிடுகின்றார். பெண் எழுத்தாளர்கள் பெண்களைப் பற்றி எழுதும் போதே அனுபவித்தவற்றையும் கண்டவற்றையும் யதார்த்தமாகச் சொல்ல முடியும் என்பதே இராஜேஸ்வரியின் வாதமாகும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் பெண்களின் தொகை அதிகரிக்கின்றது. அங்கும் பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். அகதி வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள், பெண்கள் தனிமையாக வாழ்வது, அன்னியப்படுத்தல், அன்னியர்களுடன் வாழும் நிலைமயில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல் எனப் பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்றனர். புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் தமிழ் கலாசாரத்தையும் மரபுகளையும் காப்பாற்ற வேண்டியவள் பெண் என்பது அடிக்கடி போதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் பெண்களுக்கு பல சவால்களும் உளவியல் பிரச்சினைகளும் தோன்றுகின்றன என்பதை இராஜேஸ்வரி தனது கதைகளினூடாகக் குறிப்பிடுகின்றார்.

ஈழத்துப் புனைகதை வரலாற்றில் தாமரைச் செல்வியின் பங்கும் குறிப்பிடத்தக்கது. சுமைகள், தாகம், வீதியெல்லாம் தோரணங்கள், பச்சை வயல் கனவு, விண்ணில் அல்ல விடிவெள்ளி, வேள்வித்தீ போன்ற நாவல்களை எழுதியுள்ளார். மழைக்கால இரவு, அழுவதற்கு நேரமில்லை, வன்னியாச்சி போன்ற சிறுகதைத் தொகுதிகளும் இவரது படைப்புகளாகும்.

தேசிய சாகித்திய பரிசு, வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருது, வடக்கு கிழக்கு ஆளுநர் விருதுகளைப் பெற்றவர். அகில இலங்கை மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பல முதற் பரிசுகளைப் பெற்றவர்.

இலக்கியம் என்பது மக்கள் இலக்கியமாக இருக்க வேண்டும். மக்கள் வாழ்நிலை பற்றி மக்களுக்கு சொல்வது. அவ்வகையில் போர்க்காலத்தின் சூழல், அவற்றினால் ஏற்படும் அழிவுகள், மரண அவலங்கள் என்பவற்றை தாமரைச்செல்வி தனது கதைகளின் ஊடாகச் சொல்கின்றார். இவரது படைப்புக்கள் பெரும்பாலும் சமகாலப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாகவே அமைகின்றன. வலிகாமம் இடப்பெயர்வினால் ஏற்பட்ட விளைவுகளை உள்வாங்கியதாக ஒரு மழைக்கால இரவு அமைகின்றது. அவள் ஒரு சம்பவம், எங்கேயும் எப்போதும், சாம்பல் மேடு ஆகிய சிறுகதைகள் சமகால வாழ்வியலைப் பேசுகின்றன. "வன்னியாச்சி" என்ற சிறுகதைத் தொகுதியிலும் நடைமுறைப் பிரச்சினைகள், ஆனையிறவை மையமாகக் கொண்ட வாழ்வியல் பேசப்படுகின்றது. பார்வை, சுவர், வன்னியாச்சி, முகமற்றவர்கள், இன்னொரு பக்கம், தூரத்து மேகங்கள் என்பவற்றில் மனித அவலங்கள் பேசப்படுகின்றது. "சில நிமிட மௌனம்" என்ற சிறுகதையில் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் துன்பங்களை பாத்திரங்கள் உரையாடுவதன் வாயிலாக ஆசிரியர் காட்டுகிறார்.

சபாரத்தினம் பிரேமினி என்ற பெயரைக் கொண்ட தாட்சாயனி 1992ஆம் ஆண்டிலிருந்து எழுதி வருகிறார். புதிய தலைமுறை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகின்றார். பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே எழுதத் தொடங்கிய அவர் அறுபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களும் பெற்றுள்ளார்.

தாட்சாயனி சமூகத்தை உற்றுநோக்கி அச் சமூகத்தில் காணப்படும் சோக உணர்வுகளையும் வாழ்வியல் அம்சங்களையும் பிரச்சினைகளையும் துல்லியமாக கதைகளினூடாகக் காட்டுகின்றார். பிஞ்சு மனம், அந்தப் பத்து நிமிடங்கள், ஒரு புல்லாங்குழல் ஊமையாகின்றது, இளவேனில் மீண்டும் வரும், சலனம், அவரும் இவரும், அவள் கண்ணகி இல்லை என்ற சிறுகதைகள் முக்கியமானவையாக அமைகின்றன.

பிஞ்சுமனம் என்ற சிறுகதை ஒரு சிறுவன் தனது ஆசிரியர் மேல் காட்டும் உன்னதமான அன்பையும் நம்பிக்கையையும் காட்டுகின்றது. அந்த ஆசிரியர் இடமாற்றம் காரணமாகப் பிரிந்து செல்கின்றார் என்றவுடன் அவன் உளரீதியாகப் பாதிப்படைவதை அவதானித்த அந்த ஆசிரியர் தனது இடமாற்றத்தைக் கைவிடுகின்றார். பிள்ளையின் மனநிலை பாதிக்கப்படக்கூடாது என்பதில் ஆசிரியர் அக்கறையாக இருந்ததை இக்கதை காட்டுகின்றது.

கண்ணீர்ப்பூக்கள் என்ற கதையூடாக மக்களின் வாழ்க்கையின் அவலத்தை, உறவுகள் பிரிந்து காணாமல் போவதைக் காட்டி உறவுகள் மீண்டும் சந்திக்க முடியுமென்ற நம்பிக்கையில் கதை முடிகின்றது. யதார்த்த வாழ்க்கையை இதனூடாகச் சொல்கின்றார்.

புதுமைப்பெண் எப்படி இருக்கிறாள் என்பதை "அவள் கண்ணகி இல்லை" என்ற சிறுகதையினூடாகச் சொல்கிறார். வெளிநாட்டில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வாழும் ஒருவன் தனது தாய் தந்தையின் விருப்பத்திற்காக இங்கு ஒரு பெண்ணை கல்யாணம் பேசி லண்டன் கொண்டு செல்கிறான். லண்டனில் உண்மையைச் சொல்கிறான். செவ்வந்தி தனது வாழ்க்கையின் முடிவையே மாற்றி விடுகின்றாள். அவளின் உணர்வுகள் தாட்சாயனியால் காட்டப்படுகின்றது. இங்கு பெண் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றவளாகவும் அதற்கு முடிவினை எடுப்பவளாகவும் காட்டப்படுகின்றாள்.

அவரும் இவரும் என்ற சிறுகதையில் இரு பெண்களின் வாழ்வியலைச் சித்திரிக்கின்றார். ஒருத்தி காதலித்தவனுடன் ஓடிப் போய் வாழ்க்கை நடாத்துவதையும், மற்றவள் விரும்பியவரைச்

சேராது தனித்து வாழ்வதையும், இருவரும் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதையும் ஆசிரியர் காட்டுகின்றார். பெண்கள் எப்படி இருக்கின்றார்கள்? அவர்களின் உணர்வுகள் எப்படி இருக்கின்றன? என்பதை யதார்த்தமாகச் சொல்கின்றார்.

பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களை முன்வைத்தவர்களுள் ஒருவராக பவானி ஆழ்வாப்பிள்ளை அமைகின்றார். பவானியின் சிறுகதைகள் பலவற்றில் குடும்ப உறவுநிலை காதல் உறவுகள் என்பன மரபுநிலைக்கு முற்றிலும் மாறுபட்ட தன்மையில் நோக்கப்படுவதைக் காணலாம்.

பெண்ணியம் மனிதநேயத்திற்குப் புதிய பொலிவும் அர்த்தமும் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் குறமகளின் கதைகள் அமைந்துள்ளன. அநீதிகளை எடுத்துக்காட்டி அவற்றை நியாயப்படுத்துவதோடு யாழ்ப்பாணத்துப் பெண்களின் பலவகையான வாழ்க்கைக் கோலங்களைத் தனது கதைகளில் எடுத்துக் காட்டுகின்றார்.

ஈழத்துப் பெண்கள் வாழ்வியலில் உயர்கல்வி வாய்ப்பு அதிகரித்தமை, விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கம், பெண்ணிலைவாதச் சிந்தனைகள் என்பன இலக்கிய செல்நெறியில் மாற்றத்தை உண்டாக்கின.

பெண்கள் கவிதைத் துறையிலும் தமது பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். பெண்கள் தமது நிலைப்பாடு பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டதும் கவிதை வளர்ச்சியடையக் காரணமாயிற்று. மைத்ரேயி, ஔவை, சிவரமணி, சங்கரி, கஸ்தூரி, வானதி போன்றவர்களை கவிதைத் துறையில் சில பதிவுகளை ஏற்படுத்தியவர்கள் என்று குறிப்பிடலாம். சொல்லாத சேதிகள் என்ற கவிதைத் தொகுதி பெண்ணியல் சார்ந்த கவிதைத் தொகுப்பாக வெளிவந்தது. போர், போர்ச்சூழல், புலப்பெயர்வு, இடப்பெயர்வு என்பவற்றால் பெண்ணிற்கு ஏற்படும் அல்லல்கள், பண்பாடு, குடும்பம், சாதியம், இயக்கம் போன்றவற்றின் பெயரால் பெண் என்பவள் மீது தொடுக்கும் வன்முறை, அதிகாரம் என்பனவற்றை மையப்படுத்தி எழுதப்பட்டதே சொல்லாத சேதிகள் கவித் தொகுதியாகும். மரணத்தையும், வாழ்வையும் எதிர் நீச்சலிட்ட பெண்களின் செய்திகள் சொல்லும் கவிதைகளாக இவை அமைந்தன. ஈழத்துப் பெண் படைப்பாளிகள் புதிய அனுபவங்களை இக்கவிதைத் தொகுப்பில் தருகின்றனர்.

ஈழத்துப் பெண் கவிஞர்களால் வெளியிடப்பட்ட "உயிர்வெளி" என்ற கவிதைத் தொகுப்பும் குறிப்பிடத்தக்கது. காதல் உணர்வுக்கு உட்பட்ட பெண்ணின் உணர்வுகள் பெண்ணின் படைப்பாக வெளிவருகின்றது. போராட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை மையப்படுத்திச் சிலர் கவிதைகளை இயற்றினர். போர்க்களத்தில் இறங்கியவர்களும் தமது மனநிலைகளைக் கவிதைகளாகத் தரமுயன்றனர். கஸ்தூரி, வானதி போன்ற கவிஞர்களின் கவிதைகளில் இப்பதிவுகளைக் காணலாம். பெண்களின் பிரச்சினைகளை கவிதையில் விரிவாகக் குறிப்பிடக் கூடியதாக இருக்கின்றது. ஈழத்துப் பெண் கவிஞர்கள் பெண்களின் பிரச்சினைகளை புதிய நோக்கில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒட்டு மொத்தமாக நோக்கின், ஈழத்துப் பெண் படைப்பாளிகள் தத்தம் காலச் சூழலுக்கும், நோக்கு நிலைகளுக்கும் ஏற்பத் தமது படைப்புக்களை முன்வைத்திருப்பதை விளங்கிக் கொள்ளலாம்.

# கற்றல் - கற்பித்தலை இலகுபடுத்தும் கல்வித் தொழிநுட்பம்



திரு. பா. தனபாலன்,
B.A.,PGDE (Merit),Dip.in.Psy., M.Phil (Ed)
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்),
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.



சமூகம் எளிமையான நிலையிலிருந்து சிக்கலான நிலைமைக்குச் செல்லத் தொடங்கியது முதல் கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள், கல்வி பற்றிய கோட்பாடுகள் பல பரிமாணங்களாக விரிவடைந்தன. பாடரீதியான, கோட்பாட்டு ரீதியான, உளவியல் ரீதியான, சமூகவியல் ரீதியான, விஞ்ஞான தகவல் தொழிநுட்ப ரீதியான முன்னேற்றங்கள் காரணமாக கல்வியில் கல்வித் தொழிநுட்பத்தின் செல்வாக்கு வளர்ச்சியடையத் தொடங்கியது.

கேட்கின்றேன் – மறந்து விடுகின்றேன்
பார்க்கின்றேன் – ஞாபகமிருக்கின்றது
செய்கின்றேன் – புரிந்து கொள்கின்றேன்
கண்டுபிடிக்கின்றேன் – அகமகிழ்கின்றேன்

என்ற கற்றல் தொடர்பான சீன முதுமொழியை உயிர்ப்பிப்பவை கற்றல் சாதனங்களாக உள்ளன. கற்றல் - கற்பித்தலை இலகுபடுத்தி சுவாரஸ்யமாக, மகிழ்ச்சியாக செய்வதற்கு கல்வித் தொழிநுட்ப சாதனங்கள் தற்போது பேருதவி புரிகின்றன.

எரிக் ஆஷ்பி (Eric Ashby) என்ற கல்வியியல் அறிஞர் கல்வியின் விருத்தி தொடர்பான புரட்சிக்கட்டங்களாக பின்வரும் நான்கினைக் குறிப்பிடுகின்றார். பாடசாலைகளின் தோற்றம், எழுத்தறிவின் வளர்ச்சி, அச்சுக்கலையின் தோற்றம், மின்னணுவியலின் சாதனை என்பனவே அவையாகும். இவற்றுள் இறுதியானது கல்வித் தொழிநுட்பத்துடன் (Educational Technology) தொடர்பானது. இங்கு தொழிநுட்பம் என்பது திறன்கள், மனப்பாங்குகளைப் பெறுவதற்கான விஞ்ஞானம் எனப்படுகின்றது. Technology என்ற கிரேக்க வழிச் சொல் 'Technic' திறன் என்பது 'Logia' விஞ்ஞானம் அல்லது கற்கை என்பதுடன் இணைந்து பொருள் தருகின்றது.

**கல்வித்தொழிநுட்பமும் ஆசிரியரும்**

ஆசிரியர்களுடைய கற்பித்தலைக் கவர்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்குதலிலும், இலகுவாக்குவதிலும் கல்வித் தொழிநுட்ப சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றை முன்னர் கற்பித்தல் துணைக் கருவிகள் (Teaching aids) என்பர். ஆனால் தற்போது இவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தரஉள்ளீடுகள் (Quality Inputs) என அழைக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் வெறும் செய்திகளையும், விபரங்களையும் எடுத்துக் கூறுவோராக இராமல் கல்வியின் உயர் நோக்கங்களை ஈடேறத் தங்களது திறமையையும் மாணவர்களுடைய ஆற்றல்களையும் பெருக்கும் தரஉள்ளீடுகளைப் பயன்படுத்துதல் இன்றைய நவீன 5E அணுகுமுறைக் கற்பித்தலுக்கு அவசியமாக உள்ளது. சிக்கனமாகவும், பயனுறுதியுடனும், திறமையாகவும் இச்சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பிக்க முடியும்.

வளர்ச்சியடைந்த கல்வித் தொழிநுட்பத்தின் பயனாக ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் கற்கின்றனர் என்ற நிலை மாறி பல்வேறு தொழிநுட்பக் கருவிகள் மூலம் ஆசிரியர் வழியே மாணவர்கள் கற்கின்றனர். இங்கு நவீன ஆசிரியரின் நிலைமாறும் வகிபாகம் ( Transformation) உறுதி பெறுவதுடன் அவர் ஒரு வளவாளராகவும் (Resource Person) செயற்படும் அடிப்படைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே தற்போதய ஆசிரியர்கள் தமது வாண்மையை உயர்த்த முதலில் நவீன கல்வித் தொழிநுட்பச் சாதனங்களை இயக்கவும், அவற்றிலிருந்து புதிய பாடத்துறைசார் ஆக்கங்களை உருவாக்குவதற்குமான தேர்ச்சிகளைப் பெற்றிருக்க வேண்டியது அவசிய மாகின்றது.

கல்வித் தொழிநுட்பத்தின் ஆரம்ப அடிப்படை கட்புல செவிப்புல சாதனங்கள், பலகைகள், வரைபடங்கள், அட்டவணைகள், மாதிரிகள், காட்டுருக்கள் ஆகிய சாதனங்களுடன் இணைந்தவையாக இருந்தன. தொடர் வளர்ச்சியாக வானொலி, தொலைக்காட்சி, எறிவைகள் என்பவற்றின் பாவனைகள் பெருகின. அதனைத் தொடர்ந்து கணனி வன்,மென் பொருட்கள், பல்தர எறியி, இன்ரநெட் என இலத்திரனியல் சாதனங்களின் பெருக்கத்தினால் கல்வித் தொழிநுட்பம் இன்று மிகவும் உன்னத நிலையை அடைந்துள்ளது. இது இன்று 5M ( Mechine, Materials, Media, Man, Methods) என்ற முறையில் கற்றல் கற்பித்தலை இலகுவாக்கப் பேருதவி புரிகின்றது.

**மாணவர்களின் கற்றலில் செல்வாக்கு**

கல்வித் தொழிநுட்பம் என்பது மாணவர்களின் கற்றல் செயல்ஒழுங்கை மேம்படுத்தி, செல்வாக்குச் செலுத்தும் செயற்றொகுதியாகவுள்ளது. இது கற்றலை அதிக வினைத் திறனாக்குவதுடன் மாணவர்களின் தொடர்பாடல் மற்றும் கண்டறியும் தேவைகளை மேம்படுத்துகின்றது. மாணவர்கள் சார்பாக இதன் பிரயோகங்களாவன,

- மாணவர்கள் குறித்த பாட விடயங்களை இலகுவாக, தெளிவாக விளங்கக்கூடியதாக இருக்கும்.
- மாணவரிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி அனுபவங்களை வளமுள்ளதாக்கும்.
- பிரச்சினை தீர்த்தல், காரணம் காணல், பிரதிபலித்தல், ஞாபகத்திற்குக் கொண்டுவரல் ஆகிய செயல் ஒழுங்குகளை நோக்கி மாணவர்களை வழிப்படுத்தும்.
- மாணவர்கள் சுயமாகக் கற்க வழிகாட்டும்.
- மாணவர்களின் கற்றல் அனுபவங்களைச் சமூகச் செயல்முறைகளுடன் இயைபாக்கும்.

ஆசிரியர் ஒரு மாணவருக்கு ஒரு விடயத்தை அறிமுகப்படுத்தும்போது உண்மை அனுபவத்தை அல்லது உண்மைக்கு கிட்டிய அனுபவத்தை வழங்க வேண்டுமானால் கல்வித் தொழிநுட்பமே இதற்குப் பேருதவியாகிறது. மேலும் திட்டமிடப்பட்ட கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்களைப் பொருத்தமான கற்பித்தல் முறை உதவியுடன், நேர முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள கல்வித் தொழிநுட்பசாதனங்கள் வாய்ப்புக்களை ஏற்படுத்தி மாணவர்களுடைய கற்றலில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நவீன கல்வித் தொழிநுட்பத்தின் பயனாக ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் கற்கின்றனர் என்ற நிலை மாறி பல்வேறு தொழிநுட்பப் பொருட்கள், கருவிகள், சாதனங்களில் இருந்து மாணாக்கர் ஆசிரியர் வழிகாட்டலில் கற்கின்றனர் என்ற நிலைமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவேதான் ஆசிரியர்கள் பாடத்திற்குப் பொருத்தமான கல்வித் தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுத்துக் கற்பிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும் என்ற நிலை இன்று வலியுறுத்தப்படுகின்றது. தற்போது கல்வித் தொழிநுட்ப சாதன ஊடகங்கள் பரந்த வகைப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளன. அவை

1. முன்வைப்பு ஊடகங்கள்
2. பொருள் ஊடகங்கள்
3. இடைத் தொடர்பு ஊடகங்கள்

இவ்வூடகங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டுமாயின் அவற்றின் விபரங்களை ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். எந்தெந்த ஊடகங்களை எந்தெந்தப் பாட அலகுகளுக்கு அல்லது பாடங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதை விரைவாக்க இது உதவும்.

**1. முன்வைப்பு ஊடகங்கள்**

வகை I: அசையாப்படங்களும் வரைபுகளும் - படங்கள், அட்டவணைகள், சித்திரங்கள், விளக்கப்படங்கள், வரைபடங்கள், சுவரொட்டிகள், அச்சடித்த ஊடகங்கள், புத்தகங்கள், கைநூல்கள், வழிகாட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், பக்கப்புரட்டிகள், பச்சைப்பலகை, வெண்பலகை, பிளனல் பலகை, அறிவித்தல், காட்சிப் பலகைகள், பொருட்காட்சிகள்.

வகை II அசையா எறிய ஊடகங்கள் - வழுக்கிகள், படச்சுருள் துண்டங்கள், மேந்தலை எறியி, ஒளிகசிவுத்தாள்கள், ஒளிபுகா ஊடகங்கள்.

வகை III செவிப்புல ஊடகங்கள் - ஒலி நாடாக்கள், ஒலி இறுவட்டுக்கள், வானொலி, கணனி

வகை IV கட்புல செவிப்புல ஊடகங்கள் - ஒலி ஒளிப்படத் தொகுதிகள், ஒளிப்படச்சுருள்கள், தொலைக்காட்சி

வகை V அசையும் படங்கள் - 16mm, 35mm, 8mm

**2. பொருள் ஊடகங்கள்**

வகை I - இயற்கைப் பொருட்கள், உண்மைப் பொருட்கள், மாதிரிகள்

வகை II - உருவாக்கப்பட்ட பொருட்களும் மாதிரிகளும், நகல்களும், உருக்களும்

**3. இடைத் தொடர்பு ஊடகங்கள்**

சுய கற்கை ஒளி, ஒலி நாடாக் கருவிகள், கணனி உதவியுடன் வழிகாட்டிக் கற்றல், பாவனை செய்தல், விளையாட்டுச் செயற்பாடுகளுடாகக் கற்றல்.

இவ்வாறாக கற்றலின் பல்வேறு வகை மாதிரிகளுக்கும் உயிர் கொடுக்கும் சாதனங்களாகக் கல்வித் தொழிநுட்ப சாதனங்கள் உள்ளன. எனினும் இவை எம் பாடசாலைகளில் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தும் மனப்பாங்கு ஆசிரியர்களிடையே வளரவில்லை. இதனை நீக்க முகாமைத்துவ, கலைத்திட்ட, வாண்மை ரீதியாக அவர்களில் மாற்றத்தை விரைவாக ஏற்படுத்த வேண்டியுள்ளது. பொதுவாக இலங்கைப் பாடசாலைகளில் அறுபது வீதத்திற்கு மேற்பட்டவை மின்சார வசதிகளைக் கொண்டவை எனக் கல்வியமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் அப்பாடசாலைகளில் வினைத்திறனாகக் கல்வித் தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்துகின்றார்களா என்ற வினாவுக்குப் பெரும்பாலான பாடசாலைகளில் இல்லை என்ற பதிலே யதார்த்தமாகவுள்ளது.

இங்கு ஒரு உதாரணத்திற்கு மேந்தலை எறியி (OHP) என்ற கல்வித் தொழிநுட்ப சாதனம் பற்றிய பயன்களை நோக்கும் போது அறிவுறுத்தல் ஊடகங்களில் மிகவும் உபயோகமானதாக இது உள்ளது. இது கரும்பலகைக்குப் பதிலாகச் சிறப்பாகப் பாவிக்கக் கூடியது. மிகுந்த பயனும் பல்வகை வல்லமையும் கொண்டது.

ஆசிரியர் தனது பின்புறத்தை மாணவர்களுக்குக் காட்டாமல் காட்சி, எழுத்து, படம், அட்டவணைகள் மூலம் கருத்து மாற்றங்களை இலகுவாக விளங்க வைக்க முடியும். இது வழுக்கியின் இயல்புகளையும் கொண்டது. இதன்மூலம்


- கட்புல அம்சங்களை ஒளிக்கசிவுத்தாள் ஊடாகத் திரைக்கு எறியலாம், பெரிதாக்கிய துலக்கமாக்கப்பட்ட தாள்களை முன்வைக்கலாம்.
- வெளிக் கொணர்கை அடுக்கிகள் ஊடாகப் படிப்படியான ஒழுங்கில் தகவல்களைத் தெரியப்படுத்தலாம் (குறிப்புக்கள், வரைபடங்கள், அட்டவணைகள், படங்கள்)
- ஆசிரியர் மாணவர்களுடன் முகத்திற்கு முகம் உரையாடலாம்.

**ஒளிக்கசிவுத் தாள் (Transparencies) பயன்படுத்தல்**


ஒரு தாளில் ஆகக்கூடியது ஆறு அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தாள் காட்சியும் ஒரு பிரதான பாடக்கருவிற்கு வரையறுக்கப்பட வேண்டும். ஆகக் கூடியது ஒருதாளில் பத்து வரிகளே எழுத வேண்டும். எழுத்துக்களை எழுதும்போது அளவு, அமைப்பு, இடைவெளி, தெளிவு என்பவை பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். மேலும் சிறப்பாக வடிவமைக்க பிரகாசமான நிறங்களைப் பிரயோகித்தல், எளிமையான கோட்டுச்சித்திரங்கள், போட்டோப்பிரதி எடுத்தல், புகைப்படப் பிரதி செய்தல், அடுக்கிகள் மூலமாக ஒரு முழுமையான, கவர்ச்சிகரமான கல்வித் தொழிநுட்ப சாதனமாக ஆசிரியர் மேந்தலை எறிவையைச் சிறப்பாகப் பயன்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்டவாறு எல்லா ஆசிரியர்களும் ஒவ்வொரு கல்வித் தொழிநுட்ப சாதனங்களைப் பற்றிய விபரங்களை அறிந்து வைத்திருப்பதுடன் அவற்றை இயக்குகின்ற ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்கின்ற போது அவற்றினூடாக மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிப்பது இலகுவாக இருக்கும். ஒருமுறை திட்டமிட்டால் போதும். தொடர்ந்து பயன்படுத்தலாம். இதனால் ஆசிரியர்களின் வேலைச்சுமை குறையும். மாணவர்களும் மகிழ்ச்சிகரமாகக் கற்பார்கள். கற்றல் விளைவுகள் அதிகரிக்கும். எனவே ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர் ஆகியோர் நவீன கல்வித் தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வைப் பன்மடங்கு விரிவாக்கவேண்டும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமானதாக உள்ளது.

# தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு விருத்தியில் உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு



திரு. சு. ஸ்ரீகுமரன்
Spl. Trd.(Commmerce), B.A.,Dip.in.Edu.,M.Ed.
ஆசிரியர்,
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



## அறிமுகம்

தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு இன்று பரந்த அளவில் பேசப்படுவதோடு சிக்கல் வாய்ந்ததாகவும் வெளிப்படுகின்றது. தலைமை வகித்தல், வழிநடத்தல், நெறிப்படுத்தல், வழிகாட்டியாக விளங்குதல் எனப் பல செயற்பாடுகளின் குறிப்பான பொருளுரைக்கும் சொல்லாக அது விளங்குகின்றது.

தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு பரந்த கருத்துடையதோடு உலகளாவிய ரீதியில் முகாமைச் செயற்பாட்டில் முக்கியத்துவம் மிக்க பாத்திரத்தை வகிக்கின்றது. இன்றைய உலகு வேகமான வளர்ச்சியையும், புதுப்புதுக் கண்டுபிடிப்புக்களின் வழியாக விரைவான மாற்றத்தையும் கண்டு நிற்கிறது. இந்த உலகச் சூழலில் எதிர்ப்படும் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு முன்னேற்றத்தை நோக்கி நடைபோடுவதென்பது முக்கியமானது.

குடும்பம் என்னும் நிறுவனத்திலிருந்து அரசாங்கம் வரை பல்வேறு அமைப்புக்கள் பரந்து காணப்படுகின்றன. சவால்களை எதிர்கொண்டு குறித்த இலக்கை நோக்கி முன்னேறுவதென்ற சவாலை இத்தகைய எல்லா அமைப்புக்களும் எதிர்கொள்கின்றன. அத்தகைய எதிர்கொள்ளலை வலிமையோடு மேற்கொண்டு வழிநடத்திச் செல்வது என்பதில் தலைமைத்துவம் பங்களிக்கின்றது.


ஒரு கப்பலை கரையிலிருந்து மறுகரைக்குக் கொண்டு சேர்ப்பது போல, பொறுப்புணர்வுடன் கூடிய உயர்ந்த பணியினை ஆற்ற வேண்டியவராக தலைமை தாங்குபவர் விளங்க வேண்டியது அவசியமாகும். பல்வேறு காரணிகளின் தாக்கங்களுக்கு முகம் கொடுத்து நிறுவனத்தின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான தீர்மானங்களை

மேற்கொள்வது தொடர்பில் நிகழ் காலம் பற்றிய தொடர்ச்சியான மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டிய பணி தலைமை தாங்குபவருக்கு உரியது என்று வலியுறுத்தப்படுகிறது.

**வரைவிலக்கணம்**

அவ்வகையில் தலைமைத்துவம் என்றால் ஒரு இலக்கினை அடைவதற்காக மனிதவளத்தை நெறிப்படுத்தும் ஒரு கருமமே என வரைவிலக்கணப்படுத்தலாம். அதாவது ஒருவர் ஒரு கருமத்தை எவ்வாறு ஆற்ற விரும்புகிறாரோ அவ்வாறே நிறுவனத்தில் இருக்கும் ஏனையோரையும் தொழிற்பட வைக்கும் ஓர் முகாமைக் கருமமே தலைமைத்துவம் ஆகும் எனக் கூறப்படுகிறது. நிறுவனத்திலுள்ள அங்கத்தவர்களை வழிநடத்தி, அவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெற்று, அதனூடாக நிறுவனத்தின் நோக்கத்தை அடைய முற்படும் செயற்பாடு என்றும் "தலைமைத்துவம்" என்பதை வரையறுக்கலாம். தலைமைத்துவம் பற்றிய கருத்தினை முதன் முதலில் வெளியிட்டவர் மரியம் ஈசா (Marium Eshaw) என்ற உளவியலாளராவார். அதே போல சிக்மண்ட் பிராய்ட், மக்டுகல், மாஸ்லோ போன்றோரது உளவியல் கருத்துக்களும் தலைமைத்துவம் என்ற எண்ணகருவை வளர்த்துச் செல்வதற்கு உதவியுள்ளன.

ஒரு தலைமைத்துவமானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுடன் தொடர்பு படுவதாகக் காணப்படும். தலைமைத்துவத்திற்குள் தலைவர், பின்பற்றுவோர், குறிப்பான சூழ்நிலை ஆகிய மூன்று சக்திவாய்ந்த நிலைமைகள் உள்ளடங்கியுள்ளன. (Donhellriegel, John, W., 1982) தலைமைத்துவம் என்பது வெற்றிடத்தில் இருந்து உருவாவதில்லை. அது குழுநிலை ஒழுங்கமைப்புக்கூடாக மட்டுமே உருவாக்கம் கொள்கின்றது. வினைத்திறனுள்ள தலைமைத்துவமென்பது பின்பற்றுவோரின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவதே எனக் கூறப்படுகின்றது.




தலைமைத்துவ செயலொழுங்கின் அடிப்படைக் காரணிகளை மேலுள்ள வரைபடம் சுட்டுகின்றது. இவ்வகையில் தலைவரானவர் சில வலுக்களையும், வளங்களையும் கொண்டிருக்கிறார். அவற்றைத் துணையாகக் கொண்டு சூழ்நிலைக்கேற்பவும் பணியாளர்களின் தன்மைக்கேற்பவும் தனது தலைமைத்துவ நடத்தைக் கோலத்தினை மாற்றியமைத்து நிறுவனக் குறிக்கோள்களை அடையத்தக்க விதத்தில் தனது விசையைப் பயன்படுத்துகின்றார்.

**தலைமைத்துவம் பற்றிய உளவியல், சமூகவியல் கருத்துக்கள்**

முகாமைத்துவச் செயற்பாட்டின் ஒரு பிரதான அம்சமாக விளங்கும் தலைமைத்துவம் என்ற எண்ணக்கருவின் விருத்தியில் உளவியலின் செல்வாக்கினை நாம் இனங் காணலாம்.

தலைமைத்துவம் என்பது ஒருவர் கொண்டிருக்கும் வலுவினால் தீர்மானிக்கப் படுவதாக உள்ளது. தலைமை வகிப்பவர் கூடிய வலுவுடையவராக இருந்து தன்னுடைய உதவியாளர்கள் மீதோ, பின்பற்றுவோர் மீதோ, ஊழியர்கள் மீதோ செல்வாக்கைச் செலுத்துகிறார். இதன் மூலமாக அவர்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். இதில் தனிநபர் செல்வாக்கு என்ற முதன்மைக்குள் உளவியல் சார்ந்த அம்சங்களே வெளிப்படுகின்றன.

- உளவியலாளரான மக்டுகல் ஆதிக்கம் - பணிவு என்ற இயல்பூக்கங்களைச் சார்ந்து தலைமைத்துவம் காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார். மக்டுகல் முன்வைக்கும் 14 வகையான இயல்பூக்கங்களில் ஆக்கவூக்கம், தன்னெடுப்பூக்கம், பணிவூக்கம் முதலியன தலைமைத்துவத்தை வளர்த்துச் செல்வதில் அதிக பங்களிப்பனவாகக் கருதலாம். குறிக்கோள்களுக்கு அமைய இயல்பூக்கங்களை வழிப்படுத்தும் போது தலைமைத்துவப் பண்புகளை ஒருவர் அடையக் கூடியதாக இருக்கும்.

அதே போன்று ஆளுமை தொடர்பான சிக்மன்ட் பிராய்டின் கருத்துக்களும் தலைமைத்துவ எண்ணக்கரு விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒருவனுடைய ஆளுமை வளர்ச்சியில் உடலியல் காரணிகளும், சூழலியல் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. நரம்புத் தொகுதி, குருதியோட்டம் முதலிய உடலமைப்பு, உளத்திறன் மற்றும் மனவெழுச்சியைப் பாதிக்கின்றன. அதேவேளை வீட்டுச் சூழ்நிலை, சமூக பொருளாதார நிலை, குடும்ப உறுதி முதலிய காரணிகளும் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஒருவனிடம் பிறப்பிலிருந்து பல்வேறு கட்டங்களூடாக வளர்த்துச் செல்லப்படும் ஆளுமைப் பண்புக் கூறுகள் தலைமைத்துவப் பண்புகளை ஒருவனிடத்தில் வளர்க்கின்றன எனலாம். ஒரு தந்தையின் நிலையில் வைத்து தலைவனைப் பிறர் பின்பற்றுகின்றனர் என சிக்மன்ட் பிராய்ட் குறிப்பிடுகிறார். தந்தை முறை அணுகுமுறையில் தலைவர் நிறுவனத்தின் தந்தையாகவும், நிறுவனப் பணியாளர்கள் குழந்தைகளாகவும் இருக்க, அன்பும் கண்டிப்பும் மிக்கவராக இருந்து குடும்ப அமைப்புப்போல அவர் வழிநடத்திச் செல்வார். சிறிய நிறுவனங்களுக்கு இத்தகைய தலைமை பொருத்தமானதாகும்.

ஆனால் ஆளுமைக் கோட்பாட்டை மறுத்துரைக்கும் ஹெலன் ஜெனிங்ஸ் என்பவர் குறிப்பிட்டதொரு ஆளுமைப் பண்பையோ இணைந்த பல ஆளுமைப் பண்புகளையோ ஒருவன் பெற்றிருப்பதால் தலைமையை அடைவதில்லை. ஒரு நிலைமையில் எல்லா உறுப்பினர் களிடமிருந்தும் பெறப்படும் சமூகத் தொடர்புகளிலிருந்தே தலைமை எழுகின்றது எனக் குறிப்பிடு கின்றார்.

தலைமைத்துவம் தொடர்பாக சமூகவியல் நோக்கிலும் கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. அவை பெரும்பாலும் தலைமை தாங்குபவர் தொடர்பிலேயே கவனம் செலுத்துகின்றன. ஒரு தலைவனிடம் சிறப்பான ஆளுமைப் பண்புகள் இணைந்து சமநிலையில் காணப்படுவதாகவும், இச்சமநிலை அவனைத் தலைமை தாங்குவதற்குத் தகுதியுள்ள வனாக்குகிறது என்றும் சமநிலைக் கோட்பாடு (Balance theory of leadership) குறிப்பிடு கின்றது.

பின்பற்றுவோரிடத்தில் காணப்படாத சில பண்புகளை ஒருவன் அதிகளவில் பெற்றிருப்பது தலைமைப் பதவியை அவன் அடைவதற்குக் காரணமாகின்றது என Uniqueness theory of leadership வலியுறுத்துகின்றது.

ஒருவனிடம் காணப்படும் உளச்சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டிக் குவித்துச் செயற்படும் ஆற்றல் மிகுதியாகக் காணப்படுவதால் அவன் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கிறான் என்று,Theory of focalization of psychic energy என்ற கோட்பாடு விளக்க முற்படுகின்றது.

ஒரு குழு பல சவால்களை எதிர்கொள்கிறது. புதிது புதிதாகத் தோன்றும் அத்தகைய சவால்களை எதிர்கொண்டு எளிதில் தீர்க்க வல்லவனே தலைமையைப் பொறுப்பேற்கிறான் என்று Insight theory கூறுகின்றது.

இவ்வாறு பல்வேறு கோட்பாடுகள் தலைமைத்துவம் தொடர்பிலும் தலைமை தாங்குபவர் தொடர்பிலும் முன்வைக்கப்பட்ட போதும் முகாமைத்துவ அடிப்படையில் வலு முக்கியப்படுத்தப் படுகின்றது. தனிப்பட்டவர்களது அல்லது குழுக்களது நடத்தையிலோ எண்ணங்களிலோ மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றலே வலுவாகும். ஜோன் பிறெஞ் (John French) மற்றும் பேட்ரம் றவன் (Bertram ravan) ஆகியோர் ஐந்து வகையான வலுக்களை முன்வைக்கின்றனர்.

1. வெகுமதியளிக்கும் வலு (Reward Power)
2. கட்டாயப்படுத்தும் வலு (Coercive Power)
3. நிபுணத்துவ வலு (Expert Power)
4. மதிப்பளிக்கும் வலு (Referent Power)
5. சட்டப்படியான வலு (Legitimete Power)

வெகுமதியளிக்கும் வலு என்பது ஒருவரால் இடப்படும் கட்டளைகளைச் செயற்படுத்துபவர் களுக்கு வெகுமதியினை அளிக்கும் திறனைக் குறிக்கின்றது. இது தலைவரின் கீழ் பணியாற்று வோருக்குத் திருப்தியை ஏற்படுத்தி, அதன்மூலம் பணியில் வினைத்திறனுடனும் விருப்புடனும் செயலாற்று வதற்கு ஊக்கப்படுத்தும் செயற்பாடாக அமையும்.

கட்டாயப்படுத்தும் வலு என்பது வெகுமதியளிக்கும் வலுவுக்கு நேரெதிரானது. இதனைத் தண்டனையளிக்கும் வலு என்றும் கூறலாம். தலைவரானவர் தனக்குக் கீழ் பணிபுரிவோரை அவர்கள் விடும் தவறுகளின் பொருட்டுத் தண்டிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதைக் குறிக்கும். இதன் மூலமாகத் தலைமை வகிப்பவர் தனது பணியாளர்களிடமிருந்து ஒழுங்குக் கிரமமான வேலையைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

சட்டப்படியான வலு என்பது பிறர்மீது செல்வாக்குச் செலுத்தும் பொருட்டு வரையறைக்கு உட்பட்ட அதிகாரத்தினை ஒருவர் கொண்டிருப்பதைக் குறிக்கும். தலைவரானவர் சட்ட ரீதியாகத் தனக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தித் தனக்குக்கீழ் பணியாற்றுவோரில் செல்வாக்குச் செலுத்துவதும், அவர்களது செயற்பாடுகளை இலக்கு நோக்கி நகர்த்துவதும் இவ்வாறானதே.

மதிப்பளிக்கும் வலு என்பது ஒருவர் மீது மற்றொருவரோ ஒரு குழுவினரோ கொண்டிருக்கும் மதிப்பின் காரணமாக, ஒருவர் மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதைக் குறிக்கும். ஒருவர் கொண்டுள்ள துறைசார்ந்த அறிவையும், திறனையும் நிபுணத்துவ ஆற்றலாக இனங்காண முடியும். அத்தகைய ஆற்றலைப் பெற்ற ஒருவர் அதன் காரணமாகத் தான் கொண்டிருக்கும் நிபுணத்துவ வலுவைப் பயன்படுத்தி மற்றவர்களைச் செல்வாக்குக்கு உட்படுத்த முடியும். அந்த வலுவுக்கு மதிப்பளித்து பணியாளர்களும் தொழிற்படுவர்.

தலைவரானவர் தான் வழி நடத்துபவர்களைக் காட்டிலும் கூடுதலான வலுவினைக் கொண்டிருப்பதுடன், அத்தகைய வலுவின் மூலம் தனது இலக்கை நிறைவேற்றும் வகையில் வழி நடத்துபவர்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துபவராகிறார்.

போட்டிச் சூழல் ஒன்றில் சுழலும் காற்றுக்கு மத்தியில் நடந்து வெற்றியின் விளிம்பை அடைபவரே சிறந்த தலைவராகிறார் என மைக்கல் போட்டர் (Michael Porter) என்பவர் குறிப்பிடுகின்றார். போட்டிகளும் சவால்களும் நிறைந்த சூழலில் உயர்ந்த விளைவுகளை நோக்கிய செயற்பாட்டில் புதுமைத் தன்மையை வளர்த்தெடுப்பது தலைமைத்துவத்தின் சவால் நிறைந்த பணியாகும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

**தலைமைத்துவப் பண்புகள்**

அவ்வகையில் தலைமைத்துவம் வகிப்பவர் தனது கருமத்தை ஆற்றுவதற்குச் சிறப்பான பண்புகளைக் கொண்டிருப்பது அவசியமானதென வலியுறுத்தப்படுகின்றது. உள்ளார்ந்த ரீதியில் ஒரு தலைவனிடம் பின்வரும் பண்புகள் காணப்பட வேண்டும்.

1. மற்றையோர் நிலைக்குள்ளாதல் அல்லது ஒத்துணர்வுடனிருத்தல் (Empathy)
2. சுய விழிப்புணர்வுடனிருத்தல் (Self awareness)
3. நோக்க உணர்வுடையதாயிருத்தல் (Objectivity)

இது தவிர விசேட பண்புகள் பலவற்றையும் தலைமை வகிப்பவர் கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

1. மனித நடத்தையைச் சரியாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல்
2. பேச்சு வன்மையைக் கொண்டிருத்தல்
3. சிறந்ததும் நியாயமானதுமான தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல்
4. விரைவான தீர்மானம் எடுக்கும் ஆற்றலுடையவராயிருத்தல்
5. பொறுப்பேற்கவும், வகை கூறவும் கூடியவராயிருத்தல்
6. விமர்சனங்களை எதிர்கொண்டு, அதற்கேற்பத் தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுபவராக இருத்தல்
7. நடுநிலைத் தன்மையும், நேர்மைத் தன்மையும் கொண்டிருத்தல்
8. நிறுவனத்தின் இலக்கினை அடையும் பொருட்டு கடினமாக உழைப்பவராக இருத்தல்
9. ஒவ்வொரு ஊழியரையும் நன்கறிந்து அவர்களுக்குப் பொருத்தமான முறையில் வேலைப்பகிர்வை மேற்கொள்ளுதல்
10. இலக்குகளைத் திட்டமிட்டு நெறிப்படுத்துபவராக இருத்தல்

அல்பேட் (Albert) என்ற அறிஞர் சிறந்த ஒரு தலைவனிடம் இருக்க வேண்டிய பண்புகளாக ஆதிக்க மனப்போக்கு, துணிந்து துரிதமாகச் செயலாற்றும் திறன், சொல்வன்மை, எடுத்த செயலை முடிக்கும் திறன், பிறருடன் சேர்ந்து செயலாற்றும் திறன், பிறரைச் செயற்படுத்தும் திறன், அடக்கம், அளவற்ற சக்தி ஆகியவற்றை இனங் காண்கிறார்.

தலைமைத்துவம் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறந்த தலைமைத்துவத்துக்கு ஏதுவான காரணிகளைக் கண்டறிவதிலேயே அனேக ஆய்வுகள் முனைப்புக் காட்டின. அத்தகைய ஆய்வுகளின் முடிவுகள் சில மேலே சுட்டப்பட்டுள்ளன.

**தலைமைத்துவம் தொடர்பான அணுகுமுறைகள்**

எனினும், தலைமைத்துவம் தொடர்பான முக்கியமான அணுகுமுறைகளை மூன்று பிரதான கோட்பாடுகளில் இனங்காண முடியும். அவை:

1. பண்புக் கோட்பாடு (Trait Theory)
2. நடத்தைக் கோட்பாடு (Behaviourial Theory)
3. நெகிழத்தக்க கோட்பாடு (Contingency Theory)

**பண்புக் கோட்பாடு**

தலைமைத்துவம் தொடர்பான பழமை வாய்ந்த கோட்பாடாக பண்புக் கோட்பாடு அமைகின்றது. சிறந்த தலைவனிடம் காணப்படக்கூடிய பண்புகளை அடையாளம் காண்பதில் இக்கோட்பாடு கவனஞ் செலுத்தியது. இக்கோட்பாட்டை முன்வைத்தவர்கள் தமது ஆய்வுப் பெறுபேறுகளாகச் சிறந்த தலைவர்களிடம் காணப்படும் பண்புகளை இனங்காட்ட முற்பட்டனர்.

பலநூற்றாண்டுகளாக தத்துவவியலாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் இடையே விவாதப் பொருளாக அமைந்த விடயம் மகா மனிதன் கோட்பாடாகும் (Great Man theory). மகா அலெக்சாண்டர், இராணி எலிசபெத், வின்ஸ்டன் சேர்ச்சில் எனத் தனிப்பட்டவர்களை உலகின் உயர்ந்த மனிதர்களாக மாறுவதற்கு உந்தித்தள்ளிய காரணிகள் எவை என்பதைக் கண்டறிவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். சிலரது முக்கியத்துவத்துக்கு அவர்கள் சரியான நேரத்தில், சரியான இடத்தில் அமர்ந்து கொண்டமை காரணமாகுமா எனவும் மகாமனிதக் கோட்பாட்டாளர்கள் ஆராய்ந்தனர். பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் சூழ்ந்த மகாமனிதன் கொள்கையைக் கவனத்தில் கொண்டே தலைமைத்துவத்துக்கான பண்புக் கொள்கை உருவாகியது எனலாம்.

தலைமைத்துவம் தொடர்பான ஆரம்பக் கற்கையானது தலைவர்களின் தனிப்பட்ட சிறப்பியல்புகளை இனங்காண்பதாக நெறிப்படுத்தப்பட்டிருந்தது. பண்புக் கோட்பாடானது உடல், சமூக, ஆளுமை மற்றும் தனிப்பட்ட குணாதிசயங்கள் என்பன தலைவர்களிடம் இயற்கையாகவே அமைந்து காணப்படுவதாக நம்பியது. அவ்வகையில் தலைவர்களிடம் காணப்படும் பொதுவான பண்புகளாகப் பின்வருவனவற்றை இனங்கண்டது.

**1. உடல்சார் பண்புகள் (Physical Traits)**

இதற்குள் தலைவர்களிடம் காணப்படும் பண்புகளாக ஆறு அடிக்கு மேற்பட்ட உயரம், 175 இறாத்தலுக்கு மேற்பட்ட நிறை, உடற் கவர்ச்சி, தசைப்பிடிப்பான உடற்கட்டு, தாங்கும் சக்தி,

உயிர்ப்புமிக்க பலம் என்பன அடங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவராக வருபவரிடம் இத்தகைய உடல் சார்ந்த தகுதிகள் காணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

**2. சமூகம் சார் பண்புகள் (Social traits)**

இதில் மற்றவர் நிலையில் நின்று நோக்குதல், மனவெழுச்சியில் முதிர்ச்சி நிலை, கௌரவ அந்தஸ்தை அடைந்திருத்தல், புத்தி நுட்பம், பொறுமை போன்ற பண்புகள் உள்ளடக்கப்படும்.

**3. ஆளுமைப் பண்புகள் (Personality traits)**

ஆளுமைப் பண்புகளாக தன்நம்பிக்கை, ஆதிக்க மனப்பான்மை, அதிகாரம் செய்யும் திறன், சுயமதிப்பு, உறுதி குலையாமை போன்றன சுட்டப்படுகின்றன.

**4. தனிப்பட்ட பண்புகள் (Personal traits)**

இதில் பேச்சுத் திறன், நடுநிலை, புலமைத்துவ ஆற்றல், சாதிக்கும் விருப்பு, கடின உழைப்புத்திறன், பொறுப்பேற்கும் தன்மை முதலியன உள்ளடங்குகின்றன.

பண்புசார் அணுகுமுறையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படத் தக்கவையெனினும் தலைமைத்துவச் செயன்முறையை பயனுள்ள வகையில் விளங்கிக் கொள்வதற்கு அதிகம் உதவவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. உண்மையில் தலைவர்களையோ தலைவரல்லாதவர்களையோ வேறுபடுத்திப் பார்ப்பதற்கு ஆய்வாளர்களுக்கு தலைமைத்துவப் பண்புகளெனச் சுட்டிக் காட்டப்பட்ட அம்சங்கள் சரியான முறையில் உதவவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. (Stogdil, R., 1948)

பண்புக் கூறுகள் மட்டும் சிறந்த தலைமைத்துவத்துக்குக் காரணமில்லை என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டது. ஏனெனில் குறித்த பண்புகளை உடைய பலரும் கூட சிறந்த தலைவர்களாக விளங்கவில்லை என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, பண்புக் கூறுகள் தவிர்ந்த வேறு எக் காரணிகள் சிறந்த தலைமைத்துவத்துக்குப் பங்களிக்கின்றன என்பது தொடர்பாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இக்கோட்பாடு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

**நடத்தைக் கோட்பாடு**

பண்புக் கோட்பாட்டில் பண்புகளை இனங்காண்பதிலும், இனங்காணப்பட்ட பண்புகளின் பொருத்தத் தன்மையை வெளிப்படுத்துவதிலும் காணப்பட்ட திருப்தியீனம் நடத்தைக் கோட்பாட்டுக்கு வழிவகுத்தது எனலாம். அடிப்படையில் இதுவும் ஓர் பாரம்பரிய அணுகு முறையாகவே கொள்ளப்படுகின்றது. திறமைமிக்க தலைவர்களின் நடத்தையை இனங்காண்பதாக நடத்தைக் கோட்பாடு காணப்படுகின்றது.

இதற்கெனப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சிறந்த தலைவர்கள் பலரும் தமது நடத்தை மூலம் தனது பணியாளர்கள் அல்லது பின்பற்றுவோரில் செல்வாக்குச் செலுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது சிறந்த தலைமைத்துவத்துக்கு அவர்களின் நடத்தையே காரணம் என்பதை வெளிப்படுத்தியது.

1930களில் தலைவர்களின் நடத்தைகள் தொடர்பாக ஆய்வுகள் மெற்கொள்ளப்பட்ட போதும் 1940களின் இறுதியில் இரு பிரதானமான ஆய்வுகள் தெளிவானவையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அவை,

1. ஓகியோ மாநில பல்கலைக்கழக ஆய்வு
2. மிச்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வு

ஓகியோ மாநில பல்கலைக்கழக (Ohio State University) ஆய்வானது சிறுவர்களின் தலைமைத்துவம் தொடர்பில் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் மூன்று வகையான தலைமைத்துவப் பாங்குகள் அடையாளம் காணப்பட்டன.

1. ஒத்துழைப்புத் தலைமைத்துவம் Supportive Leadership
2. பங்குபற்றும் தலைமைத்துவம் Participative Leadership
3. கருவிசார் தலைமைத்துவம் Instrumental Leadership

ஒத்துழைப்புத் தலைமைத்துவமானது பணியாளர்களின் தேவைகள், அவர்களது பாதுகாப்பு, கௌரவம், நல்வாழ்வு முதலிய நலன் பேணும் அம்சங்களைக் கவனத்தில் கொள்கிறது. ஒத்துழைக்கும் தலைவர்கள் பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான வேலைக் கவிநிலையையும் நட்பார்ந்த நிலைமையையும் ஏற்படுத்துகிறார். இத்தகைய தலைவர்களின் நடத்தைகளை ஓகியோ ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர். அவை:

1. பணியாளர்கள் நன்கு பணியாற்றும் போது பாராட்டுக்களை வெளிப்படுத்துவர்
2. பணியாளர்களை அதிக வேலை செய்யுமாறு வற்புறுத்த மாட்டார்கள்
3. பணியாளர்களின் சொந்தப் பிரச்சினைகளுக்கு உதவுவர்
4. இலகுவாக அணுகப்படக்கூடியவர்களாகவும், நட்புடன் பழகுபவர்களாகவும் காணப்படுவர்
5. பணியாளர்கள் சிறப்பாகப் பணியாற்றுமிடத்து வெகுமதிகளை வழங்கி ஊக்குவிப்பர்

இத்தகைய தலைமைத்துவத்தில் பணியாளர்களின் ஈடுபாடும், வரவொழுங்கும் காணப்பட்டது. ஆனால் உயர் தொழில் அடைவும், எதிர்பார்த்த இலக்கை அடையும் வினையாற்றுகையும் குறைவாகக் காணப்பட்டது. தலைவருக்கும் பணியாளருக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்புக் காணப்பட்டதால் பணியாளர்களின் ஊக்கல் அதிகரித்ததுடன் உற்பத்தித் திறன்
மிக்க ஒரு வேலைக் குழுவையும் உருவாக்க முடிந்தமை சிறந்த நேர்விளைவெனச் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் இத்தகைய தலைவர்கள் பலமான திருப்தியான வினையாற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதும் பின்னடைவாகக் கூறப்பட்டது.

பங்குபற்றும் தலைமைத்துவம் என்பது தலைவருக்கும் பணியாளருக்கும் இடையே தகவல்கள், அதிகாரம், செல்வாக்கு என்பவற்றைப் பரிமாற்றம் செய்வதை விபரிக்கின்றது. இங்கு தலைவர் பணியாளர்களைச் சமமாக மதிப்பதுடன் தீர்மானம் எடுக்கும் போது அவர்களது செல்வாக்கையும் பயன்படுத்துபவராக உள்ளார். பங்குபற்றும் தலைவர்களின் நடத்தைகளாகக் கீழ்வருவன இனங் காணப்பட்டுள்ளன.

1. அவர்கள் தமது பணியாளர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வார்கள்
2. மாற்றங்களை அங்கீகரிப்பார்கள்
3. குற்றங் காணும் பண்பு இழிவானதாகக் காணப்படுவார்கள்
4. தொடர்புடைய தரப்புக்களின் அபிப்பிராயங்கள், கருத்துக்கள், உணர்வுகளைக் கவனத்தில் கொள்வார்கள்
5. வேலை தொடர்பில் தாமதமான மதிப்பீட்டினை எடுப்பார்கள்

இத்தகைய தலைவர்கள் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பணியாளர்களின் ஈடுபாட்டை உருவாக்க முயற்சி செய்வார்கள். பணியாளர்களின் சுதந்திரமான சிந்தனை, ஆக்கத்திறன், ஆலோசனை கூறுதல் என்பவற்றை ஊக்குவிப்பார்கள். ஆனால் பணியாளர்களிடம் தேர்ச்சி மிக்க சிறப்பான அறிவோ, விசேட புலமைத்துவமோ காணப்படமாட்டாது. எனவே சிறப்பான தீர்மானம் எடுப்பதில் அவர்களது பங்களிப்பு பிரச்சினைக்கு உரியது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

கருவிசார் தலைமைத்துவம் என்பது நிறுவன இலக்குகளுக்கு ஏற்ப திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், ஒன்றிணைத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதைக் குறிக்கும். ஓகியோ ஆய்வாளர்கள் இத்தகைய தலைவர்களின் நடத்தைகளாகக் கீழ்வருவனவற்றை இனங்கண்டுள்ளனர்.

1. குறித்த இலக்குகளுக்கு அமைவாகப் பணியாளர்களை நியமிப்பர்
2. தொழில் வினையாற்றுகையில் ஒரு தரத்தை உருவாக்குவர்
3. வேலைக்கான அறிவுறுத்தல்களைப் பணியாளருக்கு வழங்குவர்
4. செய்யவேண்டிய வேலைக்கான கடமைப்பட்டியலை ஏற்படுத்தியிருப்பர்
5. பணி ஒழுங்கை வரவேற்பவராகக் காணப்படுவர்


கருவிசார் தலைமைத்துவம் என்பது முன்னர் கூறப்பட்ட இரு தலைமைத்துவப் பாங்கினதும் கலவை என்று கூறப்படுகிறது.

மிச்சிக்கன் பல்கலைக்கழக ஆய்வு மூலம் ஊழியர் மையம் மற்றும் உற்பத்தி மையமான இருவேறு தலைமைத்துவ நடத்தைகள் இனங்காணப்பட்டுள்ளன. ஊழியரை மையப்படுத்திய தலைவர்கள் உயர்ந்த உற்பத்தியினையும், உயர்வான வேலைத் திருப்தியையும் பெறுவாரெனவும், இவர்களே சிறந்த தலைமைத்துவம் வகிப்பவர்கள் என்றும் இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

றொபேட் தன்னன் வோம் (Robert Tannenbaum) மற்றும் வாரன் ஸ்மித் (Warren Schmidt) ஆகியோர் ஒரு முகாமையாளர் தலைமைத்துவ நடத்தையைத் தெரிவு செய்யும் முன்பாக மூன்று விசைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றனர். அவை:

1. முகாமையாளரிடம் காணப்படும் விசைகள்
2. பணியாளர்களிடம் காணப்படும் விசைகள்
3. சூழலில் காணப்படும் விசைகள்

இவைகளுக்கிடையில் காணப்படும் விசைகளைக் கீழுள்ள வரைபடம் விளக்குகிறது.




இங்கு முகாமையாளரின் அதிகார அளவு குறைவடையும் போது பணியாளரின் தீர்மானம் எடுக்கும் சுதந்திரம் அதிகரித்துச் செல்வதும், மறுதலையாக முகாமையாளரின் அதிகார அளவு அதிகரிக்கும் போது இத்தகைய சுதந்திரம் குறைவடைவதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

**நெகிழுத்தக்க கோட்பாடு**

பல்வேறு வகையான தலைமைத்துவப் பாங்குகள் அடையாளம் காணப்பட்ட போதும் இவையனைத்தும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளைத் தருவதில்லை. சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றமுறுவனவாகவும் இரண்டு சூழ்நிலைகளுக்கிடையில் வேறுபாடுடையன வாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனவே, குறித்த நிலைமை தொடர்பான காரணிகளைக் கருத்தில் கொண்டு தலைமைத்துவமானது வழி நடத்தப்பட வேண்டுமென்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது.

முதலாவது பயனுறுதி வாய்ந்த நெகிழத்தக்க மாதிரி பீட்லராலும் அவரது அணியினராலும் (Fiedler and his associates) முன்வைக்கப்பட்டது. இது பண்பு மற்றும் நடத்தைக் கோட்பாடு களிலிருந்து வேறுபட்டதாகக் காணப்பட்டது. ஒரு குழுவின் வினையாற்றுகையென்பது தலைவரின் ஊக்கப்படுத்தல் தொகுதி மற்றும் குறித்த சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் தலைவரின் ஆற்றல் என்பவற்றில் தங்கியுள்ளதாக இவர் குறிப்பிட்டுள்ளார். எனவே பயனுறுதி வாய்ந்த் தலைமைத்துவ மாதிரியென்பது சூழ்நிலையுடன் எவ்வாறு தொடர்புபடுத்தப்படுகிறது என்பதில் தங்கியுள்ள தெனலாம்.

ஒரு தலைமைப் பாங்கானது இருவகையான ஊக்கப்படுத்தல் கொண்டதென பீட்லர் கருதுகிறார். அவை,

1. தொடர்பு ஊக்கப்படுத்தப்பட்ட தலைவர் (Relationship motivated leader)
2. இலக்கு ஊக்கப்படுத்தப்பட்ட தலைவர் (Task Motivated leader)


தனது பணியாளர்களுடன் மனவெழுச்சி சார்ந்த தொடர்புகளுக்கு முக்கியத்துவம் தருபவராக தொடர்பூக்கத் தலைவர் காணப்படுவார். அதே வேளை இலக்கு ஊக்கத் தலைவரோ வேலைச்

செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் தருபவராக இருப்பார். சிறந்த தலைமைத்துவத்தில் மூன்று மாறிகள் செல்வாக்குச் செலுத்துவதாகவும் பீட்லர் கருதினார்.

1. தலைவர் - பணியாளர் உறவுகள் - leader - member relations
2. இலக்குக் கட்டமைப்பு - Task structure
3. தலைவரின் அதிகார நிலை - leader's position power

ஆனால் ஆய்வுகள் பீட்லரின் மாதிரியை நிரூபிப்பதிலும் வேறுபடுத்துவதிலும் வெற்றி பெறவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் தலைவரின் தலைமைத்துவ இயல்பு உயர்ந்த விளைதிறனுடையதாகக் காணப்படுவதும், மற்றைய சந்தர்ப்பங்களில் அவ்வாறு இல்லாதிருப்பதும் எப்படி என்பதற்கு பீட்லரின் மாதிரி போதிய விளக்கத்தைத் தரவில்லை எனலாம். எனினும் நெகிழத்தக்க கோட்பாட்டின் முதல் எத்தனமாக பீட்லரின் மாதிரியைக் கொள்ள முடியும்.

இவரைத் தொடர்ந்து கௌஸ் (House) என்பார் இலக்கு வழி மாதிரியொன்றை (Path goal modal) முன்வைத்தார். ஊக்கல் கொள்கைகளை அடிப்படையாக வைத்து அவர் இதனை முன்வைத்தார். அவர் தலைமைத்துவத்துக்கான ஒரே சிறந்த வழியைச் சுட்டிக் காட்டாது குறிப்பிட்ட சூழ்நிலைக்கும், பணியாளர்களின் தேவைக்கும் ஏற்ப தலைமைத்துவ இயல்புகளைப் பயன்படுத்துவதை வலியுறுத்தினார். வித்தியாசமான நிபந்தனைகளின் கீழ் செயற்படும் வேறுபட்ட தலைமைத்துவ இயல்புகளைச் சுட்டிக்காட்டுவதாக கௌஸின் இலக்கு வழி மாதிரி அமைகின்றது.



**முகாமையும் தலைமையும்**

பேராசிரியர் ஏபிரகாம் ஸலஸ்நிக்கியின் (Abraham Zaleznki) கருத்துப்படி முகாமையாளரும் தலைவரும் வேறுபாடானவர்கள். ஊக்கப்படுத்தல், சிந்தனை, செயற்பாடு ஆகிய விடயங்களில் அவர்களிடம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் தலைமைத்துவம் என்பது முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. அதேவேளை முகாமையாளர் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருப்பது அவசியமானதாகும். எனவே முகாமையும் தலைமையும் ஒன்றுடனொன்று தொடர்பானவையாகவும், அதேவேளை தெளிவான வேறுபாடுகளை வெளிக் காட்டுவனவாகவும் உள்ளதெனலாம்.

**தலைமைத்துவ முறைகள்**

பல்வேறு தலைமைத்துவ முறைகள் இனங்காணப்பட்டுள்ளன. சிலர் பிறப்பிலிருந்தே தலைவர்களாக உருவானவர்கள் என்று (Born leaders) கூறப்படுகிறது. வேறு சிலரோ பரம்பரைத் தொடர்ச்சியாக தலைமைத்துவத்தை அடைந்துள்ளனர். மன்னர்களின் உருவாக்கம் இவ்வாறானதாகும். வேறுசிலரோ தெரிவின் அடிப்படையில் மக்களால் சனநாயக ரீதியில் தெரிந்து எடுக்கப்படுகின்றனர். வேறு சிலரோ தாம் முன்னெடுக்கும் கொள்கைகளால் தலைவர்களாக வருகின்றனர். சிலர் தமது ஆளுமையாலும் செயற்திறனாலும் தலைவர்களாகின்றனர் (Charismatic leader). தொழிநுட்பத் தலைவர்கள் (Technical leaders) என்போர் தமது தொழில்நுட்ப அறிவாலும் திறனாலும் தலைமை வகிப்பவர்களாவர். தனது ஆளுமை, கவர்ச்சி காரணமாகச் சிலர் அபிமானத் தலைவர்கள் (Popularity leaders) ஆகின்றனர்.

அதேவேளை அதிகாரத் தலைவர்கள் (Autocrative leaders) தமது ஆதிக்க மனப்போக்கினால் தலைமை தாங்குபவர்களாவர். அதற்கு எதிராகக் குடியாட்சித் தலைவர்கள் (Democratic leaders) விளங்குகின்றனர். Kurt lewin மற்றும் Anderson ஆகியோர் குடியாட்சித் தலைமைத்துவமே சிறந்தது எனக் கூறியுள்ளனர்.

நிறுவனங்களைப் பொறுத்தவரை முறைசார் தலைவர்கள் (Formal leader), முறைசாராத் தலைவர்கள் என இரு பகுதியாகக் காணப்படுவர். நிறுவனத்தால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுபவர் முறைசார் தலைவராவார். ஆனால் முறைசாராத் தலைவரோ உத்தியோக பூர்வமாக நியமிக்கப்படாமல் தலைமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்பவராவார். இவர் குழுக்களால் முன்னிலைப்படுத்தப்படுபவராவார். இவரது செயற்பாடுகள் அங்கீகரிக்கப் படாதனவாகக் காணப்படும்.

தலைமைத்துவ இயல்புகளை வெளிப்படுத்தும் முகமாக மூவகைத் தலைமைத்துவத்தை Lewin என்பார் இனங்காண்கிறார். அவை:

1. அதிகாரமயத் தலைமைத்துவம்
2. ஜனநாயகத் தலைமைத்துவம்
3. கட்டுப்பாடற்ற தலைமைத்துவம்

அதேவேளை Huneryager மற்றும் Heckman என்பவர்கள் தலைமைத்துவத்தை 4 பிரிவுக்குள் அடக்குகின்றனர்.

1. சர்வாதிகாரத் தலைமைத்துவம்
2. எதேச்சாதிகாரத் தலைமைத்துவம்
3. ஜனநாயகத் தலைமைத்துவம்
4. கட்டுப்பாடற்ற தலைமைத்துவம்

Rensis likert என்பவர் நான்கு வகைத் தலைமைத்துவ இயல்புகளை இனங் காண்கிறார்.

1. சுரண்டல் தலைமைத்துவம்
2. இரங்கல் தலைமைத்துவம்
3. கலந்துரையாடல் தலைமைத்துவம்
4. பங்குபற்றும் தலைமைத்துவம்

சுரண்டல் தலைமைத்துவ இயல்புடையவர் பணியாளர்களில் எவ்வித அக்கறையும் கொள்ளாது நிறுவன இலக்கில் அக்கறை கொண்டிருப்பார். இரங்கல் தலைமைத்துவ இயல்புடையவர் அதிகாரத்தினால் ஊழியருக்கு உத்தரவிடும் இயல்புடையவராக காணப்படுவார். கலந்துரையாடல் தலைமைத்துவ இயல்புடையவர் பணியாளர்களின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்வார். பங்குபற்றும் தலைமைத்துவமானது ஊழியர்களின் ஈடுபாட்டுக்கு முன்னுரிமை கொடுப்பதாக அமையும்.

1960ல் தலைமை வகித்தல் தொடர்பாக டக்ளஸ் மைக்கிறகர் (Dauglas Mcgregor) முன்வைத்த X மற்றும் Y கோட்பாடுகள் முக்கியமானவை. X கோட்பாட்டில் தலைவன் கடும் போக்குடனிருப்பது வலியுறுத்தப்படுகிறது. ஊழியர்கள் போதுமான ஒத்துழைப்பை வழங்காத போது இக்கொள்கை அதிகாரம் பிரயோகிக்கப்படுவதை வலியுறுத்துகிறது. மறுபுறத்தில் Y கொள்கையானது ஊழியர்களின் நலன்களைக் கருத்தில் கொள்வதாக, தலைவன் மென்மைப் போக்குடனிருப்பது வலியுறுத்தப்படுகிறது.

இங்கிலாந்தின் கைத்தொழில் நிறுவனத்தில் 1965ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது ஆஸ்ரைட் கற்கை (Ashridge studies) எனப்படுகிறது. இது தலைமைத்துவ இயல்புகளை நான்காகப் பார்க்கிறது.

1. அறிவிக்கும் இயல்பு (tells style)
2. திணிக்கும் இயல்பு (Sells style)
3. கலந்தாலோசிக்கும் இயல்பு (Consultative style)
4. இணையும் இயல்பு (Joins style)

எந்தவொரு ஆலோசனையையும் பணியாளரிடமிருந்து பெறாமல் தானே தீர்மானமெடுத்து நடைமுறைப்படுத்துவது அறிவிக்கும் இயல்பாகும். தானே அதிகாரத்தை வைத்துச் செயற்படுத்துவது திணிக்கும் இயல்பாகும். பணியாளரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்படுத்துவது கலந்துரையாடும் இயல்பாகும். பணியாளருக்குப் பூரண சுதந்திரம் அளித்து அவர்களைச் செயற்பட வைக்கும் இயல்பு இணையும் இயல்பாகும்.

**முடிவுரை**

தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு என்பது மனிதர்களின் உளஞ் சார்ந்தே அதிகம் விவரிக்கின்றது. தனிமனிதனின் மேலெழுகைக்குக் காரணமான தலைமைத்துவப் பண்புகள் இயல்பூக்கம், ஆளுமை, நடத்தை போன்ற உளவியல் காரணிகளின் செல்வாக்கின் வழியாக எய்தப்படுபவை. எனவேதான் தலைமைத்துவம் என்ற எண்ணக்கருவின் விருத்தியில் உளவியலானது தாக்கம் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகிறது.

இன்று வரையான தலைமைத்துவ ஆய்வுகள் யாவும் தலைமைத்துவத்துக்கு இன்றியமையாத உளவியல் பரிமாணங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. எனவே உளவியல் கோட்பாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்டதாகவே தலைமைத்துவ எண்ணக்கரு காணப்படுவதோடு அதன் விரிவான ஆய்வுக்கும் உளவியலேஅடித்தளமாக அமைந்ததெனலாம்.

**உசாத்துணைகள்**



1. Hellriegel, Don., Slocum, John. W. (1982) *Management* (3rd ed.) Addison - Wesley publishing company, Canada, pp 512 - 633
2. ஜெயராமன், தேவராஜன் ந., (2000) முகாமைத்துவத்துக்கு ஓர் அறிமுகம், பவளரத்னா பதிப்பகம். கண்டி. பப. 149 - 159
3. தேவராஜா, க., (2004) முகாமைத்துவம், உயர்கல்விச் சேவை நிலையம், யாழ்ப்பாணம், பப. 87 - 97
4. சந்தானம், எஸ்., (1994) கல்வியும் சமூகமும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, பப. 103 - 110
5. முத்துலிங்கம், ச., (2002) கல்வியும் உளவியலும், லங்கா புத்தகசாலை, கொழும்பு, பப. 61 - 66
6. நடராசா, க., (.......) பாடசாலை முகாமைத்துவம், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை, பப. 46 - 48
7. சண்முகம், நி., (1997) தலைமைத்துவம் எதிர்கொள்ளும் சவால்களும் தந்திரோபாயச் சிந்தனையின் முக்கியத்துவமும், முகாமை நோக்கு (2), பப. 70 - 78
8. மகீதரன், ஆ., சிறிஸ்கந்தகுமார், எஸ்., (1997) முகாமையில் தலைமைத்துவத்தின் பங்கு, மேலது, பப. 18 - 23




**The Leader have some best behaviors :**

The Leader says "We"
The Leader on good -will
The Leader knows row to do
The Leader shows what is wrong
The Leader commands respects
The Leader inspires others
The Leader preserves natural resources
The Leader uses others advices

# நவீன தமிழ்க் கவிதைப் புலத்தில் ஈழத்துப் பெண் கவிஞர்கள்



திரு. சி. ரமேஷ்
ஆசிரியர்
மல்லாகம் மகா வித்தியாலயம்



பெண்ணின் நுண்ணுணர்வுத் தளத்தில் கட்டுருவாக்கம் பெறும் அன்பு, கருணை, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட இன்னோரன்ன அகநிகழ்வுகள், கவிதை அழகியல் சார்ந்து பெண் சொல்லாடலுக்கூடாக வெளிப்படும்போது, நவீன கவிதை பெண்ணுக்கேயான பிரத்தியேக மனப்படிமங்களை உள்வாங்கி பெண்மொழியைச் சாத்தியப்படுத்துகிறது. இவ்வகையில் நுட்பமான அந்தரங்க வெளிப்பாடுகளை மொழியசைவுடன் அதீத புனைவாக நடப்பியலுக்கேற்ப வாசகனுக்கு எடுத்துரைக்கும் ஈழத்துப் பெண் கவிதைகள் 1980களுக்குப் பின் அமைப்பாலும், அனுபவ வெளிப்பாட்டாலும், மொழி நடையாலும் மாற்றம் கண்டன. இம்மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களாக ஆயுதப் போராட்டம், தமிழ்த்தேசியத்தின் எழுச்சி, பெண்நிலை வாதச் சிந்தனைக்கூடாக ஏற்பட்ட விழிப்புணர்வு, ஊடக சுதந்திரம், கல்வித் தகைமைக்கூடான தொழில்சார் நிலையின் மீள் உருவாக்கம் போன்றவற்றைக் கூறலாம். இக்காலகட்டத்தில் வெளிவந்த பெண் விடுதலை, தாகம், தோழி, விளக்கு, செந்தழல், சுதந்திரப் பறவைகள், நங்கை, மருதாணி, நிவேதினி, பெண் போன்ற ஈழத்துப் பெண் சஞ்சிகைகளும், நமது குரல் (ஜேர்மனி), கண் (பிரான்ஸ்), சக்தி (நோர்வே) போன்ற புகலிட பெண்நிலைவாதச் சஞ்சிகைகளும் பெண்ணியக் கருத்துக்களை உள்வாங்கி வெளி வந்ததுடன் ஆளுமைமிக்க பெண்ணிலக்கியப் படைப்பாளிகளையும், ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தன.

1980களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்புக்களாக சொல்லாத சேதிகள் (1986), மறையாத மறுபாதி (1992), கனல் (1997), உயிர்வெளி (1999) எழுதாத உன் கவிதை (2001), வெளிப்படுத்தல் (2001), பெயல் மணக்கும் பொழுது (2007), மை, இசை பிழியப்பட்ட வீணை போன்றவற்றைக் கூறலாம். இத்

தொகுப்புக்களில் ஈழத்தில் முதன்முதலில் வெளிவந்த தொகுப்பாக "சொல்லாத சேதிகள்" காணப்படுகிறது. பெண்கள் ஆய்வு வட்டத்தால் வெளியிடப்பட்ட இச்சிறு தொகுதி பத்துப் பெண் கவிஞர்களின் இருபத்திநான்கு கவிதைகளை உள்ளடக்கியது. பெண்கள் தொடர்பான சிந்தனைகள் குறித்த ஆய்வை நவீன தமிழுலகு வேண்டி நின்ற காலத்தில் காத்திரமான கவிதை மொழிக்கூடாக பெண்ணிய உணர்வுகளைப் பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுத்திய தொகுப்பு இது எனலாம். புகலிடத்திலிருந்து வெளியான மறையாத மறுபாதி என்னும் தொகுப்பு பதினெண் பெண் கவிஞர்களின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்தது. பெண்களின் ஒடுக்கு முறைக்கெதிரான உணர்ச்சிக்குரலாய் எழுந்த இத்தொகுப்பு ஒருசில காத்திரமான கவிதைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழகத்தில் இருந்து முதன்முதலில் வெளிவந்த பெண் கவிஞர்களின் தொகுப்பாக "பறத்தல் அதன் சுதந்திரம்" காணப்படுகிறது. காவ்யாவால் வெளியிடப்பட்ட இத்தொகுப்பின் தொகுப்பாசிரியர் க்ருஷாங்கினி, உதவியாசிரியர் மாலதி மைத்ரி. மலின எழுத்துப் பிழைகளுடனும், ஆள்மாறாட்டக் கவிதைகளுடனும் (சிவரமணியின் "வையகத்தை வெற்றி கொள்ள" என்னும் கவிதை கவனக் குறைவால் சன்மார்க்காவின் கவிதை எனப் பிரசுரிக்கப்பட்டது) வெளிவந்த இத்தொகுப்பில் ஆழியாள், ஊர்வசி, ஔவை, சங்கரி, சன்மார்க்கா, சிவரமணி, சுமதிரூபன், செல்வி, ரஞ்சனி போன்றோரின் ஈழத்துக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

1990களின் பின் தனித்துவ அடையாளங்களுடனும், ஆளுமைகளுடனும் ஈழத்தில் வெளிவந்து என் பார்வைக்குக் கிடைத்த பெண் கவிஞர்களின் தொகுப்புக்களாக வானதியின் கவிதைகள் (1990), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), சிவரமணி கவிதைகள் (1993), தூயவளின் நிமிர்வு (1993), சுல்பிகாவின் விலங்கிடப்பட்ட மானிடம் (1995), உயிர்த்தெழல் (2001), செல்வி - சிவரமணி கவிதைகள் (1997), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப் பேச (2000), துவிதம் (2006), நாகபூசனி கருப்பையாவின் நெற்றிக்கண் (2001), தர்மினியின் உதயத்தை தேடி (2002),மைதிலியின் இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் (2003), மைத்ரேயியின் கல்லறை நெருஞ்சிகள் (2004), அனாரின் ஓவியம் வரையாத தூரிகை (2004), எனக்கு கவிதை முகம் (2007), அம்புலியின் மீண்டும் துடிக்கும் வசந்தம் (2004), ஆதிலட்சுமி சிவகுமாரின் என் கவிதை (2000), ஃபஹீமா ஜஹானின் ஒரு கடல் நீரூற்றி (2007), பெண்ணியாவின் என்கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை! (2006), றஞ்சனி கவிதைகள் (2005) போன்றவற்றைக் கூறலாம்.

தொகுப்புக்கள் வெளிவரா நிலையில் சிற்றிதழ்கள் ஊடாகவும், இணையத் தளங்கள் ஊடாகவும் அடையாளம் காணப்பட்டு தனி முத்திரை பதித்த கவிஞர்களாக பிரதீபா தில்லைநாதன், தான்யா, துர்க்கா, ராசு, கலா, ஆகர்ஷியா, ரி. உருத்திரா, வினோதினி, மலரா, தமிழ்நதி, றபீக்கா, உலகமங்கை, லரீனா. ஏ. ஹக், விஜயலட்சுமி சேகர் (சினேகா), தில்லை, ஜெயந்தி தளையசிங்கம், கற்பகம் யசோதரா, யாழினி (நிவேதா), கமலாவாசுகி போன்றோரைக் குறிப்பிடலாம்.

இக்காலப்பகுதியில் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இருந்து வெளிவந்த சிறு சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் பெண்களின் ஆக்கபூர்வமான கவிதைகளுக்கு அடித்தளமிட்டன. 1990களின் முற்கூற்றில் "திசை" வழியே அறிமுகமாகும் மைதிலி, கவிதை, உள்ளம், களம், சரிநிகர், சக்தி, காலச்சுவடு போன்ற சிற்றிதழ்களுக்கூடாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். மூன்றாவது மனிதன், சரிநிகர் ஆகிய சிறு சஞ்சிகைகள் பெண்ணிலக்கிய ஆக்க

கர்த்தாக்களின் பிரதான பிரசுர தளமாக இயங்கின. இவ்விரு இதழ்களுக்கூடாக சிறப்பாக அறியப்பட்டவர்களாக பெண்ணியா, ஒளவை, ஆழியாள், அனார், கலா, ∴பஹீமா ஜஹான் போன்றோர் விளங்குகின்றனர். இதனைத்தவிர ஒளவைக்கு தோழி, சக்தி, புதுசு, தூண்டில் போன்ற சிற்றேடுகள் பிரசுர களமாய் விளங்கியதைப் போன்று ஆழியாளுக்கு கணையாழி, உயிர்நிழல் முதலிய சிற்றிதழ்களும், பத்மநாப ஐயரின் இன்னொரு காலடி, யுகம் மாறுது போன்ற மலர்களும் பிரசுர களமாய் இயங்கின. பிரதீபா தில்லைநாதன், தான்யா, துர்க்கா, சுமதிரூபன் ஆகிய புலம்பெயர் படைப்பாளிகளுக்கு காலம், உயிர்நிழல், கண்ணில் தெரியுது வானம், அற்றம் ஆகிய இதழ்கள் களம் அமைத்துக் கொடுத்ததைப் போன்று ஈழத்துப் பெண் கவிதை சொல்லிகளின் பிரதான படைப்பியல் தளமாக மூன்றாவது மனிதன், சரிநிகர், யாத்ரா, வெளிச்சம், சுதந்திரப் பறவை, கலைமுகம், களம், ஞானம், கவிதை, ஜீவநதி போன்ற சிறு சஞ்சிகைகளும் வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, ஈழநாதம் போன்ற வாரப் பத்திரிகைகளும் களம் அமைத்துக் கொடுத்தன.

வன்னிநில வாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களை பெண் அல்லது பெண்ணியவாதப் படைப்புக்களுக்கூடாக வெளிக்கொணர்ந்த இதழ்களில் முக்கிய இதழ்களாக வெளிச்சம், சுதந்திரப் பறவை, எரிமலை, ஈழநாதம் (வெள்ளி வாரமலர்) போன்றன காணப்படுகின்றன. அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், கஸ்தூரி, மலைமகள், தமிழவள், தமிழ்க்கவி, சுதாமதி, நாமகள், தூயவள், செந்தணல், பிரேமினி சுந்தரலிங்கம், மன்னார் ரூபி மாக்கிரெட், சோழநிலா, அலைஇசை போன்றோர் சிற்றிதழ்களின் ஊடாக மாத்திரம் அறியப்பட்டவர்கள் அல்ல. வெளிச்சம் கவிதைகள் (1996), காலம் எழுதிய வரிகள் (1994), ஆனையிறவு (2000), வானம் எம்வசம் (1995), செம்மணி (1998) ஆகிய கவிதைத் தொகுப்புக்களினூடாகவும் அறியப்பட்டவர்கள். போரையும் போரியல் வாழ்வையும் பாடும் இவர்கள் போரின் பங்காளிகளும் ஆவர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடுபொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறி தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளை சாடுமிவர் கவிதைகள், பெண் விழிப்புணர்வுக்கூடாக பெண் விடுதலையைச் சாத்தியமாக்குகின்றன. இவர்களின் பெரும்பாலான கவிதைகள் செப்பனிடப்படா வார்த்தைப் பிரமாணங்களுக்குள் சிக்கி, உணர்வுத் தளமற்று கருத்துருவாக்கங்களுக்குள் சிதைந்து போவதாகக் காணப்படுகின்ற போதிலும் பெண்ணியல் அனுபவங்களுக்கூடாக விரியும் பெண்ணிய மொழி ஆங்காங்கே வீரியம் மிக்க சிறந்த கவிதைகளையும் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளது.

ஈழத்து நவீன கவிதைப் பரப்பில் 1980கள் முக்கியமான காலகட்டமாகும். 14-05-1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் "சுதந்திர இறைமை உள்ள மதச்சார்பற்ற சோசலிஷ தமிழீழத்தை அமைத்தல்" என்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்து 1980களில் தாயக விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெறுகிறது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் (21-07-1977), யாழ் நூலக எரிப்பு (01-06-1981), இனக்கலவரம் (24-07-1983), குமுதினிப் படகுப் படுகொலை (15-05-1985) எனத் தமிழருக்கு எதிரான வன்முறைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. போரினை அவாவி நின்ற இளைஞர், யுவதிகளின் மனம் அரசியல் ஓர்மைக்குள் தம்மைக் கட்டமைத்துக் கொண்டது. இவ்வரசியல் சூழ்நிலையே பல்வேறு இயக்கங்களின் தோற்றுவாய்க்கும் கால்கோளிட்டது. இக்காலப் பகுதியில் விடுதலை இயக்கங்களைச் சார்ந்தும், சார்பற்றும் உருவாக்கப்பட்ட பெண் அணிகள் பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் பெண் சமத்துவம், பெண் விடுதலையைக் கோரி நின்றன. இச்சூழ்நிலையில் பெண் தன்னிருப்பை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டது. இதன் ஊற்றே யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் வெளியிடப்பட்ட "சொல்லாத சேதிகள்" என்னும் தொகுப்பாகும். ஊர்வசி, செல்வி, சிவரமணி, ஒளவை, சங்கரி, சன்மார்க்கா என வீரியம் உள்ள கவிதை சொல்லிகளை இத்தொகுப்பு எமக்களித்தது.

ஈழத்து இலக்கியம் நன்கறியப்பட வேண்டியவர்களில் ஒருவர் சிவரமணி ஆவார். இவர் எழுதி எமக்குக் கிடைக்கப்பெற்ற கவிதைகள் மிகச் சிலதே ஆயினும் எழுதிய அத்தனை கவிதைகளும் சொல் நேர்த்தி கொண்டவை, எளிமையானவை, புதிய காட்சிப் படிமங்களுக்கூடாக வடிவமைக்கப்பட்டவை. அதிகார வர்க்கத்தால் சிதைக்கப்பட்டு நசிக்கப்பட்ட பெண்ணின் அவலக் குரலாய் ஒலிக்கும் "முனைப்பு" என்னும் கவிதை அவர் சார்ந்த உள்ளப் பதிவுகளே.

"பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால்
அசுத்தப்படுத்தப் பட்டன"

(சொல்லாத சேதிகள், பக் - 11)

என்னும் வரிகளுக்கூடாக, நுட்பமான உவமைகளை உள்வாங்கி நுண்ணுணர்வுத் தளத்தில் கட்டமைக்கப்படும் இக்கவிதை எளிமையான வார்த்தைகளுக்கூடாகவே தன்னை முன்நிறுத்துகிறது.

போர்க்காலச் சூழலில் போரின் வடுக்களைத் தாங்கி இயல்பாய் வாழும் சமூகத்தைச் சித்திரிக்கும் சிவரமணியின் "தேர்த்திருவிழா" விபரணப் பாங்குடன் புறக்காட்சிப் படிமங்களுக்கூடாகக் கட்டுறுகிறது.

"மீண்டும் ஒருநாள் / வரலாம் / இரத்தத் துளிகள் / மண்ணில்
தெளிக்கப்படலாம் / மீண்டும் ஒருவன் வருவான் /
இந்தக் கொடி கிழிந்திருக்கும் / இதற்குப் பதில் /
இன்னுமோர் கறுப்புக் கொடி / ஏற்றிவைப்பான் /
எனினும் / என் ஊர்க்கோவிலில் / வழக்கம்போல் /
திருவிழா நடைபெறும்"

(சிவரமணி கவிதைகள், பக் - 3)

"காட்சியமைத்தலுக்கூடாக விபரணப் பாங்கில் கவிதை சொல்லுதல்" என்னும் சிவரமணியின் உத்தியை உள்வாங்கி படைக்கப்பட்ட கவிதையே நாமகளின் "யதார்த்தம்" என்னும் கவிதையாகும். ஷெல்லினால் சடுதியில் ஏற்பட்ட மரணத்தை புறக்காட்சிப் படிமங்களுக்கூடாக விபரணப் பாணியில் காட்சிப்படுத்துவதாகவே இக்கவிதை அமைந்துள்ளது. கோர்வைப் படுத்தப்பட்ட விபரணப் பாங்கே இக்கவிதையின் அடிநாதமாகும்.

"வீதியில் / இப்போது எதுவுமே இல்லை / எல்லாமே /
பழையபடி / மண்ணெண்ணெய் வரிசை / முன்பைவிட /
நீண்டிருந்தது / தேநீர்க் கடையிலும் / புதிதாய் ஒரு பாட்டு /
ஆரம்பமாகிறது / சனங்கள் / விரைந்து கொண்டிருக்கிறார்கள் /
எதுவுமே நிகழாத மாதிரி"

(வெளிச்சம் கவிதைகள், பக் - 87)

இவ்விரு கவிதைகளும் தற்கால ஈழத்தின் யதார்த்த வாழ்வை மிகத் துல்லியமாக முன் வைக்கின்றன. போர் வன்மம் கொள்ளும், மனிதாபிமானத்தைச் சிதைக்கும், தாய் மகன் உறவில் கூட விரிசலை உருவாக்கும் என்பதை ஔவையின் வீடு திரும்பிய மகன் என்னும் கவிதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது.

"இராணுவ வீரனாய் என்முன் நின்றான்
என் மகன்........
நண்பனைச் சுட்டு வந்து
வீரம் பேசினான்
தியாகம் பற்றி
ஆயுதம் பற்றி
எல்லைப்புற மக்களைக் கொல்வதைப் பற்றி
நிறையவே பேசினான்

இப்போது நான் மௌனமாக இருந்தேன்
மனிதர்கள் பற்றி
விடுதலை பற்றி
மறந்தே போனான்
இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது

துரோகி என்று
என்னையே புதைப்பானோ
ஒருநாள்.

(எல்லை கடத்தல், பக் - 30)

அரச வன்முறையினால் குதறிச் சிதறடிக்கப்பட்ட மனித உடல்களைப் பாடும் கலாவின் "கோணேஸ்வரிகள்" என்னும் கவிதை ஈழத்து நவீன கவிதைத் தடத்தில் ஓர் மைல்கல் எனலாம்.

"வீரர்களே!
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவளோடு நின்று விடாதீர்
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்
ஆகவே
வெடி வைத்தே சிதறடியுங்கள்" (சரிநிகர் - 123)

வதைகளின் தடவழியே வன்முறையை எதிர்கொள்ளும் ஒரு பெண்ணின் தார்மீகக்குரல் கலாவின் கவிவழியே பிசிறின்றி ஒலிக்கிறது.

உயிர்குடிக்கும் எறிகணைத் தாக்குதல்களாலும் துப்பாக்கிகளின் வெடியோசைகளாலும் அதிர்ந்து கொண்டிருக்கும் ஈழதேசத்தில் தன் குழந்தைகளுக்கு நிசப்தமான இனிய காலைப் பொழுதைக்கூடக் காட்டமுடியாத ஏக்கம் அம்புலியின் "தேடி அலைவாய்" கவிதை

"ஒரு அழகிய காலையை / உனக்குக் காட்ட முடியாத /
வசந்த காலத்தில் / விளையாட முடியாத / பாலைவன
நாட்களையே / உனக்குப் பரிசளிக்கிறேன்"

(எழுதாத உன் கவிதை, பக் - 23)

இவ்வாறு எடுத்துரைக்கிறது.

"எத்தனை களங்கள்
கண்ட என் கால்கள்
செத்தநிலை போல
சவமாகிக் கிடக்கிறதே"

(வெளிச்சம் கவிதைகள், பக் - 26)

எனக் குண்டடிபட்ட கால்களைப் பாடும் உதயலட்சுமியின் (அம்புலி) குரலும், "அம்மா / இன்று நான் / உன்னிடம் வந்த போது / வீட்டு முற்றத்தில் பதித்த என் / பாதச்சுவடு காத்து வை / நாளை நான் / வருவேன் என்பது / என்ன நிச்சயம்" என நாளைய பொழுதில் மரணத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் பெண் குரலாய் ஒலிக்கும் மன்னார் ரூபி மார்க்கிரட்டின் குரலும் நவீன தமிழிலக்கியத்துக்குப் புதியதே.

வீரம் நிலத்தை ஆக்கிரமித்தது; நிலத்தை வென்றது; உயிர்களைப் பலிகுடித்து உடல்களைச் சிதைத்த போதும் வீரம் பேசப்படும். அன்று தொடக்கம் இன்றுவரை அது வரலாற்று உன்னதமாகச் சித்திரிக்கப்படும். இவ்வகையில் ஆனையிறவு வெற்றி மகத்தான வெற்றியாகக் கருதப்பட்டு "ஆனையிறவு" என்னும் கவிதைத் தொகுப்பை ஈழத்துக்களித்தது. வீரத்தின் வலிகளைத் தாங்கி உப்புக்காற்றுத் தழுவிய சாலையில் "ஆனையிறவு" எழுந்து நிற்பதை அலையிசையின் "ஆக்கிரமிப்புச் சின்னங்களைத் தாங்கிய பூமி / உலகறியக் கூவும் பிரச்சார விளைநிலம் / வெறித்தனத்தின் உச்சம் சிதற விழித்திருந்தது. (ஆனையிறவு, பக் 41) என்னும் எழுச்சிமிக்க வரிகள் காட்சிப்படிமங்களுக்கூடாக உயிரோட்டம் பெறுகின்றன.

அகம்சார் அனுபவ மையத்தில் முனைப்புப் பெறும் பெண்கவிதைப் புனைவுகள் அகம்சார் முரணுக்கூடாகக் காதலைப் பேசுகின்றன. அன்பு, வெறுப்பு, கோபம், ஏமாற்றம், நெருக்கம் என வெவ்வேறு உணர்வுத் தளத்தில் கட்டுறும் இக்கவிதைகள் அகப்பொருள் இலக்கிய மரபுக்கூடாக ஆராயப்பட வேண்டிய அனுபவ வெளியாகும்.

மனித நாட்களை விழுங்கி ஆயுளை அழிக்கும் யுத்த காலத்தில் தன் நேசிப்புக்குரியவனுடன் பேசும் ஊர்வசியின் "காத்திருப்பு எதற்கு" என்னும் கவிதை வாழ்தலுக்கான அழைப்பை எவ்வித விகற்பமும் இன்றி வெளிப்படுத்துகிறது.

"எமது பூமி எமது பொழுதுகள்
எதுவுமே எமக்கு
இல்லையென்றான பின்

இதுபோல் ஒரு பொழுது
கிடைக்காமலும் போகலாம்
தொடரும் இரவின் இருளில்
எதுவும் நடக்கலாம்
ஆதலால் அன்பே
இந்த அதிகாலையின்
ஆழ்ந்த அமைதியினில்
நாம் இணைவோம்"

(உயிர்வெளி, பக் - 34)

பரஸ்பர புரிந்துணர்வுக்கூடான இரு மனங்களின் இணைவே காதல். அக்காதல் ஒரு பெண்ணின் சுயம் தொலைவுக்குக் காரணமாக அமையக்கூடாது என்பதை லறீனா. ஏ. ஹக்கின் "பிரிந்து செல்லுகை" என்னும் கவிதை மிக நுட்பமாக எடுத்துரைக்கிறது.

"போதும்!
நீயாக நானும்
நானாக நீயும் உணர்ந்து
சுயம் தொலைத்து
சாத்தியமற்றதின் வெளிச்சத்தில்
விடியல் தேடியது............
இனியேனும்
நான் நானாகவே
உயிர்க்க விழைகின்றேன்"

(என் தேசத்தில் நான், பக் - 97)

பெண்மொழியின் வீரியமிக்க எழுத்தைச் சாத்தியமாக்கியவரில் ஒருவர் ஆழியாள். இவரின் "உரத்துப் பேச" "துவிதம்" ஆகிய இரு தொகுப்புக்களும் விரிந்த தளத்தில் பரந்த வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. காமம் கடந்து எல்லையில்லாத காதல், ஆண் புரிதல் களுக்கூடாகவே ஏற்படுகிறது. இதனை இவரின் தடைகளைத் தாங்கி என்னும் கவிதை மெய்ப்பிக்கிறது.

"நீயும் நானும் / வரையறைகளைக் கடக்க வேண்டும் – நான்
உன் விவேகத்தோடும் / நீ என் வீரியத்தோடும் /
கடக்க வேண்டும் / எனினும் / என் கருவறையை /
நிறைப்பது உன் குறியல்ல / என்ற புரிதலோடு வா"

தனக்கேயுரிய மொழிகளோடு பெண் கவிதா சொல்லிகள் ஈழத்தில் அகம்சார்ந்த நுண்ணுணர்வுத் தளங்களை அணுகியுள்ளனர். கலையழகியலுக்கூடாக அதனை வெளிப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளனர். பரஸ்பர புரிந்துணர்வு, நேசிப்பு, உறவுமுறைகள் போன்றவற்றால் நிர்ணயிக்கப்படும் திருமணம் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பில் சீதனமுறையிலான தரகு அடிப்படையிலேயே நிச்சயிக்கப்படுகிறது. இவ்வழக்கம் களையப்பட வேண்டிய அவசியத்தை

வற்புறுத்தி, அதனைச்சாடி பெண்பாற் கவிகளால் எழுதப்படும் பாடல்கள் கவித்துவமற்ற வெற்றுக்கோசங்களாகவே காணப்படுகின்றன. மறையாத மறுபாதி தொகுப்பில் இடம்பெறும் நிருபா (மாப்பிள்ளை வந்தனங்கள்), பாமினி (விற்பனை) பி.ஆர். ரஞ்சனி (கன்னி), உமையாள் (அம்மாவிற்கு) முதலானவரால் எழுதப்பட்ட கவிதைகள் இதன் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

“மனங்கள்
இணையும்
திருமணம் இல்லை இது நிச்சயம்
உமது
பந்தங்களெல்லாம்
பணங்களோடுதானே” (மறையாத மறுபாதி, பக் - 44)

கருத்துச் செறிவை மாத்திரம் கவனத்தில் கொண்டு மொழி இயைபின்றி வடிக்கப்பட்ட இக்கவிதை சீர்பிரமாணமின்றி கவித்துவ அழகற்றுச் சோபையிழக்கிறது. இக்கவிதைத் தொகுப்பிலிடம்பெறும் “மாப்பிள்ளை வாங்கலியோ, மாப்பிள்ளை வாங்கலியோ” என ஆணை அறைகூவி விற்கும் பாமினியின் “விற்பனை” என்னும் கவிதை நாட்டுப்புற சினிமாப் பாட்டு மெட்டில் வெறும் எதுகை மோனைகளை உள்வாங்கி எழுதப்பட்ட கவிதையாகும். ஆயினும் இக் கவிதையில் வெளிப்பாட்டு உத்தி மிகச்சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது.

தன்னியல்சார் இருப்பினூடாக பெண்ணுடலின் பிரத்தியேக பிரச்சினைகள் ஈழத்துக் கவிதைகளில் மிக நுட்பமாக எடுத்துரைக்கப்படுகிறது. மரபுசார் ஒழுக்கவியல் கற்பிதங்களுக்கூடாக மறைக்கப்பட்ட பெண் உணர்வுகள் நவீன கவிதை சொல்லிகளால் வாழ்நிலை மீறலுக்கூடாக நுட்பமாக ஈழத்துக் கவிதைகளில் காட்சிப்படுத்தப்படுகிறது. மைதிலி, கல்யாணி, றஞ்சனி, ஆழியாள், கலா, கற்பகம் யசோதரா கவிதைகளில் ஆணாதிக்க கற்பு நிலைசார் புனிதங்களுக்கூடாக மறைக்கப்பட்ட பாலியலுணர்வுகளும், பாலியலுறுப்புகளும் அகம்சார் சுயத்துவத்துக்கூடாகவும் புறநிலைசார் காட்சிப் படிமங்களுக்கூடாகவும் கட்டுடைக்கப் படுகின்றன. உடல்நிலை சார்ந்து மன அழுத்தத்தால் பெண் நசுக்கப்படுகையில் அது ஏற்படுத்தும் வலி மைதிலியின் “கடி” என்னும் கவிதையில் எவ்வித விரசமுமின்றி படிமமாக வெளிப்படுகிறது.

“கடிப்பதன் காரணத்தினால் தான்
முதலில்
சொறியத் தொடங்குவது
பிறகு
தோல் உரிவு
இரத்தக் கசிவு
எரிவு
சில சமயங்களில் தழும்பு
கடித்தால் சொறியாதே என்கிறீர்கள்

எப்படி.......
கடித்தால் யாருக்கும்
சொறியத்தானே சொல்லும்"

(இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள், பக் -50)

றஞ்சனியின் "புரிதலின் அவலம்" மைதிலியின் "பொருள்", "அந்தநாள்", ஆழியாளின் "தடை தாண்டி", சுல்பிகாவின் "யோனியாகிப் போன பெண்கள்" போன்ற கவிதைகள் ஆண்மைய பாலியல் நுகர்வுக்கூடான பெண்ணிலைசார் இருப்பை அவாவி நிற்கின்றன.

ஈழத்து நவீன தளத்தில் தீவிரமும் தனித்துவமும் கொண்ட இஸ்லாமிய பெண் கவிஞர்களாக சுல்பிகா, அனார், பெண்ணியா, ஃபஹீமா ஜஹான், லரீனா. ஏ.ஹக், மசூறா. ஏ. மஜிட், ஷர்மிளா றஹிம் போன்றோரைக் கூறலாம்.

மென்னுணர்வுத் தளத்தில் இயங்கும் இவர்களின் கவிதைகள், பெண்விடுதலை ஆண்பெண் அசமத்துவ உறவு, காதல், வலிந்து திணிக்கப்பட்ட போர் என வெவ்வேறு தளங்களில் தம்மைக் கட்டமைத்துக் கொண்டன.

இஸ்லாமிய பெண் கவிஞர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்களில் அனாரும் ஒருவர். உள்ளுணர்வுத் தடத்தில் இயங்கும் இவரின் பெண்மொழி எளிமையானது. அதேசமயம் ஆழமானது. அனாரின் பெரும்பாலான கவிதைகள் ஆண், பெண் அசமத்துவ போக்கால் நசிவுண்ட பெண் சிதைவைப் பாடுபவையாகவே உள்ளன. ஆணாதிக்க சமூகத்தினாலும், மரபுவழிப்பட்ட சமூகக் கட்டுமானத்தாலும் ஒடுக்கி நசுக்கப்பட்ட துன்பியல்சார் பெண்ணிருப்பாக வெளிப்படும் "பலி" என்னும் கவிதை இதற்குத் தக்க சான்றாகும்.

"அது போர்க்களம்
வசதியான பரிசோதனைக்கூடம்
வற்றாத களஞ்சியம்
நிரந்தரச் சிறைச்சாலை
அது பலிபீடம்
அது பெண் உடல்
உள்ளக் குமுறல்
உயிர்த் துடிப்பு
இருபாலாருக்கும் ஒரே விதமானது
எனினும்
பெண்ணுடையது என்பதாலேயே
எந்த மரியாதையும் இருப்பதில்லை அதற்கு
என்முன் தான் நிகழ்கின்றது
என் மீதான கொலை"

(எனக்கு கவிதை முகம், பக் - 27)

அவலம் நிறைந்த பெண்சார் இருப்பை காட்சிப் படிமங்களுக்கூடாக வெளிப்படுத்தும் இக்கவிதை "அதிகாரம் பாலியல் உறவின் மூலம் செயற்படுத்தப்படுகிறது" என்னும் மிசேல் பூக்கோவின் கருத்தை மெய்ப்பித்து நிற்கின்றது.

நுட்பமான வார்த்தைப் படிமங்களுக்கூடான அனுபவ உலகமாக விரியும் ஃபஹீமா ஜஹானின் கவிதைகள் முஸ்லீம் தமிழ் இனத்துவத்தின் உறவுப் பாலமாகும். இவரின் "ஒரு கடல் நீரூற்றி" தொகுப்பில் அடங்கும் பல கவிதைகள் இஸ்லாமிய அடிப்படை வாதத்திலிருந்து விலகி தமிழ்த்தேசியத்தின் ஆதரவுக் குரலாய் விளங்குகின்றன. சிறந்த குறியீட்டு உத்திகளைக் கையாண்டு தமிழ்க்கவிதைகளை நவீன தளத்துக்கு இட்டுச் சென்ற கவிதா ஆளுமைகளுள் பஹீமா ஜகானும் ஒருவராவார். இவரின் "வயற் காட்டுக் காவற்காரி, அடவி, சிறுமியின் கோழிக்குஞ்சு, குரங்குகள் பிய்த்த கூடு" போன்ற கவிதைகள் சிறந்த குறியீட்டு உத்திகளைக் கையாண்டு எழுதப்பட்ட கவிதைகளாகும். ஈழத்து அரசியலுக்குள் உழன்று தவிக்கும் மக்களின் துயர் "அடவி" என்னும் கவிதையில் நுட்பமாகச் சித்திரிக்கப்படுகிறது.

"சிங்கத்தோடு நரிகளும்
புலியொடு ஓநாய்களும்
அணிதிரண்ட அடவியில்
அபயம் தேடி அலைகிறது
மான் குட்டி"

(ஒரு கடல் நீரூற்றி, பக் - 64)

நவீன இலக்கியத்தில் இஸ்லாமிய கவிஞர்களையும் கவிதைகளையும் வெளிக்கொணர்வதில் "யாத்ரா" ஆற்றிய பங்கு அளப்பரியது. ஃபஹீமா, சுல்பிகா, ஷர்மிளா போன்ற பெண் கவிஞர்களின் செயற்பாட்டுக் களமாக இக்கவிதை சஞ்சிகை விளங்கியது. ஆயினும் நவீன இஸ்லாமிய கவிஞர்களின் முழு ஆளுமைகளும் ஈழத்தில் வெளிக்கொணரப்படவில்லை என்றே கூறலாம். இக்கவிதைகளை ஆய்வுக்கு உட்படுத்தி ஆராயப்படாதவரை ஈழத்திலக்கிய வரலாறு பூரணப்படுத்தப்படாத வரலாறாகவே காணப்படும்.

ஆறாம் திணையாக அறியப்படும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வெளிவரும் பெரும்பாலான கவிதைகள் உருவம், உள்ளடக்கம், உணர்த்து முறைகளால் நவீன தமிழ்க் கவிதையை பிறிதொரு தளத்துக்கு இட்டுச் சென்றன. வாழ்வுக்கும் இருப்பியலுக்குமிடையிலான புதிய அனுபங்களுக்கூடாக மையங் கொள்ளும் இக்கவிதைகள் புதிய குறியீடுகளையும், புதிய படிமங்களையும், புதியபாடு பொருட்களையும் நவீன தமிழிலக்கியத்துக்கு அளித்தன. தேவைசார் தமிழ்க் கல்வியையும் அதனூடான பிறமொழிக் கல்வியையும் கொண்ட புலம் பெயர்சார் சமூகக்கட்டமைப்பு மொழியைச் சிக்கனமாகவும், அதேயளவுக்கு நுட்பமாகவும் பயன்படுத்தி, செறிவடர்த்தி கொண்ட செழுமையான தமிழ்க்கவிதைகளை உருவாக்க வாய்ப்பளித்தது எனலாம்.

ஆழியாளின் "துவிதம்" தொகுப்பிலிடம்பெறும் "குற்றவுணர்ச்சி", "நம்பிக்கை", "இரை" போன்ற கவிதைகளில் புதிய கருப்பொருள் உத்திகள் கையாளப்பட்டுள்ளன. இவர் இக்கவிதைகளில் கையாண்ட "அபோக்கள்", "தாஸ்மன்", "லவெண்டர்" போன்ற புதிய சொற் பிரயோகங்கள் தமிழிலக்கியத்துக்குப் புதியனவாகவும், வளம் சேர்ப்பனவாகவும் உள்ளன.

பெண் சுயத்துவத்துக்கூடாக பெண்ணிருப்பை முன்னிறுத்தி "முரண்" என்னும் சரடு வழியே மென்னுணர்வுத் தளத்தில் இயங்கும் ஈழத்து பெண்மொழி தனக்கென தனித்துவ அடையாளங்களைக் கொண்டது. பாலின நடத்தையாலும் நியதியாலும் வடிவமைக்கப்பட்ட பெண்ணிருப்பியலின் இவ்வனுபவவெளி எளிமையானது, நேர்த்தியானது, சொற் சிக்கனத்துக்கூடான உள்ளுணர்வுத் தளத்தில் இயங்குவது. விரிந்த தளத்தில் கனதியான ஆய்வை வேண்டி நிற்கும் பெண் கவிதைகள் ஈழத்தின் முறையான விமர்சனங்களோடோ மதிப்பீடுகளோடோ முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழகத்தோடு ஒப்பிடும் போது ஈழத்து நவீன பெண் கவிதைகள் பற்றி வெளிவந்த ஆய்வுகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளன. எனவே ஆக்கபூர்வமான விமர்சனங்களும் மதிப்பீடுகளும் ஈழத்துப் பெண் கவிதைகளைப் பிறிதொரு தளத்துக்கு கொண்டு செல்லும் எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


- சிவகுமார், ஆர்., பிரம்மராஜன், (2001) அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள், மருதா, சென்னை.
- சிவசேகரம், சி., (1995), விமர்சனங்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை.
- யோகராசா, செ., (2007) ஈழத்து நவீன கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு.
- விஜயலட்சுமி, ச., (2002), தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, தி. பார்க்கர், சென்னை.



**கட்டுரைகள்**


- ஔவை, (1996 - 1997) "நவீன தமிழகக்கவிதைகள் ஒரு பெண்ணிய நோக்கு", நிவேதினி, கொழும்பு.
- சேரன், உ., (அக்டோபர் - 2007), "பெயல் மணக்கும் பொழுது" காலச்சுவடு 94வது இதழ், நாகர்கோவில்.
- ப்ஹீமா ஜஹான், (2002) "பெண்மொழி" யாத்ரா இதழ் 8, கொழும்பு.
- மித்ரா (மே - ஜுன், 2007) "நீரளவேதானா நீராம்பல்", சரிநிகர், கொழும்பு.
- யோகராசா, செ., (2005) "ஈழத்துக்கவிதை", தமிழ் இனி 2000, இருபதாம் நூற்றாண்டு உலகத்தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை.
- ரமேஷ், சி., (பங்குனி - சித்திரை 2006) "ஈழத்து நவீன கவிதையில் பெண் புனைவு வகைமையை அடிப்படையாகக் கொண்ட நோக்கு" தெரிதல், யாழ்ப்பாணம்.


*"இங்கு பெண்ணுக்கான வாழ்வியல் என்பது குடும்பத்தால், கலாசாரத்தால், மொழியால், சமயத்தால், சாதியால், அரசியலால், விஞ்ஞானத்தால் வரையறை செய்யப்பட்டும் கண்காணிப்பிற்கு உட்பட்டும், ஆண் மேலாண்மை சமூகத்தால் பழக்கப்படுத்தப்பட்ட மனித விலங்காக மாற்றப்பட்டு "தான்" என்ற பிரக்ஞையோ, தனி அடையாளமோ இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளது.*

மாலதி மைத்ரி
*(தமிழகத்தின் நவீன பெண் கவிஞர்)*

# விளையாட்டு முகாமைத்துவத்தின் வாண்மைத்துவ அந்தஸ்து
# (Professional Status of Sports Management)



திரு. க. கனேசநாதன்
B.com.(Hons), Dip.in.Edu., M.Ed.
பதில் பணிப்பாளர்,
உடற்கல்வி அலகு,
யாழ். பல்கலைக்கழகம்



மக்களின் இயைபாக்கப்பட்ட முயற்சிகளினால் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான இலக்குகளை அடைதலே விளையாட்டு முகாமைத்துவம் எனக் கூறிக்கொள்ளலாம்.

இங்கு மக்கள், வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் நிர்ணயிக்கப் பட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான இலக்குகள் எனும் மூன்று விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

இவற்றுள் மக்கள் எனக்கூறப்பட்ட மனித வளம் மிகவும் முக்கிய மானதாகும். ஓர் முகாமையாளர் பயனுறுதி உடையவராகத் திகழ்வதற்கு அவர் சிறந்த முறையில் மனித வளங்களைக் கையாளும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் மனித வளத்தை முகாமையாளர்கள், வேதனம் பெறும் பணியாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள் மற்றும் பயனாளர்கள் எனவும் வகுத்து நோக்க முடியும்.

வேதனம் பெறும் பணியாளர்களில் ஓர் சிறப்புப் பிரிவினரே வாண்மையாளர்களாவர். இவர்களே விளையாட்டு முகாமைத்துவ அந்தஸ்தை ஏற்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த வகையில் விளையாட்டுச் செயற்பாடுகளில் முகாமையாளர்கள், பணியாளர்கள், மருத்துவர்கள், சட்டவாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள், உடற்கூற்றுப் பயிற்சியாளர்கள், போட்டி அலுவலர்கள் எனப் பல வாண்மையாளர்கள் ஈடுபடுகின்றனர்.

னாளர்களுக்கு வாண்மைத்துவ சேவை வழங்கும் செயற்பாடுகளில்

ஈடுபடுகின்றனர். பயனாளர்களாகிய விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் நுகர்வுச் சேவையினையும் வாண்மைத்துவச் சேவையினையும் விளையாட்டுச் செயற்பாடுகளில் பெற்றுக் கொள்கின்றனர்.

இதில் நுகர்வுச் சேவை என்பது வரையறுக்கப்பட்ட வீச்சுக்குள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த தேர்ச்சித் திறனுடைய சேவையாளர்களினால் அதிக எண்ணிக்கையான பயனாளர்களுக்கு வழங்கப்படும் விளையாட்டுச் சேவைகளைக் கருதும். உதாரணமாக, விளையாட்டுச் செயற்பாடுகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு ஒரே சந்தர்ப்பத்தில் குறித்த ஒரு வீச்சுக்குள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த தேர்ச்சித் திறன் கொண்ட பயிற்றுவிப்பாளரினால் வழங்கப்படும் பயிற்சிச் சேவையை நுகர்வுச் சேவை எனக் கூறிக்கொள்ளலாம்.

மறுபுறத்தில் வாண்மைத்துவ சேவை என்பது உயர்தரத்திலான, ஒப்பீட்டு ரீதியில் அதிக தேர்ச்சித்திறன் கொண்ட, குறைந்த எண்ணிக்கையிலான பயனாளர்களுக்கு வழங்கப்படும் சேவையாக அமைந்திருக்கும். உதாரணமாக ஓர் தேசிய அல்லது சர்வதேச மட்டத்திலான விளையாட்டுச் செயற்பாடு ஒன்றிற்கான உயர் தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளரினால் தெரிவு செய்யப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான வீரர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி நடவடிக்கையினை வாண்மைத்துவ சேவை எனக் குறிப்பிடலாம்.

வாண்மைத்துவம் மற்றும் நுகர்வு சேவைகளுக்கிடையில் தீர்மானம் மேற்கொள்ளல், சேவை ஒழுங்குபடுத்தல், ஊக்குவித்தல் போன்ற அம்சங்களில் வேறுபட்ட அணுகு முறை பின்பற்றப்படும். இதற்கமைவாக வாண்மைத்துவ மற்றும் நுகர்வுச் சேவைகளுக்கிடையில் பின்வரும் மாறிகள் முக்கியம் பெறும்.

| | |
|---|---|
| 01. தகவல் | 02. தீர்மானம் |
| 03. நேரம் | 04. பிரச்சினை |
| 05. பிரதியீடு | 06. வலு |
| 07. இணைவுத்தன்மை | |

தகவல் : வாண்மைத்துவ சேவையாளர் அதிக தகவல் வழங்க வல்லவராகக் காணப்படல் வேண்டும்.

தீர்மானம் : வாண்மைத்துவ தீர்மானங்கள் அதிக சிக்கல் தன்மையாகக் காணப்படும்

நேரம் : அதிக தகவல் வழங்கல், சிக்கல் தன்மை வாய்ந்த தீர்மானங்களை மேற் கொள்ளுதல் என்பவற்றினால் பயனாளர்களுடன் அதிக காலத்தை வாண்மை யாளர்கள் செலவிட வேண்டியுள்ளது.

பிரச்சினை : பயனாளர் குறித்த சேவை பற்றி அதிக தகவலைக் கொண்டிருப்பர். எனவே வாண்மையாளர் சேவை தொடர்பில் அதிக தகவலைத் திரட்டிப் பயன்படுத்த வேண்டும்.

பிரதியீடு : வாண்மைத்துவ சேவையாளர் ஒருவரை வேறு ஒருவரால் பிரதியீடு செய்து ஒத்த சேவையினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்காது.

வலு : வாண்மையாளர் தனது அறிவு, திறன், அனுபவம் என்பவற்றின் மூலம் பயனாளர் மீது செல்வாக்குச் செலுத்தி பயனாளர் வாண்மையாளரில் அதிகம் தங்கியிருக்கும் நிலையினைத் தோற்றுவிப்பார்.

இணைவுத் தன்மை : வாண்மையாளர் தான் செயற்படும் அமைப்பு அல்லது நிறுவனத்தை விட பயனாளருடன் அதிகம் நெருக்கமாகச் செயற்படுவார்.

வாண்மைத்துவம் எனும் போது அது சில பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

- ஓர் கட்டமைப்பான அறிவினைக் கொண்டிருத்தல்
- வாண்மைத்துவ அதிகாரத்தைக் கொண்டிருத்தல்
- சமூக அதிகாரத்தைப் பெற்றிருத்தல்
- ஓர் ஒழுக்கக் கோவையைக் கொண்டிருத்தல்

என்பனவே வாண்மைத்துவத்திற்கான முக்கிய பண்புகளாகும்.

விளையாட்டு முகாமைத்துவம் இத்தகைய வாண்மைத்துவ அந்தஸ்தைப் பெற்றுவிட்டதா என நோக்கும் போது அது முற்றுமுழுதாக வாண்மைத்துவ அந்தஸ்தைப் பெற்று விட்டதாகக் கூற முடியாவிடினும் வாண்மைத்துவ நிலையை நோக்கி விருத்தியுற்று வருவதனை உணர முடிகின்றது.

விளையாட்டு முகாமைத்துவம் ஒரு பொதுவான அமைப்பின் கீழ் எல்லா முகாமையாளரையும் கட்டுப்படுத்தும் நிலையை அடையவேண்டும்.

விளையாட்டு முகாமைத்துவத்தை மேற்கொள்ள ஏனைய வாண்மைத்துவத் துறைகளுக்குத் தேவைப்படுவது போல சிறப்பு அறிவைப் பெறுவதற்கான பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் இது தொடர்பான அறிவுக் கட்டுமானங்கள் ஆராய்ச்சி நெறிமுறைகளூடாக விருத்தி செய்யப்படவும் வேண்டும்.

விளையாட்டு முகாமைத்துவ அமைப்புக்கள் தமது அங்கத்துவத்திற்கான அனுமதி, பயிற்சி, ஒழுக்கம், மதிப்பீடு போன்ற அம்சங்களில் சுயாட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விளையாட்டு முகாமையாளர்கள், அமைப்புக்கள், உடமையாளர்கள் என்போரது நலன்கள் மட்டுமன்றி சமூகத்திற்குச் சேவை செய்யும் தன்மையையும் பேணிக் கொள்ள வேண்டும்.

முகாமையாளர்கள் நிறுவனங்களின் நலன்களை விட பயனாளர்களது நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்படுகையில் அது நீண்டகாலத்தில் நிறுவன நலன்களையும் முன்னேற்றும் என்ற உண்மையை உணர்ந்து செயற்பட வேண்டும்.

விளையாட்டுச் செயற்பாடுகள் மக்களினதும், சமூகத்தினதும் வாழ்க்கைத்தர உயர்வுக்கு ஓர் முக்கிய பங்களிப்பை நல்குகின்றது என்பதை விளையாட்டு முகாமைத்துவம் உணர்த்த வேண்டும்.

மக்களின் ஆரோக்கிய நல்வாழ்வு விளையாட்டுச் செயற்பாடுகளின் மூலம் உறுதி செய்யப்படுவதால் இது வாழ்க்கையின் அத்தியாவசிய கூறாகின்றது என்பதனை உணர்த்தும்

வகையில் விளையாட்டு முகாமைத்துவம் செயற்பட வேண்டும். வாண்மைத்துவம் என்பது பொருளாதார முக்கியத்துவத்துடன் தொடர்புறுவதனால் விளையாட்டு முகாமைத்துவம் பொருளாதார முக்கியத்துவத்தை விளையாட்டுச் செயற்பாடுகளில் உறுதி செய்ய வேண்டும்.

விளையாட்டு முகாமைத்துவம் பல்வேறு அறிவுத் துறைகளிலிருந்து அறிவைப் பெற்று பிரயோகித்து ஓர் பல்பரிமாண அறிவுக் கட்டுமானமாகத் திகழ்வதனால் இது தொடர்பாக கோட்பாட்டு ரீதியிலும் செயற்பாட்டு அனுபவங்களிலும் முகாமைத்துவம் அக்கறை காட்ட வேண்டும். விளையாட்டு முகாமைத்துவம் அர்ப்பணிப்பு, ஈடுபாடு என்பவற்றுடன் மக்களுக்குச் சேவை ஆற்றும் பொறுப்பினை ஏற்றுச் செயற்பட வேண்டும்.

மேற்படி விடயங்களில் அக்கறை கொண்டு கவனம் செலுத்துவதன் மூலம் விளையாட்டு முகாமைத்துவம் வாண்மைத்துவ அந்தஸ்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வதைச் சாத்தியமாக்கிக் கொள்ள முடியும். இதற்கு வாண்மைத்துவ முகாமைத்துவச் செயற்பாடுகளில் ஈடுபடும் தனிநபர்கள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- ஒரு வாண்மைத்துவ அமைப்பில் தன்னை அங்கத்தவராக இணைத்துக் கொள்ளல்
- தனது வாண்மைத்துவ சேவை சமுதாயத்திற்கு பயனுள்ள சேவையை வழங்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருத்தல்
- துறைசார் ஒழுக்க விதிகளைத் தன்னார்வத்துடன் கடைப்பிடித்தல்
- தற்துணிவுடன் கூடிய வாண்மைத்துவ முடிவுகளை ஏனையோரது தலையீடுகள் இன்றி சுதந்திரமாக மேற்கொள்ளுதல்

மேற்படி விடயங்களில் அக்கறை கொள்வதோடு தனது அறிவு, திறன், அனுபவம், தேர்ச்சித்திறன் என்பவற்றை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

இன்று மேற்கத்தைய நாடுகளில் பட்டப்படிப்புக்கள் தொடக்கம் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகள் வரை விளையாட்டு முகாமைத்துவத்தில் அறிவு விருத்தி வியாபித்துக் காணப்படுகின்றது. இந்நிலை விஸ்தரிக்கப்பட்டு விளையாட்டு முகாமைத்துவம் தொடர்பான அறிவு, தேர்ச்சித்திறன், அனுபவம் என்பன உலகளாவிய ரீதியில் முன்னேற்றம் காணும் போது விளையாட்டு முகாமைத்துவத்தின் வாண்மைத்துவ அந்தஸ்து உறுதிப்படுத்தப்படும்.

## Reference :

1. Broekhoff. J., (1979), Physical Education as a Profession, Quest, 32(2), 244 - 254
2. Chelladurai. P., (1984), Sports Management : Macro Perspective, London, On : Sports Dynamics Publishers.
3. Chelladurai.P., (1994), Sports Management : Defining the Field, European Journal for Sports Management, 1, 7 - 21.
4. Lawson. H.A., (1979), Paths towards Professionalization, Quest, 31(2), (231 - 243)
5. Lawson. H.A., (1985), Knowledge for work in the physical Education Profession, Sociology of Sports Journal, 2, 9-24.

# இலக்கியம் கற்போம்



திருமதி. இ. இராஜசேகரம்
B.A., Dip.in.Edu.
பிரதி அதிபர்
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற சமுதாய பண்பாட்டு அம்சங்களை விளக்குகின்ற உணர்வுபூர்வமான, அனுபவபூர்வ மான விடயங்களின் தொகுதியாக அமைகின்றது. ஒரு நாட்டின், ஒரு சமுதாயத்தின், ஒரு இனத்தின் தன்மைகளை அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவேதான் இவ்விலக்கியங்கள் அவை தோற்றம் பெற்ற நாட்டின், சமுதாயத்தின், இனத்தின் சொத்துக்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் வாழ்வியலைப் பேணுகின்ற, போற்றுகின்ற இலக்கியங்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலந் தொடக்கம் இன்றுவரை வளர்ந்து தமிழர் பாரம்பரியத்தை, அவர்களின் உணர்வுகளை, சமூகக் கோலத்தினைப் பறைசாற்றிக் கொண்டு தமிழர்களின் தன்னிகரில்லாச் சொத்துக்களாக விளங்கி வருகின்றன. தமிழ் இலக்கியமானது காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வரும் அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகளால் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டும் வளர்ந்தும் வந்திருப்பதைக் காணலாம்.

எனவே ஈராயிரம் ஆண்டுகளாக வளர்ந்திருக்கின்ற இலக்கியங் களை ஆய்வு செய்வதோ அவற்றை முழுமையாக நயப்பதோ இயலாத காரியமாகும். எனினும் சிலவற்றையாவது பாடத்திட்டங்களில் இடம் பெறுபவற்றையாவது தெளிவாகக் கற்கவும், கற்பிக்கவும் முயலும்போது அவ்விலக்கியங்களை ரசித்து அனுபவிக்க முடிவதோடு அவற்றைத் திறனாய்வு செய்யவும் அழகியல் உணர்வுகளை ஏற்படுத்தவும் முடிகிறது. தமிழின் தொன்மைகளையும், சிறப்பையும், அவற்றை ஆக்கியோர் பெருமையினையும் அவர் தம் ஆற்றலையும் விளங்கிக் கொள்ளவும் முடியும்.

தமிழிலக்கியங்கள் பல இன்றும் தமிழரிடையே வேரூன்றி நிற்பதற்கு அவ்விலக்கியங்களின் சிறப்பும் அவற்றை நயந்தோர் வெளிப்படுத்திய கருத்துக்களும் காரணங்களாக அமைகின்றன. “கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை” எனப் புகழும் அளவிற்கு தமிழர் இலக்கிய கர்த்தாக்களும் இருந்துள்ளனர்.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உள்ளத்துணர்வுகளைத் தூண்டுகின்ற அளவிற்கு படைக்கப்பட்டுள்ளன. இவ் இலக்கியங்களைக் கற்றலும், கற்பித்தலும் என்பது ஒரு கலை. அது ஒரு அழகியல் வெளிப்பாடு. இலக்கியங்களைக் கற்பிப்பவர் இரசனை மிகுந்தவராக இருப்பதோடு கற்பவர்க்கும் அந்த ரசனை இருக்கவேண்டும். அல்லது ரசனை ஊட்டப்பட வேண்டும். நடனம், சித்திரம், சங்கீதம் போன்ற கலைகளை எவ்வாறு அனுபவித்து ரசிக்கின்றோமோ அதே உணர்வு இலக்கியங்களைக் கற்கின்ற போதும் ஏற்படவேண்டும்.

இலக்கியம் கற்பித்தலின் பயன்பாடு மாணவர்களிடையே உள்ளத்து உணர்வுகளைத் தூண்டி சமூகப் பார்வை மிக்கவர்களாக, சமூக உணர்வு உடையவர்களாக அவர்களை உருவாக்குவதே யாகும். இலக்கியக் கல்வி என்பது இயல்பாகவே ஒரு சுவையான துறையாகும். அத்தகைய சுவையுணர்வைப் பயன்படுத்தி அதனைப் பயனுடையதாக்கும் பொறுப்பு, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பணியாகும்.

காலத்தின் ஓட்டத்திற்கு இணங்க தொலைக்காட்சி, கணனிப் பாவனைகள் அதிகரித்தமை காரணமாக பழைய இலக்கியங்களைக் கற்கும் ஆர்வம் அருகிவருவதைக் காணலாம். ஆரம்ப காலங்களில் கல்வி அறிவற்றவர்கள் புராணங்களையும் இதிகாசங்களையும் நன்கறிந்திருந்தனர். இன்று இவ்விலக்கியங்களை அறியாதவர்களாக, அவற்றின் பெருமைகளை உணராதவர்களாக நாம் காணப்படுகின்றோம். எனினும் நாம் புதியவற்றை வரவேற்கும் அதேவேளை இலக்கியங்களில் பரிச்சயமுடையவர்களாக எம்மை வளர்த்துக் கொள்ளல் இன்றியமையாதது. இவ்வாறு இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ளும்போது சுவையும் பயனும் விளையும் விதத்தில் இலக்கியங்களைப் போதிக்க முடியும். உற்சாகமாக கலைத்துவத்துடன் கற்பிக்க வேண்டியது இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியரது தலையாய பணியாகும்.


இலக்கியம் என்பது தனித்து வளர்ந்து வருகின்ற கலையெனக் கொள்ள முடியாது. சமூகவியலும், மானிடவியலும் கலந்த கலைவைகளாக வரலாற்றுடன் இணைந்து காணப்படுவதை நாம் காண்கின்றோம். இலக்கியக் கல்வியினூடாக தனது பார்வையை விரிவடையச் செய்து பின்னர் அப்பார்வையானது நாடு உலகம் என சிந்தனையாக விரிவடைதல் அவசியமானதாகும். இத்தகைய விசாலமான பார்வை இலக்கிய ஆசிரியருக்கு இருக்கும் போதுதான் அதை மாணவர்க்கு உணர்த்தவும் உணர்ந்து கொள்ளவும் முடியும்.

இலக்கியத் துறையில் ஈடுபடும் ஒருவரால்தான் இலக்கியங்களைச் செம்மையாக மதிப்பீடு செய்யவும் பகுப்பாய்வு செய்யவும் முடியும். அத்தகைய அறிவாளர்கள்தான் இலக்கியங்களின் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவதை நாம் காண்கின்றோம். எனவே இலக்கியக் கல்வி என்பது கற்பவனையும், கற்பிப்பவனையும் இரசனைக்குள்ளாக்குவது. இன்ப உணர்வையும், ஆத்மீக திருப்தியையும் ஏற்படுத்துகின்ற கலைகளில் இலக்கியம் முக்கியமானதொன்றாகும். இலக்கியங்களை முறையாகக் கற்று சமூக உணர்வை ஏற்படுத்துவது மாத்திரமல்லாமல் இவற்றை இரசனையுடன் கற்போமானால் எமது வாழ்வில் அமைதியும், மனநிறைவும் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

# நிலையான அபிவிருத்தி



திருமதி தி. கருணீசன்
B.A., Dip.in.Edu.
ஆசிரியை
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



நிலையான அபிவிருத்தி என்ற எண்ணக்கரு உதயமாவதற்கு உலகின் இயற்கை வளங்கள் அருகிவருதல், வளங்கள் உலகெங்கும் சமமாகப் பரம்பிக் காணப்படாமை, வளங்களை நுகர்வதிலுள்ள வேறுபாடு, அதனால் சூழலில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் போன்ற விடயங்களே காரணமாகும். "நிலையான அபிவிருத்தி" என்றால் எக்காலமும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியாகும். இதனைப் "பேண்தகு" அபிவிருத்தி எனவும் கூறலாம்.

சூழல் மற்றும் அபிவிருத்தி பற்றிய உலகமாநாடு "நிலையான அபிவிருத்தி என்பது சூழல், பொருளாதாரம், சமூகப் பெறுமானம் என்பவற்றிற்கிடையிலான திட்டமிடல் அதன் மூலம் கிடைக்கும் நன்மை களைச் சமுதாயத்தின் சகல பிரிவினரும் சமமாகப் பெறக்கூடியதாக விநியோகித்தல், தியாகத்தின் மூலம் எதிர்காலச் சந்ததியினருக்காகச் சிறந்த உலகொன்றை விட்டுச் செல்லுதல்" எனக்கூறியுள்ளது. நிலையான அபிவிருத்தியின் குறிக்கோள் சூழலும் அபிவிருத்தியும் ஒன்றிற்கொன்று பாதிப்பில்லாமல் ஒருங்கே இணைந்து செயற்படுதலாகும். தற்காலச் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை எதிர்காலச் சமுதாயத்தின் தேவைகளையும் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சிகளே நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

1980களில் உலகில் எழுந்த சிந்தனைகளில் இது முதன்மை யானதாகும். சூழல் பாதுகாப்புடன் கூடிய அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முற்பட்டதன் விளைவாகவே இக் கொள்கை எழுந்தது. 1987ல்

புறூண்லாண்ட் ஆணைக்குழு வெளியிட்டு வைத்த எமது பொதுவான எதிர்காலம் என்று தலைப்பிடப்பட்ட அறிக்கை மூலம் இக்கோட்பாடு உலகம் முழுமையும் பிரபல்யப்படுத்தப்பட்டது. இதன்பின் பல்வேறுபட்ட மட்டங்களில் ஆராயப்பட்டு இக்கோட்பாடு 2002இல் நடைபெற்ற உலகச்சூழல் மகாநாட்டிற்குக் கருப்பொருளாக அமைந்தது. இதன்மூலம் இவ்வபிவிருத்திக் கோட்பாட்டின் முதன்மையை விளங்கிக் கொள்ள முடியும்.


நிலையான அபிவிருத்தியானது சூழலைச் சீர்குலைக்காத அபிவிருத்தி, பொருளாதார ரீதியிலான அபிவிருத்தி, சமுதாய மேம்பாட்டிற்கான அபிவிருத்தி என்ற மூன்று விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சூழலின் இயல்பு நிலையை அதன் சமநிலையைப் பேணி சூழலைச் சீர்குலைக்காத வகையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுமாயின் அது நிலையான அபிவிருத்தியாகக் கருதப்படும். எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி உலக நாடுகள் யாவும் தமது இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளின் அது நிலையான அபிவிருத்தியாகும். பொருளாதார அபிவிருத்தியின் பயனானது சமூகத்தின் சகல பிரிவினரிடையேயும் சம அளவிற் கிடைக்க வழி செய்யப்படுமாயின் அது சமூக அபிவிருத்தியாகும். கிராம அபிவிருத்தியிலும் கூடிய கவனம் செலுத்தி அதன் மூலம் சமூகத்தின் சகல பிரிவினரும் வாழ்க்கை நிலையில் சமமாய் இருப்பது உறுதி செய்யப்படுமாயின் அது நிலையான அபிவிருத்தியாகும்.

உலக நாடுகள் அனைத்தும் சூழலைச் சீர்குலைக்காத அபிவிருத்தியை மேற் கொள்வதோடு இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதோடு, கிராம - நகர மக்களிடையே சமூக பொருளாதார நிலையில் அசம நிலையை ஏற்படுத்தாது கல்வி, சமூக நல வசதிகள், தொழில் வாய்ப்புக்களை அதிகரித்து அதன்மூலம் சமூகத்தின் சகல பிரிவினரும் வாழ்க்கை நிலையில் சமமாய் இருப்பதை உறுதிப்படுத்துவதன் ஊடாக நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.


**வாழ்க்கையில் இழந்து போனால்**
**திருப்பிப் பெறமுடியாத விஷயங்கள்**

1. உச்சரிக்கப்பட்ட சொல்
2. தவறவிட்ட வாய்ப்பு
3. கடந்துபோன நிமிடம்

# பாடசாலை மாணவரது கற்றல் அடைவு மதிப்பீட்டின் அண்மைக்காலப் போக்குகள்



**திரு. திருநாவுக்கரசு தீபன்**
B.A., Dip.in.Edu., Spl. Trd(Art)
சைவப்புலவர்
ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி



கற்றலில் ஈடுபடும் ஒருவர் அதன் பலாபலன்களை அறிவது அச்செயலின் தொடர்வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். அதுவும் பிற நபர்களுடன் தொடர்பு கொள்ளும் விதத்தில் செயற்படும் ஒருவர் தனது செயல் என்பதை அறிந்திருப்பது அவருடைய செயற்பாட்டின் வெற்றிக்கு அவசியமானதாகும். அவ்விதமான அறிவைப் பெற நாம் மேற்கொள்ளும் நடைமுறையை மதிப்பிடுதல் என அழைக்கின்றோம். அம் மதிப்பிடல் மூலம் நாம் எமது செயலில் கடைப்பிடிக்கும் வழிமுறைகளை எமது நோக்கத்தின் இலக்கை நோக்கிக் கொண்டு செல்லலாம். அம் மதிப்பீட்டின் பெறுபேறுகள் எமது செயற்பாட்டின் நெறிமுறைகளை அறிந்து கொள்ள வழிவகுக்கும். அதே போலவே வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியரும் மதிப்பிடுதலைக் கையாளுகின்றார்.

கற்பித்தல் தொடர்பான தமது சுய மதிப்பீட்டிற்கும், தமது கற்பித்தல் பணியில் மாணவர்கள் எந்த நிலையில் உள்ளார்கள் என்பதனை அறியவும், மாணவர்களால் மேற்கொள்ளப்படக்கூடிய பணிகள் எவையென அறிந்து கொள்ளவும் ஆசிரியர் மதிப்பீட்டை மேற்கொள்வார்.

மதிப்பீட்டின் மூலம் மாணவன் தன்னைப் பற்றிய சொந்தத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். நான் கல்வி நிலையில் எவ்வாறு உள்ளேன்? என்னால் எதைச் செய்ய முடியும்? என்பது போன்ற வினாக்களுக்கு விடை அளிப்பதன் மூலம் மாணவன் தன்னைப் பற்றிய கல்விசார் மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விசார் தகைமைகளை அறிந்து கொள்ள ஆசிரியர் மேற்கொள்ளும் மதிப்பீடு உதவும். குறித்த பாடத்துறைக்கு மாணவர்களைத் தெரிதல், வகுப்பேற்றல், மாணவர்களின் ஆற்றல் நிலை சார்பாகத் தரம்பிரித்தல் போன்ற தேவைகளுக்காக மதிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது.

மதிப்பீடு பின்வரும் நிலைமை சார்ந்து அமையும்

- கற்பித்தல் சார்பானது
- மாணவன் கற்றல் சார்பானது
- நிர்வாகம் சார்பானது
- கலைத்திட்ட மாற்றம் சார்பானது
- பரிகாரப் போதனைப் பணிகளை மேற்கொள்ளல் சார்பானது

மதிப்பீடு என்பது கல்வி இலக்குகளுடன் தொடர்புடைய மாணவர்களின் ஆற்றல்களைப் பொருத்தமான மதிப்பீட்டுக் கருவி மூலம் சோதனையிட்டுப் பெறப்படும். மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களின் ஆற்றலின் தரத்தை நிர்ணயிக்கும் செயற்பாடு என்றும், மாணவர்களின் அடைவுநிலைக்கு விளக்கம் கொடுக்கும் செயல் என்றும் வரைவிலக்கணம் கொடுக்கலாம்.

கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் மதிப்பீடு மிகவும் முக்கியம். ஆசிரியர் தனது கற்றல் கற்பித்தலுக்காக மாணவர்கள் சார்பாக எடுத்துக்கொண்ட குறிக்கோளை மாணவர்கள் அடைந்தார்களா என அறிய வேண்டியுள்ளது. எனவே கற்பித்தல் கற்றல் செயற்பாட்டின் இறுதிப் படியாக மதிப்பீடு அமையும்.

மதிப்பீடு என்று சொல்லும் போது (Evaluation) ஒரு செயலுக்கு அல்லது செயலின் அளவுக்கு விளக்கம் அளிக்கின்ற செயற்பாடு அல்லது ஒரு செயலின் விளக்கத்தினைத் துணியும் செயற்பாட்டைக் குறிக்கும். இதனை மதிப்பிடுதல், மதிப்பெண், மதிப்பீடு என்ற பதங்களால் அழைக்கின்றோம்.

அளவிடப்படும் அம்சம் மாணவர் நடத்தை சார்பாக வரையறுக்கப்பட வேண்டும். வரையறுக்கப்படும் அம்சத்திற்கேற்ப தயார் செய்ய வேண்டும். மதிப்பீட்டில் பெறப்பட்ட அளவீட்டினைத் தொகுத்து விளக்கமளிக்க வேண்டும். இவ்வாறு விளக்கமளிக்கும் பொழுதுதான் மாணவன் தேர்ச்சி நிலை பற்றியும் கற்றல் நிலைபற்றியும் சொல்லக் கூடியதாயிருக்கும்.

கல்வியின் இலக்குகளை அடைவதில் மாணாக்கர்களிடம் எந்தளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அளந்தறியும் கருவிகளே பள்ளியில் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு முறைகளாக சமீபகாலத்தில் விரிவடைந்துள்ளன. ஆகவே கல்வியில் அளவிடலின் பரப்பு விரிவடைந்துள்ளது. மாணவர் வளர்ச்சியை மதிப்பிடுதலில் கல்வித்திட்டம், பாடத்திட்டம் ஆகியவற்றின் இறுதி நோக்கங்களாகக் கருதப்படுவன யாவும் அளவிடப்படுதலில் இன்றியமை யாதன ஆகின்றன.

மாணாக்கரது கல்வி வளர்ச்சி பற்றிய அறிவினைப் பெறுவதற்குப் பள்ளி ஆண்டின் இறுதியில் மட்டும் தேர்வு நடத்துவது சரியன்று. கற்றலினால் எழும் நடத்தை மாறுதல்கள் பலவகைப்பட்டனவாகவும் தொடர்ந்து பாடசாலை ஆண்டு முழுவதும் எழுவனவாயும் இருத்தலால் தொடர்ச்சியாக இடையிடையே மாணாக்கர் கல்வி வளர்ச்சியினை ஆசிரியர் அறிய முயலுதல் வேண்டும். இதன் காரணமாக இன்று தவணை பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், இடைத்தவணைப் பரீட்சைகள், பாட முடிவில் இடம்பெறும் பரீட்சைகள் என்பன

இடம்பெறுகின்றன. கற்றல் கற்பித்தல் நடைபெறும் போதே மதிப்பீடும் கணிப்பீடும் இடம்பெற்ற வண்ணம் இருக்கின்றன.

1980களில் உலகக் கல்வி முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இது வரையில் நடைமுறையில் இருந்துவந்த "மதிப்பீடு" என்ற சொல்லுக்குப் பதிலாக, கணிப்பீடு (Assessment) என்ற சொல் அறிமுகமானது. கணிப்பீடு என்ற சொல் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையே இடைவினைத் தாக்கத்தினை ஊக்குவித்தன. மேலும் மாணவன் தனது அறிவினையும் பயன்படுத்துவதோடு தேர்ச்சி மற்றும் திறன்களை வெளிப்படுத்த வழிகோலின. இவற்றின் மீதான விசேட கல்விசார் அணுகுமுறைகள் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் எண்ணக்கருக்கள், உபாயங்கள் ஆகியவற்றிலும் பாரிய மாற்றங்களுக்கு வித்திட்டன.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டினூடாக (School Based Assessment) மாணவர் துலங்கல் சார்ந்து தகவலைச் சேகரித்தலும் விளக்கமளித்தலும் பதிவு செய்தலும் பயன்படுத்தலும் ஆகிய செயற்பாடுகள் கணிப்பிடப்படும். பாடசாலை மட்டக் கணிப்பீடானது சமநிலையான ஆளுமைப் பண்பை மாணவர்களில் வளர்ப்பதை நோக்காகக் கொண்டது.

**கணிப்பீட்டுச் செயற்பாட்டின் நோக்கங்கள்**

- மாணவரின் அக, புறச் சூழலுக்கு உதவும் வகையில் அவர்களின் கற்றல் முன்னேற்றம் பற்றிய முன்னூட்டலை மாணவரும் ஆசிரியரும் பெற்றுக் கொள்ள உதவும்.
- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனும் விளைதிறனும் உடையதாக்குதல்
- குறித்தகால இடைவேளைகளின் போதும் தவணை, வருட முடிவிலும் மாணவர்களின் பெறுபேறுகள் தொடர்பான தகவலை வழங்குதல்.

பாடசாலை மட்டக் கணிப்பீடானது இலங்கையில் நடைமுறையிலிருந்த பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் புதியதொரு உபாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது இடைநிலையிலுள்ள சகல வகுப்புக்களுக்கும் இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. க.பொ.த சாதாரணதர, உயர்தரப், பரீட்சைப் பெறுபேறுகளுடன் கணிப்பீட்டுத் தரங்களைச் சேர்த்துத் தரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

5E மாதிரியின் இறுதிக் கட்டமாக குறிப்பிடப்பட்ட போதிலும் இது பாட அலகினை மாணவர்கள் கற்கத் தொடங்குவதில் இருந்தே நடைபெறுவதாக இருக்கும். இதன் போது மாணவர்கள் குறித்த எண்ணக்கருக்களையும், அறிவினையும் விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்பதனைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு ஆசிரியர் தனது மதிப்பீட்டின் போது கணிப்பீட்டு நியதிகளையும் பயன்படுத்த வேண்டும். கற்றல் கற்பித்தலின் போது ஒவ்வொரு கட்டத்திலும் மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆசிரியர் தொடர்ச்சியாக மதிப்பிடுவார்.

இதுவரை காலமும் குறிக்கோளை மையமாகக் கொண்ட கலைத்திட்ட நடைமுறையே இருந்தது. இப்புதிய கலைத்திட்டத்தின் போது பாடங்கள் ஒவ்வொன்றும் நன்கு பகுத்தாராயப்பட்டு இனங்காணப்பட்ட பாடத்தேர்ச்சிகளின் அடிப்படையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் 5E மாதிரி அணுகுமுறை சிறப்பிடம் பெறுகின்றது. இவ் அணுகுமுறையில் மதிப்பிடலும் கணிப்பீடும் என்பது இறுதிக் கட்டமாக அமைகின்றது.

கணிப்பீடு செம்மையாக நடைபெறுமாயின் வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியில் (நிபுணத்துவம்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக்கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம் மட்டத்தில் என்பதைக் கண்டு கொள்வதாகும். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தொடர் அலகினூடாகச் செயற்படுத்தப்படும் புதிய பாடத்திட்டமானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைகின்றது. கண்டறிதலில் காணப்படும் அறிக்கை சமர்ப்பிக்கும் விளக்கம் அளித்தலில் மதிப்பீடும் இடம்பெறுகின்றது.

கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர் பெற்றுள்ள திறனின் அளவு மதிப்பீட்டின் மூலம் ஆசிரியரால் அளந்து கொள்ளப்படும். கணிப்பீடு தொடர்பான கலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல், கற்பித்தல் செயற்பாடு விரிவு படுத்தப்படுகின்றது. கணிப்பீட்டுக்கு முக்கியத்துவமளிக்கும் 5E மாதிரியிலமைந்த இப்புதிய கல்விச் சீர்திருத்தம் எத்தகைய வெற்றியைத்தரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


❖ ஆறுமுகம், வ., (1984), வகுப்பறைக் கற்பித்தல், லங்கா ஏசியன் பிறிண்ட்.

❖ சின்னத்தம்பி, க., அளவீடும் மதிப்பீடும்.

❖ கருணாநிதி, மா., (2004), கல்வியியலாளன், கல்வியியல் வெளியீட்டு நிலையம்.

❖ சுப்பு செட்டியார், ந., (1985), கல்வி உளவியல் கோட்பாடுகள்.

❖ சந்தானம், S., (1987), கல்வியின் உளவியல் அடிப்படைகள்.

❖ வரதராஜா, நா., (2001), ஆசிரியத் தொழில்.

❖ ஜெயராசா, சபா., (2007), கலைத்திட்டம், அகவிழி.

❖ பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம்.
(SBA/RD/AL/2004/01, SBA/RD/2001/01, NETS/RD/OL/01)


**ஆசிரியர் ஒரு முகாமையாளர்**

ஒவ்வொரு ஆசிரியரும் குறிப்பிட்ட மாணவர் தொகையினருக்கு ஒரு முகாமையாளரே. வகுப்பறையானது, குழு நடத்தையின் சகல திட்டங்களும், ஊக்குவித்தல் நுட்பங்களும், தலைமைத்துவமும், தொடர்பாடலும் பிரயோகிக்கப்பட வேண்டிய பாடசாலை என்னும் நிறுவனத்தின் சிறுகூறாகும்.

-ஹண்டி-

# மாரடைப்பு

# (Myocardial Infarction)



செல்வி வே. சிவலதாயினி

(சித்த மருத்துவத்துறை மாணவி)



அறிமுகம்

தற்காலத்தில் இதய நோய்கள் மிகவும் அதிகரித்து வருகின்றன. இதய நோய்களைப் பற்றிய அறிவு அந்நோய்களைத் தவிர்த்துக் கொள்ள உதவும். இதயம் பம்பி போல் தொழிற்பட்டு எமது உடலிலுள்ள குருதியைச் சுற்றோட்டமடையச் செய்கிறது. இத்தொழிற்பாடு இதய நோய்களினால் தடங்கலடைகிறது. எனவே, இதய நோய்களைப் பற்றி அனைவரும் கட்டாயம் அறிந்திருத்தல் அவசியமாகும். இதயம் சம்பந்தமான நோய்கள் பொதுவாக பின்வரும் குணம் குறிகளைக் காட்டலாம். அவையாவன: நெஞ்சுவலி, இதயப்படபடப்பு, தலைசுற்றுதல், மூச்சிறைத்தல், மூச்சு வாங்க அவதிப்படுவதனால் நித்திரையிலிருந்து எழுதல், உடலில் - முக்கியமாக கால்களில் வீக்கம் ஏற்படுதல், களைப்பு போன்றனவாகும். முடியுரு சம்பந்தமான இதய நோய்களினால் ஏற்படும் குணம் குறிகளுள் இடது பக்க நெஞ்சுவலி மிகவும் முக்கியமானதாகும்.

சாதாரணமாக இதயம் சம்பந்தமான சில நோய்கள் பிறப்பிலேயே ஏற்படலாம். இவை பொதுவாக வால்புகளைத் தாக்குவதுடன் குழந்தைகளிலும், இளம் பராயத்தினரிலும் காணப்படும். வயதானவர்களில் ஏற்படுகின்ற நோய்களுக்குப் புகைத்தல், கொழுப்புப் பதார்த்தங்களை அதிகளவில் உண்ணல், உடல்நிறை அதிகரிப்பு, மன அழுத்தம் ஆகியவையே முக்கிய காரணங்களாகும். இதய நோய்களில் மிக முக்கியமான நோய் மாரடைப்பாகும். குருதிக் குழாயினுள் குருதியோட்டம் முற்றாகத்தடைப்படுமானால் இதயத்தசைக்கான குருதி முற்றாகத் தடைப்பட்டு மாரடைப்பு உருவாகும். மாரடைப்பு மிகவும் அபாயகரமான நோயாகும். மாரடைப்பு ஏற்பட்டால் இதயம் சில சமயங்களில் முற்றாகத் தொழிற்படாது அந்நோயாளி இறக்க நேரிடும். மாரடைப்பு உருவாவதற்கான முக்கிய காரணம் குருதிக்கட்டி, முடியுரு நாடியை அடைப்பதாகும். இதுவே ஆங்கிலத்தில் Coronary thrombosis எனப்படும்.

**மாரடைப்பின் போது ஏற்படும் நெஞ்சு வலி**

மாரடைப்பின் போது பொறுக்க முடியாத நெஞ்சுவலி ஏற்படும். சில சமயங்களில் நெஞ்சுவலி யின்றியே மாரடைப்பு ஏற்படலாம். எந்தவொரு மருத்துவ நிலையத்திலும் நோயாளிகளிடையே சாதாரணமாக நெஞ்சுவலி ஒரு பொதுவான குணம் குறியாகும். நெஞ்சுவலி பல்வேறு காரணிகளால் உருவாகலாம். சுவாசப்பை சம்பந்தமான நோய்கள், விலா என்பு நோய்கள், குடற்புண்கள், பெருநாடி நோய்கள் எனப் பல்வேறு காரணிகளால் நெஞ்சுவலி உருவாகலாம். மாரடைப்பின் போது உருவாகும் நெஞ்சுவலி சில குணம் குறிகளை இனங் காட்டும். நெஞ்சுவலியானது நெஞ்சறையின் மத்தியில் உருவாகி நெருங்குகின்றவாறு இடது கைக்கு அல்லது இடது தாடைக்குப் பரவுமாயின் அது முடியுரு சம்பந்தமான இதய நோய்களினால் ஏற்படும் நெஞ்சுவலியாகும். வழமையாக இவ்வலி சுவாசத்தோடு வேறுபடாது. மாறாக இவ்வலி பளுவான வேலை செய்யும் போது அதிகரிக்கலாம். ஓய்வின் பின் தேகப்பயிற்சி செய்கையில் அல்லது குளிர் சீதோசன நிலைமைகளில் இவ்வலி அதிகரிக்கும். மன அழுத்தத்தை உருவாக்கும் நிலைமைகளிலும் இவ்வலி அதிகரிக்கும். இவ்வலி ஓய்வெடுக்கும் போது நீங்கிவிடும். இவ்வாறான சிலருக்கு நெஞ்சுவலி தொடர்ச்சியாக ஏற்படாது இடையிடையே ஏற்படலாம். இவ்வாறானவர்கள் வைத்தியரிடம் சோதனை செய்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் இவ்வலி அதிகரித்து ஒரு பயப் பிராந்தியுடன் வியர்த்தலும் கூடி மூச்சிரைக்கும். இது ஆபத்தானது. இதுவே மாரடைப்பிற்கான அறிகுறியாகும். மாரடைப்பின் போது ஏற்படும் நெஞ்சுவலியைத் தாங்க முடியாது. இவ்வாறு ஒரு நோயாளி அவஸ்தைப்படுவாராயின் வைத்திய ஆலோசனை உடனடியாகத் தேவை.

நெஞ்சுவலி உள்ளவருக்கு மேற்கொள்ளப்படும் சில சோதனைகள் அந்நெஞ்சுவலி மாரடைப்பு நோயினால் உருவாகின்றதா என்பதைத் தெளிவுபடுத்தும். நெஞ்சுவலி உள்ள ஒருவருக்குச் செய்யப்படும் முக்கியமான பரிசோதனைகளில் ஒன்று E.C.G ஆகும். மாரடைப்பு ஏற்பட்ட ஒருவரில் E.C.G தெளிவான மாற்றங்களைக் காட்டும். E.C.Gயை மட்டும் நம்பி மாரடைப்பை நிர்ணயித்துக் கொள்ள முடியாது. அந்நோயாளியின் குணங்குறிகள் மிகவும் முக்கியமானவை.

மாரடைப்பின் பின்னர் மேற்கொள்ளப்படும் குருதிச் சோதனைகள் சிலவும் மாரடைப்பை நிர்ணயிப்பதில் உதவி செய்யும். வழமையான ஒருவரின் குருதியில் $5000 - 7000/mm^3$ அளவு வெண்குருதிக் குழியங்கள் காணப்படும். வழமையாக மாரடைப்பு ஏற்பட்ட பின்னர் இவற்றின் எண்ணிக்கை $12000 - 15000/mm^3$ வரை அதிகரிக்கும்.

மாரடைப்பை நிர்ணயிப்பதற்குச் செய்யப்படும் முக்கியமான குருதிச் சோதனை யாதெனில் சில வகை இதய நொதியங்களைப் பற்றி ஆராய்வதாகும். இந்நொதியங்கள் மாரடைப்பின் பின்னர் அதிகரிக்கலாம். இந்நொதியங்களின் குருதி அளவுப் பிரமாணங்களில் ஏற்படும் மாற்றங்களை அனுமானிப்பதன் மூலமும் மாரடைப்பைப் பற்றிய சில தகவல்களை வைத்தியர் பெற்றுக்கொள்வார்.

**மாரடைப்பு நோய்க்கான மருத்துவ சிகிச்சை**

தற்காலத்தில் மாரடைப்பு நோய்க்கு மருத்துவ சிகிச்சை அதிதீவிர சிகிச்சை கண்காணிப்புப் பிரிவில் வழங்கப்படுகிறது. வழமையாக மாரடைப்பு நோயாளிக்கு அவரது வலியை நீக்கவும், பயத்தைப் போக்கவும், அதிர்ச்சியைத் தவிர்க்கவும் மோபின் (Morphine) எனும் மருந்து ஊசி

மூலம் வழங்கப்படும். தற்காலத்தில் சிறந்த புதியவகை மருந்துகள் உள்ளன. இவற்றுள் ஒன்று டிஸ்யூபிளாஸ்மினோஜன் Tissueplasminogen Activator (t-pa) ஆகும். இம்மருந்து விலை கூடியது. ஆனால் இரத்த உறைவுக்கெதிராக வெகுவாகத் தொழிற்படுகிறது. இம்மருந்து சிறப்பாகத் தொழிற்படுவதற்கு மாரடைப்பு ஏற்பட்டு 12 மணித்தியாலங்களுக்குள் நோயாளிக்குக் கொடுத்தல் வேண்டும். இதனைக் காட்டிலும் வேறு பல மருந்துகளையும் மருத்துவர் பாவிப்பர். இவ்வாறான மருந்துகள் அவ்வேளையில் உள்ள நிலைமைக்கு ஏற்ப மருத்துவரினால் உபயோகிக்கப்படுகிறது.

குறுந்தாக்குகள் ஏற்படும் போது அதாவது திடீரெனத் தாக்கம், ஓர் கண்ணில் பார்வை மங்குவது அல்லது பார்வை அற்றுப்போதல் நிகழும். உதாரணமாக நீங்கள் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும் போது சடுதியாக அது மறைந்து தோன்றலாம், கடைக்குப் போகும் போது சடுதியாக இடதுகால் பலவீனம் கொள்கிறது. தலைச்சுற்றுதல் அல்லது இறுகி வருதல் போன்ற பாதிப்பு முகம் அல்லது கைகள் வழங்காதது போன்ற ஓர் பிரமை இவ்வாறான குறுந்தாக்குகள் ஓர் எச்சரிக்கைச் சமிக்ஞை ஆகும். இவை மாரடைப்பு, பக்கவாதம் (Stroke) ஆகிய கொடிய நோய்களுக்கு முன்னறிவித்தல்களாகும். இவை மூளைக்குக் குருதி பாய்வது தடங்கல் அடைவதால் ஏற்படுகிறது.

மாரடைப்புத் தாக்குதலுக்கு உட்பட்டவுடன் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். கட்டிலில் ஓய்வும், பழுதுபட்ட இதயத் தசைகள் புத்துயிர்ப்புப் பெறும்வரை மிக அவதானமாகவும் முதல் 7 -10 நாட்களுக்கு வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெறவேண்டும்.

**மாரடைப்பை தடுப்பதற்கான வழிமுறைகள்**

மாரடைப்பைத் தடுப்பதற்கான வாழ்வியல் வழிமுறைகள் பலவுள்ளன. அவையாவன; மாரடைப்பைத் தடுப்பதற்கான மருந்துகளைப் பாவித்தல். அதாவது மாரடைப்பு இதயத்திற்குக் குருதி வழங்கும் குருதிக் குழாய்களினால் குருதிக்கட்டி உருவாகுவதனால் உருவாகிறது. குருதிக்கட்டி உருவாவதைத் தடுப்பதற்கு சில மருந்துகள் தற்காலத்தில் வழக்கத்தில் உள்ளன. இவற்றுள் அஸ்பிறின் முக்கியமானது. வைத்திய ஆய்வுகளின்படி அஸ்பிறின் குறைந்தளவில் உபயோகிக்கப்படும் இடத்து மாரடைப்பைத் தடுக்கலாம். அஸ்பிறின் குடற் புண்களை உருவாக்குவதால் மிகவும் கவனமாக வைத்திய ஆலோசனைப்படி உபயோகிக்க வேண்டும்.

அடுத்து முறையான தேகப்பயிற்சி செய்தல். இதனால் எமது உடலில் உள்ள மேலதிக தேவையற்ற பதார்த்தங்கள் வெளியேறுகின்றன. முறையான தேகப்பயிற்சி உடல் நிறையைச் சீராகப் பேண உதவும். காற்றுள்ள நிலையில் செய்யப்படுகின்ற தேகப்பயிற்சி (Aerobics Exercises) குருதியில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கும். இது ஆரோக்கிய வாழ்விற்குச் சாலச் சிறந்தது.

அடுத்தது உடல் நிறையைச் சீராக பேணுதல். அதாவது உடல் நிறை அதிகரிக்குமாயின் பல்வேறு நோய்கள் ஏற்படலாம். கொழுப்பு, கொலஸ்ரோல் உள்ள உணவு வகைகளை உண்ணாமல் கொழுப்புக் குறைவான உணவுகளை உண்பதால் மாரடைப்பைக் குறைக்கலாம்.

மருத்துவத் தன்மை உள்ள உணவுப் பதார்த்தங்களான வெள்ளைப்பூண்டு (உள்ளி),

வெங்காயம், மூலிகைகள் போன்றவை சிறந்தவையாகும். இவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அடுத்து புகைத்தலை நிறுத்தல், நீரிழிவு, உயர்குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்தல். தற்காலத்தில் இவ்விரு நோய்களும் பெரும்பாலான இளம்பராயத்தினரைப் பாதிக்கின்றன. இவை இதய நோய்கள் உருவாவதை ஊக்குவிக்கின்றன. மன அழுத்தத்தைத் தவிர்த்தல். மன அழுத்தம் ஆபத்தானது. அது மனிதனை வெகுவாகப் பாதிக்கும். கொலஸ்ரோலைக் குறைக்கும் மருந்துகளை உபயோகித்தல், தடுப்புச் சத்திர சிகிச்சை, ஆழ்நிலைத் தியானத்தையும், யோகாசனத்தையும் கடைப்பிடித்தல் மூலமும் மாரடைப்பைத் தடுக்கலாம்.

பெண்கள் இதய நோய்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். கருத்தடை மாத்திரைகள், உயர்குருதி அழுத்தம் உடைய அல்லது நீரிழிவுடைய அல்லது புகைக்கின்ற பெண்களிடையே அதிகளவில் மாரடைப்புத் தோன்றுவதை ஆய்வுகள் காட்டுகின்றன. முக்கியமாக, கருத்தடை மாத்திரைகளைப் பாவிக்கும் பெண்கள் தமது குருதி அழுத்தத்தைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

அண்மைக் காலமாக மாதவிடாய் நீங்கிய வயதான மாதருக்கு சில ஓமோன் வகைகள் சிகிச்சை மூலம் வழங்கப்படுகின்றது. (Hormone Replacement Therapy) இவ்வாறானவர்களிடையே மாரடைப்பு குறைவாக ஏற்படுவது அவதானிக்கப்படுகிறது.

**மாரடைப்பைத் தடுப்பதற்கான உணவுகளைத் தேர்ந்தெடுத்தல்**

உணவைச் சரியாக நிர்ணயித்துக் கொள்வது ஆரோக்கியமான வாழ்விற்குச் சிறந்த வழியாகும். ஒருவர் மாரடைப்பைத் தடுத்துக் கொள்வதாயின் சில வழிமுறைகளைப் போசனை முறைகளில் கடைப்பிடிக்க வேண்டும். மாரடைப்பைத் தடுக்க முனைவதற்காக உணவில் கொழுப்பை மிகவும் குறைத்துக்கொள்ளக் கூடாது. கொழுப்பு நரம்புகள், மூளை வளர்ச்சிக்கும் பல்வேறு கலத் தொழிற்பாட்டிற்கும் அத்தியாவசியமாகும். அங்கீகரிக்கப்பட்ட நிறையைவிட அதிகமானால் நீங்கள் உடற்பருமன் கூடியவர். எனவே உடற்பருமனைக் குறைத்துக் கொள்ள சாத்தியமான ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும்.

குருதிக் கொலஸ்ரோலைக் குறைக்க முயலும் ஒருவர் முதலில் உணவுச் சிகிச்சை முறையைப் பின்பற்ற வேண்டும். அதற்குக் குறையாவிடின் மருந்துகளைப் பாவிக்கலாம். இவ்வாறுள்ள ஒருவர் தனது உடலுக்குத் தேவையான சக்தியின் அளவைக் காட்டிலும் அதிகமான சக்தியைத் தரக்கூடிய உணவைப் பாவிக்கக்கூடாது. சில மருத்துவத் தன்மையான பதார்த்தங்களை உள்ளடக்கிய உணவுகளை மேலதிகமாக உபயோகிக்கலாம். இதன் நிமித்தம் அவ்வுணவையே மிதமிஞ்சி உண்ணலாகாது. உணவுகளைத் தேர்ந்தெடுக்கும் போது அவை உற்பத்தி செய்யப்பட்ட விதம், உணவின் கலோரிப் பெறுமானம், அவற்றில் ஒழிந்துள்ள எண்ணெய்ப் பெறுமானம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாரடைப்பைத் தடுப்பதற்காக கொலஸ்ரோல் அதிகமாக உள்ள உணவைத் தவிர்க்க வேண்டும். முட்டை மஞ்சள்கரு, இறைச்சி வகைகள், இறைச்சியின் சில பகுதிகளான முளை, ஈரல், கடல் உணவுகளான சிப்பி, சிங்கி இறால், பால் உணவுகளான பாற்கட்டி, வெண்ணெய், கறந்தபால் ஆகியவை கொலஸ்ரோலை அதிகளவு கொண்டிருக்கும். அத்தகைய உணவுகளைத் தவிர்க்கவும். எந்தவொரு தாவர எண்ணெயும் கொலஸ்ரோலை இயற்கையாகக்

கொண்டிருப்பதில்லை. மாறாக அவ்வெண்ணெய்களில் உள்ள கொழுப்பு அமிலங்களே இதய நோய்களுக்குக் காரணமாகும். எனவே தாவர எண்ணெய்களில் கொலஸ்ரோல் இல்லையெனக் கருதி அவற்றின் கொழுப்பெண்ணெயின் வகையை நிர்ணயிக்காது உபயோகிப்பது முட்டாள்தனமானதாகும்.

அன்ரிஒட்சிடன்ற் அதிகமாக உள்ள உணவுகளைஉண்ணலாம், மஞ்சள் நிறமான பழங்கள், கீரை வகைகள், செம்மஞ்சள் நிறமான மரக்கறிகள் போன்றவற்றை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். பல்வேறு மருத்துவக் குணமுள்ள பதார்த்தங்களான உள்ளி, வெங்காயம், சிட்டக்கி காளான் சூப், கரையக்கூடிய நார்களைக் கொண்ட பதார்த்தங்களான அப்பிள், ஓட் ஆகியவற்றையும், கரையக்கூடிய நார்ச்சத்துள்ள பதார்த்தங்களையும் சேர்ப்பது உடலுக்கு நல்லது. இந்நோயாளிகள் மிதமிஞ்சிய புலால் உணவை உண்ணக்கூடாது. இறைச்சி, இறால், கணவாய், பதப்படுத்தப்பட்ட மீன் வகைகள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். சிறு கடல் மீன்கள், தோல் அகற்றப்பட்ட கோழி இறைச்சி, ஆடைநீக்கிய பால்மா, யோக்கட் பாவிக்கலாம். அத்துடன் உணவுத் தயாரிப்பு முறைகளை அவதானித்து வாங்க வேண்டும்.

**மாரடைப்பின் பின் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிக்கு மறுபடியும் மாரடைப்பு பிற்காலத்தில் ஏற்படுவதற்கு சந்தர்ப்ப வாய்ப்புக்கள் மிகவும் அதிகம். எனவே மாரடைப்பு ஏற்பட்ட நோயாளி வைத்திய ஆலோசனைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். மாரடைப்பு ஏற்பட்ட உடனேயே புகைத்தலை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும். மாரடைப்பின் பின்னர் தேகப் பயிற்சி செய்வது மிகவும் சிறப்பானதாகும்.

தற்காலக் கருத்துகளின் பிரகாரம் மாரடைப்பிற்குப் பின் தீவிர உடற்பயிற்சி உடலுக்குச் சிறப்பானதாகும். கிழமைக்கு மூன்று தடவையாவது காற்றுள்ள நிலையிலான உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் விரைவாக நடத்தலாகும். மாரடைப்பின் பின் மருந்துகளை உட்கொள்ளல், உயர் குருதி அமுக்கம், நீரிழிவு நோய்களைக் கட்டுப்படுத்தல், தொழிலுக்குத் திரும்பல், வாகனம் செலுத்தல், உணவுத் தன்மைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான முறைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் நாமும் மாரடைப்பு நோயில் இருந்து விடுபடலாம்.

**வினைத்திறன் மிக்கவர்களின் குணாதிசயங்கள்**


1. *தனது சூழலைக் கட்டுப்படுத்தும் திறனுடையவராக இருப்பர்.*
2. *இலக்கு, முடிவுகள் பற்றிய தீர்மானத்துடன் செயலை ஆரம்பிப்பர்.*
3. *முன்னுரிமை அடிப்படையில் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பர்.*
4. *தொடர்பாடல், பங்குபற்றல் மூலம் தாம் வெற்றி பெறுவதோடு மற்றவர் களையும் வெற்றியடையச் செய்வர்.*
5. *தாம் முதலில் விளங்கி பின்னர் மற்றவர்களுக்கு விளக்கம் அளிப்பர்.*
6. *தொடர்புகளை ஒன்றிணைத்து உபாயங்கள் வகுத்து இலக்கினை அடைவர்.*

கலாநிதி ஸ்ரீபன் கூவே

# இலத்திரனியல் உலகினில் நுழைவோம்




திரு. வே. சிவசக்திவேல்
Spl. Trd.(Science)
ஆசிரியர்
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை





விஞ்ஞானத்தின் அபரிமிதமான வளர்ச்சியினால் உலகம் சுருங்கி உள்ளங்கையில் அடங்கிவிட்டது. இன்று மனிதன் தனக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளவும், தனது கருத்துக்கள், வெளிப்பாடுகளை புற உலகிற்குச் செலுத்தவும் பல்வேறு ஊடகங் களைப் பயன்படுத்துகின்றான். இலத்திரனியல் சார்ந்த அறிவும், கண்டு பிடிப்புக்களும் மனித நாகரிகத்தினை மிக உயர்வான இடத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டது.

தற்போது நாம் பயன்படுத்தும் பல்வேறு சாதனங்கள் இலத்திரனியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவையாகும். தற்கால உலகில் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் கருவிகள், கணினி, தொலைக்காட்சி, வானொலி, புகைப்படக் கருவிகள், பதிவு செய்யும் கருவிகள் யாவும் இலத்திரனியல் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும். எனவே இவற்றைப் பயன்படுத்தும் போது இலத்திரனியல் சார்ந்த அறிவினைப் பெற்றிருத்தல் அத்தியாவசியமானதொன்றாகும்.



**மின்கடத்தும் திறன்**

பதார்த்தங்களை அவற்றின் மின் கடத்துதிறனுக்கேற்ப வகைப்படுத்தலாம்.

மின்கடத்திகள் - இவை மின்னை நன்கு கடத்தும்

உதாரணம் : செம்பு, அலுமினியம், வெள்ளி போன்ற உலோகங்கள், காரீயம்

மின் காவலிகள் - இவை மின்னைக் கடத்துவதில்லை

உதாரணம் : பிளாஸ்ரிக், இறப்பர், பொலித்தீன்

குறைகடத்திகள் - இவை ஓரளவு மின்னைக் கடத்துபவை

உதாரணம் : சிலிக்கன், ஜேர்மானியம் போன்ற மூலகங்கள், ஈயசல்பேற்று, கலிலியம் ஆசனைற்று, இன்டியம் பொசுபேற்று போன்ற சேர்வைகள்.

பதார்த்தங்களின் மின் கடத்துதிறன், தடைத்திறன் பெறுமானத்தைக் கொண்டும் வகைப்படுத்தலாம். தடைத்திறன் உயர்வாக உள்ளவை கடத்துதிறன் குறைந்தவையாகவும் தடைத்திறன் குறைவாக உள்ளவை, கடத்துதிறன் உயர்ந்தவையாகவும் காணப்படும்.

| **பதார்த்தம்** | **தடைத்திறன்** | **கடத்துதிறன்** | **வகை** |
|---|---|---|---|
| வெள்ளி | $1.6 \times 10^{-8}$ | $6.25 \times 10^{7}$ | மின்கடத்தி |
| செம்பு | $1.7 \times 10^{-8}$ | $5.88 \times 10^{7}$ | |
| ஜேர்மானியம் | $6.5 \times 10^{-1}$ | $1.54$ | குறைக்கடத்தி |
| சிலிக்கன் | $2 \times 10^{3}$ | $5.0 \times 10^{-4}$ | |
| கண்ணாடி | $1.7 \times 10^{11}$ | $5.88 \times 10^{-12}$ | மின்காவலி |
| இறப்பர் | $1.0 \times 10^{16}$ | $1.0 \times 10^{-6}$ | |


மின்கடத்திகளின் கடத்துதிறன் $10^{4} - 10^{8}\ \Omega^{-1}\ m^{-1}$ ஆகவும்

குறைக்கடத்திகளின் கடத்துதிறன் $10^{-4} - 10^{2}\ \Omega^{-1}\ m^{-1}$ ஆகவும்

மின்காவலிகளின் கடத்துதிறன் $10^{-6}\ \Omega^{-1}\ m^{-1}$ இலும் குறைவாகவும் இருக்கும்.


**குறைக் கடத்திகள்**

கடத்திகளில் சுயாதீன இலத்திரன்களின் எழுமாற்றான அசைவினால் மின் எடுத்துச் செல்லப்படுகின்றது. குறைகடத்திகள் 0K ($-273^{\circ}C$) வெப்பநிலையில் சுயாதீன இலத்திரன்களைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அறை வெப்பநிலையில் சூழலில் இருந்து பெற்ற சக்தியின் காரணமாக பங்கீட்டு வலுப் பிணைப்பினை உடைத்துக் கொண்டு இலத்திரன்கள் இயங்கத் தொடங்கும். இவ்வாறு இலத்திரன் குறைவடைந்த இடம் ⊕ ஏற்றம் கொண்ட துளை எனவும் வெளியேறிய இலத்திரன்கள் ⊖ ஏற்றம் கொண்ட காவி எனவும் அழைக்கப்படும். சுயாதீன இலத்திரன்கள் துளைகளை விட சக்தி கூடியவை.





சிலிக்கன், ஜேர்மானியம் போன்ற மூலகங்கள் அறை வெப்பநிலையில் சிறிய அளவில் இலத்திரன்களை விடுவித்து மின்னோட்டத்தைக் கடத்தும் ஏற்றக் காவிகளாகத் தொழிற்படும்.

**p, n வகைக் கடத்திகள்**



இயற்கையில் குறைக் கடத்திகளின் கடத்துதிறனை அதிகரிப்பதற்குக் கட்டுப்பாட்டு நிலைமைகளின் கீழ் அவை மாசுபடுத்தப்படுகின்றது.


சிலிக்கன் 3ஆம் கூட்ட மூலகத்துடன் (போரனுடன்) மாசுபடுத்தப் படும் போது அதிகளவில் துளைகளை உருவாக்குவதால் pவகைக் குறைக் கடத்தி பெறப்படுகின்றது.



சிலிக்கன் 5ஆம் கூட்ட மூலகத்துடன் (ஆசனிக்குடன்) மாசுபடுத்தப்படும் போது அதிகளவில் சுயாதீன இலத்திரன்கள் உருவாக்கப்படுவதனால் n வகைக் குறைக்கடத்தி பெறப்படுகின்றது.

## p- n சந்தி

p வகைக் குறைக் கடத்தியையும் n வகைக் குறைக் கடத்தியையும் விசேட உபாயத்தின் மூலம் இணைப்பதனால் p-n சந்தி பெறப்படுகின்றது.




இங்கு p பக்கத்தில் மிகை ஏற்றக் காவிகளான துளைகளும் n பக்கத்தில் மிக ஏற்றக் காவிகளான இலத்திரன்களும் காணப்படுகின்றன. p-n சந்தியில் துளைகளும் இலத்திரன்களும் எதிர்த் திசையில் பரவலடைவதால் ஏற்றங்கள் நொதுமலடைந்து ஒரு வறிதாக்கற் பிரதேசம் தோன்றும். இப் பிரதேசத்தில் உருவாகும் தடுப்பு அழுத்தமே இலத்திரனியல் சாதனங்களின் உருவாக்கத்திற்கு மிகவும் பயன்பாடாக அமைகின்றது.

**சில இலத்திரனியற் கூறுகள்**

இருவாயிகள் (Diodes)


மூவாயிகள் (Transistors)

தொகையிடும் கருவிகள் (Integrated Circuits)

இலத்திரனியல் சுற்றுக்களில் இலத்திரனியல் அல்லாத சில மின் உப கூறுகளும் அடங்குகின்றன. அவை தடையிகள், கொள்ளளவிகள், நிலை மாற்றிகள், தூண்டிகள், ஒலிபெருக்கிகள், நுணுக்குப் பன்னிகள் என்பனவாகும்.

## இருவாயிகள் (Diodes)

p-n சந்தியின் இரு குறைக்கடத்திப் பகுதிகளிற்கும் இரு முனைவுகளைத் தொடுக்கும் போது உருவாகுவது இருவாயியாகும்.



இவை ஒரே திசையில் மின்னைக் கடத்துபவையாகும். இருவாயிகள் அவற்றின் பண்புகளிற் கேற்ப பல்வேறு வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.


- ❖ ஒளிகாலும் இருவாயி (LED) - சக்தியை ஒளியாக வெளிவிடும். சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் போன்ற நிற ஒளியினை வெளிவிடும். அலங்கார வேலைகளுக்கும், பாதைச் சமிக்ஞைகளிலும், மின் உபகரணங்களில் மின்னோட்டத்தை அறியவும் பயன்படுத்தப் படுகின்றது.
- ❖ சீராக்கும் இருவாயி - ஆடலோட்டத்தை (AC) நேரோட்டமாக (DC) மாற்ற உதவுகின்றது. ஒரு இருவாயி மூலம் அரை அலைச் சீராக்கமும் நான்கு இருவாயிகள் மூலம் முழு அலைச் சீராக்கமும் ஏற்படுத்தப்படுகின்றது. வலுப் பொதிகளில் பயன்படுத்தப்படுகின்றது.
- ❖ ஒளி உணரும் இருவாயி (LDR) - ஒளிக் கதிர்கள் விழும் போது தடை குறைவடைந்து மின்னோட்டத்தைப் பாயவிடும். கமராக்கள், அபாய அறிவிப்புச் சமிக்ஞைகள், ஒளிப்புலக் கூர்மை வேலைகள், ஒளியியல் நாரிலிருந்து புலன் பெறுதல் போன்றவற்றிற்குப் பயன்படும்.

**மூவாயிகள் (Transistors)**

சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் வெப்பவால்புகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மூவாயி அமைந்துள்ளது. 1956ல் நோபல் பரிசு மூவாயியை கண்டுபிடித்தமைக்காக வில்லியம் சொக்ஸி, வோல்டர் பிறட்டன், ஜோன் பேர்டின் எனும் மூவருக்கும் வழங்கப்பட்டது.

திரான்ஸ்சிஸ்ரரில் pnp, npn எனும் இரு வகைகள் உண்டு.

pnp - p வகைக் குறைக்கடத்திகளிற்கிடையில் n வகை படை காணப்படுதல்
npn - n வகைக் குறைக் கடத்திகளிற்கிடையில் pவகை படை காணப்படுதல்





திரான்சிஸ்ரரின் மூன்று முனைகளாக
B - அடி (Base)
C - சேகரிப்பான் (Collector)
E - காலி (Emittor) காணப்படுகின்றது.

இதில் C குறைவாக மாசுபடுத்தப்பட்ட பகுதியும் E கூடுதலாக மாசுப்டுத்தப்பட்ட பகுதியுமாகும். திரான்சிஸ்ரரானது இலத்திரனியல் சுற்றுக்களில் ஆளியாகவும், மின்னோட்ட விரியலாக்கியா கவும் தொழிற்படுகின்றது.

**தொகையிடும் சுற்றுக்கள்** (Integrated Circuits IC)

இருவாயி, மூவாயி, தடையி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுத் தொகுதியாக தொகையிடும் சுற்றுக் காணப்படுகின்றது. தொலைக்காட்சி, கணினி, வானொலி, நாடாப்பதியி, கணிப்பான், சுரமண்டலம் (Organ) போன்றவற்றில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.




1960களில் கண்டுபிடிக்கப்பட்டு 1970களில் இலத்திரனியல் சுற்றுக்களில் பயன்படுத்தப்பட்டது. குறைந்த செலவில் அதிக வினைத்திறனுடன் பல்வேறு வடிவங்களில் சிப்ஸ் (Chips) களாக சிறிய பருமனில் காணப்படுகின்றது. தொகையிடும் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் எளிய இலத்தரனியல் சுற்றுக்களை இலகுவாகத்

தயாரிக்க முடியும். எளிய வானொலிக் கருவிகள்,விளையாட்டுப் பொருட்கள் போன்றன நுட்பமான செயற்பாட்டுடன் வடிவமைக்கப்படுகின்றன. விளம்பரத் துறையிலும், ஒலி, ஒளி உபகரணங் களிலும் அதிகளவு ICக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை குறைந்த விலையில் பெறக் கூடியதாக உள்ளன.

ICக்களில் வெப்பமான சமிக்ஞை மூலமும் இலக்க சமிக்ஞை மூலமும் செய்திகள் அனுப்ப முடியும். ஒளியியல் நார்கள் மூலம் அனுப்பும் சமிக்ஞைகள் இலக்க இலத்திரனியல் தொழில்நுட்பமாகும். இங்கு இலக்கங்கள் 0, 1 என இரு வோல்ற்றளவு மட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**தர்க்கப்படலைச் சுற்றுக்கள்** (Logic Circuits)


இலத்திரனியல் கூறுகள் பலவற்றைக் கொண்டு தொடர்புகளை உண்டாக்கிக் கொள்ள படலைச் சுற்றுக்கள் பயன்படுத்தப் படுகின்றன.



AND படலை OR படலை NOT படலை

AND, OR, NOT அடிப்படைப் படலைகளாகவும் NAND, NOR, XNOR, XOR வேறு தொழிற்பாட்டு படலைகளாகவும் அமையும்.

**கதோட் கதிர் அளவுகாட்டி** (Cathode - ray Oscilloscope)




இலத்திரனியல் சுற்றுக்களை உருவமைப்பதிலும் செயற் பாடுகளை அறியவும், அளவீடுகளைப் பெறவும் உதவும் கருவியாக இது தொழிற்படுகின்றது.


இதன் மூலம் ஆடல் அழுத்தத்தை ஒத்த அலை வடிவம் (Sin) சதுர அலை வடிவம் (Square) போன்றவற்றை திரையில் பெற முடியும்.

**நேரோட்ட வலுப்பொறுதி** (DC - Power Pack)

இலத்திரனியல் உபகரணங்களில் ஆடலோட்டத்தை நேரோட்டமாக மாற்றும் அலகு வலுப்பொதி ஆகும். வலுப்பொதி தேவைக்கேற்ப வோல்ற்றளவையும் மின்னோட்டத்தையும் நேரோட்டமாக வழங்கும். இது படிகுறைப்பு நிலைமாற்றி, சீராக்கும் இருவாயி, மின்பகுப்பு கொள்ளளவி என்பவற்றைக் கூறுகளாக கொண்டமைந்தது. கணினி, கமரா, வானொலி, சங்கீதக் கருவிகள், பதிவு செய் கருவிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

நிலைமாற்றிகள் இன்றி கொள்ளளவி, தடையி, இருவாயி மூலம் அமைக்கப்படும் வலுப்பொதிகள் தற்போது கையடக்கத் தொலைபேசிகளில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**கம்பியில்லாத தொடர்பாடல் (Wireless Communication)**




கம்பியில்லாத தொடர்பாடலின் விளைவாய் பூகோள மயமாதல் இன்று முக்கியமானதொன்றாகி விட்டது. இன்று பிரபல்யமடைந்துள்ள கையடக்க தொலைபேசிகள் இதன் விளைவில் அமைந்ததுவேயாகும்.

தொடர்பாடல் செயன்முறையின் கீழ் கணினிமயப்படுத்தல் (Computerized), வலைப்பின்னல் (Network) எனும் நவீன மாற்றங்களுடன் தொலைநகல் (Fax) மின் அஞ்சல் (e-mail) எனும் தொடர்பாடல்களும் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளன.

**நவீன தொடர்பாடல் தொகுதி**



எந்தவொரு தொடர்பாடல் தொகுதியும் பின்வரும் பொதுச் செயன்முறையை உள்ளடக்கியது. நவீன தொடர்பாடலில் பின்வரும் பதங்கள் பற்றிக் கவனம் செலுத்துவது அத்தியாவசிய மானது.

- ❖ சைகை - (Signal) - ஊடகமொன்றினூடாக ஊடுகடத்தத்தக்க தகவல்
- ❖ பரிபாடையாக்கம் - (Encoding) - ஊடுகடத்தத்தக்க வகையில் தகவல்களை மாற்றியமைத்தல்
- ❖ மட்டிசைத்தல் - (Modulation) பரிபாடையாக்கப்பட்ட தகவலைக் காவியுடன் கலத்தல்.
- ❖ ஊடுகடத்தல் - (Transmission) காவி அலைகளை உரிய முறையில் கடத்தல்
- ❖ வாங்கி - (Receiver) ஊடுகடத்தப்படும் ஒலி அலைகளை வாங்கல்
- ❖ மட்டிசைப்பழித்தல் - (Demodulator) வாங்கி அந்தத்தினைக் காவியிலிருந்து வேறாக்கல்.
- ❖ பரிபாடை நீக்கல் - (Decoding) - கிடைக்கும் சைகையை மீண்டும் தகவலாக மாற்றுதல்
- ❖ வழி (Channel) - தகவல் ஊடுகடத்தும் ஊடகம்

நவீன தொடர்பாடல் தொகுதிகளில் இரு பிரதான சைகைகள் பயன்படுத்தப்படும்.

- ❖ ஒப்புளி சைகைகள் (Analogue Signals)
- ❖ இலக்க சைகைகள் (Digital Signal)

ஆரம்பகாலத்தில் ஒரு வழியினூடாக ஒரு சைகை ஊடுகடத்தப்பட்டது. தற்போது ஒரு வழியில் பெருந்தொகையான சைகைகள் (Multiplexing) அனுப்பப்படுகின்றன. நவீன தொரடர்பாடலில் செப்புக் கம்பிகளுக்குப் பதிலாக ஒளியியல் நார்கள் (Optic Fiber) பயன்படுத்தப்படுகின்றன. தகவல்களைக் களஞ்சியப்படுத்த தவாலிப்புத் தட்டுக்கள் (Record) காந்த நாடா (Magnetic Tape) இறுவட்டு (Compact Disk) இலக்க ஞாபக சில்லு (Memory chip) என்பனவும் புயன்படுத்தப்படுகின்றன.

தொடர்பாடல் முன்னேற்ற விளைவால் மனிதன் வாழ்வினை வெற்றி கொள்ளப் பழகிவிட்டான். கடந்த காலத்தை அறியவும் நிகழ்காலத்தைத் திறம்பட நிகழ்த்தவும் எதிர் காலத்தை நன்கு திட்டமிடவும் இலத்திரனியல் தொழில்நுட்ப முன்னேற்றம் வழிசமைக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**உசாத்துணை :**


- ❖ இலத்திரனியல் - ஈ.ஜே. சற்குணராஜா
- ❖ பௌதீகவியல் - ஆசிரியர் கைநூல் - 2004
- ❖ விஞ்ஞானம் - தரம் 11 பாடநூல்
- ❖ விஞ்ஞானம் - தரம் 11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

# ஆரம்பக் கல்விக்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்.




திருமதி த. அகிலன்
Spl. Trd. (Primary)
ஆசிரியை
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை




ஆசிரியத் தொழில் ஒரு உயிரோட்டமுள்ள உயர் தொழிலாகும். ஆசிரியர் உயிருள்ள மாணவ சமுதாயத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்கள். கற்றல், கற்பித்தல், மதிப்பீடு தொடர்பாக பல்வேறு அனுபவங்களையும், திறன்களையும், நெகிழ்ச்சித் தன்மைகளையும் பெற்றிருத்தல் ஆசிரியத் தொழிலைப் பொறுத்தவரை அவசியமாகும். அப்போதுதான் திறமையும், ஆளுமையுமுள்ள ஆசிரியராகத் தொழிற்பட்டு எதிர்கால சந்ததியினரின் சிறப்பான வாழ்விற்கு வழிகாட்ட முடியும் என்பதுடன் நற்பிரஜைகளை உருவாக்குவதில் வெற்றிகாண முடியும்.

எமது மாணவ சமுதாயத்தை நல்ல நெறியில் இட்டுச் செல்வதற்கு ஆசிரியரின் பணி முக்கியத்துவம் பெறுகின்றது. பலதரப்பட்ட சமூகத்திலிருந்து வரும் ஆரம்பப் பிரிவு மாணவர்களை நல்ல மனப் பாங்குடன் நற்பிரஜையாக வாழவைப்பதே ஆசிரியரின் நோக்கமாகும். இந்த வகையில் ஆரம்பப் பிரிவு எனும்போது தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையிலான வகுப்பாக உள்ளது. அதாவது ஐந்து வயது தொடக்கம் பத்து வயது வரையிலான மாணவர்களைக் கொண்ட இப் பிரிவினர் வீட்டுச் சுற்றாடலில், பெற்றோருடன், உறவினருடன் சந்தோசமாக வாழ்ந்த பிள்ளைகளாவர். எனவே இப் பிள்ளைகளின் ஏற்றத்தாழ்வு, விருப்பு வெறுப்பு மனப்பாங்குகளை எளிதில் விளங்கிக் கொண்டு தாயாரின் நிலையில் இருந்து வளம்படுத்த வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரினதும் பொறுப்பாகும்.

மேலும் யுத்தம், வறுமை, முகாம் வாழ்க்கை, விடுதி வாழ்க்கை போன்ற பல காரணிகளால் ஆரம்பக் கல்வியில் ஒரு வீழ்ச்சிப் போக்கு காணப்படுவதை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகிய நாம் உணர்ந்துள்ளோம். எனவே அறிஞர்களின் கருத்துப்படி ஆரோக்கியமான

குழந்தைகளை உருவாக்குவதற்கு உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாட்டை குழந்தைகளிடையே உருவாக்குவதன் மூலம் எமது மாணவ சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும். மேலும் மாணவர் சமுதாயத்தை வழி நடாத்துவதற்கு ஆசிரியர்களாகிய நாம் நல்ல ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரைச் சீர்திருத்தி தலைமைத்துவம் கொடுப்பதும் ஆசிரியருடைய பொறுப்பு ஆகும். எல்லா வகையிலும் ஆசிரியரே ஒரு உதாரண புருஷராக விளங்க வேண்டும். இதனாலேயே ஆசிரியரின் மனநிலை, ஒழுக்கக் கோட்பாடு என்பன முக்கியத்துவம் பெறுகின்றது.

விஞ்ஞான, தொழிநுட்ப யுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நவீன சமுதாயத்திலே ஆசிரியர்களும் சிக்கலான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமாகவும், வெற்றிகரமாகவும் முகம் கொடுப்பதற்கு நவீன கற்பித்தல் முறைகளைக் கையாண்டு கற்றல் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது, வழமையான விரிவுரையிலிருந்து விடுபட்டு வினாக்களை எழுப்புதல், உற்றுநோக்குதல், பரிசோதனை செய்தல், கண்டுபிடித்தல், பாடலுடன் ஆடல், சித்திரம் வரைதல், கதை கூறுதல், கைத்திறன் செயற்பாடுகள் போன்ற நவீன கற்பித்தல் முறையில் ஈடுபட்டு வழிகாட்டுதல் வேண்டும்.

வகுப்பறையில் பல்வேறுபட்ட மாணவர்கள் காணப்படுவார்கள். இந்த வகையில் மீத்திறன் கூடிய மாணவர்கள், நடுத்தரமான மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள் என மூன்று நிலைகளில் உள்ளனர். இவர்களை வழிப்படுத்தி ஒரு சீரான நிலைமைக்குக் கொண்டுவருதல் ஆசிரியரின் கடமையாகும். எனவே மீத்திறன் கூடிய மாணவர்களுக்கு அவர்களின் திறமைகளுக்கு ஏற்றவகையில் ஆக்க பூர்வமான எழுத்து வேலைகளில் ஈடுபடவும், தனித்திறமைகளை விருத்தி செய்யவும் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். ஏனைய மாணவர்களுக்குத் தமது திறமைகளை வெளியிட வாய்ப்பு அளித்தல், சஞ்சிகை ஒன்றிலுள்ள புதிய சொற்களைத் தேடியறிதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுதல் ஒரு சிறப்பான முறையாகக் கருதப்படுகின்றது.

மேலும் நெருக்கீட்டிற்கு உள்ளான பிள்ளைகளே மெல்லக் கற்கின்றனர். அதாவது போர், வறுமை, இடப்பெயர்வு, தாய் தந்தை பிரிவு போன்ற பிரச்சினைகள் காரணமாக பிள்ளைகள் நெருக்கீட்டிற்கு உள்ளாகி மெல்லக் கற்கின்றனர். எனவே இப் பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள், அன்பு, காப்பு, கணிப்பு என்பவற்றைச் சரியான முறையில் கொடுத்து பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இனங்கண்டு உன்னிப்பாக அவதானித்து அவர்களின் பின்னணியைக் கரிசனையுடன் ஆராய்தல் அத்தியாவசியமானதாகும். எனவே மேற்கூறிய பிள்ளைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வழிகாட்ட நல்ல கரிசனையும், தியாக சிந்தனையுமுள்ள ஆசிரியரே முன்வந்து செயற்பாட்டில் ஈடுபடுதல் வேண்டும்.

இன்று ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் காணப்படும் பொதுவான பிரச்சினை ஆரம்பக் கல்வி ஆசிரியர் பற்றாக்குறையாகும். எப்போதுமே ஆரம்பக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. அதிலும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். ஆரம்பக் கல்விக்காக ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் தமது பயிற்சி

நெறிகளைக் காலஓட்டத்தில் மாற்றி விடுகின்றனர். இவர்கள் இக் கல்விக்கான பயிற்சியை மாற்றிக் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், விவசாயம், மனையியல் போன்ற பாடங்களுக்கான விஷேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களாக மாறிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெறுபவர்கள் அதற்கான பயிற்சியை முடித்துக் கொள்வதற்குப் பதிலாக பட்டதாரிப் படிப்பை நிறைவுசெய்து பட்டதாரி ஆசிரியர்களாக மாறிவிடுகின்றமையையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே வேறு பாடங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளுக்கு கற்பிக்கும்போது ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பாடு முழுவதையும் அறிந்துகொள்ள மாட்டாதவர்களாகவே காணப்படுவர். இதனால் கற்பித்தலின் போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சி மந்த நிலையிலேயே காணப்படும். இத்தகைய குறையினை நிவர்த்தி செய்ய வேறு பாட ஆசிரியரானாலும் ஒவ்வொரு பிள்ளையினதும் ஆற்றல்களை அறிந்து அதற்கேற்ப தன்னைத் தயார்ப்படுத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டு மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆரம்பக் கீழ்ப் பிரிவுக் கல்வி மிகவும் அவசியமாகும். இத்தகைய ஆரம்பப் பிரிவின் கல்வியின் முக்கியத்துவத்தை அபிவிருத்தியடைந்த நாடுகளில் சிறப்பாகக் காண முடிகின்றது. இலங்கையிலும் தற்போது அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று கல்விமுறை மாற்றியமைக்கப்பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாகும். மேலும் இங்கு கல்வியியலாளர்கள் ஆரம்ப காலத்தில் கூறிய கோட்பாடுகள், கொள்கைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருவதை நாம் அறிய முடிகின்றது. எனவே அனைத்து ஆரம்பக்கல்வி மாணவர்களும் கல்வியில் முன்னேற்றம் அடைந்து நாட்டில் நற்பிரஜையாக வாழ்வதற்கு வழிகாட்டுவதும் ஆலோசனை வழங்குவதும் ஆசிரியர்களுக்குரிய பொறுப்பாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. தணிகாசலம்பிள்ளை, ச.நா., ஆரம்பக்கல்வி.
2. புதுவழி, கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.
3. வரதராசா, நா., ஆசிரியத் தொழில்.
4. பாலசுப்பிரமணியம் தனபாலன். கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்,
5. புவனேந்திரன், ஐ., ஆரம்பக்கல்வி.



*ஒருவர் அறிந்திருப்பதை ஒருவர் அறிந்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதும், ஒருவர் அறிந்திராததை ஒருவரும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொள்வதும் தான் உண்மையான அறிவியல்.* - கன்ஃபூசியஸ்-

*நமக்குத் தெரிந்தது ஒன்றுமில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து அறிந்து கொள்வதும் அறிவிலும் அறிவியலிலும் அனைத்து வர்க்கங்களையும் ஒருங்கிணைப்பதும் தான் எனது ஒரே நம்பிக்கை.* - லியோ டால்ஸ்டாய்-

# திட்டமிடுவோம் நேரத்தை....



**திருமதி அ. ஈஸ்வரன்**
Spl. Trd. (Home Economics)
ஆசிரியை
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



"நேரம் பொன்னானது காலம் கண்ணானது"

இறைவனின் படைப்பில் மிகவும் உன்னதமானது இயற்கையாகும். இறைவனின் நடுநிலைத் தன்மைக்கும், படைப்பில் யாவரும் சமம் என்ற உன்னத தன்மைக்கும் சிறந்த எடுத்துக் காட்டுத்தான் இயற்கையின் நியதியில் ஒன்றான காலவரையறையாகும். எல்லாவற்றையும் இயக்கும் பரம்பொருள் பாரபட்சம் அற்றவர் என்பதால் ஏழை, பணக்காரன், ஆண், பெண், படித்தவர், பாமரர் என்ற பாகுபாடு இன்றி யாவருக்கும் 24 மணி நேரத்தைக் கொடுத்துள்ளார். கடுகதி வேகத்தில் சுழன்று கொண்டுள்ள உலகில் யாவரிடமும் உள்ள மிகப் பெரும் குறை நேரம் இல்லை என்பதாகும்.

யாவருக்கும் சமமாக உள்ள 24 மணி நேரத்தை சிலர் திட்டமிட்டு, கச்சிதமாகப் பயன்படுத்தி நிறைய விடயத்தை சாதித்துக் கொள்கிறார்கள். ஆனால் சிலர் எல்லா வேலைகளையும் பதட்டத்துடன் ஆரம்பித்து சரியாக முடிக்க முடியாது திணறிவிடுவார்கள். சிலரால் முடித்த விடயம் ஏன் பலரால் முடியவில்லை என நோக்கின் அவர்களுக்கு நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தும் நுட்பங்கள் தெரிவதில்லை என்பதுடன் எவ்வகை வேலைகளுக்கு முக்கியம் கொடுக்க வேண்டும் என்ற தெரிவும் அவர்களுக்கு இல்லாதிருப்பதுதான் உண்மை.

எமது வாழ்க்கையில் பற்றாக்குறைக்கு பஞ்சம் நிறைந்திருப்பது நேரத்திற்காகும். இந் நேரப் பற்றாக்குறையால் அதிகம் அல்லல் படுபவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்க நிலையாகும். இந் நிலைக்குக் காரணம் திட்டமிட்டு வேலை செய்யாதுவிடல், தேவையற்ற வீண் விடயங்களில் தலையிடல், அலுவலக, வீட்டு வேலைப்பளு போன்ற அம்சங்கள் முக்கியமானதாகும்.

காலை நேரம் எல்லோருக்கும் பரபரப்பு மிக்க நேரமாகும். இந்நேரத்தில் வைத்த பொருள் வைத்த இடத்தில் இல்லாமல் இருந்தால் அன்றைய தின வேலைகள் யாவற்றிலும் பின்னடைவு ஏற்பட்டுவிடும். எனவே நாம் குறித்த இடங்களில் பொருட்களை வைப்பதுடன் தேவைக்கு எடுத்தபின் மீண்டும் அதே இடத்தில் வைப்பது நேர விரயத்தினைத் தடுப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

குடும்பம் ஒன்றில் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்பவர்கள் எனில் காலைப் பொழுதில் குடும்பத் தலைவியின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். பாடசாலை செல்லும் பிள்ளைகள். அலுவலகம் செல்லும் கணவன். இவர்களை உரிய நேரத்திற்கு அனுப்பி தானும் வேலைக்குச் செல்லும் பெண்கள் என்ன வாழ்க்கை எனும் நிலையில் வாழ்க்கையை நகர்த்தி வருகிறார்கள். இந்நிலையில் உள்ள பெண்கள் காலை நேரப் பரபரப்பை எவ்வாறு குறைக்கலாம் எனச் சிந்தித்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பெண்ணே, உனது செயற்பாட்டைச் சற்றுத் திட்டமிடு. நாளும் வீட்டிலும் அலுவலகத்திலும் உழைக்கும் உனக்கு ஓய்வு தேவை. அந்த ஓய்வு நேரத்தில் அடுத்த நாளைய சமையல் வேலையைத் திட்டமிடலாம். சமையலில் குழப்பம் ஏற்படாது திட்டமிட்டுச் சமைத்தல் வேண்டும். அதற்குரிய ஆயத்தங்களைச் செய்தவாறு தொலைக்காட்சி பார்ப்பது, இசை கேட்பது போன்ற மனதுக்கு இசைவான ஓய்வையும் பெறலாம். திட்டமிட்டு செயற்படுவதால் காலையில் எழுந்தவுடன் என்ன சமைப்பது? என்ன செய்வது? என்று சிந்தித்து வீண் பரபரப்பிற்கு உள்ளாவதுடன் நேரவிரயமும் ஏற்படும். இந்நிலையைப் போக்கி காலையில் மனநிறைவுடன் வேலைகளைத் திட்டமிட்டு செய்வது சாலவும் சிறந்தது.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் அன்பால் ஈர்த்து அவர்களின் இயல்புக்கும், வயதுக்கும் ஏற்ற வேலைகளைப் பகிர்ந்து அளிப்பதன் மூலம் நேரத்தை மீதப்படுத்துவதுடன் வீண் சக்தி விரயமும் தடுக்கப்படும். குடும்பத்தில் நான் மட்டும் வீட்டு வேலைகளைச் செய்வது என்று எழும் மன உளைச்சலும் ஏற்படமாட்டாது. பிள்ளைகளும் வேலைகளைச் செய்வதால் அவர்களுக்கு வேலைக் கஷ்டம் விளங்குவதுடன் வளர்ந்த பின் அவர்கள் வேலைச் சுமையில் அல்லாட வேண்டிய நிலையும் தடுக்கப்படும்.

வீட்டிலும் சரி அலுவலகத்திலும் சரி வேலைகளை ஒழுங்காக உரிய நேரத்தில் முடிப்பது மிகவும் அவசியமானது. இதற்கு என்ன வழி என நாம் சிந்தித்தால் குறித்த நேரத்திற்கு எழுந்து உரிய நேரத்தில் நித்திரை செய்வது வரை உள்ள நாளாந்த வேலைகளைப் பட்டியற்படுத்தி அதன்படி செயற்பட வேண்டும். பட்டியற் படுத்திய வேலைத்திட்டம் சரியானபடி நிறைவு செய்யப் படுகின்றதா என்பதையும் கண்காணிக்க வேண்டும். எப்போதும் எமக்குச் சிரமமான விருப்பமில்லாத வேலைகளை முதலில் செய்து முடிக்க வேண்டும். அத்துடன் விருப்பமான இசை, பாடல்களைக் கேட்டபடி வேலைகளைச் செய்வதன் மூலம் விரைவாகவும், மகிழ்வாகவும், களைப்படையாதும் வேலைகளைச் செய்து முடிக்கலாம்.

நேரம் போதவில்லை என்ற குறையைப் போக்கவும் உறவினர்கள், நண்பர்கள், சக ஊழியர், அதிகாரிகள் மத்தியில் எமது கௌரவத்தைப் பேணிக் கொள்வதற்கும் நாம் சில

நடைமுறைகளைப் பின்பற்றுவது சாலச் சிறந்ததாகும். இன்று எல்லோரிடமும் பொதுவாகக் காணப்படும் ஒரு குறைபாடு மறந்துவிடுவது. உதாரணமாக எமக்குவரும் விழாக்கள், பண்டிகைகள் போன்ற பலவற்றுக்கு வரும் அழைப்புக்களை மறந்துவிடுவதுடன் குறித்த நாளில் குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்குச் செல்லாது அல்லாடுவதைக் காண்கின்றோம். இதனைத் தடுப்பதற்கு எமக்கு வரும் அழைப்பிதழ்களைக் குறித்து வைப்பதுடன் நாளாந்தம் எமது பரிசுப் பொருட்களை நேரம் கிடைக்கும் போது தெரிவு செய்து கொள்வதன் மூலம் குறித்த நாளில் என்ன கொடுப்பது என்ன செய்வது என்ற நிலை தோன்றாது காப்பதுடன், தரமான பரிசுப் பொருளைக் கொடுத்தோம் என்ற மனநிறைவும் ஏற்படும்.

இன்றைய காலகட்டத்தில் நேர அடிப்டையில் மனிதனை அடிமைப்படுத்தி வைத்துள்ள விடயங்களில் குறிப்பிடக்கூடியவை தொலைக்காட்சியும் தொலைபேசியும் ஆகும். நேரம் இல்லை என்று கூறும் பலரைப் பார்த்தால் அவர்களின் நேரத்தில் பெரும்பகுதியை தொலைக்காட்சி பார்ப்பதிலும், தொலைபேசி கதைப்பதிலும் செலவிடுகின்றனர். இவை எல்லாம் தேவைதான். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு வரையறை உண்டல்லவா? எமக்கு வேண்டிய விடயங்களைத் தொலைக்காட்சியில் பார்ப்பதும், ஏதாவது வேலைகளைச் செய்து நிறைவேற்றிக் கொண்டும் ஓய்வைக் கழிக்கலாம். தொலைபேசி போல் ஒரு தொல்லை வேறு இல்லை எனலாம். சிலர் போனை எடுத்தாலே வைக்க மாட்டார்கள். அரட்டை அடிப்பதும், வீண் வம்பு பேசுவதுமாக தமது நேரத்தையும் பணத்தையும் விரயப்படுத்துவது மட்டுமன்றி ஏனையவர்களின் நேரத்தையும் வீண் அடிக்கிறார்கள். தொலைபேசியில் எமக்கு வேண்டிய விடயத்தை மட்டும் தெளிவாகவும் துல்லியமாகவும் பேசுதல் மூலம் நேரத்தைச் சிக்கனப்படுத்திக் கொள்ள முடியும்.

மேற்குறித்த விடயங்களை உள்வாங்கி எமது வேலைகளைத் திட்டமிட்டு வாழ்ந்தோம் எனில் எமது கரங்களில் ஏராளமான மணித்துளிகள் தவழும். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி எமது உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவதுடன் பலரிடம் நற்பெயரையும் நன்மதிப்பையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழலாம் என்பது திண்ணம்.

**ரூசோவின் இயற்கைக் கல்வியின் இயல்புகள்**

1. பிள்ளையை இயற்கைக்குத் திரும்பச் செய்து இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை உருவாக்குதல்.
2. முறைசார் பாட ஏற்பாடுகளில் இருந்து விலகி சுதந்திரமான செயற்பாடு களினூடாகக் கற்கும் வாய்ப்புகளை உருவாக்குதல்.
3. நேரத்தைப் பயனுள்ள வழிகளில் செலவிட வழிப்படுத்தல்.
4. நூற்கல்விக்குப் பதிலாகச் சுயமாகச் சிந்தித்துக் கற்கும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
5. ஒழுக்கப் போதனைகள் தேவையற்றவை. இயற்கையில் கற்க அனுமதிப்பதே பிள்ளை ஒழுக்கமானதாக, தூய்மையானதாக வாழப் போதுமானதாகும்.



# கடமையும் கட்டுப்பாடும்

**திருமதி வ. சிறீதரன்**
Spl. Trd. (Primary)
ஆசிரியை
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

கடமையைச் செய். பலனை எதிர்பாராதே என்பது நாம் அறிந்த வாக்கு ஆகும். நாம் ஒவ்வொருவரும் நமது கடமையை சரிவரச் செய்ய வேண்டும். கடமை சரிவர இருந்தால் பலன் தானாகவே வந்து சேரும். எமது சமுதாய அமைப்பு முறை ஒருவருடைய கடமையோடு முடிவடைவதில்லை. மற்றவருடைய கடமையும் ஒன்று சேரும் போதுதான் முழுமை அடைகிறது. மனிதன் தனது கடமைகளை உணர்ந்து ஒழுகும் போதுதான் வாழ்வின் பற்பல கோணங்களைக் காணுகிறான் என மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

வேலி இல்லாத பயிர் விலங்குகளால் அழிக்கப்பட்டு வீணாகிறது. அது போல கட்டுப்பாடு இல்லாத கடமை கொண்ட வாழ்வு பாழாகிவிடும். கட்டுப்பாடு என்பது சந்தையிலே வாங்கக்கூடிய பொருள் இல்லை. நாமே நமது உள்ளத்திலே விதைத்து அறுவடை செய்கின்ற அரிய பொருளாகும்.

இளமை முதற் கொண்டு கட்டுப்பாட்டுடன் எமது கடமைகளைச் செய்து வர வேண்டும். இவ்வாறு செய்தால் எமக்கும் எம்மைச் சார்ந்தவர்களுக்கும் எமது நாட்டிற்கும் பயன் உள்ளவர்களாக வாழமுடியும். இத்தகையோரின் வாழ்வு இம்மைக்கும் மறுமைக்கும் நீடிக்கும்.

கல்வி மனிதனின் மாபெரும் கொடையாகும். அக் கல்வியை அழிய விடாமல் பின்பற்றியவன் அறிஞனாகவோ, அறிவாளியாகவோ இவ் உலகில் பல வண்ணங்களில் வெளிப்படுகின்றான். இதையே ஔவையார், வள்ளுவர், இளங்கோ எனப் புலவர் வரிசையில் இடம்பெறுவோர் திரும்பத் திரும்பப் பாடியுள்ளார்கள்.

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து”. இளம் பராயத்தில் நாம் கற்கின்ற கல்வியானது வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல எமது உள்ளத்தில் தெளிவாகப் பதிந்துவிடும். ஆனால் முதுமையில் கற்கும் கல்வியோ சுவரில் ஆணி அறைவது போன்று எமது உள்ளத்தில் பதிவது சிரமமாக இருக்கும். எனவே நாம் சிறு பராயத்தில் கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்றுப் புதுமை பெற்று விளங்க வேண்டும். அதாவது இளமையிற் கற்கும் கல்வியானது மனதில் அச்சாணி போல் ஊன்றிவிடும்.

மாணவர்கள் தமது பாடங்களைக் கருத்தோடு கற்று தாய், தந்தை, குரு, பெரியோர் சொற்கேட்டு நடத்தல் வேண்டும். பாடசாலையில் மட்டுமல்ல சமுதாயத்திலும் எமது கடமைகளையும் பொறுப்பையும் உணர்ந்து பிரதிபலன் கருதாது கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். இளமை முதற் கொண்டு கட்டுப்பாட்டுடன் தமது கடமைகளைச் செய்து வரவேண்டும். இவ்வாறு செய்தால் தமக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் தமது நாட்டிற்கும் பயன் உள்ளவர்களாக வாழ முடியும்.

# இன்றைய சூழலில் அவசியமாகி வரும் அரங்கச் செயற்பாடுகள்



**திருமதி த.கமல்ராஜ் B.A**
ஆசிரியை
பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



காலமும் சூழலும், தேவையும் அறிந்து கருமமாற்ற வேண்டியது பகுத்தறிவுள்ள அனைவரினதும் கடமையாகும். அதனை நாம் சரிவர ஆற்றாதுவிடின் அது நாம் நமக்கும், சமூகத்திற்கும், வருங்காலத்திற்கும் செய்யும் பாரிய துரோகமாகிவிடும். அந்த வகையில் இன்றைய சூழலில் அரங்கு தன் செயற்பாடுகளைப் பலவகையிலும் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

அரங்கு என்பது எமது சமூகத்தில் திரிவுபடுத்தப்பட்ட நிலையிலேயே விளங்கப்பட்டுள்ளது. கதை ஒன்றை சிலர் நடித்துக்காட்டுவதாகவும் பலர் வந்து அதைப் பார்த்து மகிழ்ந்து போவதாகவும் தான் பலரும் இதனைப் புரிந்துள்ளனர்.

அதாவது அரங்கு என்பது பொழுதுபோக்கிற்கான ஒரு சாதனம் என்றே பலரும் புரிந்து கொண்டுள்ளனர். நாடகக்காரரால் என்ன காரியம் செய்ய முடியும்? என்ற ஏளனப்பார்வையே சமூகத்தில் நிலவி வருகின்றது. "கூத்தாடுவதும் கும்மாளமிடுவதும் ஆத்தாதவன் செயல்" என்ற பழமொழி இதனைப் புலப்படுத்துகிறது.

இன்று நாடகமானது வெறுமனே கண்டு களிப்பதற்குரிய ஒன்று என்பதற்கு அப்பால் அதன் செயற்பாடுகள் பலவகையிலும் விரிவடையத் தொடங்கியுள்ளன. மேற்குலக நாடகத்துறை சார்ந்த அனுபவங்களும், ஈழத்தில் நாடகமும்அரங்கியலும் கற்கை நெறிக்குட்பட்ட பின்பு அரங்கு சார் செயற்பாடுகளின் மூலம் மனிதன், சமூகம், தேசம் பற்றிய மாற்றம், இது தொடர்பான வேலைத்திட்டங்கள் நடைபெறுவது இயல்பான ஒன்றாகிவிட்டது. இன்றைய பல அரங்கச் செயற்பாடுகள் வெறுமனே கலைநயப்பு, ரசிப்பு என்பதற்கு அப்பால் மாற்றங்கள் அல்லது முன்னேற்றங்களை வேண்டி நிற்பதாக அமைகிறது.

கலாநிதி க. சிதம்பரநாதன் அவர்களின் “சமூக மாற்றத்திற்கான அரங்கு” என்ற ஆய்வின் அத்திவாரத்திலிருந்து இவ் அரங்கச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் முனைப்புப் பெறத் தொடங்கின. இவை பெண் விடுதலைக்கான அரங்கு, சிறார்களது உளவிருத்திக்கான அரங்கு, மானிடவிடுதலைக்கான அரங்கு, சமூக விடுதலைக்கான அரங்கு, கல்வி அரங்கு எனப்பல வடிவங்களில் வெளிப்பட்டு நிற்கின்றது.

அறிவினை வழங்கி எம்மை மகிழ்வடைய வைப்பது கல்வி. மகிழ்வை வழங்கி அதனூடு அறிவை ஊட்டுவது அரங்கு. இதுவே கல்விக்கும் அரங்கிற்கும் இடையே காணப்படும் ஒற்றுமையும், வேற்றுமையும் ஆகும். இதன் காரணமாகவே இன்று கல்வியியலாளர்கள் பலராலும் கல்விச் செயற்பாட்டில் அரங்கின் அவசியம் உணரப்படுகின்றது.

செய்துகற்றல், செய்து பிழைவிட்டுக் கற்றல், திரும்பக்கற்றல், கூடிக்கற்றல், கலந்துரையாடிக் கற்றல், சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகளை விடுவித்தல் போன்றன அரங்கில் ஈடுபடுவதனூடு நாம் பெறும் பயன்களாகும்.

இத்தகைய பயனுள்ள அரங்கை நாம் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், சமூகத்திலும் சரிவரப் பயன்படுத்தும் போது நல்ல விளைவைப் பெற முடியும். அறிவுக்கண்களைத் திறக்கும் பாடசாலைகளில் இதன் அவசியம் அதிகம் உணரப்பட்டதன் விளைவே சிறுவர் நாடகங்கள், அரங்கக் களப்பயிற்சிகள், ஆசிரியர்களுக்கான அரங்கச்செயற்பாடுகள் போன்றன முனைப்புடன் இடம்பெறக் காரணமானது.

இன மோதல்கள், உள்நாட்டு யுத்தங்கள், பிரிவுகள், இயற்கை அனர்த்தங்கள் எனப்பல அவலங்களை அனுபவித்து வந்த எம்மக்களுக்கு அறிவினையும், நம்பிக்கையினையும், விழிப்பினையும் ஊட்டும் செயற்பாட்டினை அரங்கவியலாளர்கள் மேற்கொண்டனர். இன்றும் மேற்கொண்டும் வருகின்றனர்.

அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு கல்வி, சுகாதாரம், ஒழுக்கம், தன்னம்பிக்கை என்பவற்றை ஏற்படுத்தவும், அடங்கி, ஒடுங்கி தம் ஆற்றல்களை உணராது வீடுகளுக்குள் முடங்கி இருக்கும் பெண்களுக்கு வலுவூட்டி அவர்களைச் செயல்முனைப்புள்ளவர்களாக மாற்றவும், யுத்தம் நிறுத்தப்பட்ட சூழலில் உயிராபத்தையும், ஊனத்தையும் ஏற்படுத்தக்கூடிய மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை அரங்க ஆற்றுகைகள் மூலம் பரவலாக்கவும், மனவடுக்களாலும், விரக்தியாலும் கல்வியில் நாட்டமற்று பாடசாலை வரும் சிறார்களை சிறுவர் நாடகங்களினூடாக மகிழ்ச்சிகரமான சூழலுக்கு அழைத்து செல்வதும் என அரங்கு தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது.

**கல்வியியல் அரங்கு**

இன்று கல்வியியல் அரங்கு என்பது மிகப்பரந்ததொரு பரப்பினுள் கிளைவிரித்து விழுதுவிட்டு நிற்கும் ஆலமரமாக உள்ளது. அது பல வடிவங்களிலும், பலமுறைமைகளிலும், பல மோடிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது.

பாடசாலைகளில் சிறுவர் நாடகம் மற்றும் இடைநிலைப் பாடசாலை அரங்க ஆற்றுகைகள் என்பவற்றில் மாணவர்கள் பங்கெடுக்கின்றனர். அதன் பின்னர் அவர்கள் முன்பைவிடக் கல்வியிலும், பாடசாலையின் ஏனைய கருமங்களிலும் கூடியளவு ஆர்வத்தோடு ஈடுபடுவதனைக் காணமுடிகிறது. முன்னர் கற்றலிலும் பாடசாலை நிகழ்வுகளிலும் ஆர்வம் காட்டாதிருந்த பல பிள்ளைகள் ஆர்வம் கொள்ளத் தொடங்கியதை பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் அவதானித்தனர்.

சிறுவர் அரங்கு வீரியம் மிக்கது. இது விவேகம் மிக்கதொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்க உதவுகிறது. ஆரம்பப் பாடசாலைக்கல்வியை அர்த்தமுள்ளதாகவும், ஆனந்தம் நிறைந்ததாகவும் ஆக்கத் துணைபுரிகிறது. ஆளுமை மிக்கதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பக் கூடிய முறையிலே கவனம் செலுத்தாது முற்றிய பின் கவனிப்பதில் பலனில்லை. மகிழ்வோடும் இறுக்கமற்ற தளர்நிலையில் நின்றும் வாழ்க்கைக்கான கல்வியைப் பெற்றுக்கொள்ள எமது சிறார்களுக்கு உகந்த ஓர் அறிவூட்டல் சாதனமாக இது விளங்குகிறது. இதில் மாணவர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுகின்ற போது அவர்களில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்கலாம். கூச்ச சுபாவமுள்ளவர்கள் அதிலிருந்து விடுபட்டனர். கதைப்பதற்குப் பின்னின்றவர்கள் சரளமாக கதைக்க முற்பட்டனர். ஆடிப்பாட அஞ்சியவர்கள் ஆடிப்பாட ஆர்வம் காட்டினர்.

போர்ச்சூழலாலும், பல்வேறு அடக்குமுறைகளாலும், பொருளாதார சிக்கலாலும், மனவடுக்களுடன் பயத்தால், வெட்கத்தால் உறைந்து போயுள்ள மாணவர்களுக்கு அரங்கில் சுதந்திரமாகச் செயற்படும் சூழலை நாம் (ஆசிரியர்) உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அப்போது அவர்களது ஒவ்வொரு அசைவையும் தட்டிக்கொடுக்க வேண்டும். இந்தத் தட்டிக்கொடுத்தல் தான் ஆசிரியர்கள் எல்லோரது தலையாய பொறுப்பும் கூட.


பிள்ளைகள் எப்போதும் தேடல் உடையவர்கள். அவர்கள் சும்மா உட்கார விரும்புவதேயில்லை. தேடுவார்கள், ஓடுவார்கள், தேடித்தேடி ஓடிக்கொண்டே இருப்பார்கள். வழிநடத்துவோர் தேடலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தம்மிடம் உள்ளவற்றை மட்டும் கொடுப்பது தேடலுக்குத் தீனியாகாது. கண்டுபிடிப்பு என்பது பிள்ளையாலும் முடியும். இன்றைய சூழலில் இவ் அரங்கின் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து அதனை சரியான முறையில் தமது நோக்கங்களுக்கேற்பப் பயன்படுத்தும் போது நாம் நல்ல அறுவடையைப் பெறமுடியும்.

**வாசிப்பு**

- *வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.*
- *நூல் மேயா மனிதன் புல் மேயா மந்தை.*
- *நூலறிவேயாகும் நுண்ணறிவு.*
- *நல்ல நூல்களுள்ள சிறு குடிசை மாளிகை போன்றது.*
- *கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.*

- Today a reader tomorrow a leader.
- Reading is an investment on knowledge which could pay the best investment.

# நீளா நினைந்திடும் பொழுதுகள்...



திரு. ஆ. சி. நடராஜா
பொதுமுகாமையாளர்,
தினக்குரல்.

1970 முதல் 1985 வரை 15 ஆண்டுகள் இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். அதிபர் கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் கல்வியிலும், கலைத்துறைகளிலும் கல்லூரி காத்திரமான வளர்ச்சி நிலையை எய்தி வந்த காலமது. இங்கு ஐந்து ஆண் ஆசிரியர்களே இருந்தோம். அவர்களுள் நானே இளமையானவன். எம்முள் ஒருவரான புலவர் கா. வேல்முருகன் இக்கிராமத்தைச் சேர்ந்தவர். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த பிதா மகன். நானும் அவரும் இரட்டையர் போன்றே செயற்பட்டோம். அதிபர் எம்மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தார். கல்லூரியின் கட்டமைப்பிலே, கட்டட நிர்மாணப் பணிகளிலே பல புதிய பரிமாணங்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு செயற்பாடும் மறக்க முடியாதனவாயினும் இங்கு மூன்றினை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

மாடிக்கட்டடம் ஒன்று அமைக்க முடிவானது. அதற்கான இடத்தெரிவின்போது நூற்றாண்டுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கட்டடத்தை அகற்றி அந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்ற எமது கோரிக்கையை கட்டடப் பொறியியலாளர் அடியோடு நிராகரித்தார். அதிபர் அடிபணிந்தார். பழைய கட்டடத்திற்கு முன்னால் சாஸ்திர முறைப்படி தென் மேற்கு மூலையில் அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. அடியேன் மனது அமைதி கொள்ளவில்லை. அத்திவாரம் வெட்டத் தொழிலாளரும் வந்து விட்டனர். அன்பர் வேல்முருகனை ஓர் அளவு மிரட்டி வைத்துக் கொண்டு அதிபரைக் களத்துக்கு அழைத்துச் சென்று இவ்வாறு கூறினேன். "பிரதான வீதிக்குக் கிட்ட மாடிக்கட்டடம் அமைந்தால் மேல்மாடியில் மாணவிகள் நிற்கும் போது வீதியால் செல்பவர்கள் பல்லிழிப்பார்கள். நீங்கள் அலுவலகத்தில் இருப்பதை மதிலால் எட்டிப்பார்த்து மேற்பார்வை செய்வர். நிரந்தரப்பிரச்சினையை உருவாக்கப் போகின்றீர்கள்" என்றேன்.

"இனி என்ன செய்வது? நிலையம் சாஸ்திர முறைப்படி போட்டாயிற்றே" என்றார். "அத்திவாரக்கல்லை வடமேற்காகக் கொண்டால் 40 அடி தூரம் கட்டடம் தெற்கே பின் சென்று அமையும்" என்றேன். அதிபர் எதிர்பாராத வகையில் நான் கூறிய திட்டம் அவர் மனதைத் தொட்டது. உடன்பாடு தெரிவித்தார். முதற்கட்டமாக அமையும் 140அடி நீளக் கட்டடத்தின் அரைப்பகுதி உடைக்க வேண்டிய கட்டடம் வரை சென்றது. திணைக்களம் மறுத்தால் 72அடியுடன் மாடிக்கட்டடத்தை நிறுத்திக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தோம்.

எனது திட்டம் நிறைவேறியது. பாராளுமன்ற உறுப்பினர் மூலம் திணைக்கள உறவு சீர் செய்யப்பட்டது. இந்த அதிரடி நடவடிக்கைகளால் கட்டடம் ஏற்ற இடத்தில் அமைந்து இன்றைய தோற்றப் பொலிவினைப் பெற்றது. பழைய கட்டடமும் மறைந்தது. இந்த மாடிக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாக் காலமும் தீர்மானிக்கப்பட்டது. அதிபர் பத்து நாள் லீவிற் கொழும்புக்குச் சென்றிருந்தார். அப்போது பிரதான வீதியில் அமைந்த கல்லூரி வாயில் சார்ந்த சந்தியில் (இன்றுள்ள) வளைவு (Round about) நிறுவப்பட்டுக் கொண்டிருந்தது. என்னுடன் ஸ்கந்தாவில் கற்ற சண்டிலிப்பாயைச் சேர்ந்த பேரின்பநாயகம் என்பவர் கல் நெரிக்கும் வண்டியை அங்கு ஓட்டிக் கொண்டிருந்தார். "இந்த நேர் வாயில் இனி அபாயம். மேற்கிலும், கிழக்கிலுமாக இரு

வாயில்களைப் போட வேண்டும். மாடிக்கட்டடத்திற்கு ஏற்றவாறு தார் வீதி போட வேண்டும். அதுவும் அதிபர் கொழும்பிலிருந்து வரமுன்னர் செய்ய வேண்டும்" என்று எனது நண்பர் வேல் முருகனிடம் கூறினேன். பிரமிப்படைந்தார். "காசுக்கு எங்கே போவது" என்றார்.

"நீங்கள் 2சோடி இரும்புப் படலைகளையும் செய்து தந்தால் நான் வீதியைப் போட்டுத் தருவேன்" என்றேன். எவரது அனுமதியும் இன்றிச்செயலில் இறங்கினோம். எனது ஊரில் நண்பன் யோகராசா கல்லுடைக்கும் தொழிலகம் நடத்தினார். நான் கேட்டவாறு தேவையான கல், மணல் எல்லாம் தேவைக்கு அதிகமாக வழங்கினார். பலாலி விமானத்தள திருத்த வேலைகள் செய்து கொண்டிருந்த மேற்பார்வையாளர் வசாவிளானைச் சேர்ந்த இராசையா என்னும் நண்பரிடம் சென்றேன். உதவியை நாடினேன். 5நாளில் வேலையை முடிக்கக்கூடிய அளவு தொழிலாளரை அனுப்புவதாகவும் இரவு பகலாக வேலை செய்வர் என்றும் கூறினார்.

தார் வாங்கினால் எல்லாம் சரி. ஏழாலையில் மூர்த்தி என்றொரு வீதி ஒப்பந்தக்காரர் இருக்கின்றார் என்றும் அவரிடம் தார் இருப்பதாகவும் அறிந்து நண்பர் ஒருவர் மூலம் அவரை அணுகிப்பெற்றுக் கொண்டேன். அனைத்தும் கடன்தான். வீதி வேலை ஆரம்பமாகியது. கல் நெரிக்கும் வண்டியைத் தந்துதவும்படி நண்பர் பேரின்பநாயகத்தைக் கேட்டபோது அரசவாகனமாதலால் தரமுடியாதென்றார். ஆனால் இரவில் எமது கல்லூரியில் நிறுத்துவதற்கு அனுமதி வழங்குவதாக ஒரு கடிதம் தரும்படியும், தான் இரவில் இரகசியமாக இவ்வேலையைச் செய்து உதவுவதாகவும் கூறினார். கூலியாக இரண்டு போத்தல் தந்தால் உசாராக இருக்குமென்றார். 10 நாட்களுக்குள் வீதி அமைக்கப்பட்டது. அதிபர் கிழக்கு வாயிலால் பிரமிப்புடன் கல்லூரிக்குள் பிரவேசித்தார். களியுவகையோடு கடன்களைத் தீர்த்து வைத்தார்.

மற்றொரு அதிரடி திறந்த வெளி அரங்கு அமைத்ததாகும். கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் நடுவே சுமார் 100 ஆண்டு பழமை வாய்ந்த சுமார் 18 அடி அகலமுடைய ஒரு திறந்தவெளி அரங்கு இருந்தது. கோவில் போன்ற தோற்றமுடையது. நாடகங்கள், நாட்டிய நாடகங்களை மேடையேற்ற உதவியது. இத்துறைகளில் தேசிய சாதனைகள் படைத்து வந்த இக் கல்லூரி அவற்றை ஒழுங்காக மேடையேற்ற முடியவில்லை என்பது கவலையானது.

அந்தப் பழமையான அரங்கை உடைக்க கட்டடப்பகுதியினர் அனுமதி வழங்க மறுத்தனர். இந்த அரங்கு இருக்கும் போது மற்றொரு அரங்கு அமைக்க அனுமதிக்கவும் மாட்டார்கள். அதிபரும் ஆசிரியர்களும் மனம் புழுங்கி வந்தனர். அவர்கள் அறியாத வகையில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண அதிரடித் திட்டம் தீட்டினேன். நேர்மையின் சின்னமான நண்பன் வேல்முருகனுக்குத் தெரிவியாது செயற்பட்டேன். சில்லாலையைச் சேர்ந்த பாவிலுப்பிள்ளை எமது சிற்றூழியர். மிக நீண்ட காலம் பற்றுப் பாசத்துடன் இங்கு பணியாற்றியவர். அவருடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டேன். மாரிமழைக்காலத்தில் பழைய அரங்கின் கூரை மரப்பிணைச்சல்கள், ஆணிகள் சில கழற்றி விடப்பட்டன. அந்த இடத்தில் கயிறு ஒன்று கட்டப்பட்டது. மழை பெய்யும் போது கயிற்றை இழுத்தால் கூரை முகடு விழும் என்றேன். ஒரு விடுமுறைநாள் இரவு சத்திர சிகிச்சை நடைபெற்றது. நோயாளி மடிந்தார்.

யாழ் திறந்த வெளி அரங்கிற்குச் சென்று அதன் நீளம், அகலம், உயரத்தை அளந்து அதை விடப் பெரிய அளவில் தற்போதைய அரங்கம் மக்கள் பணத்தில் நிறுவப்பட்டது.

இக்கல்லூரியில் மேற்கண்டவாறு அடியேன் செய்த திருவிளையாடல்கள் பலவாகும். அவை நினைக்க நனைக்க இனிமையான மறக்க முடியாத சம்பவங்களாகும்.

# I Love Mother



**I**n the past she nursed me.
and even now does she

**L**oving. Caring mother. what a
Splendid lady you are

**O**bstinate as I may seem. you
are always patient with me

**V**icious though I may seem.
You have always loved me

**E**arly in the morning you
Waken and make me my tea.

**M**other. mother you are a
Fine to me

**O**bstinate as I may be you
are always kind with me.

**T**imes have changed but
You are the same


**H**opeless as I may seem you
never lost your faith in me

**E**veryday you tell me how to
get along in life

**R**epeat with me now everyone
as I Love Mother!

**Mrs.F.R.J. Jeyanthan**
Teacher

# எமது பாடசாலை



செல்வி
ஜெ. வைஷ்ணவி
தரம் - 1

பாடசாலைக் கல்வி கற்றிட
பாடசாலை வாருமே
பண்மகள் மண்ணிலே
பாங்குடனே கூடுவோம்.

உயர்தர பாடசாலை எம்
மாணவரின் ஆற்றலை
மழலைகள் மன்றம்
ஊடாய் வளர்த்திடும்.

ஆர்வ முள்ளோர் அனைவரும்
ஆசையுடன் வாருமே
ஆடலும் பாடலும்
ஆனந்தமாய் பயிலலாம்.

மன மகிழ்ந்து கற்றிட
மகிழ்ச்சியான கற்பித்தல்
மனநிறைவு தந்திடும்
மாணவரை உயர்த்திடும்.

## பூந்தோட்டம்

சின்னஞ் சிறிய பூந்தோட்டம்
சிறிய நல்ல பூந்தோட்டம்
பென்னம் பெரிய பூக்களால்
பெரிதும் எம்மை மயக்குமாம்

வண்ண வண்ணப் பூக்களை நீ
வகை வகையாய் அள்ளித் தந்து
எம் கன்னங்கரிய விழியினை
கருத்தில் காண வைப்பாயே



செல்வி ந. நிதர்சனா
தரம் - 1

# எனது செல்லப்பிராணி




எனது செல்லப்பிராணி நாய் ஆகும். அதன் பெயர் வீமா. வீமா என்னுடனும் எனது குடும்பத்தவருடனும் மிகவும் அன்பாகப் பழகும். வீமா மிகவும் அழகானது. அதன் வெண்ணிற மேனியும், கருமை நிற உருண்ட கண்களும், சுருண்ட வாலும், மடிந்த காதுகளும் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்பவை.

வீமா மிகவும் சுறுசுறுப்பானது. நான் சொல்வதை எல்லாம் நன்றாகச் செய்யும். தினமும் மாலையில் வீமா என்னுடன் விளையாடுவான். அவன் எமது வீட்டின் சிறந்த காவலாளியும் ஆவான். எனக்கு அவன் ஒரு சிறந்த நண்பன். வீமாவுக்கு என்னைத் தவிர எமது வீட்டுத் தோட்டத்திற்கு வரும் சிறிய குருவிகள், பூனை, கோழி ஆகிய நண்பர்களும் உண்டு. அவற்றுடனும் அவன் நன்றாக விளையாடுவான்.

நான் எனது செல்லப் பிராணியைத் தினமும் சுத்தமாகக் குளிப்பாட்டுவேன். நான் சிறந்த உணவுகளை வழங்குவேன். அவனுக்கு பால், முட்டை, மீன் என்பன மிகவும் பிடித்த உணவுகள் ஆகும். நான் சிலவேளைகளில் எனது செல்லப் பிராணியை எனது நண்பர்களின் வீடுகளுக்கு அழைத்துச் செல்வேன். அவன் அங்கு அவர்களுடன் அன்பாகவும், ஒழுக்கமாகவும் நடந்து கொள்வான். எனது நண்பர்களுக்கு அவனை மிகவும் பிடிக்கும். எனது பொழுதுபோக்கு செல்லப் பிராணியுடன் விளையாடுதல் ஆகும். எனது ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க எனது செல்லப் பிராணி எனக்கு உதவுகின்றது.

செல்வி
கு. ஜெனிபர்
தரம் - 1



# எண்கள்

ஐந்தில் ஒன்று போனால்
கட்டில் கால்கள் நான்கு
நான்கில் ஒன்று போனால்
தேங்காய் கண்கள் மூன்று
மூன்றில் ஒன்று போனால்
கோழிக் கால்கள் இரண்டு
இரண்டில் ஒன்று போனால்
முகத்தில் ஒரு மூக்கு
ஒன்றில் ஒன்று போனால்
ஒன்றும் இல்லை அப்பா.

செல்வன்
மூ.விதுர்ஷன்
தரம் - 1

# எம் குடும்பம்

சின்னஞ் சிறிய எம் குடும்பம்
சிறப்பு மிக்க எம் குடும்பம்
என்றும் எங்கும் எப்போதும்
ஒன்றாய் வாழும் எம் குடும்பம்

அன்பு மிக்க அன்னையும்
அறிவு மிக்க தந்தையும்
இன்பமூட்டும் சகோதரரும்
இணைந்து வாழும் எம் குடும்பம்.

செல்வி
ஜீ. ஜெனிபர்
தரம் - 2A

# தெய்வம்

அன்பு காட்டும் தெய்வம்
அரவணைக்கும் தெய்வம்
எம்மைப் பாதுகாப்பார்
எம்மைப் பரிசுத்தமாக்குவார்
நன்றி சொல்வோம் அவர்க்கு
நாளும் போற்றி வணங்குவோம்.

செல்வன்
ம. யேசுநேசன்
தரம் - 2A

# எனது அம்மா



எனது அம்மாவின் பெயர் விஜயபாரதி. இவர் பத்துமாதம் என்னைச் சுமந்து பெற்று பாலூட்டித் தாலாட்டி வளர்த்தார். நான் குழந்தையாக இருந்த போதும், நோயுற்ற போதும் என் நலனுக்காக கண்விழித்து பத்தியமிருந்து பாதுகாப்பதும் அம்மா. வீட்டில் அன்பைச் சொரிந்து புத்திமதிகள் கூறும்போது தாயாகவும், கற்பிக்கும் போது ஆசிரியையாகவும், நோயுற்ற காலத்தில் தாதியாகவும் இருந்து வளர்த்து வருகின்றார். அன்னத்தை ஊட்டி உடலை வளர்ப்பதுவும், ஆன்மீகத்தை வளர வைப்பதும் தாய் என்றால் மிகையாகாது. எனவே எல்லாமாகி நிற்கும் கண்கண்ட தெய்வமாகிய அம்மாவைப் போற்றி, பேணிப் பாதுகாப்போமாக.

செல்வி
ர. ஆர்த்திகா
தரம் - 2

# செல்லப்பிராணி



- செல்லப்பிராணியை ஆங்கிலத்தில் PET என்று அழைப்பார்கள்.
- ஆடு, மாடு, நாய், பூனை, கிளி, மைனா, புறா என்பவை சில செல்லப்பிராணிகள் ஆகும்.
- மக்கள் செல்லப்பிராணிகளைத் தமது பொழுதுபோக்குக்காக வளர்ப்பார்கள்.
- செல்லப்பிராணிகள் ,எமக்குப் பல வழிகளிலும் உதவி செய்கின்றன.
- வீட்டைக் காக்கவும், ஊட்டச் சத்துள்ள உணவுகளைத் தரவும், வயல் வேலைகளுக்கு உதவவும், மனமகிழ்ச்சியை ஏற்படுத்தவும் செல்லப்பிராணிகள் உதவுகின்றன.
- நாம் அனைவரும் பிராணிகள் மீது அன்பு கொண்டு செல்லப்பிராணிகளை அன்பாக வளர்ப்போம்..

**செல்வி பிலிப் றோய்லன்ஸ் அன்ரனற் றிஷ்னி**
தரம் - 2

# எனது செல்லப்பிராணி



01. நான் வளர்க்கும் செல்லப்பிராணி நாய் ஆகும்.
02. நான் அதனைச் சிறு பராயத்திலிருந்தே வளர்க்கின்றேன்.
03. அதற்கு “பப்பி” என்ற செல்லப் பெயரும் உண்டு.
04. அது என்னைக் கண்டால் வாலை ஆட்டும்.
05. நான் அதற்கு விரும்பிய உணவுகளைக் கொடுப்பேன்.
06. புதுவருடம், தீபாவளி என்றால் புத்தாடை அணிவிப்பேன்.
07. வாரத்தில் ஒரு முறை குளிப்பாட்டுவேன்.
08. நான் பாடசாலை சென்று வரும் வரை அது காத்திருக்கும்.
09. அது வெள்ளை நிறம் உடைய நாய்க்குட்டி.
10. எனது அன்பிலும் மேலானது என் “பப்பி”யே ஆகும்.

**செல்வி**
**ஐ. பிரியதர்சினி**
தரம் - 2B

# இறைவா

கருணை காட்டு இறைவா
கல்வி ஊட்டு இறைவா
உதவி புரிவாய் இறைவா
உயர வைப்பாய் இறைவா!
அன்னை தந்தை வாழ்ந்திடவே
உன்னைத் தொழுவேன் இறைவா!
பொன்னும் பொருளும் சேர்த்து
புகழ்பெற வைப்பாய் இறைவா!

**செல்வன்**
**க. கஜாகரன்**
தரம் - 3A

# தந்தை

எமது குடும்பத் தலைவர் தந்தையாவார். அவர் எமக்கு வருமானத்தை ஈட்டித் தருவதுடன் அறிவையும் ஊட்டுகிறார். நாம் நற்பிரஜையாக வாழ வழிகாட்டுகிறார். பல இடங்களுக்கும் கூட்டிச் செல்கிறார். தேவைப்படும் பொருட்களை வாங்கித் தருகிறார். நாம் தந்தையின் சொல்லை மதித்து நடக்க வேண்டும்.

**செல்வி த. கிருத்திகா**
தரம் - 3A



# தமிழ் மொழி

தமிழ் எங்கள் தாய்மொழி
தமிழ் இனிமையான சிறந்த மொழி
அது எமது உயிர் போன்றது
அதனால் அமுது என்று சொல்கிறோம்
தமிழ் மொழி பேசுபவர் உலகெங்கும் உள்ளனர்
தமிழைக் கற்பது எமது கடமையாகும்
தமிழைக் கற்று நாம் உயர்வடைவோமாக.

**செல்வி**
**மொ. கிறிஷிகா**
தரம் - 3A



# எனது பாடசாலை

- எனது பாடசாலையின் பெயர் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ஆகும்.
- எனது பாடசாலை பண்டத்தரிப்பு பட்டினத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
- எனது பாடசாலையின் அதிபர் பெயர் திருமதி கி. சிவராஜா என்பதாகும்
- எனது பாடசாலையில் 35 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.
- எனது பாடசாலைக்கு பண்டத்தரிப்பு பட்டினத்தில் வசிக்கும் மாணவர்கள் மட்டுமல்லாது அயற் கிராமங்களில் இருந்தும் வந்து, கல்வி கற்கின்றார்கள்.
- குறிப்பாக 2008ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த விளையாட்டு நிகழ்வுகளில் எனது பாடசாலையின் கரப்பந்தாட்டக் குழுவினர் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று, தேசிய மட்டம் சென்றமை எனது பாடசாலையின் பெருமையை எடுத்துக் காட்டியுள்ளது.
- "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வசனத்திற்கேற்ப எனது பாடசாலையில் கல்வி கற்கும் ஒவ்வொருவரும் சிறந்த கல்விமான்களாகவும், மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் திகழ எனது பாடசாலையின் நோக்குகள் எம் அனைவரையும் நெறிப்படுத்தும்.

செல்வன்
**இ. பற்றிக் எமிலியஸ்**
தரம் - 3A



# எனது ஆசிரியர்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" இது ஒரு முதுமொழி. ஆசிரியர் ஏணியும், தோணியும் போன்றவர். ஏணியில் ஏறி மேலே செல்லலாம். தோணியில் ஏறிக் கடலைக் கடக்கலாம். ஆனால் ஏணியும் மேலே செல்லாது. தோணியும் தரையில் செல்லாது.

தான் உயராது விட்டாலும் தன் மாணவரை உயர்த்துவதுதான் எனது ஆசிரியரின் விருப்பம். தாய்க்கு நிகராக மாணவரின் உள நிலையை முழுமையாகப் புரிந்து கொள்பவரும் எனது ஆசானே!

ஆகவே எம் அறிவை வளர்க்கும் எனது ஆசானை என்றும் மதித்துப் போற்றி வாழ்க வாழ்க என வாழ்த்திடுவோம்.

**செல்வி ஜ. சுபாசினி**
தரம் - 4

# கல்வித்தாயே நீ வாழ்க!



கல்வி என்ற மூன்றெழுத்தை - நாம்
களங்கமின்றிக் கற்றிடவும்
காலூன்றி நிலையாய் நின்றிடவும்
நற்பண்புதனை நாளும் பெற்றிடவும்
கலங்கரை விளக்காய் ஒளிரும் - எம்
கல்லூரித் தாயே நீ வாழ்க!

பண்டங்கள் வந்து சேரும்
பண்டத்தரிப்பு நகரின்
நடுவே ஒளிரும் தீபமாய்
நல்லறிவு புகட்டி நிற்கும்
கல்லூரித் தாயே நீ வாழ்க!

நூற்று எண்பத்தைந்து ஆண்டுகளாய்
நூற்றுக் கணக்கோரை ஒளிர்வித்தாய்
கல்வியின் ஒளிக் கூடமே
கற்றோர் போற்றும் ஒளிவிளக்கே
உன் பணி மேலும் சிறக்க
உன் சிறு மாணவி நான் வேண்டுகிறேன்
கல்லூரித் தாயே நீ வாழ்க!

**செல்வி ர. எறின் றொபிற்றா**
தரம் - 4

## அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்



"அரிது அரிது மானிடராதல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்பது ஔவையின் வாக்கு. கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை எடுத்த நாம் மனித நேயம் உள்ளவர்களாக வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும். உடல், உள ரீதியாக பாதிப்புக் குள்ளான மாற்றுவலுவுள்ளோரை சமுதாயத்தின் அங்கத்தவராக ஏற்றுச் செயற்பட வேண்டும்.

பிறப்பினால் மட்டுமின்றி, கொடிய யுத்தத்தினாலும், விபத்துக்களினாலும், நம்மில் பலர் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்றைய அறிவியல் யுகத்திலே குளோனிங் முறையால் உயிரினங்களை உருவாக்கிய விஞ்ஞானிகளால் கூட உடல் ஊனமுறுவதை முற்றாக தடுக்கமுடியாமல் உள்ளது.

ஆரம்பகாலத்தில் சமூகத்தின் சுமைகளாகக் கருதப்பட்ட மாற்றுவலுவுள்ளோரைப் பராமரித்துக் காக்க வேண்டும் என்ற சிந்தனை இடைக்காலத்தில் உருவானது. இன்று உலகளாவிய ரீதியில் மாற்று வலுவுள்ளோர் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. விழிப்புலன் அற்றோருக்கான பிறெயில் எழுத்து முறையைக் கண்டுபிடித்த கண்பார்வையற்ற லூயிஸ் பிறெயில், ஹெலன் கெல்லர் போன்றோர் நிகழ்த்திய சாதனை ஏனையோருக்கு வழிகாட்டலாய் அமைந்தது.

நம்பிக்கையுடன் முயன்றால் வெற்றி நிச்சயம். அதற்குக் கல்வியே அவசியமானது. தற்காலத்தில் அவர்களும் சாதாரண பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்கும் சூழ்நிலை உருவாகி வருகிறது. மாணவர்களாகிய நாம் அன்பு ஆதரவுடன் செயற்பட்டு அவர்களையும் நமது சகோதரர்களாக ஏற்று, சாதனை படைக்கக் கை கொடுப்போம்.

செல்வி
கு. தர்சிகா
தரம் - 4



## அம்மா சுட்ட தோசை

அம்மா சுட்ட தோசை
அருமையான தோசை
தின்னத் தின்ன ஆசை
சிறகடிக்கும் ஆசை

உழுந்து அரிசி கலந்து
உயர்வாய் சுட்ட தோசை
எண்ணெய் விட்டுச் சுட்ட
முறுகலான தோசை

பள்ளி செல்லும் போது
கொண்டு செல்லும் தோசை
பள்ளித் தோழருடனே
பகிர்ந்து உண்ணும் தோசை

செல்வி
கு. ருபிஷா
தரம் - 4



# ஒரு குடையின் சுயசரிதை

நான் ஒரு அழகான குடை. எனது கதையைக் கூறுகிறேன். அனைவரும் கேளுங்கள். என்னை ஒரு அழகான குடையாகச் செய்வதற்குப் பல பொருட்கள் தேவைப்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாகத் தயார் செய்து கொண்டனர். பின்பு என்னை ஒரு அழகான குடையாகச் செய்தார்கள்.

என்னை மட்டுமல்லாமல் எனது சகோதரர்கள், நண்பர்களையும் செய்தனர். பெரிய பெரிய கடைக்காரர்கள் என்னையும் எனது சகோதரர்களையும் பெரும் தொகையான பணம் கொடுத்து வாங்கினார்கள். அப்பொழுது ஒருவர் வந்து இந்தக் குடையின் பெயர் என்னவென்று கேட்டார். அதற்கு கடைக்காரர் இதுதான் பஞ்சவர்ணக் குடை என்றார். ஆகா! என்ன அழகான குடை என்று கூறி, பணத்தைக் கொடுத்து வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போனார். தான் போகின்ற இடங்களில் எல்லாம் வெயிலிற்காகப் பிடித்துக் கொண்டு போவார். அப்போது எனது உடல் வெப்பத்தால் துடிதுடிக்கும். நாளடைவில் பளிச்சென்று இருந்த எனது மேனி மங்கிப் போனது. என்னை மழைக்கும் பிடித்துச் செல்வார். ஒருநாள் அவர் என்னைப் பிடித்துக் கொண்டு போகும் பொழுது பலமான காற்று அடித்தது. நான் அதைத் தாங்க முடியாமல் முறிந்தும் கிழிந்தும் போனேன். அவர் என்னை ஒரு குப்பைக் கிடங்கில் போட்டுவிட்டார். எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. நான் முன்பு இருந்த நிலையையும் இப்போது இருக்கின்ற நிலையையும் நினைத்து வேதனைப்படுகின்றேன். எனது சோகக் கதையினை கேட்டீர்களா?

**செல்வி கு. விதுஷா**
தரம் - 5

# HUMAN NEEDS



'Needs' are what there should be for us to live. They are oxygen, water and food which are essential for survival. How long can a person stay without air oxygen? - Not more than a few seconds. How long can a person stay without water and food? - One or two days without water and a little longer without food. Imagine the plight of a person wanders in a desert with heaps of money, but without food and water to last even for a day! In addition to the three basic needs given above, certain other factors also become essential later. For the stone - age man living in the jungle, the three basic needs were all that he really wanted.

**G. Annat Noyalin**
*Grade - 06*
*English Medium*

# Be Kind of Animals



We must be kind to animals. There are wild and tame animals. Wild animals could harm us but tame animals usually do not harm people. We can have them as pets in our homes. We must not hurt animals by chasing them and hitting them with stones. We must not disturb animals in the Zoo also. Some farmers hurt animals like cows and buffaloes.

**M. Eliliny**
*Grade - 06*
*English Medium*

# Water Cycle



When it rains the earth gets water. When that water evaporates the clouds are formed. They get cooled and fall on to the earth as rain. This happens over and over again and we call it the water cycle. A part of water that the earth gets is absorbed by the soil. That water is stored as ground water. The other part flows along streams and stored in places like tanks, ponds and oceans. That water is called surface water. When the droplets of water in clouds get together water drops are formed and rain occurs. You may have seen that when a plant stem is cut inside the plant. In blood and Saliva of animals there is water. The water present in plants and animals is called the water in living beings. When water is kept in a vessel it evaporates. Like that the water on the Surface of the earth evaporates continuously. This process is called evaporation. The surface water of the earth evaporates to form clouds.

**S. Kejiga**
*Grade - 06*
*English Medium*

# கல்வியின் சிறப்பு



உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச்செல்வம், மற்றையது பொருட்செல்வம். பொருட்செல்வம் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைவுபடும். நீராலும், நெருப்பாலும் அழியக்கூடியது. பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச் செல்வமோ அழிவற்றது. நீராலோ, நெருப்பாலோ அழியாதது. கள்வரால் களவாட முடியாதது. பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும். இதனாற்றான் கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் வேறில்லை என நம்முன்னோர் கூறியுள்ளனர்.

மனிதர்களிடத்தில் அறியாமையைப் போக்கி அறிவை ஊட்டுவது கல்வி. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டும். கற்று உயர வேண்டும். எனவேதான் வள்ளுவரும்,

**செல்வி**
**இ. அனுஷாந்தினி**
தரம் - 7 B

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"
என்று கூறியுள்ளார்.


நாம் இளமையிலே கல்விச் செல்வத்தைக் கற்க வேண்டும். கல்வி கற்பதற்கு வயது எல்லையே இல்லை. நாம் இளமையில் இருந்து கற்கும் கல்வி பெரியவராகிய பின்பு எமக்கு உதவும். அழியாத கல்விச் செல்வத்தைக் கற்று நாம் உயர்வோமாக.



# கணனி பாவிப்பதன் நன்மையும் தீமையும்

**செல்வி சி. விதுர்ஷா**
**தரம் - 7A**

21ஆம் நூற்றாண்டில் கணனிப் பயன்பாடு அதிகரித்து வருகின்றது. பாடசாலை, தொழிற்சாலை, வீடுகள் என கணனி பயன்படுத்தாத இடங்களே இல்லை. நாம் செல்லும் இடங்களில் காணப்படும் கணனியில் எமக்குத் தீங்கு விளைவிப்பவையும், நன்மை பயப்பவையும் பல உள்ளன. கணனி மூலம் கணக்குகளைச் சரிபார்க்கவும், தரவுகளைச் சேகரிக்கவும், மாதிரிகளை உருவாக்கவும் முடியும்.



அது மட்டுமல்ல நாம் கணனியைப் பொழுதுபோக்கு அம்சங்களுக்காகவும் பயன்படுத்தலாம். விளையாடலாம். கதைகளை வாசிக்கலாம். நாம் கணனியில் தரவுகளைக் கொடுத்து அவைகள் அனைத்தையும் படிக்கும் விடயங்களுக்கும் பயன்படுத்தலாம். இவ்வளவு பயன்பாடுகளையும் தரும் கணனியின் தந்தை சார்ள்ஸ் பபேஜ் ஆவார்.

இவ்வளவு நன்மை தரும் கணனியில் சில குறைபாடுகளும் உள்ளன. கண்ணில் ஈரலிப்புத் தன்மை குறைந்து விட்டால் அது கண்ணினைப் பாதிப்புக்குள்ளாக்கும்.

இப்பாதிப்பு குறிப்பாக கணனிப் பாவனையாளர்களுக்கு அதிகம் வரும். நாம் சாதாரணமாக 15 தடவை ஒரு நிமிடத்தில் கண்களைச் சிமிட்டுகிறோம். ஆனால் கணனி பாவிப்பவர்கள் 7 அல்லது 5 முறை சிமிட்டுவர் என ஆராய்ச்சிகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படுவதால் கண்களில் எரிச்சல், உபாதைகள் என்பன உண்டாகின்றன. இதனால் காலப்போக்கில் கண்கள் பழுதுபடு வதற்கும் வாய்ப்புண்டு. இவ்வளவு பயன் கொண்ட கணனியில் தீமையும் உள்ளது என்பதை நாம் அறிய வேண்டியது அவசியமாகும்.

# மைக்கல் பரடே

இங்கிலாந்தில் ஓர் ஏழைத் தொழிலாளியின் மகனாய்ப் பிறந்து படிக்கக்கூட வசதியில்லாமல் 13 வயதிலேயே வேலைக்குப் போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஒருவருக்கு ஏற்பட்டது. அத்தகைய கஷ்டங்களின் மத்தியில் கடினமாக உழைத்து அவர் கண்டுபிடித்த ஒரு சாதனம்தான் பிற்காலத்தில் உலகத்தை ஒளிமயமாக்கப் பெரிதும் உதவியது. அவர் கண்டுபிடித்த சாதனம் “டைனமோ” எனப்படும் மின்னாக்கியாகும். அந்த விஞ்ஞானியின் பெயர் மைக்கல் பரடே ஆகும்.

வீட்டுக்கு வீடு பத்திரிகை போட்ட பரடே, பின்னர் புத்தகம் கட்டும் வேலையிற் சேர்ந்து பழகிக் கொண்டார். அப்பொழுது பல்வேறு அறிவியல் நூல்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் அறிவியல் ஆர்வமேற்பட்டு ஆய்வுகளில் ஈடுபட்டார். தமது ஆய்வு முடிவை ஒரு பெரிய சபையில் விளக்கி நிரூபித்துக் காட்டினார் பரடே. உலகின் பல நாடுகளிலிருந்து அறிவியல் அறிஞர்கள் அதைப் பார்க்க வந்திருந்தனர். மின்காந்த இரும்பின் மூலம் மின்சக்தியைத் தோற்றுவிக்க முடியும் என்ற உண்மையை விளக்கிக் காந்த இரும்பே மின்சக்தி உற்பத்தியின் அடிப்படை என்பதைச் சபையோருக்கு விளக்கினார். அப்பொழுது ஒரு குழந்தையோடு இருந்த பெண் திடீரென எழுந்து “இதெல்லாம் ஒரு பெரிய பரிசோதனை, இதைப் பார்க்கவா எங்களை அழைத்தார். இதனால் அப்படி என்ன பிரமாதமான பயன் வந்துவிடப் போகிறது” என்று பொரிந்து தள்ளினாள். மைக்கல் பரடே அப்பெண்ணைப் பார்த்து “அம்மணியே! உங்கள் மடியில் இருக்கும் குழந்தையைப் பெற்றதால் உடனே என்ன பயன்! வளர்த்தபின் எத்தனை பயன் ,கிடைக்கும். அதேபோன்று தான் என் சோதனை முயற்சி பிற்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறும்” என்றார். மின்சார மோட்டார் மின்பிறப்பாக்கியின் தந்தை என்றழைக்கப்பட்ட விஞ்ஞான மேதை பரடே பெயரும் புகழும் பெற்ற பின்னரும் அடக்கத்தின் உருவமாகவும் எளிமையின் சின்னமாகவும் விளங்கினார். ஆடம்பரம் என்பது வாழ்வின் இறுதிவரை அவரை அணுகவேயில்லை.

செல்வி அ.டுஷாறா
தரம் - 8

# கல்வி அழகே அழகு



கல்வியானது மழை போல
எல்லோருக்கும் பெய்யும்
பூத்தால் தான் அது பூ - அதேபோல்
கற்றால்தான் அது கல்வி

கல்வியானது நீர்வீழ்ச்சி போல
பாடசாலையிலிருந்து ஊற்றெடுத்து
களனி என்னும் பல்கலைக்கழகத்திலே பாய்ந்து
வேலைத்தளம் என்னும் கடலிலே சங்கமிக்கும்.

செல்வி
க. தவலட்சியா
தரம் - 9

கல்வி என்னும் சோலையிலே
கற்பகமாய் மலர்ந்த மல்லிகையே
பூவுக்கு வாசம் சொந்தம் போல்
கல்விக்கு மாணவர் சொந்தம்

கல்வியானது மேகம் போன்றது - அது
எல்லைகள் அற்றுச் சென்று கொண்டே இருக்கும்
மனிதனை வளமாக்குவதற்கு கல்வியே அவசியம்
ஆகவே கல்வியின் அழகே அழகு.

# ஓரறிவன் கதை

ஒரு பெரிய குளம். அக்குளத்தில் அறிவாயிரவன், நூறறிவன் எனும் மீன்களும் ஓரறிவன் எனும் தவளையும் நண்பர்களாக இருந்தனர். ஒரு நாள் அக்குளக்கரைப் பக்கம் வந்த ஒரு செம்படவன் "இக்குளத்தில் மீன்கள் அதிகமாகவும் பெரியவையாகவும் இருக்கின்றன, எனவே நாளை வந்து பிடிக்க வேண்டும்" என்று கூறிப் போனான். அதைக் கேட்டுவிட்டு ஓரறிவனாகிய தவளை தன் நண்பர்களாகிய அறிவாயிரவன், நூறறிவனிடம் கூறியது: "வாருங்கள் நாம் வேறோர் இடத்துக்குச் சென்றுவிடலாம்" என்று அழைத்தது.



ஆனால் அறிவாயிரவனோ "என் பெயர் என்ன தெரியுமா? ஆயிரம் அறிவினன்! எனக்கு நீர்க்கலை பல தெரியும். என்னை அவனால் பிடிக்க முடியாது. உனக்கு ஓரறிவு தானே. நீ வேண்டுமானால் போ" என்றது. அது போல் நூறறிவனும் "நான் இவ்விடம் விட்டு வரமாட்டேன். எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நீ வேண்டுமானால் போய்க்கொள்" என்று கூறிவிட்டது. ஆபத்தைக் கூறி அழைத்தாயிற்று. வராவிட்டால் என்ன செய்ய முடியும்? தவளை தன் சுற்றத்துடன் அக்குளத்தை விட்டு வெளியேறிவிட்டது. மறுநாள் செம்படவன் வந்தான். வலையை வீசினான். மீன்களைப் பிடித்தான். அவைகளைச் சுமந்தவாறு சென்றான். அவன் இப்படிச் செல்வதைக் கண்ட ஓரறிவனாகிய தவளை தன் மனைவியிடம் "ஆயிரம் அறிவினனும், நூறறிவனும் அதோபார் வலையில் அகப்பட்டு அழிவுக்கு ஆளாகி விட்டார்கள். ஓர் அறிவினனாகிய நான் இதோ ஆபத்துக்கு அப்பாற்பட்டு மகிழ்ச்சியோடிருக்கிறேன்" என்று கூறி வருந்தியது.

**செல்வி நி. நிருசிகா**
தரம் - 9B

# தமிழின் பெருமை

ஆதி மனிதன் மொழி புரியாது, வழி தெரியாது தவித்தான். நாள்கள் நகர பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தொடங்கினான். சமிக்ஞைகள் வளர்ந்து சொற்களாயின. பல்வேறு மொழிகள் பிறந்தன. மொழிக்கேற்ப நாகரீகங்கள் உருவாகின. நாகரிக மேம்பாட்டின் அடிப்படை "மொழிப் பயன்பாடு" என்பது அனைவரும் அறிந்ததே. திராவிடக் கூட்டத்தின் தனித்துவ முன்னேற்றத்திற்குக் காரணமாக தமிழ் மொழியே விளங்கியது.

இந்தியும், ஆங்கிலமும், சிங்களமும், பிரெஞ்சும், ஜேர்மனும் எனப்பல மொழிகள் தற்போது பாவனையிலுள்ளன. சிலதோ எழுத்துவழக்கில் உள்ளது. வேறு சிலது கரைந்து பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இல்லாது ஒழிந்துவிட்டன. ஆனால் தொன்மைத் தமிழ் மொழியே எழுத்து,

பேச்சு ஆகிய வடிவத்தில் உள்ளதுடன் மிகப் பரவலாக உலகெங்கும் பேசப்படும் மொழியாகும்.

மேலைத்தேய இசைகளில் இல்லாத ஓர் அமைதியான அற்புதமான நிறைவை தமிழ் பாடல்களைக் கேட்கின்றபோது உணரலாம். இதனாலேதான் "தமிழுக்கும் அமிழ்தென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

"யாமறிந்த மொழிகளுள்ளே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் மகாகவி பாரதியார். இசைக்கும், ஓசைக்கும், ஒலிக்கும் இடையே நுணுக்கமான வேறுபாடு தமிழில் உள்ளது. தமிழுக்கு மட்டுமே உரியதாய் சிறப்பொலிகளும் சிறப்பு எழுத்துக்களும் கூட காணப்படுகின்றன. இதனால்தான் சந்தம் மிகுந்ததாகச் செந்தமிழ் காணப்படுகின்றது.

தமிழ் தந்த காப்பியங்கள் எண்ணுக்கணக்கற்றவை. பொய்யா மொழிப் புலவர் இயற்றிய திருக்குறள் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டு பாவனையிலுள்ளன. ஐம்பெரும் காப்பியங்களும் தமிழை இன்னும் அழகுபடுத்துகின்றன. தமிழில் பாரதியார் இயற்றிய கவிதைகள் புகழ் பெற்றவை. இலகுதமிழில் இன்றி கடினத் தமிழ் நூல்களான தொல்காப்பியம், நிகண்டு என்பனவும் பெரிதும் பொருள் பொதிந்த பொக்கிஷங்களாகும்.

**த. சண்முகப்பிரியா**
தரம் – 9B

# வாக்குரிமை

இலங்கையில் ஜனாதிபதி, மற்றும்நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் மூலம் மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்து எடுத்தார்கள். ஊர் மக்கள் ஒரு பொது இடத்தில் கூடுவார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் யாருடைய பெயர்களைச் சொல்கிறார்களோஅவர் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவார்.



இது தவிர குடவோலை எனும் இரகசிய வாக்கெடுப்பு முறை அந்தக்காலத்தில் இருந்திருக்கிறது. ஊர் மக்கள் தாங்கள் விரும்புபவர்களின் பெயர்களை ஓலை நறுக்குகளில் எழுதி ஒரு குடத்தில் போடுவார்கள். பின்பு அந்தக் குடத்தை ஒரு பொது இடத்தில் வைத்து ஓலைகளை எண்ணுவார்கள். யாருடைய பெயர் அதிகமாக இருக்கிறதோ அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அந்தக் குடவோலை முறையிலேயே இப்போதைய தேர்தலும் நடத்தப் பட்டு வருகிறது. தற்போதைய தேர்தல்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. இது சர்வஜன வாக்குரிமை என்பப்படும்.

**செல்வி ப. துஷாந்தினி**
தரம் 10B

இதற்கு முன் இலங்கையில் குறிப்பிட்ட சிலருக்கே (4%) வாக்குரிமை இருந்தது. அது 21 வயதுக்கு மேற்பட்ட சொத்துரிமையுடைய, படித்த இலங்கையருக்கு மட்டுமேயாகும். 1931இல் 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. மக்கள் தேர்தலில் பங்கு கொள்வதால் அவர்களுக்கு அரசியலில் பங்குபற்றச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மக்களின் கருத்துகளுக்கு ஆட்சியாளர்கள் மதிப்பளிக்க முற்படுவர். எனவே, 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தேர்தலில் பங்கு கொள்வது எமது கடமையாகும்.


சிறுகதை

# நெஞ்சம் மறப்பதில்லை

வே. நிந்துஜா
தரம் - 10 B

கதிரவன் மேற்கு நோக்கிக் கையசைக்க வானில் நிலா உதயமாகும் வேளை அவசர அவசரமாக கால் கைகளை அலம்பி விட்டு கடவுளை மனதில் நினைத்துக் கொண்டு பாடங்களைப் படிப்பதற்கு ஆயத்தமானேன். அவ்வேளை அப்பா தனது வேலையை முடித்துக் கொண்டு ஸ்கூட்டரில் வந்தார். தொலைவில் வரும் போதே அதன் சத்தம் எம் அனைவரதும் காதுகளில் விழுந்தது.

பாடப் புத்தகங்களைப் படிக்காது, தொலைக்காட்சியில் படம் பார்த்து நகைத்துக் கொண்டிருந்த என் தம்பியும், தங்கை தர்சினியும் அடங்கி ஒடுங்கிப் போயினர். அப்பா அம்மாவுடன் சற்றுக் கடுமையாகக் கதைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார். அப்போது என் தங்கை தம்பியின் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தாள். அவள் கூறியதும் எனக்கும் விளங்காமலில்லை.



அப்போது அப்பா "இதைத் தூக்கிக் கொண்டுபோய் எங்கையென்றாலும் விடு" என்று கடுமையாகப் பொரிந்து தள்ளினார். நான் என்னவோ ஏதோ என்று அறைக்கு வெளியே ஓடி வந்தேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. முற்றத்துத் தென்னை மரத்தின் கீழ் ஒரு அழகான சிறிய பூனைக்குட்டி. வெண்பஞ்சு போன்ற உடலிலே கருமையான சிறு சிறு புள்ளிகள் காணப்பட்டன. ஆஹா! எத்தனை அழகு என்று வியந்தேன்.

அம்மாவுக்கு அதைத் துரத்த மனம் இல்லை. அப்பா உள்ளே சென்றவுடன் நான் அப்பூனைக் குட்டியை அன்புடன் எடுத்து அணைத்துக் கொண்டு உள்ளே சென்றுவிட்டேன். பின் சற்று நேரத்திற்கெல்லாம் அப்பா சாப்பிடும் போது அம்மா சாதுரியமாகப் பேசி அப்பாவின் மனதை மாற்றிவிட்டார்.

நாம் பள்ளி செல்லும் நேரம் எல்லாம் என் அம்மாவுடன் இருந்த பூஜாக் குட்டிக்கு அம்மா என்றால் அதிகம் அன்பு. அவளுக்கு மாமிசம் என்றால் தான் உயிர். சைவ உணவு சமைக்கும் போதெல்லாம் அவள் சாப்பிடவே மாட்டாள். தம்பி அம்மாவிடம் சில நாணயங்களைப் பெற்று ஓடிச் சென்று குஞ்சப்புவின் கடையில் சில சூடைக் கருவாடுகளை வாங்கி வந்து ,அவளுக்குக் கொடுப்பான். மாலை வேளையில் அவள் சில மாபிள்களை உருட்டி ஓடி ஆடி விளையாடுவாள். அவள் விளையாடுவதைக் கண் கொட்டாமல் அம்மா பார்த்துக் கொண்டே இருப்பார். சில வேளைகளில் செல்லமாக "பூரணி நல்லா விளையாடு" என்று சொல்லும் போது அவளது ஓட்டத்திற்கும் ஆட்டத்திற்கும் குறைவிருக்காது.

இரவு வேளையானதும் அம்மா படுக்கும் கட்டிலுடன் ஒட்டிக் கொள்வாள். அப்போது அம்மா அன்புடன் தன் கரங்களால் அவளது மேனியை தடவும் போது வால் ஆட்டத்திற்குக் குறைவில்லை. இவ்வாறு எம் அனைவருடனும் உறவுபோல் ஒன்றாக இருந்து வரும் வேளை ஒரு நாள் விடியற்காலை அவளது முகம் எல்லாம் வீங்கி உடலில் இரத்தக் கறைபடிந்திருந்தது. வீட்டு வேலிக்குள் இந்நிலையில் முடங்கியிருந்த அவளை எடுத்து வந்து அம்மா உணவளித்தார். அப்போது அம்மா "அவளுக்கு ஒன்றும் நடக்காது. நாளைக்குச் சரியாகி விடும்" என்று கூறி அழுது கொண்டிருந்த என்னைத் தேற்றினார்.

நானும் அம்மா சொன்னதைத்தான் நம்பினேன். ஆனால் அடுத்த நாள் பூஜாவுடைய நிலை

மேலும் மோசமாகியது. அவள் உணவு உண்ணவே மறுத்துவிட்டாள். அவளுக்கு ஏன் இவ்வாறு ஏற்பட்டதென்பது புரியாத புதிராக இருந்தது. அம்மா அவளுக்குப் பாலைக் கரைத்துச் சிறு கரண்டி மூலம் பருக்கினாள். பின் தாமதிக்காது மிருக வைத்தியரிடம் அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தாள். அன்றிரவு எமது பூஜாவால் உறங்கவே முடியவில்லை. தனது மொழியில் "மியவ் மியவ்" என்று கத்தினாள் ; கதறினாள்.

அம்மா ஓடிச் சென்று அவளது வயிற்றை மென்மையாகத் தடவினார். எம்முடன் ஒரு உறவாகப் பழகிய பூஜா படும் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தேன். பூஜாவைக் காப்பாற்றுமாறு வேண்டினேன். விம்மி விம்மி அழுதேன். எவ்வாறாயினும் அவள் குணமாகி விடுவாள் என்ற நோக்குடன் அவளது பஞ்சு மேனியில் திருநீற்றைத் தடவினேன். சூரியனும் உதயமாகிவிட்டான். பாடசாலை செல்ல வேண்டும் என்பதால் அவசரமாகத் தயாகராக வேண்டியிருந்தது.

பூஜா படுத்த படுக்கையாகக் கிடந்தாள். நான் கண்களில் கண்ணீர் துளிர்க்க அவளது உடலைத் தடவினேன். அப்போது அவள் "உங்கள் பராமரிப்புக்கு நன்றி" என்று சொல்வதைப் போலத் தன்வாலை ஆட்டினாள். அவ்வேளை இங்கு வந்த அம்மா "பூஜா இனித் தப்பமாட்டாள்" என்று கூறிக் கதறி அழுதாள். நான் அம்மாவைத் தேற்றினேன்.

யார் என்ன சொன்னாலும் என்ன, பூஜாவைக் கடவுள் காப்பாற்றுவார் என்று நினைத்துக் கொண்டு பாடசாலைக்குச் செல்லப் புறப்பட்டபோது கோவில் மணி ஒலித்தது. அப்போது எல்லாம் நல்லதாய் தான் நடக்கும் என்று மேலும் எனக்கு எண்ணத் தோன்றியது.

பாடசாலை சென்று அவசர அவசரமாகப் பூஜா குணமாகியிருப்பாள் என்ற செய்தியைக் கேட்க வீடு நோக்கி மிதிவண்டியில் விரைந்தேன். எனது அருமை நண்பி எனக்கு ஆறுதல் கூறினாள். வீட்டு நுழைவாயிலை வந்தடைந்ததும் ஆவலுடன் பூஜா இருந்த அறையை நோக்கி ஓடினேன். அங்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. பூஜாவைக் காணவில்லை. வீடு முழுக்கத் தேடினேன். அவளை எங்கேயும் காணவில்லை. படுக்கையில் சோகமாகவிருந்த அம்மாவிடம் ஓடிச் சென்று "பூஜா எங்கே" என்று கேட்டேன். நல்ல செய்தியாக அம்மா சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். அம்மா மௌனம் சாதிக்க அப்போது எனக்குப் புரிந்து விட்டது அவளுடைய பிரிவு. அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது.

நான் ஆடிப்போய்விட்டேன். என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஓவென்று அழுதேன். நாங்கள் வளர்த்த அன்புப் பூஜா காலத்தின் கோலத்தால் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் இதயத்தில் என்றுமே வாழ்ந்து கொண்டிருப்பாள்.

I you plan for a year, plant a seed
If for ten years, plant a tree
If for a hundred years, teach the people.
When you sow a seed once, you will reap a single harvest
When you teach the people, you will reap a hundred harvests.

-Kuan Chug-



# தாய்மையைப் போற்றுவோம்

செல்வி சி. கலாஜினி
தரம் 10B

பத்து மாதம் சுமந்து தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி எம்மை பெற்றெடுப்பவள் தாயே. இந்த உலகத்திலே அம்மா என்று அழைக்காத உயிர் இல்லை.தாயானவள் இரக்கம், கருணை, பொறுமை உடையவர். பகலிரவு விழித்திருந்து எம்மை பெற்றெடுக்கின்றார். “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்று கொன்றை வேந்தனில் ஔவைப் பிராட்டி மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றார். நாம் பிறந்தவுடன் அன்னையைத் தான் முதலில் பார்க்கின்றோம். நாம் பிறந்த நாட்டை தாய் நாடு என்றும், நாம் பேசுகின்ற மொழியை தாய் மொழி என்றும் கூறுகின்றோம். இவ்வாறு தாய்க்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது.

“தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை” என்பதற்கமைய தாயே சிறந்த தெய்வம் ஆவார். தாய் எமக்குத் தேவையான உணவுகளை ஆக்கித் தருகின்றார். அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி அழிவு செய்த போதும் பிள்ளைத்தனத்தில் செய்தான் எனப் பொறுத்துக் கொள்ளும் உள்ளம் தாயிடமே இருக்கின்றது. தாய் எம்மைப் பாடசாலைக்குச் செல்ல வைக்கின்றார். நாம் நல்ல பிரஜையாக வரவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருப்பார்.

தாயின் ஆசியுடன் ஒரு செயலைச் செய்தால் அச் செயல் இடையூறு எதுவும் இன்றி நிறைவுபெறும். ஒரு நாட்டின் பெருமையும் மக்களின் சிறப்பும் தாயின் சிறப்பிலேயே தங்கியுள்ளது. அன்பின் ஊற்றாகவும் அணைக்கும் தெய்வமாகவும் விளங்குபவர் தாய்.

சமூக உருவாக்கத்தில் தாய்மார்களின் பங்கு இன்றியமையாததாகும். குடும்பம் தொடங்கி குவலயம் வரை சேவைக்கு விளக்கமாகத் திகழ்பவள் தாயே ஆவார். இப்படிப் பல்வேறு வழிகளிலும் சிறப்புமிக்க தாய்க்குலத்தை நாம் போற்றக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

# எங்கள் பாடசாலை அன்னையே



பண்டத்தரிப்பினிலே பண்புடனே நிமிர்ந்து நிற்கும் எங்கள் அன்னையே
வணங்குகிறோம் சிரம் தாழ்த்தி உன்னையே
பல்லாண்டு காலம் உன் அணைப்பில்
பண்பாகப் பலபேர் பாரினிலே சிறந்து நிற்க வழிசெய்தாய்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கண்டிப்பிற்கு இலக்கணம்
இப்படித்தான் வாழவேண்டும் என்று கொள்கை படைத்தாய்

கடந்து சென்ற காலத்தில் நீ கண்ட இடர்கள் பலவுண்டு
உன்னைச் சூறையாடி கயவர்கள் எழிலைச் சிதைத்த போதும்
நோயினைப் பாராது எம்முன்னாள் அதிபர் போசேந்திராதேவி
செய்த முயற்சியினால் இன்று கம்பீரமாக மீள எழுந்து நிற்கிறாய்

மாகாணமட்டம் தேசிய மட்டம் எனச் சாதனை
படைத்து நிற்கும் எங்கள் அன்னையே
நீ இன்னும் பல சாதனை படைத்து பலநூறாண்டு காலம்
வாழ்ந்து எம்சந்ததிக்கும் நிழல் கொடுப்பாய்.

செல்வி
ம. சிவகௌரி
தரம் - 10 B

# ஐம்புலனில் அமர்ந்த தமிழே



தாய்த்தமிழே உன்னழகை
நான் நினைக்கும் பொழுதெல்லாம்
கற்பனைகள் ஊறுதம்மா
கரையுண்டு ஓடுதம்மா.

இலக்கண வரம்பமைத்து
இலக்கிய சுவை குழைத்து
கலக்கிய தமிழே! உன்னை
கடைந்த நல்லமிழ்தே என்பேன்.

காண்பதிலும் கேட்பதிலும்
உரைப்பதிலும் உணர்வதிலும்
ஐயமின்றி என் தமிழே
ஐம்புலனில் அமர்ந்துவிட்டாய்.

கருத்தினில் விழுதாய் - ஒரு
கணத்தினில் எழுவாய் - என்னை
உனக்குள்ளே வாங்கி - எந்தன்
உணர்வினை நிறைத்தாய்.

சுவாசிக்கும் பொழுதெல்லாம்
சுகம் தரும் உன்னை
சுவாசமாய் கொண்டுவிட்டேன்
சுற்றும் குருதியில் சேர்த்துவிட்டேன்.

செல்வி
த. தர்மினி
தரம் - 11B

Thorough to teach another is the best way to learn

-Cranon Adams-



# Our School

We are very happy and peaceful in our school because all the students, teachers and principal keep our behavior with right, correct and faithful. So we are getting knowledge and healthy from our teachers.

Our school has got many prizes at the provincial level competitions. Our students have acted many kinds of drama in English and have won at many levels. So we are grateful to our teachers. We should obey to our teachers.

**B. Dinojini**
Grade - 11B

# Globalization



Globalization has spread to the whole world. It has happened through contacts made across the world countries, made contacts through satellites. Hence, things happening around the globe are known. A global village means, that is really seeing the whole world as a single community connected by electronic communication systems. The areas that come under globalization are communication, technology, environment and making relationships almost everything. Globalization also deal with every part of life such as the food we eat, the clothes we wear, the education we get, the entertainment we have, the games we play, the toys we buy etc. So the whole of this passage, globalization is meant we can bring the whole world to out doorstep.

**History of Globalization**

Globalization is a historical process. The start of globalization could be dated back to the 5th and 6th centuries BC. The silk route is a good example of globalization. It connected the business, West with the East from 19th century with the revolution of technology, globalization has developed.

**Different views on Globalization**

Some people see globalization as a positive factor. They say it links culture around the world. It promotes unity and understanding between people of different societies. Others have a negative attitude towards globalization. They believe that stronger nations impose their cultures on weaker societies. There are also some people have mixed feelings about globalization.

**Globalization at work**

Globalization connects various kinds of global relations such as sharing ideas, opinions and cultures. The most obvious is the use of 'things', 'clothes', furniture, crockery, cutlery and vehicle, etc. Therefore the world has become a global village.

**Some factors that are influence in globalization**

T. Januja
Grade - 11B

❖ **Technology**

Through the ages, technology has helped people to build a more comfortable way of life. With the revolution of industrial technology the work in factories became faster. Production increased and working hours were reduced. The radio and television changed their entertainment habits. Powered machines do most work and give more leisure to people.

❖ **Medicine**

Today the change of the body can be observed and measured in a few seconds. These findings are the key to diagnosing the disease and deciding treatment. With the help of machines, doctors are able to see inside of body, diagnose disease, find out the heart works, failing organs and maintain oxygen levels. The antibiotics help in treating bacterial infection. Now, laser rays used in surgery, remove the stones in kidney and gall bladder and treat eye diseases. The organs may transplant one body to another. Immunization give protection to children and decrease the common diseases.

❖ **Transportation**

Land, water and air transportation are developed very fast. We can go places in a few seconds. The space transportation is developed with satellites and space ships too. Vehicles without man also go to space.

❖ **Communication**

Communication means the process of sharing information and ideas. With the inventions of telecommunications, the global communication has facilated rapidly.

1. Satellites: Satellite is a space artificial craft that orbiting the earth. In 1945, by the good statement of the honoured Sri Lankan citizen Arthur .C. Clarke about wireless communication with countries, gave the idea to create satellites. T.V telecast and radio broadcast are reached to us from satellite

2. Telephone: After the invention of telephone by GrahemBell, people could build up and continue relationships all over the world. Telephone sends message through current, laser light or radio waves. Now the 'mobile phone' sends and receive messages (S.M.S - Short Message Service). And identify the caller and the call with time and date (CLT - Caller Line Identification). Hand phones help to take photos and videos for a short time, access to radio, T.V and internet.

3. Telegraph: It uses electricity to send message down wire cables. The message were coded using Morse code (system of dotes and dashes)

4. Internet: It is a huge network which connects up millions of computer throughout the world. '**Sever**' help the computers connected to the internet to put and direct information to the right places. 'Modem' will connect the computer to the telephone line. 'Chat lines' help to communicate other people freely and it is possible to organize conferences between people thousand of miles apart. 'Website address' gives the places we can visit to find out what we want. 'E-mail' is a system of sending electronic mail through internet. Anybody can create his or her web page and input whatever information. Therefore internet has contributed immensely to globalization bringing the whole world together.

**The future of globalization**

There are two views on the future of globalization. Will the 21st century continue with the high rate of globalization? Or will globalization slow down once it reaches the climax? Wait and see.

# Nelson Mandela



Mandela, Nelson Rolihlahla (1918), South African activist winner of the 1993 Nobel peace prize and the first black president of South Africa (1994-1999). Born inUmtata, South Africa, in what is now Eastern cape province. Mandela was the son of a Xhosa-speaking Thembu chief. He attended the University of Fort Hare in Alice where he became involved in the political struggle against the racial discrimination participating in a student demonstration. After moving to Johannesburg, he completed his course work by correspondence through the University of South Africa and received a bachelor's degree in 1942. Mandela then studied law at the University of Witwatersr and in Johannesburg. He became increasingly involved with the African National Congress (ANC), a multiracial nationalist movement which sought to bring about democratic political change in South Africa. Mandela helped to establish the ANC youth league in 1944 and became its president in 1951.

The National Party (NP) came to power in South Africa in 1948 on a political platform of white supremacy. The official policy of apartheid, or forced segregation of the races, began to be implemented under NP rite in 1952 the ANC staged a campaign known as the Defiance campaign when protesters across the country refused to obey laws. That same year Mandela became one of the ANC's four deputy presidents. In 1956 he and his friend Oliver Tambo were the first black to open a law practice in South Africa. In the face of government, harassment and with the prospect of the ANC being officially banned. Mandela and others devised a plan, Called the 'M' plan.

By the late 1950s Mandela, with Oliver Tambo and others moved the ANC in a more militant direction against the increasingly discriminatory policies of the government. He was charged in 1956 because of the ANC's increased activities, particularly in the defence compaign, but he was acquitted after a five-year trial. In 1957 Mandela divorced his first Wife, Evelyn Mase in 1958 and he married Nomzamo Madikizela, a social worker, who became known as Winnie Mandela.

In March 1960 the ANC and its rival the Pan-Africanist Congress (PAC) called for a nationwide demonstration against South Africa's pass laws which controlled the movement and employment of blacks and forced them to carry identity papers. Mandela helped to establish the ANC's military wing. He was named its commander-in-chief and went to Algeria for military training. Back in South Africa he was arrested in August 1962 and sentenced to five years in prison for incitement and for leaving the country illegally.

Mandela, who enjoyed enormous popularity assumed the leadership of the ANC and led negotiations with the government for an end to apartheid while white South Africans considered sharing power a big step black. South Africans wanted nothing less than a complete transfer of power. Mandela played a crucial role in resolving differences for their efforts, he and De Klerk were awarded the Nobel peace prize in 1993. The following year South Africa held its first multiracial elections, and Mandela became president.

Mandela Sought to calm the fears of white South Africans and of potential international investors by trying to balance plans for reconstruction and development with financial caution. His Reconstruction and Development plan allotted large amounts of money to the creation of jobs and housing and to the development of basic health care. In December 1996 Mandela signed a new South African constitution. The constitution established a federal system with a strong central government based on majority rule and it contained guarantees of the rights of minorities and of freedom of expression. Mandela who had announced that he would not run for re-election in 1999 stepped down as party leader of the ANG in late 1997 and was succeeded by South African deputy president Thabo Mbeki. Mandela's presidency came to an and in June 1999 when the ANC won legislative elections and selected Mbeki as South Africa's next president....

T. Sheba
Grade - 11B

# The Importance of Learning English



**K. Janitha**
Grade - 11B

Language is a means of communication. There are many languages in the world. English is the foremost of them all.

It is the 'Lingua Franca' of many people in the world. We in Sri Lanka speak Sinhala and Tamil languages. But we can't make our communication with the international society through our mother tongue. So we must learn a common language to communicate with the international society. English is a global language. It is the language that is spoken everywhere in the world. It is the only language that the German, the Chinese, the Japanese and the Russians are keen to learn although their languages are as developed as English.

The greatest achievements in scientific researches are found in English. Most of the valuable books in Science, Medicines, Engineering, Information Technology and Literature are in the English language English has made its impact in trade and Commerce, banking and politics also. Thus English plays a vital part in every field.


As a result of vernacular schools our students had lost their proficiency in English language. Internationally our country felt setback due to the poor standard of English language. The opportunities of youths for higher education in the foreign countries were rejected due to the lack of knowledge of English language. Now everyone has felt the importance of English language. Our Government and many Non Government Organizations take actions to improve the students' skill in English language.

Every country in Asia and in Africa, English is taught in schools to all their pupils because it is a language of knowledge. In most of these countries it is taught either as a first or second language.

A good knowledge of English, it is useful to all students of higher studies. It will also help us to go anywhere in this world for employment. Today many of our youth who go to the Middle East for employment need English.

English as it is a gift to us from British. It makes us full. It increases our knowledge, with better skills. It helps us to find good jobs anywhere. English is the language of the United Nations. Therefore it is very important to learn English. Now the students can't get admission to the University without pass in English language. Hence every student must learn English to lead a happy and prosperous life.


# பாடசாலை நிகழ்வுகள் - சில பதிவுகள்




புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா




2007 பரிசளிப்பு விழா



உயர்தர மாணவர் ஒன்று கூடல்



கால்கோள் விழா




ஒளிவிழா



ஆங்கிலதின விழா





சமூக விஞ்ஞான மன்றத்தினூடாக வெளியிடப்பட்ட சு. ஸ்ரீகுமரன் எழுதிய "செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்" நூல் வெளியீட்டு விழா



வலய மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்ற நாட்டிய நாடகம் "கீதோபதேசம்"



இவ்வருடம் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப்பெற்ற தனிநடனம்




பாடசாலையின் ஆரம்பப் பிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டி 01-02-2008 வெள்ளிக்கிழமை காலை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் திரு. ஆ. நாகராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ந. நிர்மலானந்தன் அவர்களும் கலந்து கொண்டனர்.




பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி 06-02-2008 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினர் வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் திரு. மேரியோசப் சாந்தசீலன் வெற்றிக் கேடயம் வழங்குகிறார்.




கல்விக் கண்காட்சி



கல்விச் சுற்றுலா




சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு



சிந்தனை நாள்


# விளையாட்டுப் பயிற்சி முகாம்



வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்



கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்



ஆரம்பப்பிரிவு விளையாட்டுப் பயிற்சி முகாம்

# நாடகத்தின் தோற்றம்



நாடகம் ஓர் கலை வடிவம் ஆகும். நாடகம் தொன்மை வாய்ந்தது. நாடகம் என்பது மனிதவாழ்க்கையில் ஏற்கனவே காணப்பட்ட சம்பவங்களை ஒரு கலைஞன் தன்னால் கற்பனை செய்யப்பட்ட விடயங்களுள் இணைத்து ஒருகுறித்த நேரத்தில் குறித்த விடயத்தில் பார்வையாளர் முன்னிலையில் செய்து காட்டும் கலையாகும். நடிகர்கள் உணர்வுடன் பார்வையாளருக்கு செய்து காட்டும் செயல் நிகழ்வு என்று கூறலாம்.

நாடகத்தின் தோற்றம் பற்றி நாம் எடுத்து நோக்கும் போது அது பற்றிய ஆய்வினை மேற்கொண்ட பல ஆய்வாளர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர். இவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் தொழில்சார் நடவடிக்கைகள், சமயச் சடங்குகள் போன்ற செயற்பாடுகளில் இருந்தே நாடகம் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது.சமய காரணங்களின் அடியாக நாடகம் தோற்றம் பெற்றது என பேராசிரியர் ஜோர்ச் தொம்சன் குறிப்பிட்டுள்ளார். இறந்தவர்களை வழிபடும் வழிபாட்டில் இருந்தே நாடகம் தோற்றம் பெற்றது என்பர். ஆதி காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர். அவர்களை வழி நடத்துவதற்கு எனத் தலைவன் காணப்பட்டான். தலைவன் இறக்கின்ற சந்தர்ப்பத்தில் புதிதாக வரும் தலைவன் இறந்த தலைவனின் பிரதான உறுப்புகளை உண்டான். கூட்டத்தின் ஏனைய அங்கத்தவர்கள் தலைவனின் ஏனைய பாகங்களை உண்டனர். இதன் மூலம் தமக்கு அதிக சக்தி கிடைக்கும் என நம்பிக்கை கொண்டனர். இங்கு காணப்படும் நம்பிக்கையானது சடங்கின் அடிப்படைப் பண்பாகக் காணப்படுகிறது. எனவே இறந்தவர்களை வழிபடும் வழிபாட்டில் இருந்து நாடகம் தோற்றம் பெற்றது என்ற கருத்து மறைமுகமாக சடங்கிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றதை ஏற்று நிற்கின்றது.

போலச் செய்தல் என்னும் இயல்பூக்கத்திலிருந்து நாடகம் தோற்றம் பெற்றது என அரிஸ்ரோட்டில் குறிப்பிட்டுள்ளார். நாடகம் என்பது அளிக்கை செய்யப்படும் ஒரு செயல் நடவடிக்கை ஆகும். குழந்தைகள் தாம் சூழலில் காண்பதைப் போலச் செய்தல் ஒரு இயல்பூக்க நடவடிக்கை ஆகும். தேர்த் திருவிழாவைப் பார்த்துத் திரும்பிய குழந்தை குரும்பை, ஈர்க்கு போன்றவற்றைப் பயன்படுத்தி தேர் செய்து விளையாடுகின்றது. இச்செயற்பாடு போலச் செய்தல் பண்பாகக் காணப்படுகின்றது. குழந்தையின் இயல்பூக்க நடவடிக்கை நாடகத் தோற்றத்தின் உருவாக்கமாகக் கருதப்படுகிறது.

நாடகத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்களில் விஞ்ஞான ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவு நாடகம், சமயச் சடங்குகளில் இருந்து தோற்றம் பெற்றதென்பதாகும் என பேராசிரியர் ஜே. தொம்சன் குறிப்பிட்டுள்ளார்.

மனித குலத்தின் ஆரம்ப காலத்தில் தொழில் நடவடிக்கையே சடங்காக உருவாக்கப்பட்டது. மொழி என்பது தோற்றம் பெறாத நிலையில் ஆதிவாசிகள் உடல், குரல், பாவம் ஆகியவற்றையே சடங்கில் பிரதானப்படுத்தினர். வேட்டைத் தொழிலை மறு சந்ததிக்குக் கற்றுக் கொடுக்கும் போது சிலர் விலங்குகள் போன்றும், சிலர் அவற்றை வேட்டையாடுபவர்கள் போன்றும் பாவனை செய்தனர். இச்செயற்பாட்டில் உடலால் விலங்கு போன்ற அசைவையும், குரலால் விலங்கின் சத்தத்தையும் உருவாக்கினர். எனவே வேட்டையாடப்பட்ட விலங்குகளின் தோல்கள் மற்றும் அங்கங்களைத் தம்மில் அணிந்து காட்டினர். இது ஒரு வகை ஒப்பனை ஆயிற்று. இந்நிகழ்வில்

போலச் செய்தல் பண்பும் மேலோங்கிக் காணப்பட்டது. இந்நிகழ்வுகளை நிகழ்த்திய பின் வேட்டைக்குச் சென்ற வேட்டைக் குழுவிற்கு நிறைய வேட்டைப் பொருட்கள் கிடைத்தன. ஆகவே இந்நிகழ்வில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது எனக் கருதிய ஆதிக்குடிகள் இந்நிகழ்வினைத் திரும்பத் திரும்ப நிகழ்த்தினர். வேட்டையாடுதலைப் போலச் செய்யும் போது இயற்கை சக்தியானது மகிழ்வடைவதனாலேயே ஏராளமான வேட்டைப் பொருள் கிடைக்கின்றது எனக்கருதி அதனைத் தன் குழுவிற்கு முன்னிலையில் பரிபூரண நம்பிக்கையோடு குறிப்பிட்டு வெளியில் செய்து காட்டினர். இதுவே மனிதனது ஆரம்ப கால நாடக நிகழ்வாகக் காணப்பட்டது.

இவ்வாறு வேட்டையாடிய சமூகம் காலப்போக்கில் அலைந்து திரிந்து உணவு தேடுவதைத் தவிர்த்து காடுகளை அழித்து விவசாயம் செய்ய முற்பட்டனர். விவசாயம் செய்வதில் பருவகால மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தின. பருவகால மாற்றங்களை தம்வயப்படுத்துவதற்காக மனிதன் தனது ஆரம்பச் சடங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தினான். அவை பின்னர் நிலைத்து நிற்கும் போக்குடைய சமயச் சடங்குகள் ஆயின. எவர் இச்சடங்குகளை முன்நின்று செய்தாரோ அவரே மதகுருவானார்.

காலப் போக்கில் நாடகத்தில் நடிக்கும் தனிப்பிரிவு ஒன்று சமூகத்தில் உருவாகியது. அன்றாட சமூகம் பொருளாதார அமைப்புக்களுக்கு ஏற்ப நாடகங்களின் கருவும், உருவும் அமையலாயின. ஒவ்வொரு நாட்டினதும் சமூக வளர்ச்சி, இயற்கைச் சூழல் ஆகியவற்றிற்கேற்ப நாடகம் வளர்ந்து சிறப்பிக்கலாயிற்று.

செல்வி சி. கிரிசாலினி
A/L 2009 கலைப்பிரிவு



# சிறார்களே எதிர்கால சிற்பிகள்

செல்வி கு. சிந்துஜா
A/L 2009 கலைப்பிரிவு

"பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற"

என்ற வள்ளுவரின் பொய்யா மொழியானது ஒருவன் பெறுகின்ற பேறுகளிலே மிகவும் சிறப்பானது நன்மக்கட் பேறே என்பதனை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. 'பிள்ளைகள் இவ்வுலகிலே நனிசிறந்து வாழ்வதற்கு ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது. ஏனெனில் இன்றைய சிறுவர்களே நாளைய் தலைவர்களாக உலகிலே உருவாகப் போகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயமானது சிறுவர்கள் எனப்படுவோரை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது. அதாவது பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர்கள் என அது குறிப்பிடுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதனை இலங்கை அரசு 1991ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தியது. சிறுவர் உரிமைகள் சமவாயமானது 54 உறுப்புரைகள் கொண்டமைந்தது. சமவாய உறுப்புரைகளைச் செயற்படுத்துவதில் அரசு மிகவும் கவனம் எடுத்து வருகிறது. சிறுவர் உரிமைகளை அறிந்து செயற்படுவது எல்லோரதும் முக்கிய கடமையாகும்.

பிள்ளைகளின் வளர்ச்சியில், நலனில் குடும்பம் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பிள்ளைகளைப் பாதுகாப்பாக வளர்ப்பதும், உரிய வசதிகளைச் செய்து தருவதும் குடும்பத்தின் கடமை. சிறுவர்களின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் செவிமடுக்காது முடிவுகள் எடுப்பது தவறாகும். வீட்டில் மட்டுமன்றி பாடசாலையிலும் அல்லது வேறு இடங்களிலும் சிறுவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கலந்துரையாடி முடிவெடுக்கும் போது அவர்களின் அபிப்பிராயங்களை மதித்து ஒழுங்குபடுத்தல் அவசியமானதாகும்.

நாட்டின் முதுகெலும்புகளாகத் தொழிற்பட வேண்டிய பிள்ளைகள் சிறுவயதிலே பல துஷ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர். அவை உடல், உள, சமூக ரீதியாகவும் அமைகின்றன. சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல், சுரண்டல் செய்தல், அவர்களின் கருத்தை அலட்சியம் செய்தல், கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல், தாய் தந்தையரிடம் இருந்து பிரித்தல் என பல்வேறு வகையாக துஷ்பிரயோகங்கள் காணப்படுகின்றன. சிறார்களின் தேவைகளை நிறைவேற்றுவதைத் தவிர்த்து சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்தைப் பாதிக்கும் அனைத்து காரணிகளுமே சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும்.

உலகில் வாழும் ஒவ்வொரு பிள்ளையும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்கள். தான் விரும்பிய சூழலில் வாழ்வதற்கும், விளையாடுவதற்கும், தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்று நண்பர்களுக்கு வழங்கி தமது திறமைகளை விருத்தி செய்யவும் தமது உலகினை மகிழ்வாக அமைக்கவும் உரிமை உண்டு. சிறுவர்கள் தமது திறமைகளை வளர்ப்பதற்குப் போதிய வசதிகளையும், சிறந்த உற்சாகத்தையும் வழங்குவதும் சிறார்களின் உயரப் பறக்கும் மனத்திற்கு உரமூட்டி நல்ல வழியில் வழிப்படுத்துவதும் அனைவரது கடமையாகும்.



# தத்துவ மேதை கார்ல் மார்க்ஸ்

*"மனித குலத்தின் நன்மைக்காகச் சிறப்பாகப் பாடுபடுவதற்குரிய வேலையை நாம் தேர்ந்தெடுத்துவிட்டால் அதன் சுமை நம்மை அழுத்த முடியாது. ஏனென்றால் அது எல்லோருடைய நன்மைக்காகச் செய்யப்படுகின்ற தியாகம்"*

இத்தகையை உன்னதமான இலட்சியத்திற்காக தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணம் செய்தவர் தத்துவமேதை கார்ல் மார்க்ஸ் ஆவார். மனித சமுதாயத்தின் வரலாற்றுப் போக்கை இயக்கவியல் பொருள் முதல்வாத அடிப்படையில் ஆழமாக ஆய்வு செய்து அது வரும் காலத்தில் எவ்வழியில் செல்லும் என்பதை விளக்கும் மார்க்சிச சித்தாந்தத்தின் மூலகர்த்தா அவர்.

மானிட ஜாதியானது மகத்தானதொரு துன்பச் சூழலில் அகப்பட்டுத் திணறிக் கொண்டு இருக்கின்ற இன்றைய காலத்தில் கூட கார்ல் மார்க்ஸ் ஒரு புதிராகவே காணப்படுகின்றார். ஒரு சிலருக்கு அவர் பேய், மானிட நாகரிகத்தின் பரம விரோதி, குழப்பத்திற்கெல்லாம் அரசன். வேறு சிலருக்கு அவர் தீர்க்கதரிசி, மானிட சமுதாயத்தை பிரகாசமுள்ள எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் அன்பு நிறைந்த தலைவன். இவ்வாறாக ஒவ்வொருவராலும் கருதப்படுகின்ற மார்க்ஸ்,

வைக்கீல் ஹென்றிமார்க்ஸ், ஹென்றிட்டே தம்பதியினருக்கு மகனாக 1818ஆம் ஆண்டு மே - 5ஆம் திகதி இரவு 1.30 மணிக்கு இவ்வுலகத்திலே அவதரித்தார்.

பெற்றோர்கள் இவர் படிக்கும் வயது வருகையில் மற்றைய பிள்ளைகளைப் போன்று ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். மார்க்ஸ் அங்கே சுமாராகப் படிக்கத் தொடங்கினார். இவரின் புதிய புதிய விளையாட்டுக்களும், குறும்புகளும் இவருடன் கூடப் படிக்கின்ற மாணாக்கர் களுக்கு பிடித்துவிடவே இவரிடத்தில் ஒரு தனி அன்பு காட்டி வந்தார்கள். அதே சமயத்தில் இவரிடத்தில் அவர்களுக்கு ஒருவித பயமும் காணப்பட்டது. ஏனென்றால், மார்க்ஸ் தனக்குப் பிடிக்காதவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் மீது பரிகாசப் பாட்டுக்கள் பாடுவார். அல்லது அவர்களைத் திட்டிப் பாடுவார். மார்க்ஸுக்கு சிறு வயதிலிருந்தே கவிபாடும் சக்தி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவர் தனது ஆரம்பப் படிப்பை முடித்ததும் ட்ரியரிலிருந்த உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். அப்பொழுது இவரின் வயது 12. சரியாக 5 வருடங்கள் அப்பாடசாலையிலேயே படித்தார். லத்தீன், கிரீக், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றார். இவரின் கவிதாசக்தியும் வளர்ந்து வந்தது. தனது எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இக்காலத்திலேயே நிர்ணயம் செய்து கொண்டார்.

1835ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமையன்று “பான்” என்னும் நகரத்தில் இருந்த சர்வ கலாசாலையில் மார்க்ஸ் மேல் படிப்புக்காகச் சேர்க்கப்பட்டார். அந்நகரிலே “கவிஞர்கள் சங்கம்” என்றொரு சங்கம் இருந்தது. மார்க்ஸும் இச்சங்கத்தில் சேர்ந்தார். சிறு வயதில் இருந்தே கவிபாடும் சக்தி இருந்ததனால் இவருக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. 1836இல் இவர் பெர்லின் சர்வகலாசாலைக்கு மாற்றப்பட்டார். 1841ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதியில் இவருக்குப் படிப்பு முடிந்தது என்பதற்கு நற்சாட்சிப்பத்திரம் கொடுத்தனர்.

ஜீனா என்னும் ஊரிலமைந்த சர்வ கலாசாலைக்கு தத்துவ சாஸ்திர சம்பந்தமான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி அனுப்பினார். இதனால் “டாக்டர்” பட்டம் கிடைத்தது. 23 வயதில் “கார்ல் மார்க்ஸ்” “டாக்டர் மார்க்ஸ்” ஆனார். 1842ஆம் ஆண்டு நவம்பர் மாதம் “ரைன்லாந்து கெஜட்” பத்திரிகையில் ஆசிரியரானார். 1843இல் “டாக்டர் கார்ல் மார்க்ஸுக்கும்” “பெர்த்தா ஜீலியா ஜென்னிக்கும்” க்ராயிஷ்னாக் என்ற ஊரில் திருமணம் நடைபெற்றது. அப்பொழுது மார்க்ஸுக்கு 25 வயது. 1844இல் “ஜெர்மனி பிரெஞ்சு மலரின்” முதல் இதழ் வெளியானது. அதில் மார்க்ஸ் இரண்டு கட்டுரைகளை எழுதினார். இது இவருக்கு சில விரோதிகளையும் சம்பாதித்துக் கொடுத்தது. 1883ஆம் வருடம் மார்ச் மாதம் 1ம் திகதி பிற்பகல் இவர் இவ்வுலகைவிட்டுச் சென்றார். மார்ச் 17ம் திகதி லண்டன் ஹைகேட் மயானத்தில் மார்க்ஸ் அடக்கம் செய்யப்பட்டார்.

செல்வி
**பி. மேரிஜேன்றபேக்கா**
A/L 2009 கலைப்பிரிவு

# எனது பார்வையில் இன்றைய திரைப்படங்கள்

செல்வி
த. விஸிதா
A/L 2009 கலைப்பிரிவு

உலகிலுள்ள எல்லா நாடுகளுமே திரைப்படத் தொழிலிலே பெருமளவு ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார வசதிபடைத்த பெருஞ் செல்வர்கள் மட்டுமன்றி முதலீடு செய்வதற்குப் போதிய வசதி இல்லாதவர்களும் திரைப்படத் தயாரிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். திரைப்படத்தில் இடப்படும் முதலீட்டினைக் கொண்டு பன்மடங்கு இலாபத்தினைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே இதற்குக் காரணம்.

மக்கள் பொழுது போக்கில் நாட்டமுடையவர்கள். வாழ்க்கைத் தேவைகளுக்காக நாளின் பெரும்பகுதியைச் செலவிட்டுக் களைத்த நிலையில் பொழுதை இன்பமாகக் கழிக்க அவர்கள் விரும்புவது இயல்பே. இவ்விருப்பத்தினை நிறைவு செய்வதிலே திரைப்படங்கள் முதன்மையான பங்கை வகிக்கின்றன. செல்வர்களைப் போன்று ஆடம்பரச் செலவு செய்து பொழுதைக் கழிக்க முடியாத சாதாரண மக்களையே திரைப்படம் அதிகம் ஈர்க்கின்றது. சாதாரண மக்களையே பெரும்பாலும் மனதிற்கொண்டு திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுகிறார்கள் திரைப்படத் தயாரிப்பாளர்கள்.

